**4-5-2007**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்–** | |
| (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 235-236,272 |
| (ஆ) விடுதலைப் புலிகளால் சிறைப் பிடித்து வைக்கப்பட்டுள்ள 12 மீனவர்களை விடுவிக்க அரசு எடுக்கும் நடவடிக்கை | 236-252 |
| * திரு. டி. ஜெயக்குமார் | 236-238 |
| திரு. சி. ஞானசேகரன் | 235-238,240 |
| * திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 241-242 |
| திரு. ஜி.கே. மணி | 242-243 |
| * திரு. ஞா. ஜாண் ஜோசப் | 243-244 |
| திரு. மு. கண்ணப்பன் | 244-245 |
| * திரு. து. ரவிக்குமார் | 245-246 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 246-247 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 248-252 |
| (இ) சேது கால்வாய்த் திட்டம், தொய்வின்றி நிறைவேற்றுதல் | 252-265 |
| திரு. சி. கோவிந்தசாமி | 252-255 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 256-257 |
| * திரு. ஓ. பன்னீர்செல்வம் | 257-260 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 261-265 |

பக்கங்கள்

**1. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(ஈ) உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு 272-274

* திரு. டி. சுதர்சனம் 272-273

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 273-274

**2. கவன ஈர்ப்பு**—

(அ) இராதாபுரம் கால்வாய் மற்றும் 52 குளங்களைச் சீரமைத்தல் 265-267

திரு. மு. அப்பாவு 265-267

* மாண்புமிகு திரு. துரைமுருகன் 265,267

(ஆ) செங்கல்பட்டு, கொளவாய் ஏரியில் கழிவு நீர் கலப்பதால் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு 267-272

திரு. கி. ஆறுமுகம் 268-271

* மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் 268-269, 270, 271-272

**3. அறிக்கைகள் அளித்தல்**—

(அ) மதிப்பீட்டுக் குழு 274

(ஆ) பொதுக் கணக்குக் குழு 274

(இ) பொது நிறுவனங்கள் குழு 275

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 275-276

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 276

பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20 —உயர் கல்வித் துறை—தொடர்ச்சி 277-432

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி 277-305, 310-311

(ஆ) கோரிக்கை எண் 26— வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(இ) கோரிக்கை எண் 47— இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் 313,357, 361-362, 380, 421-430

*மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் 335,358,407, 409-421

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 358-367

திரு. கரி. இராமசாமி 367-371

திரு. எம். அன்பழகன் 371-377

திரு. பெ. கண்ணன் 324-325, 377-382

செல்வி கே. பாலபாரதி 322,382-388

திரு. வை. சிவபுண்ணியம் 315,388-393

* திரு. நா. இராமகிருஷ்ணன் 394-398

பக்கங்கள்

5. **மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26— வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
(இ) கோரிக்கை எண் 47— இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) —தொடர்ச்சி

திருமதி ராணி வெங்கடேசன் 398-402

* திரு. கு. சீனிவாசன் 403-406

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 432-434

227666

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சித்திரை 21, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038
### 2007 மே 4, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்."*

காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத இனிய பண்பாடும் உடைய அரசைத்தான் உலகம் புகழும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**THIRU C. GNANASEKARAN:** Speaker Sir . . .

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**THIRU C. GNANASEKARAN:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்திருக்கிற 12 மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு, அவர்கள் சிறை வைக்கப்பட்டிருப்பதை ஏற்கெனவே அவையில் நான் குறிப்பிட்டேன்.

அவர்களை விடுதலை செய்வதற்கு மத்திய அரசோடு பேசி எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க நான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லாம் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இருக்கட்டும், இருக்கட்டும். (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. கோவிந்தசாமி, கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள் (குறுக்கீடு) Please, உட்காருங்கள்.

## (ஆ) விடுதலைப் புலிகளால் சிறைப் பிடித்து வைக்கப்பட்டுள்ள 12 மீனவர்களை விடுவிக்க அரசு எடுக்கும் நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.. ஜெயக்குமார், சொல்லுங்கள்.

*** திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, அதாவது, இதே தேதியில் 3-வது மாதம் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கப் போனவர்கள் கரை திரும்பவில்லை. பல முறை இந்தச் சட்டமன்றத்தில் கேட்டும்கூட, அவர்களை அரசு கண்டுபிடித்துத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டும்கூட, இதுவரை அவர்கள் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. 'மரியா' என்ற விசைப் படகு 29-3-2007 அன்று கடலிலே ஐந்து மீனவர்களைச் சுட்டுவிட்டு, பிறகு 11-4-2007 அன்று [illegible] விசைப் படகு [illegible]த்துக்குடிக் கடற்கரையிலே பிடிபடும்போது, 13 [illegible] தேதியன்று அந்த மாவட்ட[illegible]த்தினுடைய காவல் கண்காணிப்பாளர்

சென்னை-600 008
நூலகம்



அவர்கள், இந்த விசைப்படகில் இருந்தவர்கள் இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கு மாறுபட்ட கருத்தாக D.G.P. அவர்கள் 27 ஆம் தேதியன்று, இவர்கள் கடல் புலிகள் என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, ஒரு விசாரணை முடிவதற்கு முன்பாக ஒரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், எப்படி இவர்கள் இலங்கையைச் சார்ந்த மீனவர்கள் என்று கூற முடியும் என்பது ஒரு கருத்து; இரண்டாவதாக, 28 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்கள் எல்லாம் இங்கே இந்தக் கோரிக்கையை எழுப்பியபோது உறுதியாகச் சொன்னார்கள்; இலங்கையினுடைய விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற மீனவர்களை மீட்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக அரசு எடுக்கும் என்று சொன்னார்கள். D.G.P.யின் கருத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊர்ஜிதம் செய்தார்கள். ஆனால், 28 ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, 5 நாட்களுக்குமேல் ஆகியும்கூட, இன்னும் நம்முடைய மீனவர்கள் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்புகொண்டாரா? மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு ஏ.கே. அந்தோணி அவர்கள் கேரளாவிலே செய்தியாளர்களிடத்திலே பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது குறித்துத் தமிழக அரசு எந்தவிதமான ஒரு கடிதம்கூட எங்களுக்கு எழுதவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். எனவே, முழுமையான அளவிற்கு, ஏதோ ஒருவிதத்திலே யாருக்கும் தெரியாத அளவிற்கு ஒரு சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, என்னதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், D.G.P., விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டிலே மீனவர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்கின்ற அந்தக் கருத்தை அவர்களுடைய இணைய தளத்திலே ஒன்றாம் தேதியன்று மறுத்து, எங்களுடைய கட்டுப்பாட்டில் அவர்கள் இல்லை என்கின்ற அந்தக் கருத்தைத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். எனவே, உள் துறையிலே இன்றைக்குக் கீழேயிருக்கின்ற S.P. முதல் D.G.P. வரை ஆளாளுக்கு ஒரு வாக்குமூலத்தைக் (statement) கொடுத்து, இன்றைக்கு ஒரு குழப்பமான சூழ்நிலையில் உள் துறை இருக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. எனவே, மீனவர்கள் இப்பொழுது யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றார்கள், எப்பொழுது அவர்களை நீங்கள் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து உரியவர்களிடத்திலே சேர்ப்பீர்கள் என்ற அந்தத் தெளிவான, உறுதியான

தகவலை இப்போது நான் அறிய விரும்புகின்றேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை இங்கே சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 5 மீனவர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் விடுதலைப் புலிகள் என்று நம்முடைய D.G.P. அவர்கள் ஓர் அறிக்கை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு, காணாமல் போன 12 மீனவர்கள்—கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் 10 பேர்; தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்தவர் ஒருவர்; அதேபோல, கேரளாவைச் சார்ந்தவர் ஒருவர்—12 மீனவர்களைக் கடத்திச் சென்று வைத்துக்கொண்டிருப்பவர்கள் விடுதலைப் புலிகள்தான் என்று நம்முடைய D.G.P. அவர்கள் ஓர் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள்.

நான் இந்தப் பிரச்சினையைக் காவல் துறை மானியத்திலே எழுப்பியபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, அப்போது கிடைத்த தகவலின்படி, 'அவர்கள் இல்லை' என்று சொல்லிவிட்டு, பிறகு கிடைத்த தகவலின்படி, 'அவர்கள்தான்' என்ற ஓர் உறுதிமொழியை இந்த அவையிலே அவர்கள் உறுதியாகத் தெளிவுபடுத்தினார்கள். இப்பொழுது அந்த 12 மீனவர்களும் விடுதலைப் புலிகளால்தான் கடத்திச் செல்லப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், நம்முடைய தமிழக மீனவர்களைக் கடத்திச் சென்று, ஆயுதம் கடத்துவதற்காக அந்த 'மரியா' என்கிற படகை எடுத்துச் சென்ற, விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்த ராபின்சன், போனி போஸ், அருள், செல்வகுமார், அருள் ஞானதாஸ், இரவிக்குமார் ஆகிய ஆறு பேரும் மிகத் தெளிவான ஒரு வாக்குமூலத்தை, 'Q' Branch போலீசார் புலன் விசாரணை செய்தபோது சொல்லியிருக்கிறார்கள். அந்த வாக்குமூலம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டதாகவும் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், இந்தத் தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்காக—கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை வைத்துக்கொண்டே, அவர்கள் கைது செய்யப்படாத ஒரு நிலை இருப்பதைப்போல ஒரு தோற்றத்தை உருவாக்கி, அவர்கள்மூலமே இந்த



விடுதலைப் புலிகளுடைய முகாமில் இருக்கக்கூடியவர்களைத் தொடர்புகொண்டு பேச வைத்தபோது, 'அந்த 12 மீனவர்களும் பத்திரமாக ஒரு தீவில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்டிருக்கிறார்கள்; நிச்சயமாக அவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை' என்று அந்தத் தரப்பிலிருந்து நம்முடைய 'Q' Branch போலீசுக்கு பதில் வந்திருப்பதும் மிகத் தெளிவாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படிச் சொல்லப்பட்ட நிலையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசுகிறபோது, 'அவர்கள் முதலிலே ஒரு statement–ஐ வேறுவிதமாகக் கொடுத்தார்கள்; இப்போது யார் வைத்திருக்கிறார்கள்' என்று கேட்டார்கள். உண்மையிலேயே நான் கூறுகிறேன்; ஊர்ஜிதமாக ஒப்புதல் வாக்குமூலத்தை வீடியோமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை நடந்து, அவர்கள்தான் என்று உறுதி செய்யப்பட்ட பின்னாலும்கூட, 'வீண் பழியை விடுதலைப் புலிகள்மீது போட்டு, பொய் வாக்குமூலத்தைப் போலீசார் தயாரிக்கிறார்கள்' என்று, இன்னும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஓர் அரசியல் கட்சியினுடைய தலைவர், ம.தி.மு.க.வினுடைய பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் பேசியது உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது; வருந்தத்தக்கது.

இன்றைக்குத் தமிழகத்தைச் சார்ந்த 12 மீனவர்கள், நம்முடைய சொந்தங்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கண்டிக்க இவர்கள் தயாராக இல்லை; மறைமுகமாகக்கூடச் சொல்லவில்லை; வெளிப்படையாகவே ஆதரவைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு கூட்டணி சேர்ந்துகொண்டிருக்கக்கூடிய அண்ணா தி.மு.க. இன்றைக்கு அதைக் கண்டிக்காமல் வேறுவிதமாகப் பேசுவது எங்களுக்கு உண்மையிலேயே வருத்தத்தை அளிக்கிறது. இவர்கள்தான், (குறுக்கீடுகள்) உண்மை, (குறுக்கீடுகள்) கடத்தப்பட்டவர்கள், விடுதலைப் புலிகளால்தான் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது; வீடியோ வாக்குமூலம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்படியிருக்கிறபோது, (குறுக்கீடுகள்) அந்த மீனவர்களை வெளியே விடக் கூடாது என்றுகூட சில தகவல்கள் போய்க்கொண்டிருக்கின்றன. காரணம், அவர்க்ளை இப்பொழுது விட்டால், அவர்களைச் சிறை வைத்தவர்கள் உண்மையிலேயே விடுதலைப் புலிகள் என்கிற வெளிச்சம் நாட்டிற்குத் தெரிந்துவிடும் என்ற காரணத்தினாலே, இங்கே இருக்கக்கூடிய சில

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மே 4

பேர் மறைமுகமாகச் சில தகவல்களை அனுப்பி, 'நீங்கள் சிறை வைத்திருப்பதைச் சொல்லாதீர்கள்; அவர்களை விடுதலை செய்யாதீர்கள்' என்றுகூட signal-ஐக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'மத்திய அரசோடு பேசி, அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள்.' என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? R.A.W., I.B., போன்ற நிறுவனங்கள்கூட தங்களுடைய விசாரணையிலே உறுதி செய்திருக்கின்றன. நம்முடைய பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அந்தோணி அவர்கள்கூட, 'இது குறித்துத் தமிழக அரசு ஏற்கெனவே எங்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பியிருக்கிறது' என்றும் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

*முற்பகல் 9–40*

**திரு. சி. ஞானசேகரன்:** நான் பணிவன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்று தவறான ஒரு செய்தியை நம்முடைய தமிழகத்திலே பரப்பி, விடுதலைப் புலிகளால் அவர்கள் கைது செய்யப்படவில்லை; அவர்கள் சிறை வைக்கப்படவில்லை; தமிழக மீனவர்கள் 5 பேரை அவர்கள் கொல்லவில்லை என்று இன்று மறுத்து அரசியல் செய்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடந்துகொண்டிருப்பவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? இந்த 12 மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசுமூலம் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதை நான் கேட்டு, அந்த 12 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதை மறுத்துப் பேசுகிறவர்களை— நீங்கள் உண்மையை நாட்டுக்கு அறிவித்தாகிவிட்டது; அதை மறைப்பதற்கு முயலுகிறவர்களை தயவுசெய்து நீங்கள் தடை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.



2007 மே 4]

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது, மறைமுகமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களை விடுதலை செய்யக் கூடாது என்ற அடிப்படையிலே இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பாராளுமன்ற மரபுகளுக்கோ, சட்டசபை விதிகளுக்கோ முரண்பாடாக எதையும் பேசவில்லை. இந்த நாட்டிலே இன்று பாதுகாப்பை எதிர்நோக்கியிருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையிலே, அரசாங்கம் ஒரு பெரிய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கையிலே, கடல் தாண்டியிருக்கின்ற மீனவர்களை உயிரோடு எப்படி மீட்டுக்கொண்டு வருவது என்பதைப் பற்றி இந்த அரசு தன்னுடைய முழுக் கவனத்தையும், முழு சக்தியையும் பயன்படுத்தி வருகின்ற வேளையிலே, இந்த நாட்டிலே அரசியல் கட்சிகள் என்று கூறிக்கொள்கின்ற சிலர், அரசினுடைய முயற்சிகளை, முனைகளை மழுங்கடிக்கின்ற வகையிலே, அரசினுடைய முயற்சிகளைத் திசை திருப்புகின்ற வகையிலே, இந்த அரசு தன்னுடைய முயற்சியிலே வெற்றி பெற்றுவிடக் கூடாது என்கிற மன உறுதியோடு, அங்கே இருக்கின்றவர்களுக்கு, கடல் தாண்டியிருக்கின்ற விடுதலைப் புலிகளுக்கு மாற்றுத் தகவல்களை, தவறான சமிக்ஞைகளை அனுப்புகிறார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. அதை உறுதிப்படுத்துகின்ற வகையில்தான் அரசு ஒரு முறையான விசாரணையை மேற்கொண்டு மத்திய, மாநில அரசுகள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, உளவுத் துறை பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, நம்முடைய மத்திய உளவுத் துறையும், மாநில உளவுத் துறையும் நம்முடைய தமிழக மீனவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, அதற்கான வலுவான ஆதாரங்களைச் சேர்த்த பிறகு, அவை எல்லாவற்றையும் அதிகாரப்பூர்வமாக வெளியிட்ட பிறகு, இந்த ஊரிலே அரசியல் கட்சி நடத்துகின்ற ஒருவர், அவ்வாறு இல்லை; அப்படி இல்லையென்று சொன்னால், அந்த மீனவர்களை விடுவிக்காதீர்கள் என்று அவர்களுக்குத் தகவல் அனுப்புவதாகத்தான் காங்கிரஸ் கட்சி கருதுகிறது. அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. எனவே, அத்தகைய முயற்சிகளை இந்த அவையிலே நாங்கள் பதிவு செய்ய விரும்புகிறோம்.

எங்களைப் பொறுத்தவரை, இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியலாக்க நாங்கள் விரும்பவில்லை. கடல் தாண்டியிருக்கின்ற மீனவர்களுடைய உயிரும், உடலும், அவர்களை இழந்து தவிக்கின்ற, துன்பப்படுகின்ற குடும்பங்களும்தான் எங்களுக்கு முக்கியம். ஆகவே, அந்தக் குடும்பங்களுக்கு ஆதரவு தருகின்ற வகையில், அந்த மீனவர்களை எப்படியாவது மீட்டுத் தர வேண்டுமென்று முதலமைச்சர் எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளை நாங்கள் அறிவோம்; மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகளை நாங்கள் அறிவோம். அந்த முயற்சிகள் அப்படி நடந்துகொண்டிருக்கின்ற வேளையிலே, அந்த முயற்சி வெற்றி பெற்றுவிடக் கூடாது என்கிற அடிப்படையிலே சில அரசியல் தலைவர்கள் பேசுவதை இந்த அவையிலே நாங்கள் இந்த மீனவர் சமுதாய மக்கள் சார்பாக மட்டுமல்ல, தமிழக மக்கள் சார்பாகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சார்ந்த 11 மீனவர்கள், கேரளத்தைச் சேர்ந்த ஒருவர், என 12 மீனவர்கள் காணாமல் போய் நீண்ட நாட்களாகின்றன. அவர்களைக் கண்டுபிடிக்கிற முயற்சியிலே மத்திய அரசும், நம்முடைய தமிழக அரசும் பெருமுயற்சியிலே ஈடுபட்டிருப்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.. ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படியாவது அந்த 12 மீனவர்களையும் மீட்டுத் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிற அதே வேளையில், நீண்ட காலமாக அவர்களை இழந்து தவிக்கிற அந்தக் குடும்பங்களினுடைய மீளாத் துயரை மீட்டெடுக்கிற வகையிலே, அந்த 12 மீனவர்களையும் மிக விரைவாக மீட்டெடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதே வேளையில், நம்முடைய மத்திய அரசினுடைய புலனாய்வுப் பிரிவு இங்கே அறிக்கை கொடுத்திருக்கிறது. அது தவறு என்று நான் சொல்லவில்லை. காவல் துறையோ அல்லது உள் துறையோ நியாயமான முறையிலே அறிக்கை தயாரித்திருப்பார்கள், உண்மையைக் கண்டு சொல்லியிருப்பார்கள் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்துக்கே இடம் இல்லை. ஆனால், பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி, அங்கே விடுதலைப் புலிகள் என்ற பெயரால் இன்னொரு குழு இயங்கிக்கொண்டிருக்கிறது; இவர்களுக்கெதிரான நடவடிக்கையிலே



ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி பரவலாக மேலோங்கியிருக்கிறது. அப்படிச் சொல்லுவதினாலே, அது யார் இவர்களுக்கு ஆதரவு, இவர்களுக்கு மறுப்பு என்று தயவுசெய்து எண்ணிவிடக் கூடாது என்ற காரணத்தினாலே, இதை நடுநிலையோடு ஆய்ந்து, அதை இப்பொழுதும் நான் வெளிப்படையாகச் சொல்கிறேன், விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டுக்கு, தமிழ் மக்களுக்குத் தீங்களிக்கிறார்கள் என்று சொன்னால், அதைக் கண்டிப்பதிலே பாட்டாளி மக்கள் கட்சி தவறாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி, அவர்களுக்குப் போட்டியாக இருக்கிற குழுவாக இருந்தாலும் சரி அல்லது இலங்கை இராணுவமாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்களின் உண்மையான நிலையைக் கண்டறிய வேண்டும். உண்மையான நிலையைக் கண்டறியக்கூடிய அதே வேளையில், இனி அப்படிப்பட்டவர்களுக்கு நாம் இடம் அளிக்கக் கூடாது. அதற்கு மிகுந்த எச்சரிக்கையோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைத்து, எப்படியாவது 12 மீனவர்களையும் பாதுகாப்பாக மீட்டுத் தருவதற்கு எல்லா நிலைகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சொல்லிய கருத்துகளை உரியவாறு கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆய்வு நடத்த வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட சின்னத்துறை என்கிற கடற்கரைக் கிராமத்தைச் சார்ந்த 5 மீனவர்களைச் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** சுட்டுக் கொன்றதும், அதேபோன்று குளச்சல் தொகுதியைச் சார்ந்த 12 மீனவர்களைக் கடத்தி வைத்திருப்பதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் காவல் துறைத் தலைவர் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார்கள். அந்தப் பின்னணியில் இந்தச் சட்டமன்றத்தில் அது பற்றி விவாதம் நடைபெற்றது. அந்த

விவாதத்தின்போது பதிலுரை நல்கக்கூடிய நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறைத் தலைவர் அளித்த அந்த அறிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் தகவல்களைத் தெரிவித்ததோடு, அந்த 12 பேரையும் மீட்பதற்கான நடவடிக்கை மத்திய அரசுமூலமாக எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்திருந்தார்கள். இவற்றையெல்லாம் மறுத்து சில இயக்கங்களும், சில அரசியல் கட்சிகளும் தமிழ்நாட்டில் பிரச்சாரம் செய்து வருவது வேதனைக்குரியது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதே நேரத்தில், அந்த 12 பேரையும் பத்திரமாக மீட்பதற்குரிய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும், மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் உயிரைக் காப்பதிலும், காணாமல் போய் இருக்கின்ற மீனவர்களை மீட்பதிலும், மற்ற அரசியல் இயக்கங்களுக்கு எந்த அளவிற்கு அக்கறையும், ஆர்வமும் இருக்கின்றதோ, அதே ஆர்வமும், அக்கறையும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை நான் இங்கே வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ அவர்களைச் சிறை வைத்திருப்பதில், உள்நோக்கத்தோடு எங்களுடைய இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கூறியிருப்பதாகவும், விடக் கூடாது என்ற நோக்கத்தோடு அவர் அறிக்கை விட்டிருப்பதாகவும் இங்கே சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட கருத்தை இங்கே தெரிவித்ததற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அங்கே புலிகள் தரப்பிலே சொன்ன கருத்து, நாங்கள் மீனவர்களைச் சிறைப் பிடிக்கவும் இல்லை, அவர்களைச் சுட்டு வீழ்த்தவும் இல்லை என்ற கருத்தை அவர்களுடைய செய்தித் துறையின்மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள். அவை எல்லாம் பத்திரிகைகளிலே வந்திருப்பதை அனைவரும் படித்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலேதான் அந்தக் கருத்துச் சொல்லப்பட்டதே தவிர, தமிழக மீனவர்களுக்குத் துரோகம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு என்றைக்கும் கிடையாது. விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அது தமிழக மீனவர்களைப் பாதிக்கின்ற வகையிலே இருந்தாலும், தமிழ்நாட்டிலே சட்டம்



ஒழுங்கைச் சீர்குலைப்பதாக இருந்தாலும், வேறு எத்தகைய சட்ட விரோத நடவடிக்கையாக இருந்தாலும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அந்த நடவடிக்கைகளுக்கு என்றைக்கும் உடன்பாடாக இருந்தது கிடையாது. எதிர்காலத்திலும் நிச்சயமாக இருக்காது. தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும், தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சியும், மற்ற இயக்கங்களும் எந்த அளவு அக்கறையோடு இருக்கின்றனவோ, அதேபோல நாங்களும் இருக்கிறோம், எங்களுடைய பொதுச் செயலாளர் வைகோ அவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக மீனவர்களை மீட்பதும், அதேபோல, சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் யாரால் சுடப்பட்டார்கள் என்பதைக் குழப்பம் இல்லாமல், தெளிவாக அறிந்து நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதும் அரசினுடைய கடமை. பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளை வைத்துத்தான் அரசியல் இயக்கத்தினுடைய தலைவர்கள் செயல்பட முடியுமே தவிர, எங்களுக்கென்று தனியாக உளவுத் துறையோ அல்லது காவல் துறை அமைப்புகளோ கிடையாது. ஆகவே, வருகின்ற செய்திகளை வைத்து நாங்கள் அதைச் சொல்ல வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோமே தவிர, தமிழர்களை எந்த வகையிலும் காட்டிக் கொடுக்கக்கூடிய இயக்கம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல என்பதை நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போயிருக்கிற மீனவர்களைக் கண்டுபிடித்து மீட்பதற்குத் தமிழக அரசு எடுத்து வருகிற முயற்சிகளை விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் சார்பிலே மனமாரப் பாராட்டி வரவேற்கின்றேன். அது மட்டுமல்லாமல், குமரி மாவட்டத்திலே இதுவரை 76 மீனவர்கள் காணாமல் போயிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அவர்களையும் கண்டறிந்து மீட்பதற்கு நமது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக நமது காவல் துறைத் தலைவர் அவர்கள் 28 ஆம் தேதி அறிக்கை அளிப்பதற்கு 11 நாட்களுக்கு

முன்னதாகவே, கடந்த 17 ஆம் தேதி இலங்கைத் தூதரகத்தின் சார்பிலே அதேபோன்ற ஒரு தகவல்கொண்ட அறிக்கை, செய்தி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆக, நமக்குத் தெரிய வந்த செய்தி, அதற்கு முன்பாகவே அவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்கின்ற ஒரு வியப்பு நமக்கு ஏற்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வை எட்ட வேண்டுமென்று சொன்னால், அது கச்சத் தீவை மீட்பதிலேதான் இருக்கிறது. அந்தப் பகுதியிலே மீன் பிடிக்காமல், அந்தப் பகுதியிலே இருக்கிற மீனவ மக்கள் தங்களுடைய ஜீவாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அவசர நிலைக் காலத்திலே எந்த விவாதமும் இல்லாமல் அந்தத் தீவு கையளிக்கப்பட்டது; இன்றைக்கு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அதில்தான் அதற்கான நிரந்தரத் தீர்வு இருக்கிறது என்பதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே சொல்லி, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியும் அதில் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டும். உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களை விடுவிக்க வேண்டிய கடமை குறித்து இங்கே உறுப்பினர்கள் உரையாற்றிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இலங்கை கடற்படையினருடைய செயல்பாடுகள் குறித்தும் இந்த அவையிலே பல்வேறு முறைகளிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. நான் ஒன்றை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் சுடப்படுகிறார்களா, தாக்கப்படுகிறார்களா அல்லது வேறு நபர்களால் தாக்கப்படுகிறார்களா, சுடப்படுகிறார்களா என்ற ஐயமும், சந்தேகமும் தொடர்ந்து எழுந்துகொண்டேயிருக்கிறது. இதற்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. நாங்கள் கேட்டுக்கொள்வது, சுடப்படுகிறார்கள், தப்பித்துச் செல்கிறார்கள் என்று சொல்கிறபொழுது, நம்முடைய மத்திய அரசாங்கத்தினுடைய பாதுகாப்புப் படையின்மூலமாக, அப்படி அது





இலங்கை இராணுவமாக இருந்தாலும் சரி அல்லது விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், அந்தக் காரியத்திலே ஈடுபடுபவர்களை யார் என்று அடையாளம் காண்பதற்குரிய முயற்சி எப்பொழுது எடுக்கப்பட்டது? ஏதாவது அதற்குரிய காரண, காரியங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றனவா? அப்படி இல்லையென்று சொன்னால், நான் சொல்வது, நம்முடைய படையை அல்லது நம்முடைய மீனவர்களை அவர்கள் சுடுகிறார்கள் அல்லது அவர்கள்மீது தாக்குதலைத் தொடுக்கிறார்கள் என்று சொல்கிறபொழுது, நான் பகிரங்கமாகவே சொல்கிறேன், நம்முடைய கடலோரக் காவல் படை, அப்படிப்பட்ட காரியத்திலே ஈடுபடுகிற இலங்கை இராணுவமாக இருந்தாலும் சரி அல்லது வேறு நபராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், அவர்களைச் சுட்டு வீழ்த்தி, அவர்களைக் கொண்டு வந்து அடையாளம் காட்ட வேண்டும். இல்லையென்றால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வே காண முடியாது. இல்லையென்றால், அது விடுதலைப் புலிகளா அல்லது இராணுவமா என்ற சந்தேகத்தை எழுப்பி, எழுப்பித் தமிழகத்திலே குழப்பத்தை விளைவிக்கிற முயற்சிகள் தொடரும். ஆகவே, அந்தக் காரியத்தைச் செய்கிற பொறுப்பை மத்திய அரசாங்கம் உறுதியாகச் செய்ய வேண்டும். யார் என்று அடையாளம் காணுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட வேண்டும். நம்முடைய மீனவர்களுக்கெல்லாம் பாதுகாப்புக் கருதி துப்பாக்கிகள் வழங்கப்பட வேண்டும். அந்தக் காரியத்தில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணுவதற்கான முயற்சியை ஒரு தடவையாவது எடுத்தால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அதை விரைவாக எடுப்பதற்கான முயற்சியில் நம்முடைய தமிழக அரசும் விரைந்து, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்களே? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசுகின்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசுங்கள். உட்கார்ந்துகொண்டே கீழே குனிந்துகொண்டு பேசக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2007 மே 4

முற்பகல் 9–55

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினை குறித்து இந்த அவையிலே ஒரு முறைக்கு இரு முறை, அதற்கு மேலும் சில முறை விவாதிக்கப்பட்டு, நிலவரங்களை எடுத்துச் சொல்லி, அதற்கான பரிகாரங்கள் காணப்படுவதற்குத் தமிழக அரசு, மத்திய அரசினுடைய உதவியை நாடும் என்று சுட்டிக்காட்டி, அவ்வாறு மத்திய அரசோடு தொடர்புகொண்டு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை இங்கே இந்தப் பிரச்சினை குறித்து உரையாற்றிய நண்பர்களுக்கெல்லாம் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முதலில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. ஜெயக்குமார் அவர்கள், இதற்காக இதுவரையிலே என்ன முயற்சி எடுத்தீர்கள் என்று கேட்டிருக்கிறார். திரு. ஞானசேகரன் அவர்கள், இதிலே யார் குற்றவாளி, சுட்டிக்காட்டப்படுகின்றவர்கள் குற்றவாளிகளா, அல்லவா என்ற குழப்பத்திற்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டிருக்கிறார். நம்முடைய நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், ஒரு பாதுகாப்பு இந்த நாட்டிற்குத் தேவை என்ற அடிப்படையில், அதை மீறி நடைபெறுகின்ற சம்பவங்களைத் தமிழக அரசும், மத்திய அரசும் உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். நண்பர் திரு. ஜி.கே. மணி அவர்கள் உரையாற்றி, இதிலே விடுதலைப் புலிகள் மாத்திரமல்ல, இரண்டு குழுவினர் இருக்கிறார்கள் ஒரே பெயரில்; அதையும் கவனிக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு எச்சரிக்கை தந்திருக்கிறார். திரு. ஜாண் ஜோசப் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய கவலையைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். நம்முடைய ம.தி.மு.க. சார்பில் உரையாற்றிய திரு. கண்ணப்பன் அவர்கள், தங்கள்மீது வீணாகப் பழி கூறப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழர்களுக்கு எந்த நேரத்திலும், எந்த வன்முறையாளர்களாலும் தொல்லை ஏற்படாமல் பாதுகாப்பதிலே முன் நிற்போம் என்று உறுதியளித்திருக்கிறார். திரு. ரவிக்குமார் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு, கச்சத் தீவை மீட்பதுதான் என்று ஒரு கனவை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். திரு. சிவபுண்ணியம் அவர்களும், ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

ஆக, எட்டு பேர் பேசினாலும்கூட, எட்டு பேர்களுடைய நோக்கமும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண மாநில அரசு முயல வேண்டும் என்பதனுடைய அடிப்படையிலே இருந்தாலும்கூட, இங்கே திராவிட



2007 மே 4] [கலைஞர் மு. கருணாநிதி]

முன்னேற்றக் கழக அரசை எப்படிக் குற்றஞ்சாட்டலாம் என்ற நோக்கத்திலும், மாநில அரசை மாத்திரம் அல்ல, மத்திய அரசையும் சேர்த்து எப்படிக் குற்றஞ்சாட்டலாம் என்ற நோக்கத்தோடும் சில பேர் பேசியிருக்கலாம். அது அவர்களுடைய அரசியல் கோட்பாடு காரணமே தவிர, தனிப்பட்ட முறையிலே அத்தகைய தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்பது அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

நான் முதலில் நம்முடைய நண்பர் திரு. ஜெயக்குமார் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். அன்றைக்கு இதே அவையிலே, நீங்கள் அவர்களையெல்லாம் மீட்பதற்கான முயற்சிகளை மத்திய அரசோடு தொடர்புகொண்டு எடுப்போம் என்று சொன்னீர்களே, என்ன முயற்சி எடுத்தீர்கள், பிரதமருக்குத் தெரிவித்தீர்களா அல்லது மத்தியிலே உள்ளவர்களுக்குத் தெரிவித்தீர்களா என்று கேட்டார்கள். அப்படி முயற்சி எடுத்ததனுடைய விளைவுதான், அதற்கு அடையாளம்தான், என்னுடைய கையிலே இருக்கின்ற, நான் பிரதமருக்கு 2 ஆம் தேதி அன்று எழுதிய கடிதம். அந்தக் கடிதத்தில், தமிழகத்தினுடைய நிலவரத்தையும், ஐந்தாறு மீனவர்கள் சுடப்பட்டுக் கொல்லப்பட்டது, அதைத் தொடர்ந்து 12 மீனவர்கள் காணாமல் போயிருப்பது அல்லது காணாமல் அடித்திருப்பது, இந்தச் செய்திகளையெல்லாம் உள்ளடக்கிய ஒரு கடிதத்தைப் பிரதமருக்கு 2–5–2007 தேதியிட்டு நான் எழுதியிருக்கிறேன். அதை முழுவதும் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். முழுவதும் படிக்காவிட்டால் அது ஒரு விமர்சனத்திற்கு ஆளாகும் என்பதால், முழுவதும் படித்துக் காட்ட விரும்புகின்றேன்.

முற்பகல் 10–00

"Dear P.M.,

I am writing this letter to bring to your kind notice, that according to the investigations by Tamil Nadu Police, the missing 12 Indian fishermen who set out to sea on 4-3-2007 are in the custody of L.T.T.E. On 11-4-2007, the Indian Coast Guard secured six Sri Lankan Tamils along with their boat 'Maria', who were stranded in the mid-sea due to a technical snag in the engine. After following the required legal procedures, the 'Q' Branch of Tamil Nadu Police conducted extensive interrogation of the 6 Sri Lankan Tamils. The investigations made so far, reveal that all the six Sri Lankan Tamils belong to L.T.T.E.'s Sea Tiger Wing. The boat 'Maria' is the same one which was earlier involved in shooting and killing of 5 fishermen from Kanniyakumari in the Indian territorial

waters on 29-3-2007. The 12 fishermen, ten from Kanniyakumari, one from Tuticorin, one from Kerala, who went for fishing on 4-3-2007 in a motor boat 'Sri Krishna' from Sakthikulamthara Port of Kerala State have been abducted and they are in the custody of L.T.T.E. in one of their camps. A detailed communication in this matter has been sent today separately to the Secretary to Government of India, Ministry of Home Affairs, a copy of which is enclosed for immediate reference. These developments were the subject of serious discussion in the Legislative Assembly proceedings on 28-4-2007. The Members have expressed their concern and suggested that the Government of India should take serious view of these developments.

I therefore, earnestly request you to take all possible discrete measures which include effective sea surveillance, as I have suggested in my last D.O. letter dated 3-4-2007. The immediate task, however, is to retrieve the 12 Indian fishermen from the custody of L.T.T.E.. For this, I would request that the Indian High Commission in Colombo may be directed to do the needful immediately through the Ministry of External Affairs, Government of India.

I shall be grateful if the action taken on this letter is informed to me urgently."

*முற்பகல் 10–05*

இது நான் பிரதமருக்கு எழுதிய கடிதம். அதிலே நான், கடைசியாக எனக்கு எந்தத் தகவல் கிடைத்ததோ, அந்தத் தகவலை நான் உறுதிப்படுத்திக்கொண்டு, அவருக்கு எழுதிய வாசகங்கள் அதிலே இருக்கின்றன. அதுவரையிலே கிடைத்த செய்திகள் என்னையே குழப்பத்திலே ஆழ்த்திய செய்திகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதாவது, இந்த அவையிலே நான் நம்முடைய நண்பர் திரு. ஞானசேகரன் பேசும்போது மறுத்து சில குறிப்புகளைச் சொல்லி, அவர் கற்பனை செய்துகொண்டு பேசுகிறார், அந்தத் தீவிரவாதிகள் என்று சொல்பவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் என்று கருதிக்கொண்டு பேசினார் என்றுகூட நான் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு மறுப்புத் தெரிவித்தேன். மறுநாள் அந்தச் செய்தி எனக்குக் கிடைத்த பிறகு, நான் திரு. ஞானசேகரனைக் குறுக்கிட்டுப் பேசியதுகூடத் தவறாகிவிட்டது. ஆனால், எனக்குச் செய்தி இந்த வகையிலே கிடைத்திருக்கிறது என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்னது எனக்கோ அல்லது என்னுடைய அரசுக்கோ அல்லது என்னைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது அவையிலே உள்ளவர்களுக்கோ எந்த ஆபத்தை விளைவிப்பதாக



இருந்தாலும்கூட, அது எதிர்காலத் தமிழகத்தை வாழ வைக்க, எதிர்காலத் தமிழகத்திற்கு ஒரு நேர்மையான நிலையிலே இருந்தது என்கின்ற பெயரைத் தரப் பயன்படும் என்ற வகையிலேதான் நான் அன்றைக்கு அதை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அதற்குப் பிறகு வந்த அறிக்கைகள்——இங்கே குறிப்பிட்டார்கள், திரு. வைகோ அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், நாம் கற்பனை செய்து அல்லது என்னைச் சொல்லாமல், போலீஸ் தலைவர்—D.G.P. அவர்கள் தவறாக இந்த அறிக்கையைத் தந்திருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், எந்தப் பிரச்சினையிலே வேறுபட்ட கருத்து இருந்தாலும்கூட, இந்த ஒரு பிரச்சினையிலே எனக்கும், நம்முடைய முன்னாள் முதலமைச்சருக்கும் ஒரே கருத்து இருப்பதை இன்று அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்தாலே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைத் தாக்கித்தான் எழுதி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, கருத்து ஒற்றுமை இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டதாகவும் காவல் துறை மானியக் கோரிக்கையிலே பல இடங்களிலே இந்த அரசு குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகள்தான் இதுபோன்ற கனத்த சம்பவங்கள் அனைத்திலும் ஈடுபட்டிருப்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். இருந்தபோதும், தி.மு.க. அரசு, இக்கனத்த சம்பவங்களிலெல்லாம் ஈடுபட்டவர்கள் விடுதலைப் புலிகள் என்று குறிப்பிடாமல், இலங்கைத் தமிழர்கள் சிலர் என்று குறிப்பிட்டிருப்பதுபோலும், கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு மறைமுக ஆதரவு தருகிறார் என்பதை இச்செயல் காட்டுகிறது என்று அம்மையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி என்பதைப் போல, இரு பக்கமும் இடி என்ற நிலையிலே இந்தச் செய்தி வந்திருக்கிறது. அவர் தெளிவாகச் சொல்லி இருக்கிறார், இதை இலங்கைத் தமிழர்கள் என்று கருணாநிதி குறிப்பிட்டிருப்பது எல்லாம், புத்தகத்திலே குறிப்பிட்டிருப்பதெல்லாம் தவறு. அவர்கள் விடுதலைப் புலிகள்தான் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதை என்னுடைய அருமை நண்பர் கண்ணப்பன் அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைக் கிளறிவிட்டு, கோள் மூட்டி இதைத் தெரிவிப்பதாகக் கருதக் கூடாது. நிலைமையைச் சொல்லுகின்றேன். அந்த நிலைமையைச் சொல்வதால் தவறில்லை என்றும் கருதுகின்றேன். ஆகவே, இவர்கள்

எல்லாம் விடுதலைப் புலிகள் அல்ல என்று நான் ஒன்றும் சாதிக்கவும் விரும்பவில்லை. விடுதலைப் புலிகள்தான் என்று அவர்களைக் குற்றஞ்சாட்டி அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று கருதுகின்றவனும் நான் அல்ல. ஆனால், எனக்கு வந்த தகவலை, போலீஸ்மூலம், நம்முடைய உளவுத் துறையின்மூலம் வந்த நம்பகமான ஒரு தகவலை இந்த அவைக்குச் சொல்ல வேண்டிய சூழ்நிலையில், திரு. ஞானசேகரனுடைய பேச்சை அன்றைக்கு மறுத்துப் பேசுகின்ற அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான் வெளியிட்டேன். இதுதான் நிலைமை. இன்னமும் அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த முயற்சியிலேயிருந்து நான் பின்வாங்கவில்லை. 12 மீனவர்களைக் கண்டுபிடித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அந்த முயற்சியிலும், தமிழக அரசு உங்கள் அத்தனை பேருடைய துணையோடு தொடர்ந்து பாடுபடும் என்பதையும், இங்கே உரையாற்றிய எல்லாக் கட்சித் தோழர்களும் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவோடு இந்த விளக்கத்தை நான் நிறைவு செய்கின்றேன்.

## (இ) சேது கால்வாய்த் திட்டம், தொய்வின்றி நிறைவேற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகப் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைபுரியும் சேது கால்வாய்த் திட்டத்தை மதச் சாயம் பூசி மற்றும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு கெடுக்க நினைப்பதால் ஏற்பட்டுள்ள தீங்குகளைக் களைந்தெறிய உரிய நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. கோவிந்தசாமி, திரு. என். நன்மாறன், செல்வி கே. பாலபாரதி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோரும் விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேச வேண்டும். இதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 150 ஆண்டு காலப் பெருமுயற்சிக்குப் பிறகு, மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உருவான பிறகு, அதனுடைய





குறைந்தபட்ச செயல் திட்டத்திலே, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, தற்போது அதற்கான பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டப் பணிகள் தமிழகத்தை ஆளுகிற நம்முடைய பெருமதிப்பிற்குரிய கலைஞர் அரசினுடைய முழுமையான ஒத்துழைப்போடு நடைபெறுகின்றன. தமிழ்நாட்டு வளர்ச்சிக்கும், குறிப்பாகத் தென் மாவட்ட மக்களுடைய வேலைவாய்ப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மிகப் பெரிய பயன் தரக்கூடிய ஒரு சிறந்த திட்டம். ஆகவே, இந்தத் திட்டம் நடைபெறுவதற்குத் தொடக்கத்திலிருந்தே சிலர் இதற்கான எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்தார்கள். தற்போது இதற்குப் புதிய வடிவமாக, மதச் சாயம் பூசி, இந்த சேது கால்வாய்த் திட்டத்தைச் சீர்குலைப்பதற்கான முயற்சிகள் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*முற்பகல் 10–10*

பாரதீய ஜனதா கட்சியும், ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., போன்ற சங் பரிவார் அமைப்புகளும், இவர்களோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்துகொண்டு, இன்றைக்கு ஒரு வகுப்புவாதக் கருத்தைப் பரப்பி வருகிறார்கள். வரலாற்றுச் செய்திகளைத் திரித்துக் கூறுவதுபோன்ற செய்திகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்கள். பாரதீய ஜனதா கட்சி அல்லது இந்துத்வா அமைப்புகள் இதுபோன்ற இந்துத்வா கருத்துகளைப் பரப்புவதற்கென்றே உருவாக்கப்பட்டிருக்கிற Indo Link என்கிற ஒரு இணைய தளம்; அந்த இணைய தளத்தின்மூலமாக, இது இராமர் பாலம் என்று ஒரு தவறான செய்தியை, தகவல்களை நாடு முழுவதும் இன்றைக்குக் கிளப்பி, இந்துத்வா உணர்வைத் திசை திருப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அமெரிக்காவிலே தொடங்கப்பட்டு, இந்தியாவிலே செயல்பட்டு வருகிற 'ஹரே கிருஷ்ணா' என்கிற இயக்கமும் இந்தத் தவறான கதைகளை, இந்தப் பிரச்சாரத்தைத் தமிழகத்திலே வலுவாகச் செய்து வருகின்றது. இந்தத் திட்டமிட்ட சதியில், சேது சமுத்திரத் திட்டம் வரக்கூடாது என்பதில் அமெரிக்கப் பாதுகாப்பு இ[illegible]காவும் மிகவும் அக்கறையோடு உள்ளது என்பதையும் இந்தச் சந்த[illegible]பத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, [illegible]ல்மீகி இராமாயணத்திலோ அல்லது கம்ப இராமாயணத்திலே[illegible] எந்த இடத்திலேயும் இந்தப் பாலம், இராமர் கட்டியதாக எந்தக் [illegible]ருத்தும் குறிப்பிடப்படவில்லை. இராமாயணத்தை ஆய்வு செய்த சம[illegible]ஸ்கிருத அறிஞர் திரு. அமிர்தலிங்க அய்யர் அவர்கள் இந்தச் செ[illegible]திகளை

விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இராமர் தென் பகுதிக்கே வரவில்லை என்று அதிலே அவர் கூறுகிறார். அதை ஒரு புத்தமாகவும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இதுவரையில் அந்தச் செய்தி எந்த வகுப்புவாத சத்திகளாலும் மறுக்கப்படவில்லை. ஆகவே, இன்று சுற்றுச் சார்புகளை ஆய்வு செய்யும் மிகச் சிறந்த அமைப்பாக நாக்பூரிலே செயல்பட்டு வருகிற N.E.E.R.I. என்கிற அமைப்பு, சில சமயம் உச்ச நீதிமன்றத்திற்கே சில சந்தேகங்கள் ஏற்படுகிறபோது இது குறித்து உச்ச நீதிமன்றத்திற்கு விளக்கம் அளிக்கக்கூடிய ஓர் இடத்திலே, விளக்கத்தைக் கேட்டுப் பெறுகிற அந்த அமைப்பு, இந்த சேது கால்வாய்த் திட்டம் மிகச் சிறந்த திட்டம் என்று, இதற்கு ஆதரவாக தன்னுடைய கருத்துகளையும் வெளியிட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட இந்தப் பின்னணியில் இந்தப் பணி நடைபெற்று வருகிறபோது, அமெரிக்காவினுடைய சில நோக்கங்களுக்கு ஆதரவாகவும், வகுப்புவாத சக்திகள் தொடர்ந்து இதுபோன்ற மதச் சாயம் பூசி, இந்தத் திட்டத்தை சீர்குலைக்க 'முயற்சிக்கின்றன. அ.இ.அ.தி.மு.க.வினரும் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை தொடக்கத்திலிருந்து எதிர்த்து வரக்கூடியவர்கள். தற்போது புதிய வடிவத்தில் இன்றைக்கு பி.ஜே.பி. சொல்கிற, ஆர்.எஸ்.எஸ். சொல்கிற அதே கருத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சொல்ல ஆரம்பித்திருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே கலைஞர் அவர்களின் தலைமையில் செயல்படுகிற இந்த ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் வந்துவிடக் கூடாது என்கிற ஒரு குறுகிய அரசியல் நோக்கத்தோடு இந்தக் கருத்தினை இன்றைக்கு அ.தி.மு.க. வலியுறுத்தி வருகிறது. பாரதீய ஜனதா கட்சி இன்றைக்குப் பாராளுமன்றத்தில்கூட இந்தப் பிரச்சினையைக் கிளப்பி வருகிறது. இராமர் *(குறுக்கீடுகள்)* இருங்கள், அப்புறம் பேசுங்கள். *(மணியடிக்கப்பெற்றது)* ஆகவே *(குறுக்கீடுகள்)* எதற்காகக் கத்துகிறீர்கள்? சந்தேகம் இருந்தால், பேசுங்கள். இரண்டாவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* கோவிந்தசாமி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஏன் இப்படிக் கத்துகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** சட்டமன்றத்தில் காட்டுமிராண்டிகள் கூட்டம் மாதிரிப் பேசினால் என்ன அர்த்தம் இது? *(குறுக்கீடுகள்)*





என்ன அர்த்தம் இது? என்ன வேண்டுமானாலும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு பேசிக்கொண்டே இருப்பதா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. கோவிந்தசாமி:** விளக்கம் இருந்தால் பேசுங்கள். ஏன் இப்படிக் கத்துகிறார்கள்? *(குறுக்கீடுகள்)* ஆகவே, அ.தி.மு.க. நண்பர்களுக்கு இதிலே மாறுபட்ட கருத்து இருந்தால் முறையாக விவாதிக்கட்டும். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அதைப் பற்றி விவாதிக்க நாங்கள் தயார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படியில்லாமல், இடையிலே இப்படிக் கூச்சல் போடுவது எந்தவிதத்திலும் நியாயமானது அல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே பாரதீய ஜனதா கட்சி இராமர் பிறந்த இடம் என்று சொல்லி, பாபர் மசூதியை இடித்து நாடு முழுவதும் கலவரத்தை உருவாக்கி, அரசியல் நடத்தியது. இப்போது இராமர் பாலத்தைப் பயன்படுத்தி இன்றைக்கு ஒரு வகுப்புவாத அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு பி.ஜே.பி. முயற்சிக்கிறது. அந்த முயற்சிக்குத் தமிழகத்திலே இருக்கின்ற அ.இ.அ.தி.மு.க. துணை போவது கண்டனத்திற்குரிய செயல் என்பதை இந்த நேரத்திலே நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, இது மிகச் சிறந்ததொரு நல்ல திட்டம். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுகின்ற திட்டம். குறிப்பாகத் தென் மாவட்ட மக்களுக்கு வாழ்வளிக்கின்ற ஒரு சிறப்பான திட்டத்தை, அ.தி.மு.க. விஞ்ஞானத்திற்குப் புறம்பாகச் சீர்குலைப்பதற்காக எடுக்கின்ற முயற்சியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கடுமையாக ஆட்சேபிப்பதோடு, இப்படிப்பட்ட பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டாலும், இந்தச் சிறந்த திட்டம் நிறைவேறுவதற்கு மத்திய அரசும், தமிழ்நாட்டை ஆளுகின்ற கலைஞர் அரசும் தொடர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபடுவதோடு, இதுபோன்ற வகுப்புவாதச் சாயம் பூசுகின்ற இந்தக் கருத்துகளுக்கு எதிராகத் தமிழகத்து மக்கள் மத்தியில் உண்மையை எடுத்துச் சொல்ல முன்வர வேண்டுமென்று இந்த அவையிலே பதிவு செய்து, அமர்கின்றேன், வணக்கம்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இதே subject தானே? நேரத்தின் அருமை கருதி, திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னதையே உங்கள் கருத்தாக வைத்துக்கொண்டு, Chief Minister

அவர்களைப் பதில் சொல்லச் சொல்லிவிடலாமே? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன குற்றச்சாட்டு? (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மிக முக்கிய அடிப்படைத் திட்டங்களிலே ஒன்றான சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது, 150 ஆண்டு காலக் கனவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், நேரத்தின் அருமை கருதி சொல்கிறேன்; (குறுக்கீடு) இதே subject தான்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சொல்லி முடித்துவிடுகிறேன். சொல்ல வேண்டிய விஷயம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்தத் திட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் பாரதீய ஜனதா கட்சி மற்றும் சிவசேனா உறுப்பினர்களால் மிகப் பெரிய எதிர்ப்பு எழுப்பப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி அங்கிருக்கின்றவர்கள் சொல்கின்ற காரணம், இராமர் கட்டிய பாலம் என்பது. ஆனால், இயற்கையாகவே உருவான ஒரு மணல் திட்டை இராமர் கட்டியது என்று குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். அதில் அறிவியல்பூர்வமான உண்மை என்பதே இல்லை. அதிலே குறிப்பாகச் சொல்கின்றபோது, அண்ணா அவர்கள் சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பினார்கள். அதே கருத்தைத்தான் எம்.ஜி.ஆர். அவர்களும் கொண்டிருந்தார்கள். ஆனால், அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் இதை எதிர்க்கின்றார். (குறுக்கீடு) இவர்கள் யார் என்பதை அடையாளம் காண வேண்டிய அவசியத்தில் தமிழகம் இருப்பதாக உணர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் பெயரிலே கட்சி என்று சொல்லிக்கொண்டு, இந்த சேது சமுத்திரத் திட்டத்தின்மூலம் இராமர் பாலம் என்ற ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கின்றார்கள். இதிலிருந்து நான் சந்தேகப்படுவது, பாரதீய ஜனதா கட்சியும், சிவசேனாவும் சொல்கின்ற அந்தக் கருத்தையே இவர்கள் சொல்கின்றார்கள் என்றால், இப்படித்தான் பாபர் மசூதியை இடிப்பதற்குக் கரசேவை நடந்தபோது இங்கிருந்து, தமிழ்நாட்டிலிருந்து ஆட்களை அனுப்பியவர்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். ஆகவே, இவர்கள் அ.தி.மு.க., அண்ணா தி.மு.க. என்ற பெயரை மாற்றிக்கொண்டு,



இவர்கள் யார் என்பதை நாட்டுக்கு அடையாளம் காட்டினால் நல்லது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் அவருடைய கருத்தைச் சொல்கின்றார். நீங்கள் கடைசியில் பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே, மக்களுக்குத் தேவையாக இருக்கின்ற சேது சமுத்திரத் திட்டத்தை, ஒரு நல்ல திட்டத்தைத் தமிழகத்தைச் சேர்ந்த கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள் முன்னின்று நடத்துகின்றார் என்ற ஒரே காழ்ப்புணர்ச்சியின் காரணத்தினாலே அதைத் தடுப்பதற்கான முயற்சியை அ.தி.மு.க. எடுக்கிறது. ஆகவே, அறிவியல்பூர்வமாகச் சிந்திப்பதற்கு அ.தி.மு.க. முயற்சி எடுக்க வேண்டும். இல்லையென்றால், அரசியலில் நீங்கள் இருக்கின்ற இடம் தெரியாமல் போய்விடும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் கடைசியாக உங்கள் மறுப்பைச் சொல்கின்றீர்களா? இல்லையென்றால், அவ்வப்போது பதிய வைக்க வேண்டுமா? கடைசியாக உங்கள் மறுப்பைச் சொல்லிவிட்டுப் போங்கள். இடையிடையிலே தலையிடுவதால் நேரம் waste ஆகின்றது. அதுதான் என்னுடைய feeling. (குறுக்கீடு)

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன, அவரை முழுவதுமாகப் பேசவிட்டுக்கொண்டே இருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் சொன்னதற்கு அப்புறம் கடைசியாக நீங்கள், அவர் இப்படிச் சொன்னார், அதற்கு நான் மறுப்புச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போங்கள். அதுதான் நல்லது. (குறுக்கீடு) அதைத்தான் நீங்கள் கடைசியாகச் சொல்லுங்கள். இன்னோர் உறுப்பினர் பேச வேண்டி இருக்கிறது; ஞானசேகரன் பேச வேண்டும். (குறுக்கீடு) ஞானசேகரன், நீங்கள் பேசவில்லையா? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கோவிந்தசாமியும், சிவபுண்ணியமும் ஒரு தவறான கருத்தை இந்த சட்டமன்றத்திலே பதிவு செய்துகொண்டிருக்கின்றார்கள். சேது சமுத்திரத் திட்டம் உறுதியாகக் கொண்டு வரப்பட வேண்டுமென்று ஆணித்தரமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோதே, மாநிலங்களவையில் முதல் குரல் எழுப்பியவரே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–20*

அந்தத் திட்டம் வருவதில் யாருக்கும் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். ஆனால், அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றபொழுது, குறிப்பாக எந்தத் திட்டமாக இருந்தாலும் அந்தத் திட்டம் அரசின் சார்பாக நிறைவேற்றப்படுகின்றபொழுது சாதக, பாதகங்களை அரசு ஆராய்ந்து, சாதகங்களை எடுத்துக்கொண்டு, பாதகங்களை நிவர்த்தி செய்கின்ற ஒரு வழியைத்தான் எந்தவொரு அரசாக இருந்தாலும் கடைப்பிடிக்கும். அந்த வகையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் சில பல நல்ல கருத்துகளை, சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்காதவாறு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று ஆரம்பத்தில் சொன்னார்கள்.

அங்கு சில பல பிரச்சினைகளைச் சொல்கின்றார்காள். கடலுக்கு அடியில் இருக்கின்ற மணல் திட்டுகள் அலைகளினால் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றன என்ற கருத்தினை வல்லுனர்கள் சொல்கின்றார்கள். நீங்கள், அங்கு இருக்கின்ற மணலை, தொடர்ந்து அந்தத் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து நடைமுறைப்படுத்துகின்ற வரை, அந்த மணலை dredging செய்து எடுக்கின்ற ஒரு வழிமுறை அந்தத் திட்டத்திலே இருக்கின்றது. மணலை நீங்கள் எடுத்துக்கொண்டே இருந்தீர்களானால், திரும்பவும் அந்த மணல் திட்டு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக வல்லுனர்கள் சொல்கின்றார்கள். அதைத் தீர ஆராய்ந்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று சொன்னார்கள்.

அதைப்போல, அந்தப் பகுதியில் இருக்கின்ற மீன் வளங்கள் அழியக்கூடிய ஒரு வாய்ப்பு இருப்பதாக மீனவர்கள் அச்சம் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அந்த பயத்தையும் மீனவர்களிடம் போக்க வேண்டுமென்ற கருத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த





நேரத்திலே சொன்னார்கள். இவையெல்லாம் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற பல்வேறு பாதகமான கருத்துகள். இந்தக் கருத்துகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நேரத்திலே கருத்தைச் சொன்னார்கள்.

மற்றொன்று, இன்றைக்குச் சொல்கிறார்கள், இராமர் பாலம் என்றுதான் அதற்குப் பெயரே. வேறு ஏதாவது இருக்கின்றதா? இராமர் பாலம், இராமர் பாலம் என்று காலங்காலமாக அந்தப் பகுதியை நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதையும், அந்த புராதனச் சின்னம் அழிந்துவிடாமல், ஏற்கெனவே இருக்கின்றதா (குறுக்கீடுகள்) சரி, விடுங்கள். உங்கள் . . .

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உங்கள் கருத்துப்படியே நானும் வருகிறேன். புராதனச் சின்னமாக இருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் துணைத் தலைவர், இங்கே பார்த்துப் பேசுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உங்கள் கருத்துப்படியே சொல்கிறேன். அது புராதனச் சின்னமாக இருக்கும் என்று . . .

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பாலம் கட்டுகின்ற பிரச்சினை. இதில் நமக்குள் பாலம் கட்ட வேண்டுமே தவிர, பாலத்தை உடைத்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்தக் காலத்திலிருந்து இராமர் பாலம், இராமர் பாலம் என்று வழி, வழியாக அந்தப் பாலத்திற்குப் பெயரும் சொல்லிக்கொண்டிருக்கிறோமே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அக்ரி கிருஷ்ணமூர்த்தி, உங்கள் சப்தம் எனக்கு ஓங்கிக் கேட்கிறது. உட்காருங்கள் முதலில். அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

[2007 மே 4

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** குறிப்பாக, புராதனச் சின்னங்களைப் பாதுகாத்து நடவடிக்கை எடுப்பதும் ஓர் அரசினுடைய கடமை. ஏற்கெனவே அதற்கென்று ஒரு துறையை அரசு தன் கைப்பட வைத்திருக்கின்றது. ஏனென்றால், அந்தக் காலத்திலிருந்து, புராதனச் சின்னங்கள் அழிந்து போகாத ஒரு சூழ்நிலையை எந்தக் காலத்திலும் அரசு காப்பாற்றி வர வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இராமர் பாலம் என்ற புராதனச் சின்னம் அந்தப் பகுதியில் இருந்ததா என்பதை நீங்கள் ஆய்வு செய்து, உங்களுடைய நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். சேது சமுத்திரத் திட்டம் வரக் கூடாதென்று சொன்னதாகக் கருத்து தொனிக்கின்ற வகையில் திரு. கோவிந்தசாமி அவர்களும், திரு. சிவபுண்ணியம் அவர்களும் திட்டமிட்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, வெளியில் பேச வேண்டியதை, பொதுக் கூட்டங்களில் பேச வேண்டியதைச் சட்டமன்றத்திலே பேசிப் பதிவு செய்ய வேண்டுமென்கிற வகையில் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பார்த்துப் பேசுங்கள். அங்கே அவரை ஏன் பார்க்கிறீர்கள்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர்கள்தானே சொன்னார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் உறுப்பினர்களைப் பார்த்துப் பேசக் கூடாது. என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் உங்களைப் பார்த்துப் பேசும்போது, நீங்கள் அங்கே திரும்பிக்கொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) ஆகவே, சேது சமுத்திரத் திட்டம் வந்து சேர்வதில் யாருக்கும் எந்தவித மறுப்பும் இங்கே இல்லை. முழுமனதோடு நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், அதில் இருக்கின்ற சாதக, பாதகங்களை ஆய்ந்து, ஆராய்ந்து, அதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்ற கடமை ஓர் அரசுக்கு இருக்கிறது என்பதைச் சொல்லி, அதை நீங்கள், அரசுப் பொறுப்பேற்றிருக்கின்ற தமிழக அரசும், மத்தியிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்திக்கொண்டிருக்கிற மத்திய அரசும் விளக்க வேண்டுமென்றுதான் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2007 மே 4]

*முற்பகல் 10–25*

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கோவிந்தசாமி, முதல்வர் பதில் சொல்லப் போகிறார். உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஆர். சின்னசாமி, எழுந்திருந்து, எழுந்திருந்து உட்காருகிறீர்களே, என்ன விஷயம்? அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டம் என்பது 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு முயற்சி. சர் A. இராமசாமி முதலியார்போன்ற பெரும் மேதைகள் எல்லாம் குழுவிலே இடம்பெற்று, அந்தக் குழுவினர் ஆய்வு நடத்தி, அதற்கு மதிப்பீடுகள் எல்லாம் வரையப்பெற்று, ஏதோ காரணங்களால் அவ்வப்போது தடை ஏற்பட்டு, இதை எப்படியும் நிறைவேற்றியே தீருவோம் என்று 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலக்கட்டத்தில் ஒரு நாளைக் குறிப்பிட்டு, நெய்வேலி நிலக்கரி, சேது சமுத்திரத் திட்டம், இவற்றைப் பற்றியெல்லாம் எழுச்சி நாள் ஒன்று கொண்டாடி, மத்திய அரசு அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு முறையீடு வைக்க, அந்த நாளைப் பயன்படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து இதுவரையிலே சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே எல்லாக் கட்சிகளுக்கும் விருப்பம் இருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனிப்பட்ட முறையிலே ஓர் ஆர்வம் உண்டு என்பதை நான் இங்கே விளக்காமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தினுடைய பயன்கள் என்ன என்பதை, திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்கள் சொன்னபோது, அந்நியச் செலாவணி வருவாய் அதிகரிக்கும்; தொழில் வர்த்தகம் தமிழகத்திலே பெருகும்; கப்பல்களுடைய பயண தூரம், நேரம் பெருமளவு குறையும்; தமிழகம் மற்றும் அண்டை மாநிலத் துறைமுகங்களில் சரக்கு கையாளும் திறன் அதிகரிக்கும்; இராமேஸ்வரம் அல்லது மண்டபத்தில் புதிய சிறு, சிறு துறைமுகங்கள் உருவாகும்; கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி, மீனவர்களுடைய பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் உயரும்; மன்னார் வளைகுடாவிலேயிருந்து பாக் ஜலசந்தி வரை மீனவர்களுக்கு வசதி அளிக்கும்; இலங்கை உள்ளிட்ட வேறு நாடுகளினுடைய துறைமுகங்களில் இந்திய சரக்குகள் பரிமாற்றம் செய்யப்படுவது தவிர்க்கப்படும்; நாட்டின் கடலோரப் பாதுகாப்பு வலுப்பெறும்; இத்திட்டத்தினால் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்;

இராமேஸ்வரம், தொண்டி, சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம், நாகை ஆகிய கடலோர நகரங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் உருவாகும்; தென் மாவட்டங்கள் பெருமளவிற்கு வளர்ச்சி பெறும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது, அறிமுகப்படுத்தப்பட்டது.

*முற்பகல் 10–30*

*10–5–2001*, அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

"இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்துக்கேற்ற பாதைகள் இல்லை, மேற்கே இருந்து கடல் வழியாகக் கிழக்கு நோக்கிக் கப்பல்கள் செல்ல வேண்டுமானால், இலங்கையைச் சுற்றிக்கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாகத்தான் சேது சமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி இராமேஸ்வரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலுள்ள ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்துக்குத் தடையாக உள்ள மணல் மேடுகள்—இதுதான் ஆடம்ஸ் பிரிட்ஜ். அதுதான் இராமர் பாலம். –இந்தப் பகுதியில் கப்பல் போக்குவரத்துக்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள், இவற்றையெல்லாம் அகற்றி, ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்."

இது அதிமுகவினுடைய தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்ற தலையாய நோக்கம்.

அவர்கள் சொன்னார்கள், "மணல் மேடுகளை எல்லாம் எடுப்பதிலே சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதுதான் அம்மாவினுடைய நோக்கம்" என்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே அழகாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்தத் தீர்மானத்திலேயே, *10–5–2001* அன்று வெளியிடப்பட்ட அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில், "இலங்கையில் தலைமன்னாருக்கு இடையிலுள்ள ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகளை அகற்றி, ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம். இந்த சேது சமுத்திரத் திட்டத்தால் நம் நாடு மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசிய நாடுகளும், கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் பயனடையும்; வாணிபமும், தொழிலும் பெருகும்; அந்நிய முதலீடு அதிகரிக்கும்; அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கும்; கப்பலின் பயண



தூரம் பெருமளவுக்குக் குறையும்; எரிபொருளும், பயண நேரமும் மிச்சமாகும்; ஏற்றுமதி இறக்குமதி அதிகரிக்கும்; குறிப்பாக, இராமநாதபுரம் போன்ற மிகப் பிற்பட்ட தமிழகத் தென் பகுதி மக்கள் வாழ்க்கைத் தரம் மேம்படும்; வேலைவாய்ப்பு பெருகும்; தூத்துக்குடி துறைமுகம் சர்வதேச அளவில் விரிவடையும்; சுற்றுலா வளர்ச்சி அடையும்; இன்ன பிற நன்மைகளைத் தர இருக்கும் இத்திட்டத்தின் தேவையை, முக்கியத்துவத்தை உணர்ந்து, நிதி நெருக்கடியை ஒரு சாக்காகக் கூறிக்கொண்டிருக்காமல், உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களோடு மத்திய அரசு தொடர்புகொண்டு, வேண்டிய நிதியைத் தேடி, இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, ஒரு காலக்கெடுவிற்குள் திட்டத்தை நிறைவேற்றும்படி மத்திய அரசை நாங்கள் விடாது தொடர்ந்து வலியுறுத்துவோம்." இது அ.தி.மு.க.வினுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட உறுதியான, மிக அழுத்தந்திருத்தமான தீர்மானமாகும்.

இதைத்தான் இன்றைக்கு நாம் சேது சமுத்திரத் திட்டம் ஏன் வேண்டும் என்பதற்கான காரண, காரிய விளக்கங்களைச் சொல்லும்போது சொல்கின்றோம். ஆனால், இன்றைக்குத் திடீரென்று மதவாதிகளால், எப்படி அயோத்தியிலே மதவாதம் புகுந்த காரணத்தால், அங்கே இராமர் கோவில் என்று சொல்லி, பாபர் மசூதியை இடித்து, அதன் காரணமாக இந்தியாவிலே இரத்த ஆறு ஓடியதோ, அதைப்போல ஒரு நிகழ்ச்சிக்கு வித்திடச் சில பேர் முயன்று, அது இராமர் கட்டிய பாலம், அந்தப் பாலத்தை உடைத்தால் விபரீதம் உண்டாகும்; ஆகவே, இந்தத் திட்டத்தையே நிறுத்த வேண்டுமென்று ஒரு சிலர் இன்றைக்கு முற்பட்டிருக்கிறார்கள் என்றால், அவர்களிலே பெரும் பகுதியினர்—நான் மறுபடியும் திராவிட நாட்டுக்கு வந்துவிட்டதாகக் கருதக் கூடாது—அவர்களில் பெரும் பகுதியினர் இந்தியாவினுடைய வடக்குப் பகுதியைச் சேர்ந்த மதவாதிகள். அவர்களுடைய எண்ணமெல்லாம், இந்தத் திட்டம் நிறைவேறி, தென்னகம் வளம் கொழிக்கும் பூமியாக, பசுமைத் தாயகமாக ஆகிவிட்டால் என்ன செய்வது என்கிற எரிச்சலால்தான், இது வரக் கூடாது என்பதற்காக இராமரை அழைத்து வருகிறார்கள் என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தத் திட்டத்தைக் கொண்டு வர நாங்கள் எங்களுக்குள்ளேகூட போட்டி போட்டுக்கொண்டோம். எங்களால்தான் வந்தது என்று நானும்கூடச் சொன்னேன். வேறு கட்சியிலே உள்ளவர்கள் சொன்னார்கள். கண்ணப்பன் கட்சியும் சொன்னது. எங்களால்தான் வந்தது, எங்களால்தான் வந்தது என்று சொன்னது. ஆனால், இன்றைக்கு

இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று அறிக்கைவிட்டு, நான் சட்டப்படி எதிர்கொள்வேன் என்று இன்றைக்குக்கூட அறிக்கை விட்டிருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், சேது சமுத்திரத் திட்டத்திற்கு எனது முயற்சியே காரணம் என்று அறிக்கை வெளியிட்டார்கள் அப்போது. இந்தத் திட்டம் நமக்கு வாய்க்கும் என்று மத்திய அரசு வழங்கிவிட்ட அந்தக் காலக்கட்டத்தில் கருணாநிதி, வைகோ, யாரும் இதற்குக் காரணமல்ல. இராமதாஸ்கூட காரணமல்ல. இதற்குக் காரணமே நானேதான் என்ற அம்மையார் அவர்கள் அப்போது அறிக்கை விட்டார்கள். இப்போது வேடிக்கை என்னவென்றால், அவர்களேதான் இந்தத் திட்டம் வரக் கூடாது என்பதற்கும் நானேதான் காரணம் என்ற அளவிற்கு அதை மறுத்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு மதுரையிலே பார்த்தால், அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். 'இந்தத் திட்டத்தை, இராமர் பாலத்தை இடிப்பதை நிறுத்தாவிட்டால் சட்ட ரீதியான நடவடிக்கையை உடனடியாக அஇ-அதி.மு.க. எடுக்கும்--ஜெயலலிதா அறிக்கை' என்று வந்திருக்கின்றது.

*முற்பகல் 10-35*

அதைப்போல, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வார், 'இராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று சொல்கிறோமே தவிர, சேது சமுத்திரத் திட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லையே' என்றுகூட அவர்கள் சொல்வார்கள். சொல்வதற்கு அவர்களுக்கு இடம் இருக்கிறது. அவர்கள் இராமர் பாலத்தை இடிப்பதை நிறுத்தாவிட்டால் நடவடிக்கை எடுப்போம் என்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இராமர் பாலத்தை இடிக்காமல்,-- எண்ணெய் தடவாமல் எப்படித் தலை சீவ முடியும்? அவர் தலை சீவி இருக்கிறார். நான் சீவ முடியாது. எண்ணெய் தடவினால்தான் சிலர் தலை சீவ முடியும். இராமர் பாலத்தை இடிப்பதை நிறுத்தாவிட்டால், அ.தி.மு.க. நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி இருக்கின்றார்கள். நான் இதை அதிகமாக விவரித்துப் பேச விரும்பவில்லை. ஏனென்றால், பாராளுமன்றத்திலேகூட இது விவாதத்திற்கு வந்திருக்கிறது. நீதிமன்றத்திலும் இது இருக்கிறது. எனவே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளுக்கு இடைஞ்சலாகவோ, குறுக்கீடாகவோ இந்த விவாதம் அமைந்துவிடக் கூடாது என்பதற்காக, 'விரிக்கின் பெருகும்; இருந்தாலும் விரிவுக்கஞ்சி விடுக்கிறேன்' என்ற அளவில் இந்த அளவோடு நிறுத்திக்கொண்டு, இந்தப் பாலம் அமைந்தால், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறுமேயானால், செந்தமிழ்நாடு வளம் கொழித்திடும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த



வளம் கொழிக்கக் கூடாது என்று எண்ணுகின்றவர்கள் வேண்டுமானால் இதற்குக் குறுக்குப் பாதையிலே ஏதாவது இடையூறுகள் செய்யலாம். அந்த இடையூறுகள் செய்யாமல் ஒதுங்கி இருந்து, உதவிடுங்கள் என்று நான் பேரன்போடு, மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமைகிறேன்.

## 2. கவன ஈர்ப்பு

### (அ) இராதாபுரம் கால்வாய் மற்றும் 52 குளங்களைச் சீரமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராதாபுரம் கால்வாய் மற்றும் 52 குளங்களைச் சீரமைக்க வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

இராதாபுரம் கால்வாய், சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தின்கீழ் 1972 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இதன் நீளம் 28.800 கிலோ மீட்டர் ஆகும். இதில் 52 குளங்கள் உள்ளன. இக்கால்வாயின் மொத்த ஆயக்கட்டு 17,000 ஏக்கர். இக்கால்வாயின் அதிகபட்ச நீர்த்தேவை வினாடிக்கு 150 கன அடி. 2006-2007 ஆம் ஆண்டு பாசனக் காலத்தில் இராதாபுரம் கால்வாய்க்கு 4-8-2006 முதல் 21-12-2006 வரை மொத்தம் 528.23 மில்லியன் கன அடித் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

இராதாபுரம் கால்வாய்க்குப் பேச்சிப்பாறை அணையிலிருந்து நீர் கொண்டு செல்லும் தோவாளைக் கால்வாயிலும் ஏராளமான பழுதுகள் உள்ளன. தோவாளைக் கால்வாயைச் சீரமைக்க ரூபாய் 1,600 இலட்சம், இராதாபுரம் கால்வாய் மற்றும் அதன்கீழ் உள்ள 52 குளங்களைப் புனரமைக்க ரூ.750 இலட்சம் ஆகும் எனத் தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தில் செயல்படுத்த மதுரை மண்டலப் பொதுப் பணித் துறை நீர் வள ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு பேச்சிப்பாறை அணையில் இருந்து சிற்றாறு பட்டணங்கால் என்ற திட்டத்தின்மூலம் இராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டத்திற்கு, 42 அடி உயரம்கொண்ட பேச்சிப்பாறை அணைக்கட்டானது, இராதாபுரம் கால்வாய் வெட்டுவதற்காக 48 அடியாக, 6 அடி உயரம் உயர்த்திக் கட்டி, 150 கன அடிக் கொள்ளளவுகொண்ட இராதாபுரம் கால்வாய் வெட்டப்பட்டு, தோவாளைக் கால்வாய் வழியாகத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தோவாளைக் கால்வாய் ஏற்கெனவே 450 கன அடித் தண்ணீர் கொள்ளளவுகொண்ட அந்தக் கால்வாய், 450 கன அடித் தண்ணீர் கொண்டு வந்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே இருந்த பாசனக் குளங்கள், பாசனப் பகுதிகளுக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் கொண்டு வரும். மேலும் 150 கன அடி கொள்ளளவு கொண்ட இராதாபுரம் கால்வாய் வெட்டிய காரணத்தினால், 450 கன அடி கொள்ளளவுகொண்ட அந்தத் தோவாளைக் கால்வாயை அகலப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரினுடைய கவனத்திற்கு நான் அன்போடு கொண்டு வருகின்றேன். காரணம் ஏற்கெனவே, 450 கன அடி தண்ணீர் எடுக்கின்ற கால்வாய், பல இடங்களில் பழுதுபட்டு 360 கன அடித் தண்ணீருக்குமேல் எடுக்க முடியாத ஒரு நிலை இருக்கின்றது. இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 16 கோடி அளவில், அந்தத் தோவாளைக் கால்வாயைச் செப்பனிடுவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதேபோல் இராதாபுரம் கால்வாயையும், 52 குளங்களையும் சரி செய்வதற்கு ரூ.7.50 கோடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இன்னும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற நிலையில் இருக்கின்றீர்கள். இந்த நிலையில் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்; தோவாளைக் கால்வாயைச் செப்பனிடுவதற்குப் பதிலாக அதை அகலப்படுத்தி, மேலும் ஒரு 150 கன



அடித் தண்ணீர் எடுக்கின்ற அளவிற்கு அகலப்படுத்தி, அந்தக் கால்வாயைப் பழுது நீக்கினால்தான், இராதாபுரம் கால்வாய்க்குத் தொடர்ந்து 150 கன அடித் தண்ணீர் எடுக்கின்ற வாய்ப்புக் கிடைக்கும். அணை ஏற்கெனவே 42 அடியாக இருந்ததை 48 அடியாக, 6 அடிக்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதையும் மனதிலே வைத்து, பேச்சிப்பாறை அணையிலிருந்து நிரந்தரமாக இராதாபுரம் வறண்ட பகுதிக்குத் தண்ணீர் வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தோவாளைக் கால்வாயை 600 கன அடி கொள்ளளவுகொண்ட கால்வாயாக அகலப்படுத்தி, பழுது நீக்கி, இராதாபுரம் கால்வாயையும், அதிலுள்ள குளங்களையும் பழுது நீக்கித் தரக் கேட்டு, அமர்கிறேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோவாளைக் கால்வாயினுடைய கொள்ளளவு 150 கன அடி உள்ள தண்ணீரை எடுத்துச் செல்லும். ஆனால், இப்பொழுது அந்தக் கால்வாய் மிகவும் பழுதுபட்டு, உடைப்புகள் ஏற்பட்டு, அந்த அளவுக்குத் தண்ணீர் போகிற வசதியில்லை. அதைச் சீர்படுத்தினாலே தோவாளைக் கால்வாயினுடைய முழுக் கொள்ளளவும் வந்தால், அந்தப் பாசனப் பகுதிக்குப் போதிய நீர் கிடைக்கும். இராதாபுரம் கால்வாய்க்கும் போதிய நீர் கிடைக்கும். எனவே, அதை அகலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிற காரணத்தால்தான், இன்றைக்கு சுமார் 7½ கோடி ரூபாய்த் திட்டத்தில் அவற்றையெல்லாம் புதுப்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

## (ஆ) செங்கல்பட்டு, கொளவாய் ஏரியில் கழிவு நீர் கலப்பதால் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் அவர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு நகரின் கழிவு நீர் கொளவாய் ஏரியில் நேரடியாகக் கலப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் :

## அறிக்கை

செங்கல்பட்டு நகராட்சிப் பகுதியில் உற்பத்தியாகும் அன்றாடக் கழிவு நீர் நாளொன்றுக்கு 6,000 கிலோ லிட்டர். அதன் பெரும் பகுதியானது எந்தவிதச் சுத்திகரிப்புமின்றி கொளவாய் ஏரியை நேரடியாகச் சென்றடைகிறது. மேற்கண்ட கழிவு நீர் ஏரியில் சென்று கலக்காவண்ணம் தடுக்க செங்கல்பட்டு நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை அமல்படுத்த அரசு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியதையடுத்து, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் நிதிக் குழுமத்திற்கு நகராட்சியால் கடிதம் எழுதப்பட்டது. தமிழ்நாடு நகர மேம்பாட்டு நிதி ஆணையம்மூலமாகத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட மெசர்ஸ் ஷா டெக்னிக்கல் கன்சல்டன்சி நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது. இந்நகராட்சியில் தினசரி உருவாகும் 6,000 கிலோ லிட்டர் கழிவு நீரைச் சுத்திகரிக்க ரூபாய் 22.63 கோடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட கருத்தறிதற்குரிய நிறுவனத்தால் வரைவுத் திட்ட அறிக்கை மே 2004-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க செங்கல்பட்டு நகராட்சிப் பகுதியில் இடம் இல்லாததால், சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் செங்கல்பட்டு அருகிலுள்ள திருக்கழுக்குன்றம் தாலுகா, புல்லேரி கிராமத்தில் 10 எக்டேர் அரசு மேய்ச்சல் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்ட இடத்தினை செங்கல்பட்டு நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தினை நிறுவி, பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படத் துவங்கும்பட்சத்தில், கொளவாய் ஏரியில் கழிவு நீர் சென்று கலப்பது தடுக்கப்படும்.





திருவாளர்கள் மகேந்திரா வேர்ல்டு சிட்டி டெவலப்பர்ஸ் லிமிடெட் தொழில் பூங்காவானது, கொளவாய் ஏரியின் வடக்கு, வட கிழக்குப் பகுதியில் வீராபுரம், தென்மேல்பாக்கம், அஞ்சூர் குன்னவாக்கம், அனுமந்தை, பாணூர் மற்றும் ராஜகுழிபேட்டை கிராமங்களில் 1,318 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ளது. மேற்கண்ட பூங்காவில் அதிக அளவில் மாசுபடுத்தாத ஆரஞ்சு வகைத் தொழிற்சாலைகளான வாகன உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஆயத்த ஆடைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் மின்னணுவியல் தொழிற்சாலைகள் என 32 தொழிற்சாலைகள் அமைய உள்ளன. தற்போது மேற்கண்ட தொழில் பூங்காவில் 6 தொழிற்சாலைகள் மட்டுமே தங்கள் உற்பத்தியைத் துவங்கி உள்ளன. மற்ற 26 தொழிற்சாலைகள் தங்களது தொழிற்சாலைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் அன்றாடக் கழிவு நீர் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலும் மற்றும் தொழிற்கழிவு நீர் அந்தந்தத் தொழிற்சாலையிலேயே சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் பசுமைப் போர்வை/மரங்கள் வளர்க்கவும் மற்றும் தொழிற்சாலைகளின் மறு உபயோகத்திற்கும் பயன்படுத்துவதால் மேற்கண்ட தொழில் பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவு நீர் கொளவாய் ஏரியைச் சென்றடைய வாய்ப்பில்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். குறிப்பிட்டிருக்கிற அந்த விவர அறிக்கையிலே, நாள் ஒன்றுக்கு 6,000 கிலோ லிட்டர் கழிவு நீர் நேரடியாகக் கொளவாய் ஏரியில் கலப்பதாகவும், இதைத் தடுப்பதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, ரூபாய் 22.63 கோடி செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 3 ஆண்டு காலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பொழுது அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த இடம் தேர்வு செய்யப்பட்டு ஏறக்குறைய 2 ஆண்டுகளாகி விட்டன. தொடர்ந்து

நாங்களும் இந்த அவையிலே பேசி வருகிறோம். நம்முடைய சுற்றுச்சூழல் துறையின் சார்பிலே நம்முடைய உள்ளாட்சித் துறை உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்க முன்வருமா? அதே சமயத்தில், இந்தக் கழிவு நீர் கலப்பதாலே, கொளவாய் ஏரி—இங்கே இருக்கிறவர்கள் பெரும்பாலும் பார்த்திருப்பார்கள்; தேசிய நெடுஞ்சாலை ஓரத்திலே கடல்போன்று காட்சி அளிக்கிற ஒரு ஏரி அது! தொடர் வண்டியிலே போகிறவர்கள் பார்ப்பதற்கு ரம்மியமாக இருக்கிற ஒரு ஏரியாக இருக்கிறது. அந்த ஏரி இப்பொழுது கொசுக்களை உற்பத்தி செய்கிற ஒரு இடமாகவும், அதேபோன்று பல்வேறு பூச்சிகளை உற்பத்தி செய்கிற மையமாகவும் இருந்துகொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, மழைக் காலங்களிலும், குளிர் காலங்களிலும் அந்த நகரத்தில் ஏராளமான பூச்சித் தொல்லைகள் வந்து, பொது மக்களுக்கு இடையூறு செய்துகொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே பார்த்தால், ஒரு பகுதிக் கழிவு நீர் பாலாற்றின் ஓரமாக இருக்கிற செங்கல்பட்டு நீஞ்சல்மடுவு அணையிலே விழுந்து, அதன் காரணமாக செங்கல்பட்டு நகரிலே குடிநீருக்காக இருக்கிற கிணறுகள் ஏற்கெனவே மாசுபட்டு இருக்கின்றன. இப்பொழுது அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாமல், புதிய கிணறுகளில்தான் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையையெல்லாம் போக்குவதற்கு நம்முடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, செங்கல்பட்டு நகராட்சிப் பகுதியில் இடம் இல்லாததால், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செங்கல்பட்டு அருகில் உள்ள திருக்கழுக்குன்றம் தாலுகா புல்லேரி கிராமத்தில் நிறுவப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக 10 எக்டேர் அரசு மேய்ச்சல் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு உள்ளது. இந்த நிலத்தை செங்கல்பட்டு நகராட்சிக்கு நிலவுடைமை மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.



**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு புறம் இருக்க, ஏரியினுடைய எழுவாய்ப் பகுதியிலே இப்பொழுது மகேந்திரா தொழில் நகரம் உருவாகிக்கொண்டிருக்கிறது. அதிலே 32 தொழிற்சாலைகள் வர இருக்கின்றன. அவற்றிலே 6 தொழிற்சாலைகள் இப்பொழுது செயல்படத் தொடங்கியிருக்கின்றன. அந்த நகரத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் ஆலைக் கழிவுகள் ஏரிக்கு வராமல் பார்த்துக்கொள்ளப்படும் என்று அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அது 100 சதவிகிதம் வராமல் பார்த்துக்கொள்வதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா? அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் பேசுகிறபோது ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்தக் கொளவாய் ஏரி தூர் வாரி, ஆழப்படுத்தப்படும் என்று சொல்லியிருந்தார்கள். அதையும் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் தொழில் பூங்காவினுடைய அன்றாடக் கழிவு நீரும், தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவு நீரும் கொளவாய் ஏரியைச் சென்றடைய வாய்ப்பில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, கொளவாய் ஏரியை முன்னுரிமை அடிப்படையில் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வதற்கு, இந்த அரசு சுற்றுச்சூழல் துறையின்மூலம் எடுக்கப்பட்ட முயற்சிகளினால், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு ஆகிய ஏரிகளுக்கு அடுத்தபடியாகக் கொளவாய் ஏரியை தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள மத்திய அரசு தனது இசைவினைத் தெரிவித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊட்டி ஏரிக்கான வேலைகள் முடிவடைந்துவிட்டன. கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகள் சீரமைப்புப் பணிகளுக்கும் ஒப்புதல் பெறப்பட்ட நிலையில் கொளவாய் ஏரிக்கு 2007–2008 ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, தேசிய ஏரிகள் பாதுகாப்புத்

திட்டத்தின்கீழ் இந்த அரசால் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் ஸ்ரீதர் வாண்டையார்மீது வழக்குத் தொடர்ந்தது பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

### (ஈ) உறுப்பினர்களுக்குப் பேசும் வாய்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், சொல்லுங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நிமிடங்கள் என்று ஒதுக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். காங்கிரஸ் பேரியக்கத்திற்கு 25 நிமிடங்கள்—முதலிலே பேசுகிறவருக்கு 15 நிமிடங்கள், இரண்டாவது பேசுகிறவருக்கு 10 நிமிடங்கள் என்று ஒதுக்கிக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடுகிறது. ஏனென்று சொன்னால், எங்களுக்கு முன்னாலே பேசுகின்றவர்கள் 20 நிமிடங்களுக்கு பதிலாக, 32 நிமிடங்கள், 37 நிமிடங்கள் பேசிவிட்டு, பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி, வெளியே போய்விடுகிறார்கள். அதனால் எங்களுக்கு, முதலிலே பேசுகிறவருக்கு 15 நிமிடங்களும், இரண்டாவது பேசுகிறவருக்கு 10 நிமிடங்களும் நீங்கள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவிலே கூறியபடி அவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஒதுக்கிக் கொடுங்கள்; நாங்கள் அதில் எந்தவிதமான கேள்வியும் கேட்க விரும்பவில்லை. ஆனால், நாங்கள் பேசுகின்றபோது—நேற்று எங்களுடைய உறுப்பினரை நீங்கள் அழைத்தீர்கள், அவர் பேசுகின்றபோது கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை நீங்கள் கட்டுப்படுத்தப் போகிறீர்களா? எங்களுக்கு 25 நிமிடங்கள்—முதலிலே பேசுகிறவருக்கு 15 நிமிடங்கள், இரண்டாவது பேசுகிறவருக்கு 10 நிமிடங்கள் கொடுங்கள். இல்லாவிட்டால் எங்களை முதலிலே பேச அனுமதித்துவிட்டு, பிறகு வேண்டுமானால் அவர்கள் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், நீங்கள் சொன்னதுபோல் அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி இனி கட்டாயப்படுத்திச் செயல்படுத்தப்படும். அது உறுதி, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அவையினுடைய மரபு ஒன்றை, முறை ஒன்றை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு கடமை ஏற்பட்டிருக்கிறது. அவையிலே பேசுகிற யாராக இருந்தாலும், அமைச்சர் உட்பட யாராக இருந்தாலும், அவர்கள் பேசுவதை நிறுத்துவதற்கான உரிமை பேரவைத் தலைவருக்கு உண்டு. பேரவைத் தலைவர் இருக்கையிலே ஒரு வேளை துணைத் தலைவரோ அல்லது மாற்றுத் தலைவரோ, யார் அமர்ந்திருந்தாலும், பேசுகிறவருடைய பேச்சை நிறுத்துகிற உரிமை பேரவைத் தலைமைக்கு உண்டு, தலைவருக்கு உண்டு. நிறுத்தச் சொன்னதற்குப் பின்னர், தொடர்ந்து யாராவது பேசுவார்களேயானால், அவர்களை அவையினுடைய கட்டுப்பாட்டை மீறியதாக அறிவிக்கிற உரிமையும் பேரவைத் தலைவருக்கு உண்டு. அதிலே நான் தங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், பேரவைத் தலைவர் என்ற அந்த முறையில் நீங்கள் பேசுவதற்கு அனுமதிக்கிற நேரம் வரையில், யாராக இருந்தாலும் அந்த நேரம் வரையில் பேசலாம். குறுக்கீடு ஏற்பட்டாலும் நேரம் அவ்வளவுதான். குறுக்கீடுகளுக்காக பேசுகிறவர்களுடைய நேரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பது கட்டாயமல்ல. ஒரு வேளை பேரவைத் தலைவர் விரும்பினால் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் அனுமதிக்கலாம். ஆக, அவ்வளவும் பேரவைத் தலைவருடைய உரிமையே தவிர, பேசுகிறவருடைய உரிமை அல்ல. எந்தக் கட்சியாக இருந்தாலும், தி.மு.க. உட்பட எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் இந்த அவையைச் செம்மையாக நடத்துவதற்காகப் பேரவைத் தலைவருக்குள்ள தனி உரிமை அது. நீங்கள் அனுமதித்த நேரத்திற்குமேல் ஒருவர் பேசுகிறபோது அந்த

உரிமையை நீங்கள் பயன்படுத்தி அவையைச் செம்மையாக நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவரும் பேச ஆரம்பிக்கும்போது, குறிப்பிடுகிற அந்த நேரத்திற்குள் உரையை முடிக்க வேண்டும். முடிக்கவில்லை என்றால், இனிமேல் அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு நான் கூப்பிட்டுவிடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் 6 முதல் 15 வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால், குழுவின் 11 முதல் 15 வரையிலான அறிக்கைகளை அச்சடித்துப் பேரவைக்கு அளிக்க இயலவில்லை. இவ்வறிக்கைகளின் படிப் பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்திலே வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 58 முதல் 61 வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51 முதல் 56 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



# 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

## (அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007–2008 ஆம் ஆண்டுக்கான* மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

*3–5–2007 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற 2007–2008 ஆம்* ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில் தமிழகச் சட்டமன்றத்திற்கு இதுவரையில் 13 முறை தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. 1949–ல் துவங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 1957–ல் நடைபெற்ற தேர்தலில் முதல் முறையாகப் போட்டியிட்டு, 15 பேர் வெற்றிபெற்றனர். அதிலே, 1957–ல் 15 பேரில் ஒருவராக வெற்றிபெற்ற தலைவர் கலைஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 1962–ல் 50 பேர்களில் ஒருவராகவும், 1967–ல் 138 பேர்களில் ஒருவராகவும், 1971–ல் 184 பேர்களில் ஒருவராகவும், 1977–ல் 48 பேர்களில் ஒருவராகவும், 1980–ல் 38 பேர்களில் ஒருவராகவும், 1984–ல் சட்டமன்ற மேலவையில் ஒருவராகவும், 1989–ல் 146 பேர்களில் ஒருவராகவும், 1991–ல் வெற்றிபெற்ற இரண்டே பேர்களில் ஒருவராகவும், 1996–ல் 173 பேர்களில் ஒருவராகவும், 2001–ல் 31 பேர்களில் ஒருவராகவும், 2006–ல் 96 பேர்களில் ஒருவராகவும், 11 முறை பொதுத் தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றில் சட்டமன்றத்தில் தொடர்ந்து 1957 முதல் 2007 வரை 50 ஆண்டுகள் பணியாற்றிய ஒரேயொருவராக சகாப்தம் படைத்திருக்கும் என் குடும்பத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு என்றென்றும் உறுதுணையாய், கொள்கைக் குன்றமாய் விளங்கும் பேராசிரியரையும், பொருளாளரையும் வணங்குகிறேன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பார்களே, அதுபோல் அமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் முறையிலேயே உள்ளாட்சித் துறையில் நல்லாட்சி படைத்து வரும் இன்றைய இளைஞர்களை ஈட்டிமுனைகளாகத் தீட்டி வரும் எங்கள் தளபதிக்கு நன்றி கூறி, உரையைத் துவக்குகிறேன்.

முற்பகல் 10—55

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது பதிலுரை நிகழ்த்தியபோது, இந்த அரசு உயர் கல்வித் துறையிலே எந்தக் கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னோம். எண்ணிக்கையை அதிகப்படுத்துதல், தரத்தை உயர்த்துதல், சமுதாய வளர்ச்சியோடு ஒருங்கிணைத்தல்—relevance, increasing the quantity, improving the quality— quantity and quality என்ற அடிப்படையிலேதான் இந்த அரசு கடந்த 11 மாதங்களாகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. குறிப்பாக, இந்த மானியக் கோரிக்கை அளிக்கப்பட்ட இதழிலேகூட, எண்ணிக்கையை அதிகரிப்போம், தரத்தை உயர்த்துவோம் என்பதுதான் இந்தத் துறையினுடைய தாரக மந்திரம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். கடந்த 11 மாதங்களில் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளையும், இனி எடுக்கவிருக்கிற நடவடிக்கைகளையும் இந்தப் பதிலுரையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது திரு. சி.வி. சண்முகம், டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், திரு. முல்லைவேந்தன், திரு. ஜி.கே. மணி, திரு. கே. மகேந்திரன், திரு. கே. உலகநாதன், திரு. எஸ். ராஜகுமார் ஆகிய ஏழு பேர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்து உரையாற்றியிருக்கிறார்கள். இதிலே அறிவிப்புகள் என்று தனியே கொடுக்கப்பட்டாலும், நான் அவ்வப்போது அறிவிப்புகளையும் இடையிடையிலேயே சொல்லிவிட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக, இந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கைக்கு முன்பாகவே இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய சம்பந்தமுடைய அனைவரையும் அழைத்து வைத்துப் பேசியிருக்கிறோம். 3—4—2007—ல் அனைத்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களையும் அழைத்து, அவர்களுடைய கருத்துகளைக் கேட்டிருக்கிறோம். 16—4—2007—ல் அனைத்து அரசுக் கல்லூரி முதல்வர்களையும் அழைத்து வைத்து, துறைச் செயலரும், நாங்களும் பேசியிருக்கிறோம். 18—4—2007—ல் தொழிலதிபர்களின் சங்கப் பிரதிநிதிகளோடும் கலந்துரையாடல் செய்திருக்கிறோம். 20-4-2007-ல் கல்லூரி ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனும், 26—4—2007—ல் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்களுடனும், அதே நாளில் அனைத்து அரசுக் கல்லூரி மாணவர் பிரதிநிதிகளையும் அழைத்து வைத்து, அவர்களுடனும், அனைத்து ஆசிரியர் அல்லாத பிரதிநிதிகளுடனும் விவாதித்திருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து இரண்டு மாதங்களாக, இந்த அரசு நடைமுறைப்படுத்தவிருக்கிற திட்டங்களைப் பற்றி



அவர்களுடைய கருத்துகளையும் கேட்டறிந்து, இந்த அரசு பல்வேறு முடிவுகளை இங்கே எடுத்திருக்கிறது.

முதலாவதாக எண்ணிக்கையை உயர்த்துவதற்காக இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக, எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், Access Ratio, Gross Enrolment Ratio என்று சொல்வார்கள், வாய்ப்பு நிலை விகிதம், ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதம். வாய்ப்பு நிலை விகிதம் என்று சொன்னால், குறிப்பாக, ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் நாம் சொல்வோம், அனைவருக்கும் கல்வி என்பது. ஐந்து வயதிலிருந்து பதினான்கு வயது வரை இருக்கிற அனைவருக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்பது ஒரு தேசியக் கொள்கை. நமது அரசியல் அமைப்பிலேயும் சொல்லப்பட்டிருக்கிற கொள்கை. கட்டாயக் கல்வியாக அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். அனைவருக்கும் கல்வி. ஆனால், உயர் கல்வியைப் பொறுத்தவரையில், access—அனைவருக்கும், விரும்புகிற அனைவருக்கும் வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும். வாய்ப்பு நிலை விகிதம் என்று சொல்வார்கள். உதாரணமாக, இன்று தமிழகத்திலே ஒரு இலட்சம் பேர் பொறியியல் கல்லூரியிலே சேர விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த ஒரு இலட்சம் பேருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதைத்தான் access என்று சொல்வார்கள். ஆக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இன்று கிட்டத்தட்ட 75 ஆயிரம் இடங்கள் பொறியியல் கல்லூரிகளிலே இருக்கின்றன. ஆகவே, விண்ணப்பம் அளிக்கிறபோது, 60 per cent minimum qualification என்று சொல்கிறோம். 60 per cent இருந்தால் பொறியியல் கல்லூரியிலே சேரலாம், மருத்துவக் கல்லூரியிலே சேரலாம் என்று சொல்கிறோம். அப்படி 60 சதவிகிதம் பெறுகிற அனைவருக்கும் இன்று இடம் கிடைக்கிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துவிடுவோம் என்று சொன்னால், Communal G.O., மற்றவைகள் எல்லாம் வருவதற்கு வாய்ப்பே இருக்காது. ஆகவே, இந்த அரசினுடைய நோக்கம், இந்த Access Ratio, விரும்புகிற அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்பது, முதல் நிலையிலே இருக்கிற விருப்பம். இரண்டாவதாக, Gross Enrolment Ratio. இந்த Gross Enrolment Ratio- G.E.R. என்பது, 18 வயதிலிருந்து 24 வயது வரையுள்ள இளைஞர்களுக்கு இந்த உயர் கல்விபெறுகிற வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். அது இந்திய அளவிலே பார்க்கிறபோது 18 வயதிலிருந்து 24 வயது வரை உள்ள இளைஞர்களில் மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளியியல் கணக்குகளின்படி, இந்தியாவிலே 7 சதவிகிதம் பேர்தான் இப்போது அந்தக் கல்வி வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அதிலே

தமிழகம் ஆறாவது இடத்திலே இருக்கிறது. கேரளா, நாகாலாந்து, இமாச்சலப் பிரதேசம், உத்தராஞ்சல், புதுச்சேரி ஆகிய ஐந்து இடங்களும் இதிலே தேசிய சராசரிக்கு அதிகமாகப் பெற்றிருந்தாலும், நம்முடைய மாநிலத்திலும் கிட்டத்தட்ட 17 சதவிகிதம் பேர் படிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். மேலும், இது அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக, தலைவர் கலைஞர் அவர்களின் ஒப்புதலோடு, கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்களுக்கும், கல்வி பயிலுகிற, உயர் கல்வி பயிலுகிற வசதியைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில், சுழற்சி முறை— shift system-ஐ 10 கல்லூரிகளிலே சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தினோம். அப்படி 10 கல்லூரிகளிலே அறிமுகப்படுத்தியதன் விளைவாக, சென்ற ஆண்டு 3,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆகவே, இந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லி, அனைத்து அரசுக் கலைக் கல்லூரிகளிலேயும் shift முறையைக் கொண்டு வர வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த ஆண்டு shift முறை முழுமையாகப் பயன்படுத்தப்படும். இந்த shift முறையைப் பயன்படுத்துவதைப் பற்றிக்கூடப் பத்திரிகைகளிலே எல்லாம் சில அறிக்கைகள் விடப்பட்டிருந்தன.

*(முற்பகல் 11–00)*

குறிப்பாக, இதிலே ஆசிரியர்கள் எப்படி நியமிக்கப்படுவார்கள், அதை எப்படி நடத்தப் போகிறீர்கள் என்றுகூடக் கேட்டிருந்தார்கள். இதைப் பற்றியும் நான் ஆசிரியர் பெருமக்களோடும், மாணவர்களோடும் கலந்து ஆலோசித்தபோது, காலையிலே நடைபெறுகிற shift, காலை 8 மணி முதல் 1 மணி வரை, காலையிலே இருக்கிற காலைக் கல்லூரி. அதற்குப் பிறகு 1½ மணியிலேயிருந்து மாலை 6½ மணி வரை இருக்கும். காலையிலே 10 பாடப் பிரிவுகள் இருந்தால், 10 பட்டப் படிப்புகள் இருந்தால், மாலையிலேயும் அந்த 10 பட்டப் படிப்புகளும் இருக்கும். அங்கே அதற்கு வருகிற விண்ணப்பங்களைப் பொறுத்து, அந்தப் பட்டப் படிப்புகள் நடத்தப்படும். ஆக, இந்த இரண்டு shift-களிலும் படிக்கிற மாணவர்கள் — இதிலே சில சங்கடங்கள் இருந்தன— மாணவர்களை அழைத்துப் பேசுகின்றபோது, சில மாணவர்கள் காலையிலே 8 மணிக்கே வருவது என்றால் கஷ்டம். ரெயிலிலே வருவது என்றால் கஷ்டம் என்றுகூடக் குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று அவர்களிடம் சொன்னபோது, திருச்சியிலே ஒரு மாணவர் சொன்னார். தனியாகப்



பிரைவேட்டாகப் படிக்கப் போகிற
போகிற மாணவர்கள், காலையிலே 6 மணிக்கேகூட எழுந்து போய்
மாணவர்கள் காலையிலே 6 மணிக்கேகூட எழுந்து போய் பிரைவேட்டாகப் படிக்கிறார்கள். ஆனால், இந்த அரசுக் கல்லூரிகளில் மட்டும், இந்த மாதிரி சில பேருக்குச் சங்கடங்கள் இருந்தாலும், நீங்கள் சொல்லுங்கள் சார், 5 மணிக்கே கல்லூரியை வைத்தால்கூட, எல்லா மாணவர்களுக்கும் படிக்கிற வாய்ப்பு இருக்கிறது, நாங்கள் வருகிறோம் என்ற உத்தரவாதத்தைக் கூட மாணவர்கள் அளித்திருக்கிறார்கள்.

நான் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்வது, இதிலே சில பிரச்சினைகள்—எப்பொழுதுமே ஒரு மாற்றுத் திட்டத்திற்குப் போகிறபோது, சில பிரச்சினைகள் வரலாம். மாணவர்கள்கூட 8 மணிக்கு வர முடியுமா என்றுகூடக் கேட்கலாம். சில மாணவிகளையும் அழைத்துப் பேசினோம். அவர்கள்கூட 8 மணிக்கு வந்துவிட்டுப் போவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும் என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட, பல்வேறு மாணவர்கள், இன்று 30,000 பேர் படிக்கிறார்கள் என்று சொன்னால், அடுத்த ஆண்டு மாலைக் கல்லூரிகளில் 30,000 பேர் படிப்பதற்கான வாய்ப்புகள். அதுவும் கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கிறது என்ற காரணத்தினால், அனைத்து மாணவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் சங்கப் பிரதிநிதிகளோடும் பேசியிருக்கிறோம். ஆகவே, இந்தக் கல்வி ஆண்டிலே, காலை 8 மணி முதல் 1–00 மணி வரையிலும், 1–30 மணி முதல் 6–30 மணி வரையிலும் இரண்டு shits ஆக இந்தக் கல்லூரிகள் நடைபெறும் என்பதை அறிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே ஆசிரியர்கள் எப்படி நியமிக்கப்படுவார்கள் என்று கேட்கிறபோது, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், முன்பே மாலை நேரக் கல்லூரிகள் என்று இருந்தன. அந்த மாலை நேரக் கல்லூரிகளை உருவாக்குகிறபோது எப்படி இருந்தன என்று சொன்னால், அரசுத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் மட்டும் அவற்றிலே படிக்கலாம் என்று இருந்தது. பிறகு அது சிறிது தளர்த்தப்பட்டு, யார் வேண்டுமானாலும் மாலை நேரக் கல்லூரியிலே படிக்கலாம் என்ற முறை கொண்டு வரப்பட்டது. அப்படி முதலிலே மாலை நேரக் கல்லூரிகள் கொண்டு வரப்பட்ட போது, ரெகுலராக இருக்கிற அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு ஒரு extra remuneration—அவர்களுக்குத் தனியாக சிறிது ஊதியம் கொடுத்து, அந்தக் கல்லூரிகளிலே பணியாற்றுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

அதுபோல்தான் ஆரம்பக் கட்டங்களிலே நான் அந்த ஆசிரியர்களோடும் பேசியிருக்கிறேன். அவர்களும் அதற்கு விருப்பத்தை அறிவித்திருக்கிறார்கள். வாரத்திற்கு 16 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னால், அதற்குக் கூடுதலாக 4 மணி நேரம், 5 மணி நேரம் மதியக் கல்லூரிகளிலே பணியாற்றுகிற ஒரு வாய்ப்புக் கொடுத்தால், அதற்கான தனியான ஊதியமும் அவர்களுக்குக் கொடுத்து, ஆரம்பக் கட்டத்திலே அடுத்த ஆண்டிலே இது நடைமுறைப்படுத்தப்படும். விரைவில் எத்தனை ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் என்பதைக் கேட்டறிந்து, ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள்.

அது மட்டுமல்ல; மாணவர்கள் சொன்ன மற்றொரு நிகழ்வு, இரயிலில் போகிற மாணவர்களுக்கெல்லாம் 8 மணிக்கு இரயில் வராது, போகாது என்றுகூட அவர்கள் குறிப்பிட்டார்கள். போக்குவரத்துக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கும் என்று சொன்னார்கள். இதே அவையிலேதான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அன்று இலவச பஸ் பாஸ்—நான் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் கொடுக்க வேண்டும் என்று சொன்னபோது, தளபதி அவர்கள் இங்கே எழுந்து, பிளஸ் 2 மாணவர்கள் வரையும் கொடுக்க வேண்டும் என்றுகூட அன்று கேட்டுக்கொண்டார்கள். அன்று தலைவர் கலைஞர் அவர்களும் பிளஸ் 2 மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸைக் கொடுத்தார்கள்.

இன்று முதல்வர் அவர்கள்—அதேபோல, இன்று போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் நேருவுடனும் கலந்து பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த ஆண்டு முதல் அரசுக் கலைக் கல்லூரிகளிலே பயிலுகிற மாணவர்களுக்கும், தொழில்நுட்பக் கல்லூரியிலே பயிலுகிற மாணவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு இப்போது 50 சதவிகிதம் concession என்று இருப்பதை மாற்றியமைத்து அவர்களுக்கு அரசுக் கல்லூரிகளில்—அதைக் கொஞ்சம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்—அரசுக் கல்லூரிகளிலே படிக்கிற மாணவர்களுக்கும், அரசுத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலே--Polytechnic-ல் படிக்கிற மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 11–05

அதேபோல, கல்லூரிகளிலே எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று சொன்னால், கல்லூரிகளுடைய எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டியதும் அவசியமாகின்றது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கடந்த ஆண்டு கல்லூரிகளே இல்லாத தொகுதிகளான மேட்டூர், ஓரத்தநாடு, வால்பாறை ஆகிய 3 தொகுதிகளிலேயும் கல்லூரிகள் துவக்கப்பட்டன. பெரம்பலூரிலே ஒரு கல்லூரியும் துவக்கப்பட்டது. 4 கலைக் கல்லூரிகள் சென்ற ஆண்டு துவக்கப்பட்டன. இந்த ஆண்டு எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுமே எப்படியாவது ஓர் அரசு கலைக் கல்லூரி தங்களுடைய தொகுதிக்கு வர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக, அரசுக் கலைக் கல்லூரியோ, தனியார் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லாத தொகுதிகள் எத்தனை இருக்கின்றன என்று அரசுத் துறை அதிகாரிகள், இந்தக் கல்வித் துறையிலே இருக்கிற அதிகாரிகளைக் கணக்கு எடுக்கச் சொன்னபொழுது, கிட்டத்தட்ட 33 தொகுதிகளில் எந்தக் கல்லூரிகளும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே 3 தொகுதிகள் சென்னையிலே இருக்கின்றன. மீதி 30 தொகுதிகள் கிராமப்புறத்திலே இருக்கிற தொகுதிகள். தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் எடுத்துச் சென்றபொழுது, கல்லூரி இல்லாத தொகுதிகளே இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) படிப்படியாக, வருகிற நான்கு ஆண்டுகளில், தமிழகத்திலே இருக்கிற அனைத்துத் தொகுதிகளிலும்—ஏனென்றால், நேற்று இங்கே பேசுகிறபொழுது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன்கூடக் குறிப்பிட்டார்கள்; மாவட்டத்திற்கு ஒரு கல்லூரியாவது வேண்டும் என்று சொன்னார்கள். மாவட்டத்திற்கு ஒன்று அல்ல, அனைத்துத் தொகுதிகளிலும் கல்லூரி இருக்கிற நிலைமை கலைஞர் ஆட்சியிலே உருவாக்கப்படும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலாகத் தேர்தலிலே நின்று, இந்தச் சட்டமன்றத்தில் அடியெடுத்து வைத்த குளித்தலைத் தொகுதியில் (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஆண்டு ஓர் அரசுக் கலைக் கல்லூரி துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 5 ஏக்கர் நிலமும், ஒரு கோடி ரூபாய் பணமும் கொடுக்கிற தொகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற அடிப்படையில்,

சட்டமன்ற உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் தென்காசியிலே 26 ஏக்கர் நிலமும், அங்கே ஒரு கோடி ரூபாய் செலவிலே கட்டடமும் கட்டப்படும் என்று உறுதி அளித்திருப்பதை ஏற்றுக்கொண்டு, தென்காசியிலேயும் இந்த ஆண்டு ஒரு புதிய கல்லூரி துவக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இனி வருங்காலங்களில், கல்லூரிகள் இல்லாத தொகுதியே இல்லை என்ற நிலையை நிச்சயமாக 4 ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அரசு நிறைவேற்றும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், புதிய பாடப் பிரிவுகள் வரவேண்டியதும் அவசியமாகின்றது. அது குறிப்பாக இங்கு வளர்ந்து வருகிற காலக்கட்டத்தில், அரசுக் கல்வியியல் கல்லூரிகள், 7 கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 7 கல்லூரிகளிலேயும் 2 கல்லூரிகளிலேதான் M.S., P.G. Course இருக்கிறது. மீதம் இருக்கிற 5 அரசுக் கல்வியியல் கல்லூரிகளிலேயும் இந்த ஆண்டு முதலே M.Ed., கொண்டு வருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று; இந்த உயர் கல்வி பயிலுகிற மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று சொன்னால், அதற்குக் கல்விப் பயணம் drop-out இல்லாமல் தொடர்கிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். குறிப்பாகப் பல்வேறு சங்கடங்கள், கல்லூரியிலே முதல் ஆண்டு படித்து விட்டு ஒருவருக்கு வேலை கிடைத்து விடும், படிப்பைத் தொடர முடியாமல் அவர் வேலைக்குச் சென்று விடுவார்; அவர் தொலைதூரக் கல்வியிலே சென்று படிக்க வேண்டும் என்று எண்ணினால், அதிலே சேர்த்துக்கொள்ளமாட்டார்கள்; அதேபோல, தொலைதூரக் கல்வியிலே படிக்கிற ஒருவர் நேரடியாக அவர் கலைக் கல்லூரியிலே படிக்க வேண்டும், மரபுசார் கல்லூரிகளிலே சேர்ந்து படிக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கும் அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே, அதை அனுமதிக்கிற வகையில், இனிமேல் மரபுசார் கல்லூரியிலே படிக்கிற ஒருவர், ஓராண்டு, இரண்டாண்டுகள் படித்துவிட்டு, அவர் discontinue ஆகிவிட்டால், அவர் தொடர்ந்து தொலைதூரக் கல்வியிலே படிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். அவர் பட்டத்தைப் பெறலாம். அதேபோல, தொலைதூரக் கல்வியிலே முதலாண்டு படித்த ஒருவர் அதில் தேர்ச்சி பெற்றிருந்தால், மரபுசார் கல்லூரிகளிலே இரண்டாம் ஆண்டிலே சேர்வதற்காகவும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அதைவிட மிக முக்கியமான ஒன்று; இங்கே திரு. விஷ்ணுபிரசாத்
அவர்கள் பேசுகிறபொழுதுகூடச் சுட்டிக்காட்டினார்கள்.
மெக்காலேயினுடைய திட்டத்தையும், +2 தேர்விலே தோல்வி
அடைபவர்களுக்குத் தொடர்வதற்கான வாய்ப்பே இல்லாத ஒரு
சூழ்நிலை இருக்கிறது என்பதையும் மிகத் தெளிவாக, அழகாகச்
சுட்டிக்காட்டினார்கள். அதற்கும் இந்த அரசு ஒரு தீர்வு காண
வேண்டும் என்ற எண்ணத்தோடு, சமுதாயக் கல்லூரிகளை உருவாக்க
வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறது. இந்தச் சமுதாயக் கல்லூரிகள்
என்பவை, +2 fail ஆகிவிட்டால், 10th fail ஆகிவிட்டால், அதோடு
படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பே இல்லாத கிராமப்புறத்து
மாணவர்கள். Fail ஆனவர்களுக்கும் கல்லூரியிலே தொடர்ந்து
படிப்பதற்கு ஆசை இருந்தாலும்கூட, அதற்கு வாய்ப்பு இல்லாத
சூழ்நிலை. ஓராண்டு, ஈராண்டுகள் கல்வியிலே தொடர்பை
விட்டுவிட்டாலே, தொடர்ந்து படிக்க வேண்டுமென்பது மிகக்
கடினமான ஒன்று. ஆகவேதான், அவர்களுக்குத் தொடர்ந்து
படிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு,
அந்தச் சமுதாயக் கல்லூரிகளைப் பல இடங்களிலே—சில இடங்களிலே
அவை இருந்தாலும்கூட, தமிழகம் முழுவதும் பரவலாக உருவாக்கிட
வேண்டும் என்ற எண்ணத்திலே, இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.
இதிலே குறிப்பாக என்னவென்று சொன்னால், 10th fail ஆகிவிட்டார்,
+2 fail ஆகிவிட்டார் என்றால், அவர் பணியாற்றிக்கொண்டே இந்தப்
படிப்பைப் படிக்கலாம்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். +2 fail ஆன
ஒருவர் பெரும்பாலான மருத்துவமனைகளிலே, தனியார்
மருத்துவமனைகளிலும், Apollo–வாக இருந்தாலும், Ramachandra–வாக
இருந்தாலும், பெரும்பாலும் அங்கு nurse qualification வாங்கிக்கொண்டு
போய் nurse ஆகச் சேர்பவர்கள் மிகவும் குறை தான்.
கிராமப்புறங்களிலே இருக்கிற மருத்துவமனைகளிலேயும் அப்ட த்தான்.
S.S.L.C. fail ஆகிவிட்டு, +2 fail ஆகிவிட்டு அங்கே போ nurse
training-ல் சேருவார்கள், அங்கேயே இருந்துவிடுவார்கள். அந்த ாதிரிப்
பயில்கின்றவர்களுக்கு அங்கேயே ஒரு பாடத் திட்ட த்தைப்
பல்கலைக்கழகம் வகுத்துக் கொடுக்கும். Infrastructure—இவ்வளவு பெரிய
class room இருக்க வேண்டும், இத்தனை ஆசிரியர்கள் இருக்க வேண்டும்
என்ற வரைமுறைகள் எல்லாம் கிடையாது. இது ரொம்ப info al. ஓர்

ஒட்டலோ அல்லது ஒரு மருத்துவமனையோ அல்லது ஏதேனும் தனியார் Voluntary Association–களோ, உதாரணத்திற்குத் திருப்பூரை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், அங்கே பல தொழிற்சாலைகள் இருக்கின்றன; நூல் நூற்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளிலே, அவர்களே, அங்கேயே பயில்பவர்களுக்கு, S.S.L.C. fail ஆகிவிட்டு அங்கே வந்து படிக்கிறவனுக்கு, +2 படிக்கிறவனுக்கு, அங்கே அவர்களே பாடம் நடத்தலாம்; சாயங்காலம் 5–00 மணிக்கு வேலை செய்த பிறகு, ஒரு மணி நேரம் நடத்தலாம்; 2 மணி நேரம் நடத்தலாம். அவ்வாறு படித்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஓராண்டிற்குப் பிறகு ஒரு தேர்வு வைக்கப்படும். அங்கே சார்ந்திருக்கிற பல்கலைக்கழகம் ஒரு தேர்வை நடத்தும். அந்தத் தேர்விலே அவர்கள் வெற்றிபெற்றால், +2 pass செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அந்தத் தேர்விலே வெற்றிபெற்றால். அவர்களுக்கு ஒரு Diploma-வும் கிடைக்கும்; தொடர்ந்து கல்லூரிகளிலே சேர்வதற்கான அனுமதியும் வழங்கப்படும். அது ஒரு Bridge Course ஆகக் கருதப்பட்டு, கிராமப்புறத்திலே இனிமேல் +2 fail–ஆனவர்கள்கூட, ஒரு வருடம் வேலை செய்து, அங்கே படித்துவிட்டு, ஒரு Diploma Certificate –ஐயும் வாங்கிக்கொள்ளலாம். தொடர்ந்து கல்லூரியிலே சேர்ந்து, பட்டங்கள் பெறுவதற்கும் அவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கு இந்தத் திட்டம் மிகுந்த உதவியாக இருக்கும், இதைத்தான் சமுதாயக் கல்லூரிகள் திட்டம் என்று இந்தியாவிலே இன்று U.G.C.—பல்கலைக்கழக மானியக் குழுவும் இதை ஆதரித்திருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே முதன்முதலாக இந்த ஆண்டு இதுபோன்ற பல நிலைகளைக் கொண்டு வர இருக்கிறோம்.

இந்த Nursing Course மாதிரி, தனியார் மருத்துவமனைகளிலே பயிற்சிபெறுபவர்களுக்கு செவிலியர்—Nursing Assistant என்கிற Diploma–வையும் கொடுத்து, தொடர்ந்து பட்டப் படிப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகளையும் இந்த அரசு உருவாக்கிக் கொடுக்கிறது. அது மட்டுமல்லாமல், இந்த முறைசாராக் கல்வியின்மூலமாக ஏற்படுகின்ற மாற்றங்களின் காரணமாக, ஆங்காங்கே இருக்கிற தொழிற்சாலைகளிலே பயில்பவர்களுக்கு— இன்றைக்கு Ford–லே எடுத்துக்கொண்டீர்கள் . என்றால், Ford Company–யிலே அந்த Company–யே training கொடுக்கிறார்கள். அந்த Company–யே training கொடுத்து, அவர்களுக்கு வாய்ப்பினைக் கொடுக்கிறார்கள். ஆக, இந்தத் தொழில் கல்வி என்பது எந்த அளவிற்கு முக்கியம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.



முற்பகல் 11–10

தொழில் கல்வி, பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கும்—இப்போது B.A. (History) படிக்கிறார். படித்துவிட்டு வெளியிலே போனார் என்றால், எந்த வேலையும் கிடைப்பதில்லை. B.A.(Economics) படிக்கிறார், வேலை கிடைப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ஆக, பி.ஏ. (பொருளாதாரம்), பி.ஏ. (வரலாறு), அந்தப் பட்டப் படிப்பு படிக்கிறபோதே, அவரும் ஒரு பட்டயத்தைப் பெறுகிற அளவிற்குத் தொழிலிலே ஒரு பட்டயம்— T.V. mechanic, எல்லா இடங்களிலேயும் T.V. repair செய்வதற்கு, அதைச் செய்துகொண்டிருந்தால்கூடப் போதும் இன்றைக்கு. A.C. repair, இந்த மாதிரிப் பல்வேறு தொழில்கள் வளர்ந்திருக்கிற காலக்கட்டம். ஆகவே ஒரு மாணவன் பட்டம் படிக்கிறபோதே, அந்தப் பகுதியிலே இருக்கிற Industrial Training Institute— I.T.I.-யிலோ, Polytechnic–களிலோ அந்தக் கல்லூரி இணைக்கப்பட்டு, அவர் 3 ஆண்டு படிக்கிற காலத்திலேயே, அந்த கல்லூரியிலேயிருந்து, I.T.I., மற்ற தொழில் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று அவர் இந்தப் பட்டயப் படிப்பை, 3 ஆண்டுகளிலே ஏதேனும் ஒரு Diploma –வோடுதான் வெளியே வர வேண்டும்; தொழில் கல்வி சார்ந்த ஒரு Diploma–வோடு அவர் பட்டம் பெறுகிறபோதே பட்டயத்தோடு வெளியே வர வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் அரசு திட்டமிட்டிருக்கிறது. ஆகவே, கல்லூரிகள் இதுபோன்ற I.T.I.-க்களோடும், அங்கேயிருக்கிற தொழில்நுட்பக் கல்லூரிகளோடும் இணைக்கப்பட்டு, கல்லூரியிலே படிக்கிறபோதே அவருக்கு விருப்பப்பட்ட துறையிலே, Computer–லே ஒரு Diploma–வோ, Electrical–லே ஒரு Diploma–வோ, Communication–லே ஒரு Diploma–வோ, அனைத்துப் பணிகளிலேயும் ஏதாவது ஒரு Diploma பெறுவதற்கான வாய்ப்பினை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. இதன்மூலமாக எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல், தரத்தினையும் உயர்த்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

மேலும், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, எண்ணிக்கையை உயர்த்துவதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளோடு, தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் பல்வேறு முயற்சிகளை எடுத்திருக்கிறோம். இந்தத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் மேலை நாடுகளிலே இருக்கிற பல்கலைக்கழகங்களிலே கல்வி முறையும், அங்கேயிருக்கிற அடிப்படை வசதிகளும் எப்படி இருக்கின்றன என்பதை அறிந்து வருகிற நோக்கத்தோடு தலைவர் கலைஞர் அவர்கள் அனுமதியளித்து, சீன நாட்டிற்கும், ஆஸ்திரேலியா நாட்டிற்கும் சென்று

வருகிற வாய்ப்பை எனக்கும், இன்னும் சில துணைவேந்தர்களுக்கும், செயலாளர்களுக்கும் உருவாக்கிக் கொடுத்தார்கள். அதன் அடிப்படையிலே சிட்னி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலேயும், சீனாவில் உள்ள பெய்ஜிங்கில் உள்ள சின்குவா பல்கலைக்கழகம், சீன அகாடமி ஆஃப் சைன்ஸ், பன்னாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பல்கலைக்கழகம், சென்யாங் நகரில் வட கிழக்குப் பல்கலைக்கழகம், லயோனிங் பல்கலைக்கழகம், நியோ சாஃப்ட்வேர் டெக்னாலஜி பார்க், ஷாங்காய் நகரில் சீனா–ஐரோப்பா பன்னாட்டு வர்த்தகப் பல்கலைக்கழகம், ஃபுதான் பல்கலைக்கழகம், ஹூவாய் ஹூவா பல்கலைக்கழகம்—இந்த ஹூவாய் ஹூவா பல்கலைக்கழகத்தோடு காரைக்குடி பல்கலைக்கழகம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் சென்று, அந்தத் துணைவேந்தர்களையும், கல்வியாளர்களையும் சந்திக்கிற வாய்ப்பை முதல்வர் அவர்கள் எனக்கு அளித்திருந்தார். அந்த வாய்ப்பிலே பல்வேறு மாற்றங்களை என்னால், இங்கேயிருந்து எங்களோடு வந்த செயலர், துணைவேந்தர்களால், உணர முடிந்தது. சீன நாட்டிலே, குறிப்பாக அங்கே இருக்கிற Vice-Chancellor–களோ, பேராசிரியர்களோ, அவர்களோடு உரையாடுகிறபோது, 60 வயதிலே Vice-Chancellor இருக்கிறார். அவரிடம் போய்ப் பேசினோம் என்றால், ஒரு வரிகூட ஆங்கிலமே தெரியவில்லை. சீனாவிலே Chinese தான் பேசுகிறார். அவர் நம்மோடு பேசுகிறபோது, ஒரு Interpreter வைத்திருக்கிறார். அவர் சிறந்த அறிவாளியாக இருக்கிறார்; சிறந்த ஆய்வுப் பட்டம் பெற்றிருக்கிறார்; எல்லாம் இருக்கிறது. இருந்தாலும்கூட, பேசுகிறபோது ஆங்கிலத்திலே பேசுகிற வாய்ப்பே இல்லை. ஏனென்றால், அவர்கள் படித்தது அனைத்தும் தாய் மொழியிலே படித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அவர்களுக்குத் தெரிகிறது. ஆனால், இன்று தாய் மொழியிலே படித்திருந்தாலும், மேலை நாடுகளோடு தொடர்புகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்தில் ஒரு communication—தொடர்புகொள்வதற்காக ஆங்கிலத்தைப் பயில்கிற வாய்ப்பை 15 ஆண்டுகளாகப் பெற்றிருக்கிறார். நாம் என்ன பண்ணிவிட்டோம் என்றால், அவர்களுக்கும், நமக்கும் இரண்டும் extreme. அவர்கள் தாய் மொழியைப் பயிற்று மொழியாகக்கொண்டு படித்து, ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக வைத்துக்கொண்டிருக்கிற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். நாம் பயிற்று மொழி பூராவும் ஆங்கிலத்திலே படித்துவிட்டு, இன்று அறிவும் வளராமல், தொடர்பு மொழியிலும் தத்தளித்துக்கொண்டிருக்கிற ஒரு சூழலை உருவாக்கிக்





கொண்டிருக்கிறோம். ஆகவேதான், படிக்கிற மொழி, பயிற்று மொழி, தாய் மொழியாக இருக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான் பட்டப் படிப்புகளிலே முதன்முதலாகத் தமிழ் வழியைக் கொண்டு வந்தார்கள். ஆக, தொடர்ந்து அனைவருடைய எண்ணத்தையும் மாற்றி, ஆங்கிலத்தின்மீது நமக்கு வெறுப்பு அல்ல. ஆனால், ஆங்கிலம் என்பதைத் தொடர்பு மொழியாகக் கற்றுக்கொள்ள வேண்டும்—communication. அதைப் படிக்க வேண்டுமே தவிர, அதையே முழுமையாக ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டுமென்ற எண்ணத்தை மாற்றியமைக்கக்கூடிய காலம் வெகு விரைவில் வரும் என்று நம்புகிறோம். அப்போதுதான் கல்வியினுடைய தரத்தை உயர்த்த முடியும் என்ற எண்ணத்தை, சீனாவிலே நாங்கள் சென்றிருந்தபோது, அந்தப் பல்கலைக்கழகங்களிடமிருந்து எங்களால் கற்றுக்கொள்ள முடிந்தது. அதுவும், இந்தப் போட்டி நிறைந்த உலகத்தில் இளைஞர்களை நாம் தயார் செய்ய வேண்டுமென்று சொன்னால், முக்கியமாகத் தரத்தை உயர்த்துவதற்கு ஆசிரியர்களை முதலில் தரப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, கட்டமைப்பு வசதிகள்—infrastructure—அவற்றை உருவாக்க வேண்டும். மூன்றாவதாக, மாணவர்களுடைய நலனை நாம் பாதுகாக்க வேண்டும்.

*முற்பகல் 11–15*

இந்த மூன்றுக்காகவும் அரசு என்ன செய்திருக்கிறது, என்ன செய்யப் போகிறது? கடந்த காலங்களிலே பேராசிரியர்களே இல்லாத கல்லூரிகள், ஆசிரியர்களே இல்லாத பள்ளிகள், மருத்துவர்களே இல்லாத மருத்துவமனைகள்; இதுதான் அந்தக் காலத்தினுடைய கோலம். இந்தக் கோலத்தை மாற்றியமைப்பதற்காக, இந்த அரசு கடந்த ஆண்டு 1,020 பேராசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. இந்த ஆண்டு 1,062 ஆசிரியர்கள், அரசுக் கலைக் கல்லூரிகளிலே மொத்தம் 2,082 பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். அரசு உதவிபெறும் கல்லூரிகளில் சென்ற ஆண்டு 600 பேரும், இந்த ஆண்டு 2,000 பேரும்–2,600 பேர், ஆக மொத்தம் 4,682 பேராசிரியர்களை அரசுக் கல்லூரிகளிலேயும், அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் நியமிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆக, பேராசிரியர்கள் இருந்தால்தான் நடத்த முடியும்.

அது மட்டுமல்ல; குறிப்பாக, பேராசிரியர்களுக்கு வளர்ந்து வருகிற கல்வி முறைகளிலே இருக்கிற teaching techniques, அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் பல பேராசிரியர்களுக்கு

இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களை நியமிக்கிறபோதே, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அப்படி நியமிக்கப்படுகிற கிட்டத்தட்ட 4,000 பேராசிரியர்களுக்கும் ஒரு மாதம் பயிற்சியளித்து அவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்றும் இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது.

மேலும், எப்போதுமே ஆசிரியர்களுக்குள்ளே ஒரு போட்டி இருந்தால்தான்—எதற்குமே ஒரு competition தேவைப்படுகிறது. ஆகவே, இன்று பள்ளிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்குவதைப்போல, ஆசிரியர்களுக்கான விருதுகளும், சிறந்த கல்லூரி ஆசிரியர்கள், கலை, அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பேராசிரியர்களாக இருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 6 பேர்களுக்கு பாராட்டுப் பத்திரமும், 25 ஆயிரம் ரூபாயும் பரிசு வழங்குவதாக இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. குறிப்பாக, அரசுக் கலைக் கல்லூரிகளிலேயும் சிறந்த கல்லூரி எது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, N.A.A.C.-னுடைய மதிப்பெண்களைப் பெறுகிற, அதிக மதிப்பெண்களைப் பெறுகிற கல்லூரிகளுக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பது என்றும் இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. தேசிய அளவிலே தர நிர்ணயக் குழு இருப்பதைப்போல, N.A.A.C. இருப்பதைப்போல, அந்த N.A.A.C.-லே ஒரு பெரிய difference என்னவென்றால், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் அது கணக்கு எடுக்கிறது. நேற்றுக்கூட இங்கே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பேசுகிறபோது சொன்னார். நீங்கள் கல்வித் தரத்தை உயர்த்துவோம், உயர்த்துவோம் என்று பக்கத்துக்குப் பக்கம் எழுதியிருக்கிறீர்களே, உங்கள் ஆட்சியிலேதான் சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய தரம் குறைந்துவிட்டது. எங்கள் ஆட்சியிலே Five Star பெற்றிருந்தது, இப்போது அது A மட்டுமே பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டார். நான் நேற்றுச் சொன்னபோது சிலருக்குக் கோபம் வந்தது. செய்தியைப் பேசுகிறபோது, அமைச்சராக இருந்தவர் முழுமையாகச் செய்தியைச் சேகரித்துக்கொண்டு பேசியிருந்தால் எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை.

இதே கருத்தையொட்டி, தலைவர் கலைஞர் அவர்கள் காவல் துறை மானியத்திலே பேசுகிறபோது, ஒன்று சொன்னார். ஜெயக்குமார் அவர்கள் பேசுகிறபோது, வீடு கட்டுவதிலே போட்டி இருக்க வேண்டியதுதான், போட்டி இருக்கலாம் என்று கலைஞர் சொன்னார். அதே கருத்தைத்தான் நானும் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்.



அவர் சொன்னார், எங்கள் ஆட்சியிலே Five Star இருந்தது, இப்போது A கொடுத்துவிட்டார்கள் என்று. அதிலே Five Star என்பதே இப்போது கிடையாது, மாற்றிவிட்டார்கள். Five Star என்று முதலிலே கொடுத்திருந்தார்கள், Evaluation Method-லே. Five Star, அப்போது அவர்கள் வாங்கிய மார்க், சென்னைப் பல்கலைக்கழகம் கொடுத்த மார்க் 76. 75 மார்க்குக்குமேலே போனாலே Five Star கொடுக்கலாம். அப்போது சென்னைப் பல்கலைக்கழகம் வாங்கியிருந்த மார்க் 76. இப்போது கொடுத்திருக்கிற மார்க் 86. சுமார் (மேசையைத் தட்டும் ஒலி) 10 மார்க் அதிகம் கிட்டத்தட்ட. இந்த 86 மார்க், Five Star என்று கிடையாது. 85-க்குமேலே 90 வரையிலே வாங்குவதற்கு A. 90-லிருந்து 95 வரையிலே A Plus. 95-லிருந்து 100 வரையிலே A Double Plus. இதில் இன்னொன்று சொல்கிறேன். இந்தப் பெருமை எனக்குக் கிடையாது. உண்மையிலேயே சண்முகத்திற்குத்தான் இந்தப் பெருமை—மாண்புமிகு முன்னாள் அமைச்சருக்குத்தான். ஏனென்றால், N.A.A.C. இதைச் சொன்னதே—கலைஞர் சொன்னதை அதற்குத்தான் சொல்கிறேன். வீடு கட்டிக் கொடுப்பதிலே போட்டியிருக்கலாம் என்பதைப்போல, தரத்தை உயர்த்துவதிலே அந்த அமைச்சருக்கும், இருக்கிற அமைச்சருக்கும் போட்டி இருக்கலாம். ஆனால், ஒரு அமைச்சராக இருந்தவர் எந்தக் காலத்திலே செய்யப்பட்ட evaluation, எதற்காகச் செய்திருந்தார்கள், உயர்ந்ததாக இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொண்டு பேசினால், அதிலே பிரச்சினை இருக்காது. இந்த evaluation எந்த period-க்காகச் செய்தது தெரியுமா? இந்த 10 அதிகமாகி இருக்கிற காலம்; இந்த 7 மாதங்களுக்குக் கிடையாது. 2000-லேயிருந்து 2005 வரை, அவர்கள் ஆட்சி செய்தபோது இருந்த காலத்திற்காகக் கொடுக்கப்பட்ட மதிப்பீடுதான் அது. அதைக்கூட அவர் புரிந்துகொள்ளாமல், "உங்களுடைய ஆட்சியில் தரம் உயருகிறது, உயருகிறது என்று சொல்கிறீர்களே? இது குறைந்துவிட்டதே, காரணம் என்ன?" என்று நேற்றுக் கேட்டார். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சொல்கிற கருத்தை ஆதாரத்தோடு சொன்னால், எங்களுக்கு அதில் பதில் சொல்வதற்கு எந்தவிதமான வேறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. ஆகவே, இந்தக் கருத்தை, அவர் இங்கே இல்லாவிட்டாலும், அவர் இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்காக இந்த அரசு எடுத்திருக்கிற மற்றொரு நடவடிக்கை, Choice Based Credit System என்பது. அதுவும்

என்பது. அதுவும் குறிப்பாக, இன்றைக்கு U.G.C.யிலே—பல்கலைக்கழக மானியக் குழுவிலேகூட இதைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய மாணவர்கள், பட்டம் பெற்றவர்கள் பல நாடுகளுக்கு, வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பைத் தேடிச் செல்கிறபோதும், அங்கேயிருப்பவர்கள் இங்கே வந்து படிக்கிறபோதும், Credit System என்ற ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாநில அமைச்சர்களுக்கான கூட்டம் நடைபெற்றபொழுதுகூட U.G.C.—பல்கலைக்கழக மானியக் குழு, வெகு விரைவிலேயே, இரண்டு ஆண்டுகளிலேயே இந்த Credit System-ஐக் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறது.

Credit System என்பது, இங்கேயிருக்கிற, பட்டம் பெற்ற, கல்லூரியிலே படித்த பல பேருக்குத் தெரியும்; நாம் படிக்கிற காலத்தில் Major என்று ஒன்று இருக்கும்; Ancillary என்று இருக்கும்; Minor என்று இருக்கும்; Allied Subjects என்று வைப்பார்கள். இப்போது இந்த Credit System-லே என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், Choice Based Credit System என்பது, நான்கு பாடங்கள்—ஒரு வரலாறு படிக்கிற மாணவர், நான்கு வரலாற்றுப் பாடங்களைப் படிக்கலாம்; படித்துவிட்டு, அதற்குப் பிறகு விருப்பப் பாடமாக Science கூடப் படிக்கலாம். History படிக்கிற ஒருவர், B.A., Core Subject, அதை எடுத்துக்கொண்டு, விருப்பப் பாடமாக Science-ம் படிக்கலாம்; Chemistry-ம் படிக்கலாம்; Physics-ம் படிக்கலாம். அவர் எதை விரும்புகிறாரோ, அதைப் படித்து, அதிலே அவர் மதிப்பெண் பெற வேண்டுமென்ற ஒரு system-ஐக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது பன்னாட்டு அடிப்படையிலேயே கொண்டு வரப்பட்டிருக்கிற system. இந்த முறையை இரண்டு ஆண்டுகளிலே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசும் குறிப்பிட்டிருக்கிறது; பல்கலைக்கழக மானியக் குழுவிலேயும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதை அடிப்படையாகக் கொண்டு, நிச்சயமாக வரும் காலங்களிலே, அதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு—இப்படிப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலே ஒரே மாதிரியான Credit System இருந்தால்தான், வெளிநாடுகளுக்குச் செல்வதற்கோ, வெளிநாட்டிலிருந்து இங்கே வருவதற்கோ வாய்ப்பாக இருக்கும் என்கிற எண்ணத்தோடு, அதையும் செய்வதற்காகத் துணைவேந்தர்களையும், பேராசிரியர்களையும்கொண்ட ஒரு குழு நியமிக்கப்படவிருக்கிறது.

ஆசிரியர்களுக்காகத் தேக்க நிலை ஊதிய உயர்வு; மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டதைப்போல, தேக்க நிலை ஊதிய



உயர்வு வேண்டுமென்று இங்கே ஆசிரியர்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். அதையும் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் தேர்வுத் தாள் திருத்துகிறபோது, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு மிகக் குறைவான தொகையே கொடுக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகங்களுக்கிடையிலேயே வேறுபட்ட தொகைகள் கொடுக்கப்பட்டன. அது குறித்தும்கூட துணைவேந்தர்களை அழைத்துப் பேசி, அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே மாதிரியான தொகை இருக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, அந்தத் தொகையும் வரும் ஆண்டிலேயிருந்து உயர்த்திக் கொடுக்கப்படும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, ஆசிரியர்களுடைய தரத்தை உயர்த்த நினைத்த இந்த அரசு, என்னதான் இருந்தாலும் இந்த **infrastructure development**—உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்த வேண்டுமென்று கலைஞர் அவர்கள் முயற்சி எடுத்தார். அதுவும் குறிப்பாக, இங்கேகூடச் சொன்னார்கள்; 60 கல்லூரிகள் என்று சொல்வதற்குப் பதிலாக, 6 கல்லூரிகளுக்குக் கொடுத்திருக்கிறீர்களே? 60 கல்லூரிகளுக்கும் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றுகூட நேற்றுப் பேசினார்கள். இந்த 6 கல்லூரிகளில் மட்டுமல்ல; கலைஞர் அவர்கள், எந்தெந்தக் கல்லூரியிலேயிருந்து, வகுப்பறைகள் போதவில்லை என்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவோ, அத்தனை கல்லூரிகளுக்கும் வகுப்பறைகளைக் கட்டுவதற்கு அனுமதியளித்து, 27.10 கோடி ரூபாய், 55 அரசுக் கல்லூரிகளில், 542 வகுப்பறைகள் கட்டுவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது எந்தெந்தக் கல்லூரிகளுக்கு என்ற பட்டியல் இருக்கிறது; (குறுக்கீடு) அது அறிவிப்புகளிலேயும் இருக்கிறது. வேண்டுமானால், அதை நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். 55 கல்லூரிகளிலே, அதுவும் குறிப்பாக, மாநிலக் கல்லூரியிலே 10; பாரதி மகளிர் கல்லூரியிலே 25; (குறுக்கீடு) ஆக, அரசுக் கல்லூரிகள் தொடங்கப்பட்ட வரலாற்றில், ஒரே நேரத்தில் அனைத்து அரசுக் கல்லூரிகளுக்கும் கட்டட வசதியைக் கொடுத்த அரசு இதுவரை கிடையாது. கலைஞர்தான் அதற்கு 27 கோடியே 10 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், கட்டடம் இருந்து, ஆசிரியர்கள் இருந்தால்தான் பள்ளிக்கூடத்திலே சொல்லிக் கொடுக்க முடியும். இரண்டும் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகக் கூடாது என்ற எண்ணத்தோடு, உயர் கல்வியிலே அக்கறை உள்ள தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கும் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்லாமல், ஆய்வகங்கள். குறிப்பாக, Laboratories. அதுவும் நான் முன்பே குறிப்பிட்டேன். இந்த Communication Language Lab ஒவ்வொரு கல்லூரியிலேயும், மொழியைக் கற்றுக் கொடுப்பதற்காக—நாமெல்லாம் படிக்கும்பொழுது, மொழிக்கெல்லாம் lab கிடையாது; ஆய்வுக் கூடம் கிடையாது. மனப்பாடம் செய்வது, ஒப்பிப்பது; அதோடு இருந்த கல்வி நிலையங்கள் உண்டு. ஆனால், இன்றைக்கு language teaching—மொழியைக் கற்றுத் தருவதிலேயே, அதற்காக ஆய்வுக் கூடங்கள் உருவாக்கப்பட்டு, பல்வேறு புதிய முறைகள் எல்லாம் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, 60 அரசுக் கல்லூரிகளிலேயும், 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலேயும் வருகிற ஆண்டிலேயே இந்த Language Lab—மொழித் திறன் ஆய்வகங்கள் உருவாக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்திருக்கிறது; நிதியையும் ஒதுக்கியிருக்கிறது என்பதையும், 6.6 கோடி ரூபாய் செலவில் ஆய்வகங்கள் உருவாக்கப்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

அதுபோல, கணினி; கலைஞர் ஆட்சியிலே இருக்கிறபோதுதான், உயர் கல்வி நிலையங்களிலே, அனைத்துக் கல்லூரிகளிலேயும், அனைத்துப் பள்ளிகளிலேயும் கணினிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். அந்தக் கணினி மையங்கள் கல்லூரிகளிலேயும், பள்ளிகளிலேயும் உருவாக்கப்பட்டதனுடைய விளைவாக, கிராமப்புறத்து மாணவர்கள்கூடக் கணினி பயிலுகிற வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். இந்த ஆண்டு, மத்தியிலே இருக்கிற செய்தி மற்றும் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்கள், இலவசமாகவே அந்தத் துறையின்மூலமாக, தமிழகத்திலே இருக்கிற அரசுக் கலைக் கல்லூரிகளுக்கு 50 கம்ப்யூட்டர்கள் வழங்கப்படும் என்று தெரிவித்து, சென்ற ஆண்டு திருவண்ணாமலை அரசுக் கலைக் கல்லூரியிலேயும், விழுப்புரம் அரசுக் கலைக் கல்லூரியிலேயும், தலா 50, 50 கம்ப்யூட்டர்கள் வழங்கப்பட்டு, இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் அதைத் திறந்து வைத்திருக்கிறார். இந்த ஆண்டு அனைத்துக் கல்லூரிகளிலேயும், அரசுக் கலைக் கல்லூரிகளில், மீதமிருக்கிற 58 அரசுக் கலைக் கல்லூரிகளிலேயும் இந்தக் கணினி மையங்களை உருவாக்குவதற்கு, மத்திய அமைச்சர் அவருடைய துறையின்மூலமாக 5 கோடி ரூபாய் அளிப்பதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 58 கல்லூரிகளிலேயும் இந்த ஆண்டே





கணினி ஆய்வகங்கள் உருவாக்கப்படும். அவருக்கு இந்தத் துறையின்மூலமாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, மின்னணு நூலகங்கள் (Digital Libraries). நூலகங்கள் எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்குத் தெரியும். நவீனமயமாக்கப்படுகிற இந்த மின்னணு நூலகங்களாக, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னையிலும், வேலூரிலே முத்துரங்கம் அரசுக் கலைக் கல்லூரியிலும், தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கலைக் கல்லூரியிலும், சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரி, திருப்பூரிலும், மேலூரிலே இருக்கிற அரசுக் கலைக் கல்லூரியிலேயும் 25 இலட்சம் ரூபாய் செலவில் மின்னணு நூலகங்கள் உருவாக்கப்படும்.

அரசுக் கல்லூரிகளில் ஒளி, ஒலி வசதியுடன்கூடிய வகுப்பறைகள். இப்போதெல்லாம் teaching எவ்வளவு மாறியிருக்கிறது என்று தெரியும். அந்த ஒலி, ஒளி வசதியோடு—நாங்கள் மேலைநாடுகளுக்குச் செல்கிறபோதெல்லாம், ஒரு Lecture Hall இருக்கிறதென்று சொன்னால், அதை எந்த அளவுக்கு ஒரு gallery type ஆக உருவாக்கி, படிக்கிற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், வாயால் சொல்லுவது, கேட்பது என்ற முறையையே மாற்றி, அங்கேயே எந்த அளவிற்கு நவீன முறையிலே பயிற்றுவிக்கப்படும் என்ற முறைகளையெல்லாம் புகுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ஒளி, ஒலி வசதியுடன்கூடிய வகுப்பறைகள், டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை, அரசினர் திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, தஞ்சாவூர், அரசினர் கலைக் கல்லூரி, தருமபுரி, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரம், அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம், திரு.வி.க. அரசினர் கலைக் கல்லூரி, திருவாரூர், பெரியார் கலைக் கல்லூரி, கடலூர், எம்வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல், மன்னர் துரைசிங்கம் அரசினர் கலைக் கல்லூரி, சிவகங்கை ஆகிய 10 கல்லூரிகளில், முதல் கட்டமாக, ஒளி, ஒலி வசதியுடன்கூடிய வகுப்பறைகள் இந்த ஆண்டு துவக்கப்படவிருக்கின்றன. இவையெல்லாம் தரத்தை உயர்த்துவதற்காக இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள்.

அது மட்டுமல்ல. மகளிருக்காக மகளிர் கல்லூரிகள் வளர வேண்டுமென்பதற்காக, அதிலும் குறிப்பாக, இங்கேயிருக்கிற இராணி மேரி கல்லூரி, பாரதி மகளிர் கலைக் கல்லூரி, காயிதே மில்லத் கல்லூரி ஆகிய இந்த 3 கல்லூரிகளுக்கும் பராமரிப்புச் செலவிற்காக

50 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. அதைவிட, இராணி மேரி கல்லூரியிலே—தளபதி அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். அதுவும் குறிப்பாக, இராணி மேரி கல்லூரியை இடிக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காக அங்கே சென்றதன் விளைவாக, அவரோடு நானும் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு மாத காலம் கடலூர் சிறையிலேயே இருக்க வேண்டியிருந்தது. புராதனச் சின்னங்களையெல்லாம், கட்டடங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். புராதனச் சின்னமாக இருந்த அந்த இராணி மேரி கல்லூரியையும், ஐ.ஜி. அலுவலகத்தையும் இடிக்க முற்பட்டவர்களெல்லாம் யார் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அவற்றையெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு, அன்று தளபதி அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, இன்று இராணி மேரி கல்லூரியிலே புதிய கட்டடங்களை உருவாக்குவதற்காக 2.5 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள், தளபதி அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கக் கொடுத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மகளிர் கல்வியைப் பொறுத்தவரையில், மாணவியர்களுக்கு விடுதிகள் எந்த அளவுக்கு முக்கியம் என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். சென்னையில் டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவியர் விடுதி ரூ.1.5 கோடி செலவிலும், நாகர்கோவில் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.1 கோடி செலவில் மாணவியர் விடுதியும், மதுரை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் 40 இலட்சம் ரூபாய் செலவில் மாணவியர் இல்லமும் அமைத்துத் தர இங்கே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானலில் உள்ள அந்தப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.45 இலட்சம் செலவில் கருத்தரங்குக் கட்டடமும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் நலன் இருக்கிறது. கட்டடமும், அதற்கான வசதியும் செய்து கொடுத்திருக்கிறோம். அனைத்தும் இருந்தாலும், பயில்பவர்கள் மாணவர்கள். அவர்களுடைய நலனையும் இந்த அரசு கருத்தில்கொண்டு பல்வேறு திட்டங்களையும் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக, அரசுக் கலைக் கல்லூரிகளிலே ஒரு பிரச்சினை. இப்போது ஒரு கலைக் கல்லூரியிலே B.Sc., Physics, B.Sc., Chemistry, B.Sc., Computer Science என்று பல பிரிவுகள் இருக்கின்றன. ஒரு மாணவருக்கு எதிலே சேருவோம்



என்ற தடுமாற்றம் இருக்கிறபொழுது, எல்லாவற்றிற்கும் application போட்டு வைத்திருப்பார். Computer Science-க்குப் போட்டிருப்பார், Maths-க்குப் போட்டிருப்பார், Physics-க்கும் போட்டிருப்பார், Chemistry-க்கும் போட்டிருப்பார். எது கிடைக்கிறதோ, அதிலே போய்ச் சேர்ந்துவிடுவார். இன்னும் கேட்டீர்களென்று சொன்னால், B.A. History-க்கும் போட்டிருப்பார். Economics-க்கும் போட்டிருப்பார். இதிலே எதுவும் கிடைக்கவில்லையென்று சொன்னால், அதிலே போய்ச் சேரலாம் என்பதற்காகப் போட்டு வைத்திருப்பார். ஒவ்வொன்றுக்கும் ஒரு application போடுகிற காலம் இருந்தது. அதைக் குறைப்பதற்காக இந்த அரசு முடிவெடுத்துள்ளது. ஒரு கல்லூரியிலே Science Course இருந்ததென்றால், 5 courses–க்கும் ஒரே ஒரு application போட்டால் போதும். Arts Course இருந்ததென்றால் Arts-க்கு ஒரே ஒரு விண்ணப்பம் செய்தால் போதும். இந்த விண்ணப்பங்களுக்குப் பிறகு அந்தக் கல்லூரியிலேயே ஒரு கவுன்சலிங் வைத்து, ஒரே நாளில் மாணவர்கள் வரவழைக்கப்பட்டு, Computer Science என்றால், அன்றைக்கு Computer Science Admission அந்தத் தரத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்டு, கல்லூரிகளிலே counselling கொண்டு வரப்பட்டு, அந்தந்தக் கல்லூரிகளிலே மாணவர்கள் சிரமம் இல்லாமல், செலவும் இல்லாமல், விண்ணப்பம் போட்டுவிட்டு அலைய வேண்டிய நிலையும் இல்லாமல், ஒரே நாளிலேயே admission செய்வதற்கான நடைமுறையையும் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

*முற்பகல் 11–30*

அதைப்போல B.Ed. கல்வி. முதலிலே B.Ed. கல்விப் படிப்புகளிலே கலந்தாய்வுகள் கிடையாது. இந்த ஆண்டு அதிலேயும் கலந்தாய்வு முறை கொண்டு வரப்பட்டு, 50 சதவிகிதம் அரசு இட ஒதுக்கீட்டிற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள். Polytechnic படிக்கின்ற மாணவர்கள் பெரும்பாலும் ஏழை மாணவர்கள்தான். S.S.L.C. படித்துவிட்டு, அதாவது, 10th Pass பண்ணியவுடனே கல்லூரிகளிலே சேர முடியாமல், +2 சேர முடியாமல் அல்லது +2 படித்தவுடனே போய்ச் சேருபவர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிச் சேருகிற மாணவர்களுக்கு, முதல்வர் அவர்கள் +2 மாணவர்களுக்கு நாம் இலவசமாக, கணிதம், இயற்பியல், வேதியியல் புத்தகங்களை வழங்குகிறோம். அதே syllabus தான், அதே மாணவர்கள்தான்

Polytechnic–ல் சேர்ந்து படிக்கிறார்கள். ஆனால் Polytechnic–ல் சேர்ந்து படிக்கின்ற மாணவர்களுக்கு இதுவரை அவர்களுக்கு இலவசப் புத்தகம் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு முதல் அந்தத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலே பயில்கின்ற அந்த மாணவர்களுக்கும் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களுக்கான இலவசப் புத்தகங்கள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, நிர்வாகவியல். தலைவர் கலைஞர் அவர்கள்தான் ஆசியாவிலேயே முதன்முறையாகக் கால்நடைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியவர். தலைவர் கலைஞர் முதல்வராக இருக்கிறபோதுதான் இந்த மாநிலத்திலே அது உருவாக்கப்பட்டது. இங்கே பல்வேறு பல்கலைக்கழகங்கள்–மருத்துவத்திற்காகப் பல்கலைக்கழகம், கால்நடைக்காகப் பல்கலைக்கழகம், விவசாயத்திற்காகப் பல்கலைக்கழகம் எனப் பல பல்கலைக்கழகங்கள் இருந்தாலும், இப்போது வளர்ந்து வருகிற தொழிற்சாலைகள் பெருகி வருகிற, இந்தக் காலக்கட்டத்தில் Management Studies என்று அந்த நிர்வாகவியலுக்கான பாடங்கள் நிறைய அதிகரித்து வருவதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். அந்த உணர்வோடு, நிர்வாகவியலுக்காக University of Management Studies என்ற ஒரு பல்கலைக்கழகமும் வெகுவிரைவில் இங்கே தமிழகத்திலே உருவாக்கப்படும் என்ற செய்தியையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, ஒரு முக்கியமான பிரச்சினை. ஏனென்றால் ‘தினமணி’ போன்ற பத்திரிகைகளிலும் சரி, பல்வேறு உறுப்பினர்கள் சந்திக்கின்றபோதும் சரி, அவர்கள் வைக்கின்ற கேள்விகள் எல்லாம், நுழைவுத் தேர்வு இரத்துச் செய்யப்பட்டிருக்கிறதே, இந்த ஆண்டு எப்படித் தேர்வு செய்யப் போகிறீர்கள், எந்த முறைகளைப் பின்பற்றப் போகிறீர்கள் என்ற கேள்வியை இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, ‘தினமணி’ பத்திரிகையிலே 28–4–2007 அன்று எட்டு, ஒன்பது கேள்விகளாகக்கூட அவர்கள் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்ல வேண்டிய வாய்ப்பு இங்கே இருக்கிறது.

குறிப்பாக, இந்த நுழைவுத் தேர்வை இரத்துச் செய்வதற்குத் தலைவர் கலைஞர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல. இதை ஏதோ சாதாரணமாகப் போட்டுவிட்டு, கோர்ட்டுக்குப் போய்ப் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிட்டுப் போகின்ற தலைவர் நமது முதல்வர் அல்ல. சமூக நீதிக் கொள்கையிலே உறுதியான





நம்பிக்கையுடையவர் முதல்வர் கலைஞர் என்ற காரணத்தினால், இந்தச் சட்டத்தைச் சென்ற ஆண்டு கொண்டு வருகிறபொழுதே, தலைவர் கலைஞர் முரசொலியிலே ஒரு கடிதத்தை எழுதினார். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு குழுவை நியமித்து, அதன்மூலமாக ஆய்வு செய்து, சட்டபூர்வமாக இதை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு, சென்ற ஆண்டு கொண்டு வரும்போதே எழுதினார். அதை முதல்வரான பிறகு செய்தார். வந்த பிறகு ஒரு குழுவை நியமித்தார். குழுவினுடைய அறிக்கையைப் பெற்றோம். பெற்றதற்குப் பிறகும்கூட, அது சட்டமாக்கப்படுகிறபொழுது குடியரசுத் தலைவருடைய கையொப்பம் வேண்டுமென்று சொன்னவுடன், குடியரசுத் தலைவர் இங்கே பல்கலைக்கழகத்தில் ஒரு விழாவிற்கு வந்தபொழுது, முதல்வர் அவர்களே தனியாக அவரைச் சந்தித்து, ஒரு Bill காத்துக்கொண்டிருக்கிறது. ‘கிராமப்புறத்து மாணவர்கள் வர வேண்டும், உடனே ஒப்புதல் கொடுத்து அனுப்புங்கள்’ என்று அவரிடம் நேரடியாகவே விண்ணப்பித்ததன் விளைவாக, அவரும் கையெழுத்திட்டு ஒப்புதல் கொடுத்தார். அங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு திரு. அர்ஜுன் சிங் அவர்களுடனும், நம்முடைய மாண்புமிகு திரு. அன்புமணி அவர்களுடனும் நேரடியாகவே தொடர்புகொண்டு, உங்கள் துறையின்மூலமாக இதை விரைவுபடுத்துங்கள் என்று சொன்னதன் விளைவாகத்தான் விரைவில் ஒப்புதல் கிடைத்தது. குறிப்பாக, இங்கேயிருந்து ஒரு Bill போனால், ஒப்புதல்பெற்றுத் திரும்பி வருவதற்கு ஒரு வருடம், இரண்டு வருடங்கள் ஆகும். இதற்கு முன்னே போன Bills எல்லாம் இருக்கின்றன. நுழைவுத் தேர்வை இரத்துச் செய்ய வேண்டுமென்பதிலே முதல்வருக்கு இருந்த அக்கறை, சமூக நீதியின்மீது இருந்த ஒரு பிடிப்பு, கிராமப்புறத்து மாணவர்கள் இடம்பெற வேண்டுமென்று இருந்த ஓர் ஆர்வத்தின் காரணமாக, அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளின்மூலமாகத்தான் அந்தச் சட்டம் இன்று நீதித் துறையையும் மீறி, பல்வேறு எதிர்ப்புகளையும் மீறி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த நுழைவுத் தேர்விலேகூட, பல பேர் பல சந்தேகங்களைக் கிளப்புகின்றனர். *(குறுக்கீடு)* நீதித் துறையினுடைய ஆதரவோடு, அவர்களுடைய தீர்ப்பினையும் பெற்று, நல்லாதரவையும் பெற்று, இந்தச் சட்டத்தை இன்று நிறைவேற்றி இருக்கிறோம்.

அதுவும் குறிப்பாக, இந்த நுழைவுத் தேர்வின் முறையிலே பல்வேறு சந்தேகங்கள் இப்போதும் கிளப்பப்படுகின்றன. சில பேர் கேட்டார்கள். இங்கேகூடக் கேட்டார்கள். நுழைவுத் தேர்வு இரத்து என்கிற பிரச்சினை வருகிறபொழுது, Standardization; C.B.S.E.—அவர்களோடு ஒப்பிட்டுப்

பார்க்கிறபோது, கிராமப்புறத்து மாணவர்களுக்கு இடம் கிடைக்காது என்றுகூட ஒரு வதந்தியைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். நான் C.B.S.E. பற்றி ஓர் உதாரணத்தோடு சென்ற முறைகூடச் சொன்னேன். C.B.S.E.–யிலே வாங்கியிருக்கிற மார்க்கிற்கும், நமக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. அதிலே எப்படி standardization பண்ணுகிறோம் என்றால், first rank––குறிப்பாக, சென்ற ஆண்டை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், Higher Secondary Marks—அதிலே கணிதத்திலே 100 மார்க் வாங்கியிருக்கிறார். C.B.S.E. முறையிலே படித்தவரும் கணிதத்திலே 100 மார்க் வாங்கியிருக்கிறார். சென்ற ஆண்டில் பார்த்தால், இதிலேயும் 100 மார்க்தான், அதிலேயும் 100 மார்க்தான். All India level–லே யார் first rank வாங்குகிறாரோ, அந்த மார்க்கையும், இங்கே +2–வில் வாங்குகிற மார்க்கையும், highest mark––உயர்ந்த மார்க்கையும்–– இரண்டையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்க்கிறோம். நாமும் கணக்கில் 100 மார்க், C.B.S.E.யிலும் கணக்கில் 100 மார்க் என்றால், இரண்டும் ஒன்றுதான். அதிலே எந்தவித மாற்றமும் இருக்காது. பெரும்பாலும், சென்ற வருடமும், அதற்கு முந்தைய வருடமும் அப்படித்தான் வந்திருக்கிறது. அதிலும் 100 மார்க்தான், இதிலேயும் 100 மார்க்தான் வந்திருக்கிறது, first mark வாங்கியது. அதனாலே, மாற்றங்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

*முற்பகல் 11–35*

அதிலே ஒன்றே ஒன்றுதான் குறைந்தது. கடந்த ஆண்டை எடுத்துப் பார்க்கும்போது, C.B.S.E.–யிலே biology–யிலே 99 மார்க். நம்முடைய மாணவர் எடுத்தது 100 மார்க். அப்பொழுது ஒரு மார்க்தான் வித்தியாசம். அதனாலே, பாயின்ட், பாயின்ட், பாயின்ட்கூடக் குறைவதற்கு வாய்ப்பே கிடையாது—Standardization. அதனாலே, கிராமப்புறத்து மாணவர்களுக்கு நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அதோடு, இன்னும் ஒன்று. C.B.S.E.–யிலே படித்தவர்கள், application போடுபவர்களே மிகவும் குறைவு. 5,000 பேர், 6,000 பேர்கூடப் போடுவதில்லை. 6,000 மாணவர்களுக்காக 6 இலட்சம் மாணவர்கள் பழிவாங்கப்படக் கூடாது என்ற உணர்வோடுதான் இந்த நுழைவுத் தேர்வு விஷயத்தில் பல்வேறு தடங்கல்களையும் தாண்டி நாம் வெற்றிபெற்றிருக்கிறோம்.

இதிலே எப்படி மாணவர்களைச் சேர்க்கப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். பழைய முறைதான். அதிலே ஒன்றும் மாற்றம் கிடையாது.



நாம் G.O.வே போட்டுவிட்டோம். முதலிலேயே அதற்கான G.O. பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்று சொன்னால், முதலிலே தொழில்நுட்பக் கல்லூரிகளிலே B.E. சேர்கிற மாணவர்களுக்கு, முதலிலே மொத்த மதிப்பெண்கள்—கணிதம், இயற்பியல், வேதியியல்–Maths, Physics, Chemistry—இந்த மூன்று பாடத்திலேயும் எடுத்திருக்கிற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையிலே நாம் மாநில அளவில் rank–ஐ, தரத்தை நிர்ணயிக்கிறோம். இதுதான் முக்கியம். இதைத்தான் எப்போதும் செய்வது. இந்த மூன்று பாடங்களிலேயும் எடுத்திருக்கிற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தரத்தை நிர்ணயிக்கிறோம்.

இந்தப் பணியைச் செய்வது இந்தப் பல்கலைக்கழகமா அல்லது அந்தப் பல்கலைக்கழகமா என்ற ஒரு சந்தேகமும் கிளப்பப்பட்டிருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் மட்டுமே இந்தப் பணியைச் செய்ய இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கல்லூரிகளும் ஒரே pool–ஆகக் கருதப்பட்டு, ஒரே நிலையில் கருதப்பட்டு, அவற்றிற்கு இந்தத் தரத்தின் அடிப்படையிலே இடம் ஒதுக்கப்படும். அண்ணா பல்கலைக்கழகம் மட்டும்தான் இந்தப் பணியைச் செய்யும்.

Counselling கூட, மாணவர்களுடைய நலனைக் கருதி––அதிலே சில நன்மைகளும் இருக்கின்றன, சில தீமைகளும் இருக்கின்றன. Counselling கூட, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் சென்ற ஆண்டு நடைபெற்றது. அதிலே ஏற்பட்ட சில இடர்ப்பாடுகள் என்னவென்று சொன்னால், ஒரு rank–ஐ முடிவு செய்யும்போது, சென்னையில் ஒருவர் காத்துக்கொண்டிருப்பார். பத்தாவது rank வாங்கியிருப்பவர் சென்னையில் இருப்பார். பதினொன்றாவது rank வாங்கியிருப்பவர் திருச்சியிலே இருப்பார். பன்னிரண்டாவது rank வாங்கியிருப்பவர் கோயம்புத்தூரில் இருப்பார். பத்தாவது rank வாங்கியிருப்பவருக்குக் கல்லூரியை ஒதுக்கிவிட்டு, பதினொன்றாவது rank வாங்கியிருப்பவர் எந்தக் கல்லூரியை எடுத்திருக்கிறார் என்று தெரிந்தால்தான், பன்னிரண்டாவது rank வாங்கியிருப்பவருக்கு எந்தக் கல்லூரி என்பதைக் கொடுக்க முடியும். இதுபோன்ற பல சங்கடங்கள் இருந்த காரணத்தினால்––அங்கேயிருந்து இங்கே communication வருகிறது. ஆனால், இங்கே ஒரு மணி நேரத்திற்கு அந்தப் பையன் காத்துக்கொண்டிருக்க வேண்டியதிருக்கிறது. இங்கே ஒரே இடத்திலே Counselling வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, நான்கு இடங்களுக்குப் பதிலாக, இந்த ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டுமே Counselling—கலந்தாய்வு நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கும் கலைஞர் அவர்களிடம் போய்ச் சொன்னோம், இந்த மாதிரி, கலந்தாய்வை இங்கேயே வைக்கலாம் என்று. ''ஏனய்யா, அங்கேயிருந்து வருவதற்குப் பையன் கஷ்டப்படுவானே'' என்றார். அப்படிச் சொல்லும்போது, கலைஞர் அவர்கள் சொன்னார்கள், ''எவ்வளவு பணம் collect பண்ணுகிறீர்கள்'' என்று கேட்டார்கள். ''300 ரூபாய் collect பண்ணுகிறோம்'' என்று சொன்னோம். ''அவன் மதுரையிலிருந்து வருகின்ற பையனாக இருந்தாலும், எல்லாப் பையன்களும் இங்கே வரட்டும். ஆனால், வாங்குகிற 300 ரூபாயை 200 ரூபாயாகக் குறைத்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி, Counselling–க்கு வருகின்ற மாணவர்களுக்குக்கூட, அவர்களுடைய போக்குவரத்துச் செலவைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இதுவரை வசூலிக்கப்பட்ட 300 ரூபாய், இனிமேல் 200 ரூபாயாக வசூலிக்கப்படும். ஒரே இடத்திலேதான் இந்த Counselling பொறியியல் கல்லூரிகளுக்கு நடைபெறும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் சமூக நீதிக் கொள்கையிலே எந்த அளவிற்கு நம்பிக்கையுடையவர் என்பது, இந்த 27 சதவிகிதத்தை மத்திய நிறுவனங்களிலே கொண்டு வருவதற்காக, அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த நாடே அறியும். நீதிமன்றத்திலேகூட நம்மையும் அதிலே ஒருவராகச் சேர்த்து இணைத்துக்கொண்டிருப்பதும், சமூக நீதிக் கொள்கையிலே தலைவர் கலைஞர் அவர்களுக்கு இருக்கிற உறுதியையும், பிடிப்பையும் உணர்த்துவதாக இருக்கும். அதே உணர்வோடுதான், தனியார் கல்லூரிகளிலேயும் இந்த இட ஒதுக்கீட்டு முறை, முறையாகப் பின்பற்றப்படும்.

இதிலே இன்னொன்றையும் கேட்டார்கள். தரப்படுத்துவதிலே ஒரே மார்க் வாங்கிவிட்டால் என்ன பண்ணுவது என்று கேட்டார்கள். இது எப்பொழுதும் இருக்கிற பிரச்சினைதான். இது எல்லாக் காலத்திலும் இருப்பதுதான். இப்பொழுது 90 சதவிகிதம் என்று, இரண்டு பேரும் ஒரே மார்க்கை வாங்கிவிட்டால், அதிலே எப்படி அடுத்தவர்களை நிர்ணயிப்பீர்கள் என்று கேட்கிறார்கள். பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், 90 மார்க்கை இரண்டு மாணவர்களோ அல்லது பத்து மாணவர்களோ பெற்றிருப்பார்களென்று சொன்னால், அந்த மாதிரிச் சூழ்நிலையில், முதலில் maths, அதிலே யார் அதிகம் மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதிலே அதிகம் மார்க் வாங்கியிருந்தால், அவருக்கு first preference. அந்த மாதிரி இல்லாமல், அதிலும் எல்லோரும் equalஆக வாங்கியிருக்கிறார்கள், சமமாக



வாங்கியிருக்கிறார்கள் என்றால், அடுத்து Physics—இயற்பியல். அதிலே எத்தனை பேர் எவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். சரி, இரண்டிலுமே சமமாக வாங்கியிருக்கிறார்கள் என்றால், Chemistry–க்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், இந்த மூன்றையும் கூட்டினால் வருகிற மொத்த மார்க், Chemistry–யிலும் equal ஆகத்தான் இருக்கும். இரண்டிலும் equal ஆக இருந்தால், மூன்றாவது பாடத்திலும் சமமாகத்தான் இருக்க முடியும். அதனால், Chemistry–யில் வாங்கியிருக்கிற மார்க்கைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

மூன்றாவதாக, பிறந்த தேதியிலே யார் மிகவும் senior என்பதைப் பார்த்து, அவருக்கு வாய்ப்பைக் கொடுப்பது. அதிலும், அந்தத் தேதியிலும் சரியாக முடிவு செய்யப்படவில்லையென்று சொன்னால், நான்காவதாக, lot போட்டு எடுப்பது. இதுதான் எப்பொழுதும் பின்பற்றக்கூடிய முறை. இதே முறையைத்தான் இப்பொழுதும் பின்பற்றுவார்கள். அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நுழைவுத் தேர்வைப் பொறுத்தவரையில், எந்தக் குழப்பமும் இல்லை. இந்த அரசு தெளிவாக, அனைவரையும் கலந்தாலோசித்து, பேசித்தான் இந்த முடிவையெல்லாம் எடுத்திருக்கிறது.

*முற்பகல் 11–40*

கடந்த ஆண்டும் சரி, அனைத்துத் தனியார் கல்லூரிகளுடைய நிர்வாகிகளுடனும் கலந்து பேசித்தான் இந்த முடிவுகளையெல்லாம் எடுத்திருக்கிறோம். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், கலந்தாலோசித்து, ஒரு ஜனநாயக முறையிலேயே கல்வியாளர்களையும் கலந்தாலோசித்து, வருகிற பிரச்சினைகளையும் எப்படி நிறைவேற்ற வேண்டும், எப்படித் தீர்த்து வைக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் இதைச் செய்து முடித்திருக்கிறோம். ஆகவே, கல்வியினுடைய எண்ணிக்கையை உயர்த்துகிறோம், தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

இப்பொழுது இங்கே நண்பர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று, நேற்று திரு. ராஜகுமார் பேசுகிறபோதுகூடச் சுட்டிக்காட்டினார்கள். Knowledge Commission; தேசிய அளவிலே உருவாக்கப்பட்டிருக்கிற Knowledge Commission—தேர்வு முறைகளிலே மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும், கல்வி என்பது தரத்தை நிர்ணயிப்பதாகத் தேர்வு

முறைகள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் அந்த Knowledge Commission சொன்னது. There is an acute need to reform this examination system, so that it tests understanding rather than memory. மனப்பாடம் பண்ணுவதே கல்வி என்று இருந்த முறை.

ஓரே ஒரு சிறு நிகழ்ச்சியை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். ஒரு பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர்களாக இருந்தாலும், கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களாக இருந்தாலும், இப்பொழுது coaching என்பதுதான் முக்கியமாகிவிட்டதே தவிர, teaching என்பது குறைந்து வருகிற ஒரு சூழ்நிலையில், இப்பொழுது அதற்கு உதாரணமாக ஒரு சிறு கதையைக்கூட ஓர் எழுத்தாளர் சொன்னார். குறிப்பாக, ஒன்றாவது, இரண்டாவது படிக்கும்பொழுதே நம்முடைய மாணவர்கள் தேர்வு வருகிறது என்று சொன்னால், முக்கியமான கேள்வி எது என்று கேட்பது வழக்கம். ஒன்றாவது, இரண்டாவது படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர் ஆசிரியரைப் பார்த்து, எந்தக் கேள்வி வரும் என்று கேட்டார். அந்த ஆசிரியர் சொன்னார், நான் இரண்டு கேள்விகளைக் கொடுக்கிறேன், இரண்டையும் படித்துவிட்டு வா, ஏதாவது ஒன்று வரும், எழுதலாம் என்று சொன்னார். என்ன தலைப்பு? பசு மாடு, தென்னை மரம், இந்த இரண்டையும் படித்துவிட்டுச் செல்லுங்கள்; இந்த இரண்டையும் படித்துவிட்டு வந்தீர்களானால், நாளைக்கு எழுதலாம் என்று சொன்னார். பையனும் போனான். நம்முடைய பையன்கள் ரொம்ப சுறுசுறுப்பான பையன்கள். இரண்டு கேள்விகளையும் எப்படிப் படிப்பது என்று ஒரு lot போட்டுப் பார்த்தான். Lot போட்டுப் பார்த்தவுடனே, பசு மாடு வந்தது. சரி, ஒன்று மட்டும் படித்துவிட்டுப் போனால் போதும் என்று பசு மாட்டை நன்றாக மனப்பாடம் செய்து, mug-up செய்துகொண்டு போய்விட்டான். கேள்வி கேட்கும்பொழுது என்ன செய்துவிட்டார்கள் என்றால், தென்னை மரம் என்று வந்துவிட்டது. இவன் படித்துவிட்டுப் போனது பசு மாடு. கேள்வி கேட்டது தென்னை மரம். ஆனால், அந்த மாணவன் ரொம்பக் கவலைப்படாமல், தென்னை மரம் என்று தலைப்புப் போட்டான், தலைப்புப் போட்டுவிட்டு, படித்துக் கொண்டுபோன பசு மாட்டைப் பற்றி முழுவதும் எழுதிவிட்டு, கொஞ்சம் அறிவாளிப் பையன், கடைசி வரியிலே, இந்தத் தென்னை மரத்தில்தான் பசு மாட்டைக் கட்டுவார்கள் என்று ஒரு முடிச்சுப் போட்டான். முடிச்சுப் போட்டது மட்டுமல்ல, திருத்துவதற்கு வந்த வாத்தியார்—அப்பொழுதெல்லாம் Central valuation, நானும் பேப்பரெல்லாம் திருத்தியிருக்கிறேன்—திருத்த வந்தவர் பார்த்தார், தலைப்பைப் பார்த்தார், தென்னை மரம், கீழே



பார்த்தார், பசு மாட்டைத் தென்னை மரத்தில் கட்டுவார்கள்; ரைட், பையன் ரொம்ப நன்றாக எழுதியிருக்கிறான் என்று 10–க்கு 8 மார்க் கொடுத்தார். அந்தப் பையன் first class-லே பாஸ் பண்ணிவிட்டு வந்தான். அதுபோன்ற முறைகள். இது ஒரு memory system. யாரையும் குறை சொல்வதற்காக அல்ல. நம்முடைய கல்வி முறையிலே மனப்பாடம் செய்வதுதான் கல்வி என்ற நிலைமை இருந்ததை மாற்றி, அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட இன்று செயல் முறைக் கல்வியின்மூலமாக practical-- நடைமுறையின்மூலமாக கல்வியைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து, நான்காம் வகுப்பு வரை செயல் முறைக் கல்வியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, உயர் கல்வியிலேயும் இதுபோன்ற செயல் முறைக் கல்வியைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை, தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது.

கடைசியாக, முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது, நேற்று ஒரு சவாலே விட்டார். நான் சொல்கிறேன், B.Ed., கல்லூரிக்கு N.C.T.E.-க்குப் போவதற்கு முன்பாக நான் கையெழுத்தே இடவில்லையென்று சொன்னார். 139 கல்லூரிகளுக்கு இங்கிருந்து கையெழுத்திட்டு அவர்களுக்குச் சென்ற பிறகு உத்தரவு வந்திருக்கிறது என்பதையும் அவருக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, எது எப்படியிருந்தாலும்கூட, உயர் கல்வியினுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கும், access, அதைத்தான் எண்ணிக்கையை அதிகரிப்போம், தரத்தை உயர்த்துவோம் என்று சொன்னோமே, அந்தத் தரத்தை உயர்த்துகின்ற வகையிலே இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும். அவ்வப்பொழுது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அரிய ஆலோசனைகளைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, என்னால் தரப்பட்டுள்ள அறிவிப்பு@ புத்தகத்தில் உள்ளவற்றை அவையில் நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த உயர் கல்வித் துறையினுடைய மானியத்தை நிறைவேற்றிக் கொடுக்குமாறு உங்களைக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

---

@ 435 முதல் 454 வரையிலான பக்கங்களில் இணைப்பு-1ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[2007 மே 4

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாக நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கல்வியில் பல்வேறு மாறுதல்களுக்கான நல்ல பல திட்டங்களையும், செயல்பாடுகளையும் அறிவித்ததற்காக நான் முதலில் அவரைப் பாராட்டி, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், கடந்த ஐந்து ஆண்டு காலமாகத் தொடர்ந்து நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். காலையில்கூட முதல்வரிடத்திலே சென்று நான் வேண்டுகோள் வைத்திருக்கிறேன். என்னுடைய பண்ருட்டி தொகுதிக்கு ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்று, அதையும் அவர்கள் அந்த 30 கல்லூரிகளிலே இணைத்துக்கொண்டு, வரும் ஆண்டுகளிலாவது அறிவிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், துறையின் அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டும். என்னுடைய பண்ருட்டித் தொகுதியில் கலைக் கல்லூரியைக் கொண்டு வருவதற்கு உத்தரவிட வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, அரசுத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள் என்று சொல்லக்கூடிய அரசு Polytechnic–களில் அதற்கான ஆசிரியர்கள், Lecturer, Senior Lecturer, Head of the Department, Principal, இவர்களுக்கு வயது வரம்புப் பட்டியலுக்கு அந்தத் துறையினுடைய தொழில்நுட்பக் கல்வித் துறை ஆணையாளர் அவர்கள் ஒரு கடிதம் வெளியிட்டிருக்கிறார். அதில், அந்த வயது வரம்பு. . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடியுங்கள். இன்னும் இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை. முக்கியமான பிரச்சினை. Lecturer–க்கு 35 வயது என்றும், Senior Lecturer–க்கு 40 வயது என்றும், Head of the Department–க்கு 45 வயது என்றும், Principal–க்கு 50 வயது என்றும் இருக்கிறது. நம்முடைய அரசாணையிலே 57 வயது என்று இருக்கிறது. ஆனால், இவர்கள் அனுப்புகிற சுற்றறிக்கையில், இந்த வயதைக் குறைத்து இவர்களாகவே கடந்த கால ஆட்சியின்போது அறிவித்திருக்கிறார்கள். தற்பொழுது அது பின்பற்றப்படுகிறதா அல்லது 57 வயது வரை என்பது பின்பற்றப்படுகிறதா? மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், புதிதாக ஆசிரியர்கள் தேர்வுக்கு எல்லாம், இன்றைக்கு 4,000–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களைப் பல்வேறு தொழில்நுட்பக் கல்லூரிகளிலே, கலைக் கல்லூரிகளிலே தேர்வு செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி உத்தரவிட்டிருக்கிற நம்முடைய அரசு இந்த வயது வரம்பைத் தளர்த்தி அல்லது மறு உத்தரவு



2007 மே 4] [திரு. தி. வேல்முருகன்]

வழங்குவதற்கு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன். (குறுக்கீடுகள்) கூப்பிடுகிறேன், உட்காருங்கள்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் கணினிப் பயிற்சியாளர்களாகப் பணியாற்றியவர்களுக்குத் தொடர்ந்து பணம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், முழுநேரப் பொறியியல் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தை ரூ.10,350–லிருந்து ரூ.6,350 ஆகக் குறைத்து அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், முழுநேரப் பொறியியல் படிப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு, முழுநேர மாணவர்களுக்கு மட்டும்தான் அந்தக் கட்டணக் குறைப்பு இருக்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது. முழுநேரமாகப் படிக்கின்ற மாணவர்களுக்கு மட்டும் அந்தக் கட்டணக் குறைப்பு இருக்கின்றது. பகுதிநேர மாணவர்களுக்கு அந்தக் கட்டணக் குறைப்பு இல்லை. ஆகவே அரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த வித்தியாசங்களை நீக்கி, முழுநேரமாகப் படிக்கின்ற மாணவர்களுக்கு என்ன கட்டணச் சலுகை இருக்கிறதோ, அதனையே பகுதிநேர மாணவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 50 ஆண்டுகளில் நெல்லை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற பிரதானத் திட்டங்கள் அனைத்தும் ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில், தாயினும் சிறந்த நம்முடைய அன்புத் தலைவர் முதல்வர் கலைஞரால் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்களாகும். (மேசையைத்

தட்டும் ஒலி) அவருடைய புகழ்க் கிரீடத்தில் ஒரு வைரக் கல்லாக, நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலே இருக்கின்ற ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கு, மத்தியப் பகுதியான சுரண்டைப் பகுதியினைத் தேர்ந்தெடுத்து, இந்த ஆண்டு புதிய அரசுக் கல்லூரி அமைப்பதற்குத் தாய் உள்ளத்தோடு அனுமதி தந்த எங்களுடைய குடும்பத் தலைவர், தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், இதுபோன்ற நல்ல பணிகளில் எங்களை ஊக்கப்படுத்தியதைப்போல, நல்ல காரியங்கள் நிறைவேறுவதற்கு எங்களுக்குத் துணை நிற்கிற எங்கள் அன்புத் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தாய் உள்ளத்தோடு இந்த அனுமதியைப் பெற்று, வழங்கி உதவிபுரிந்திருக்கின்ற தமிழகத்தினுடைய உயர் கல்வித் துறை அமைச்சர், எங்கள் பாசத்திற்குரிய அண்ணன் முனைவர் பொன்முடி அவர்களுக்கும் தென்காசித் தொகுதி மக்கள் சார்பாக மட்டுமல்ல, நெல்லை மாவட்டத்து மக்கள் சார்பாக இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை, 3–5–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, பல்வேறு கல்விச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக்கொண்டிருந்தோம். ஆனாலும், நிறைவேறாது இருந்த காலங்கள் எல்லாம் மாறி, இப்போது தொடர்ந்து வலியுறுத்தி வந்த சமுதாயக் கல்லூரி நாடு முழுவதும் உருவாக்கப்படும் என்ற ஒரு நல்ல அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதைப்போலவே, கல்லூரி மாணவர்களுக்கும் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யக்கூடிய வகையிலே, இலவச பயணச் சீட்டு வழங்குகிற ஒரு நிலை; அதைப்போல, உயர் கல்வியிலே கல்லூரிக் கல்விப் பாடங்களை எல்லாம் தமிழிலே கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படும் என்ற ஒரு நல்ல அறிவிப்புபோன்ற பல்வேறு அறிவிப்புகளைச் செய்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய தமிழக அரசுக்கும், பாட்டாளி



மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திருமதி பதர் சயீத், சொல்லுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** Hon'ble Speaker Sir, I want to ask the Hon. Education Minister. நீங்கள் permission கொடுத்திருக்கிறீர்கள், 16 hours teach செய்ததற்குப் பிறகு வேறு காலேஜில் teach செய்யலாம் என்று. U.G.C. norms என்று ஒன்று இருக்கிறது. உங்களுக்குத் தெரியும், நான் சொல்லத் தேவையில்லை. 40 hours, they must teach. 16 hours direct teaching, 24 hours of conducting of lectures, seminars. In fact, you have said that you are doing so much for higher education. You are going to give permission for them to teach in other colleges, after having taught for 16 hours. I want to request you not to give this permission, because you will be diluting the academic standards of any institution and also violating the norms of the U.G.C. which the State Government has followed over the years. அவர்களுக்கு நான் request பண்ணுகிறேன், பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். Definitely, if you are going to give permission, the academic standards and discipline of the institutions will just go haywire; Not only that, you will also be violating the U.G.C. norms. I want to remind this to you. You will be disregarding the U.G.C. norms. Therefore, it will also be a serious set back to the standards of education in Tamil Nadu, which all of us together have upheld.

*முற்பகல் 11–50*

**HON. SPEAKER:** Alright. Thiru Manickam

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே பொன் விழாக் காணுகின்ற நம்முடைய சரித்திர நாயகர், முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களை, முதன்முதலாக இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கின்ற அந்த வாய்ப்பினைப் பெற்ற அந்தக் குளித்தலைத் தொகுதிக்கு அரசுக் கலைக் கல்லூரி வழங்கி, தொகுதி மக்களை மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தி இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்,

[திரு. இரா. மாணிக்கம்] [2007 மே 4

எங்களுடைய அன்புத் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், குளித்தலைத் தொகுதியின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அமையவிருக்கின்ற அந்த அரசுக் கலைக் கல்லூரிக்கு நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நமது உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசுக் கல்லூரிகளிலே சுழற்சி முறை என்று அறிவித்தார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகத்தாலே நடத்தப்படுகிற ஈரோட்டில் உள்ள I.R.T.P. கல்லூரிக்கு அது பொருந்துமா? அதேபோல, மருத்துவக் கல்லூரிக்கும் இதுபோன்ற சுழற்சி முறைகள் பொருந்துமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன் அதோடு, ஒரே ஒரு கேள்வி, உயர் கல்வி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்ந்து எல்லாம் கேள்வி கேட்க முடியாது. மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையில் துவக்க இருக்கிற கல்லூரி "கலைஞர் பொன் விழா அரசுக் கலைக் கல்லூரி" என்றே அழைக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் U.G.C. பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். நான் குறிப்பிடுகிறபோது ஒன்றைச் சொன்னேன். Those who are working in the same college, are going to take extra hours in addition to the 16 hours. They have to work for 16 hours, but at the same time, they are allowed to work for more hours in the shift colleges. There is no bar on it. I too had worked in a college. When I was a teacher in the regular college, we were given extra remuneration for taking classes in the evening colleges. So there is a possibility and not only that, even in your administration, you have appointed Guest Lecturers. On what basis have you appointed them? Did you get the approval of the U.G.C.? So, there are so many ways. We can appoint even retired lecturers in those Government colleges. Provisions will be made. இதற்குரிய அனைத்து ஆவணங்களையும்



2007 மே 4] [டாக்டர் க. பொன்முடி]

ஆலோசித்து இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. கல்லூரி ஆசிரியர்களோடும் பேசி இருக்கிறேன், மாணவர்களோடும் பேசி இருக்கிறேன். 16 மணி நேரம் பணியாற்றிய அந்த ஆசிரியர்கள், அதே கல்லூரியில் பணியாற்றுகிற ஆசிரியர்கள், அந்த morning shift, evening shift–ல் வருவார்கள். வேறு கல்லூரிகளிலே பணியாற்றுபவர்கள் வரமாட்டார்கள். அந்தக் கல்லூரியிலே பணியாற்றுபவர்களுக்கு, அதற்குக் கூடுதலாக extra remuneration–ம் வழங்கப்படும். அதுதான் முறை. அதைச் செய்வதற்கு இருக்கிறோம். (குறுக்கீடு)

அதேபோல, அதில் ஒன்றும் violation கிடையாது. (குறுக்கீடு) முதலிலே நடத்தி இருக்கிறோம். பல இடங்களிலே நடத்தி இருக்கிறோம். அதிலே violation வராது.

பகுதிநேர மாணவர்களைப் பற்றி முதல்வரோடு கலந்து பேசி, அதில் எவ்வளவு மாணவர்கள், என்ன என்றும், நிதிநிலையைப் பற்றி அறிகிறபோது, அதற்கான முடிவுகளையும் வெகுவிரைவிலே நிதிநிலையிலே சேர்த்துப் பேச இருக்கிறோம். எவ்வளவு மாணவர்கள் என்று தெரியவில்லை, நாங்கள் செய்கிறோம். வயது வரம்பைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அது குறித்து என்னிடம் விவரங்கள் கிடையாது. இதுவரையிலும் அது பற்றி எதுவும் என்னிடம் வரவில்லை. அதையும் செய்கிறோம்.

அதேபோல, திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் கணினி ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தலைவர் கலைஞருடைய ஆட்சியிலேதான் முதலிலே கணினி ஆசிரியர்கள் எல்லாம் தனியார் பள்ளிகளிலே தனியார்களுக்காகக் கொடுக்கப்பட்டு, தனியார்மூலமாகவே நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் கோர்ட்டிலேயும் வழக்குப் போட்டு, அந்த கேஸூம் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அந்த வழக்குகள் பற்றியெல்லாம் ஆலோசித்து, இப்பொழுது எப்படிப் பள்ளிக் கல்வியிலே இருக்கிற அந்தக் கணினிப் பயிற்சியாளர்களை நேரடியாக எடுத்துக்கொள்வதற்குக் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறாரோ, அதுபோன்ற முறைகளை கல்லூரிகளிலே பணியாற்றுபவர்களுக்கும் நீட்டிக்க முடியுமா என்பதையும் இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. விரைவில் அதற்கான முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை. 3–5–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

முற்பகல் 11–55

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.20,13,80,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## (இ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

—

## (ஆ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.108,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 311, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5386, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7969, திரு. விடியல் எஸ். சேகர்.

[2007 மே 4

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11137, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11386, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5246, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6157, திரு. ஆர். சின்னசாமி.



2007 மே 4]

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11333, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5686, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7028, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கி. ஆறுமுகம்] [2007 மே 4

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8058, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8628, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8746, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10191, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2007 மே 4] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11023, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11254, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 370, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் சட்டமன்ற வளாகத்தை 15 அடுக்கு மாளிகையாகக் கட்டி இட நெருக்கடியைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 445, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் வீட்டு வசதிச் சங்கங்களிலிருந்து வீடு

கட்டுவதற்குத் தவணைகளாகக் கடன் அனுமதிக்கப்பட்டும் தவணைத் தொகைகளை முறையாக வழங்காததால், வீட்டு வேலையை முடிக்க இயலாமல், கடன் பெற்றவர்கள் சிரமப்படுவதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 592, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் கன மழையினால் மேற்கூரைகள் இடிந்தும், இடியும் நிலையிலும் இருக்கின்ற வீடுகளைப் பழுது பார்த்துப் புதுப்பித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 863, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1095, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர்ப்புறங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப நகர்ப்புறப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில்





ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1344, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அளவில் சேலம், தருமபுரி மாவட்டங்களில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுப் பல ஆண்டு காலமாக விற்கப்படாமல் உள்ள குடியிருப்புகளை உடன் விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1832, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் தொகுதியில் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்பு வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2640, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மலைப் பகுதியில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் அனைவருக்கும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2007 மே 4

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3329, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரிய வீடுகள் பெருமளவில் சேதமடைந்து இருப்பதால், அவற்றைப் பராமரிப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4197, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சியில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4875, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தில் குடியிருக்கும் மக்கள் கிரயத் தொகை செலுத்தியும் பத்திரம் கிடைக்காமல் படும் துயரத்தைப் போக்க



2007 மே 4] [திரு. என். நன்மாறன்.]

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5202, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மற்றும் தமிழ்நாடு முழுவதுமுள்ள கிராமங்களில் உள்ள குடிசை வீடுகளை மாற்றுவதற்கு சிறப்புத் திட்டம் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5306 திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி, அரண்மனைப்புதூர், முல்லை நகர் வீட்டு வசதித் துறை குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5402, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2007 மே 4

வெட்டுத் தீர்மானம் எண் 5439, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் சிப்காட் வளாகத்தில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5456, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 25 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்ற வீடுகளின் பத்திரங்களுக்கு வட்டி முழுவதும் தள்ளுபடி செய்வது அல்லது குறைந்தபட்ச வட்டி மட்டுமே நிர்ணயிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5642, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5730, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுக் குடியிருப்போர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பள்ளிப்பாளையம் திட்டம்-II-க்குப் பத்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2007 மே 4] [திரு. பி. தங்கமணி]

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5975, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6012, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் நகராட்சி முழுவதும் கழிவு நீர் செல்வதற்கான கால்வாய் சரியாக அமையவில்லை; பாதாளச் சாக்கடைக் கால்வாய் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6068, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதிக் கடன் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6091, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூரில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6366, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீரர் சத்தியமூர்த்தி அவர்களுக்கு, திருமயம் சட்டமன்றத் தொகுதி, திருமயத்தில் மணிமண்டபம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6407, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் ஏழை நெசவு மற்றும் விவசாயத் தொழிலாளர் ஆகியவர்களுக்கு வீட்டு வசதி வாரியம்மூலம் அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டிக் குறைந்த வாடகைக்கு விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில்





ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6412, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி நகராட்சியை அடுத்துள்ள கிராமப் பகுதியில் அரசு நிலம் வாங்கி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் வீட்டு வசதித் துறைமூலமாகத் தவணை முறையிலான வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6600, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் வசித்து வருகின்ற ஆதி திராவிடர்கள் கடந்த 20 ஆண்டுகளுக்குமுன் வீடு கட்டுவோர் சங்கத்தில் கடன் பெற்று வீடு கட்டியுள்ளார்கள்; கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் உள்ளதால், கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7137, திரு. ஆர்.எம். பழனிசாமி.

[2007 மே 4

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொடக்குறிச்சி தொகுதியில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7282, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினத்தில் வீட்டு வசதி வாரியம் சார்பில் அடுக்கு மாடிக் குடியிருப்பு கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7292, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டினம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2007 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7311, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதி, பொன்னவராயன் கோட்டை ஊராட்சியில் உள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளில் விற்பனையாகாமல் உள்ள வீடுகளை உடனடியாக விற்பனைக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7400, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பகுதியில் வீட்டு வசதி வாரியம் கூடுதல் வீடுகள் கட்டிக் கொடுக்க நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7647, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாலாஜா மற்றும் அரக்கோணம் வட்டங்களை உள்ளடக்கிய சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சோளிங்கர் மற்றும் காவேரிப்பாக்கம் ஒன்றியங்களில் வீட்டு வசதித் துறைமூலம் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7698, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7746, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17, ஜி.எம். பேட்டை பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ள அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்குப் பயனாளிகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டும், குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடையாள அட்டை பயனாளிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளை உடனடியாகத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7847, திரு. ரா. லீமா றோஸ்.

**திரு. ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1992 வெள்ளப் பெருக்கின்போது பழுதடைந்த வீடுகளுக்கு, குமரி மாவட்டம், கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் வீட்டு வசதிச் சங்கம்மூலம் வழங்கப்பட்ட கடனையும், வட்டியையும் இரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில்





ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7924, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் அடங்கிய முக்கியப் பகுதிகளில் வீட்டு வசதித் துறைமூலம் அடுக்கு மாடி வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7958, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநகராட்சிகளில் மட்டும் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் ஏழைகளுக்கான அடுக்கு மாடிக் குடியிருப்புகளை நகராட்சியிலும் அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8096, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதி, கருங்கல் பேரூராட்சிக்குட்பட்ட மங்கலக்குன்று என்ற இடத்தில் 22 குடியிருப்புகளுக்கான பட்டாவை ஏழைகளுக்கு அரசு வழங்கி உள்ளது; அவர்கள் வீடில்லாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர்; அவர்களுக்கு அரசு ஏதாவது ஒரு

திட்டத்தின்மூலம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8234, டாக்டர் க. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8338, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மற்றும் கிராமங்களுக்குக் குறைந்த வட்டியில் வீடு கட்ட கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8418, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம், அறிவொளி நகரில் கொடுக்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் இடங்களுக்கு உரிமம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9005, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட நகர்ப்புறங்களில் சாலை வசதி, சாலைகளில் சோடியம் விளக்குகள் அமைத்தல் மற்றும் சிறுவர் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9278, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதி, கோட்டூர் கெனால் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9290, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கு இலவசப் பட்டா வழங்கப்பட்டுள்ளது; இந்த மக்களுக்குக் குடிசை மாற்று வாரியம்மூலம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9309, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின்மூலம் பொன்னேரி தொகுதியில் உள்ள மீஞ்சூர், மணலி புதுநகர், பொன்னேரி, சோழவரம், ஆரணிபோன்ற பகுதிகளுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9319, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9427, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9538, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் குடிசை வீடுகள் நிறைய உள்ளன; எனவே, அவர்களுக்குத் தீப்பிடிக்காத கச்சா வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9819, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9914, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கடன்பெற்று வீடு கட்டியவர்களின் கடன்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10023, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10373, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் உள்ள வீட்டு வசதி வாரியம், பகுதி 2, பகுதி 1–ல் உள்ள வீடு ஒதுக்கீட்டின்போது அறிவித்த விலைக்கே ஒப்பாவணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10701, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வீடு கட்டுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பெற்ற கடன்களுக்கு அபராத வட்டிச் சலுகை அறிவித்த அரசு, ஏற்கெனவே அபராத வட்டி கட்டியவர்களும் அந்தச் சலுகை பெறுகின்ற வகையில் அப்படிக் கட்டியவர்களுக்கு அந்தப் பணத்தை அவரவர்களுடைய அசலில் வரவு வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10841, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் ஒரு நகர வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11200, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி நகரத்தில் அரசு வீட்டு வசதித் துறைமூலம் அரசுக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

நண்பகல் 12–00

## (இ) கோரிக்கை எண் 47—இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47—இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,07,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 314, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5335, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7251, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8873, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11400, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5259, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7743, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11364, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7281, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7874, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8006, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8728, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10084, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக்



கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10255, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11199, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11875, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

[திரு. வை. சிவபுண்ணியம்] [2007 மே 4

ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 257, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, ஓமலூரின் பல பகுதிகளில் உள்ள பாகல்பட்டி அருள்மிகு சென்றாய பெருமாள் கோயில் நிலத்தைத் தனியாரிடம் இருந்து அரசு கையகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 443, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் உள்ள பழமையும், வரலாற்றுப் பெருமையும்கொண்ட மலையடிக் கோயிலைப் புதுப்பிக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1122, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1480, திரு. கு. ஹசன் அலி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2748, திரு. ந. சுப்ரமணியன்.



2007 மே 4]

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், திருவேங்கைவாசல் ஊராட்சி, திருவேங்கைவாசல் வியாக்கபுரீஸ்வரர் கோயில் தெப்பக்குளத்தின் மூன்று பக்கங்களில் பாதுகாப்புச் சுவர், படிக்கட்டு கட்டித் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4579, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில் அருள்மிகு மாயூரநாத சுவாமி திருக்கோயிலுக்கு என்.எச்.208–லிருந்து தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5277, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோயில்களுக்குச் சொந்தமான கடைகளின் வாடகையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

[திரு. என். நன்மாறன்] [2007 மே 4

ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5340, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருள்மிகு வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயிலில் அர்ச்சகர்களுக்கான பயிற்சிப் பள்ளி துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5348, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5492, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி ஆண்டவர் கல்லூரியில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் விரிவுரையாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5654, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5893, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6013, திரு. க. இராஜேந்திரன்.



2007 மே 4]

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதி, குருவாளப்பர்கோவில் என்ற ஊரில் உள்ள பழங்காலக் கோயிலைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6069, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள ஆதி திராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வழிபடுகின்ற திருக்கோயில்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6088, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள ஆதி திராவிடர் பகுதியிலுள்ள சிறு கோயில்களைப் புதிதாகக் கட்டி குடமுழுக்குச் செய்திட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6125, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகாவில் உள்ள விண்ணமங்கலத்தில் உள்ள சிதிலமடைந்த சிவன் கோயிலைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6172, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள ஆலய ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6281, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் கிராமப்புறங்களில் உள்ள நலிவுற்ற கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து, கும்பாபிஷேகம் நடைபெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6393, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைக் குறைந்த ஆண்டுகளுக்கு ஒரு முறை பொது ஏலம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6411, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி ஸ்ரீ பூவனநாதசுவாமி உடனுறை செண்பகவல்லி அம்மன் கோயிலில் நடைபெற்று வரும் இராஜ கோபுரப் பணியை அரசு விரைவுபடுத்தி, பணியை நிறைவு செய்து, கும்பாபிஷேகம் நடைபெறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6597, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட ஆதிதிராவிடர்களின் குலதெய்வமான மதுரை வீரன் கோயிலைப் புனரமைப்புச் செய்வதற்காகக் கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றது; தற்போது கோயில் கட்டி முடிக்கப்பட்டு நீண்ட காலமாகியும் அவர்களுக்கான தொகை கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6681, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் அருந்ததியர் காலனி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் கோயில்களுக்குப் பராமரிப்பு நிதியாக ரூ.25,000 வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6871, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் நகரில் உள்ள மயிலம் மடத்திற்குச் சொந்தமான நிலத்தை ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்





வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7015, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ருத்திரான்கோயில் ருத்ரகோட்டீஸ்வரர் திருக்கோயில் திருக்குளம் மற்றும் சங்குதீர்த்தக் குளம் ஆகிய திருக்குளங்கள் சீர்கேடு அடைவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7139, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொடுமுடி அருள்மிகு மகுடேஷ்வரர் வீரநாயனார் திருக்கோயில் எதிரில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் சமையற்கூடம் அமைய நிதி உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7398, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள ஆதி திராவிடர்கள் வணங்கும் குல தெய்வங்களுக்குக் கட்டடம் கட்டிட நிதி வழங்க

[திரு. இ. மகேந்திரன்] [2007 மே 4

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7410, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, நடுப்பட்டி ஊராட்சி, தொட்டியபாளையம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள மதுரை வீரன் கோயிலுக்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7447, திரு. எஸ். ராஜ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7587, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள ஆலய ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2007 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7637, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கர் அருள்மிகு யோக நரசிம்மர் மற்றும் அருள்மிகு யோக ஆஞ்சநேயர் திருக்கோயில்களுக்குத் தங்கத் தேர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7663, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சியிலுள்ள சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் அமைத்துத் தேரோட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7934, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அ[illegible]களே, "தமிழகத்தில் இருக்கும் கிராமக் கோயில்களில் பூஜை [illegible]த்தும் பூசாரிகளுக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டியதன் [illegible]சியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மா[illegible]த்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8087, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதி, மூஞ்சிறை பகுதியில் உள்ள சிவாலயத்திற்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8229, டாக்டர் க. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8402, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8419, திரு. செ.ம. வேலுசாமி.





**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, சூலூர் ஈஸ்வரன் கோயில், பெருமாள் கோயில், வாழைத் தோட்ட அய்யன் கோயில், சென்னி ஆண்டவர் கோயில் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8486, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் புதிதாக அரசு நிதிமூலம் கட்டப்பட்ட கிராமத் திருக்கோயில்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8507, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி அரிகிருஷ்ணாபெருமாள் கோயிலுக்குப் புதிய தேர் அமைக்க நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8662, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் ஒன்றியம், மாரனோடை கிராமத்தில் உள்ள பிடாரியம்மன், மாரியம்மன், முருகன் கோயில், அங்காளம்மன் கோயில் ஆகிய கோயில்களைப் புதுப்பித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8991, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள் அனைத்தையும் செப்பனிட்டுப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9270, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் செய்யப்படும் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9288, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதி, பனப்பாக்கம் ஊராட்சியில் உள்ள ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9341, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9375, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை, அருள்மிகு அரங்கநாதர் கோயில் இராஜ கோபுரத் திருப்பணி வேலைகள் நின்று போயுள்ளதால், அப்பணியை மீண்டும் துவக்கித் துரிதமாக முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9441, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து அறநிலையக் கட்டுப்பாட்டில் உள்ள ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்கவும், கிராம நலிந்த கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9535, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் வசிக்கும் ஆதி திராவிடர்கள் வணங்கும் திருக்கோயில்களுக்கு ரூ.25,000 வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9605, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதி, பரதராமி ஈஸ்வரன் கோயில், கல்லப்பாடி ராமர் கோயில் ஆகியவற்றைப் புனரமைத்திட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ. 38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9794, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதி, எனஞ்சாவூர் முத்துமாரியம்மன் கோயிலில் பக்தர்கள் வசதிக்காகவும், முடி காணிக்கை செலுத்துவதற்காகவும் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9844, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9892, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வைகுந்தம், செல்லியம்மன் கோயிலுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9978, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10027, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10535, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் கோட்டை வரதராஜபெருமாள், கோட்டை ஈஸ்வரன் கோயில்களில் குளம் வெட்டித் தேர்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,50,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10760, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்துத் திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யவும், திருவாசகம், தேவாரம் பாடவும் ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10786, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலை அழகுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11065, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11662, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில் நிலங்களில் பல வருடங்களாகக் குடியிருப்போர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,50,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,07,25,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இம்மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், இறுதியாக என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

---

@ 455 முதல் 490 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கமளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். 15 நிமிடங்கள். கண்டிப்பாக 15 நிமிடங்களுக்கு மேலாக ஒரு நிமிடம்கூடக் கிடையாது.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்களுக்கெல்லாம் பூப்பந்தலாய், எதிரிகளுக்கெல்லாம் தீப்பந்தமாய், அஞ்சாத நெஞ்சுரத்தோடு, அயராது உழைத்து, எய்த அம்புகளையெல்லாம் எதிர்த்து நின்று, முனை மழுங்கிடச் செய்து, சூழ்ச்சி என்னும் சிலந்தி வலைகளை, சூறாவளியாய் நின்று வாகை சூடி, எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பிலும் தமிழக மக்களுடைய நலன் காக்கவே அயராது போராடும் வீர மாமங்கை, வெற்றித் தாரகை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை, மானியக் கோரிக்கை

@ 191 முதல் 523 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகியவற்றின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 360 திருக்கோயில்களில் கொண்டு வந்த உன்னதத் திட்டமான திருக்கோயில் அன்னதானத் திட்டத்தை மேலும் நீங்கள் அதிகப்படுத்தாததன் காரணம் என்ன என்ற கேள்வியை முதலில் நான் கேட்டு, உரையைத் தொடங்குகின்றேன். ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் திருமணங்கள் செய்துகொள்ள முடியாத ஒரு துன்ப நிலையை அறிந்து திருக்கோயில்கள் வாயிலாக 2,550 திருமணங்களை நடத்தி, ஏழையெளிய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் இல்லறம் காண வேண்டுமென்று நலமுடன் வழி வகுத்தவர் எங்கள் அம்மா அவர்கள்.

இதுபோன்று, அம்மா அவர்களுடைய வழியிலே நாங்களும் இலவசத் திருமணங்கள் நடத்திட முன்வர வேண்டும். திருக்கோயில்களிலே பெண்களைச் செயல் அலுவலர்களாக முதன்முதலில் நியமனம் செய்து, பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்தவர் எங்கள் அம்மா அவர்கள். திருக்கோயில்களிலே பணிபுரிகின்ற செயல் அலுவலர்களுக்கு அரசு கொடுக்கின்ற சம்பளத்தைத் திருக்கோயில்களிலிருந்து திரும்பச் செலுத்த வேண்டிய நிலையிருந்தது. இதனால் போதிய நிதி இல்லாமல் இருந்த திருக்கோயில்கள், அரசுக்குக் கடனாளிகளாக இருந்தன. இந்த நிலையையெல்லாம் மாற்றி, அரசே நேரடியாக திருக்கோயில் செயல் அலுவலர்களுக்குச் சம்பளத்தை வழங்குவதற்குச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

திருக்கோயில் பணியாளர்களுக்கு 1–1–2001 முதல் ஓய்வூதியம் வழங்கி அவர்களுடைய வாழ்விலே ஒளி விளக்கு ஏற்றியவர் எங்களுடைய அம்மா அவர்கள். ஓய்வுபெற்ற பணியாளர்கள் யாருக்கும் இந்த அரசு இதுவரையில் ஓய்வூதியம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதேபோல ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதியிலே 6,275 திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் திருப்பணிகள் செய்ய நிதி வழங்கியவர் எங்கள் அம்மா அவர்கள். அதேபோல ஆதி திராவிடர் பகுதியில் உள்ள ஆறாயிரம் திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 15 கோடி ரூபாயும், பிற்பட்டோர் பகுதியிலே நான்காயிரம் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய 25 ஆயிரம் ரூபாய் வீதம்

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2007 மே 4

10 கோடி ரூபாயும் நிதியுதவி வழங்கி ஆணையிட்டவர் எங்கள் அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய துறைகளில் கடந்த ஆண்டுகளிலே, அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற திட்டங்களைத் துறைகளைச் சார்ந்த அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடந்த 2006–2007 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 41 புதிய அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார்கள். இவற்றில் சுமார் 32 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும் என இந்து சமய அறநிலையத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அவர்கள் அளித்திருக்கின்ற செயலாக்க விவரங்கள் அடங்கிய குறிப்புகளைப் படித்துப் பார்த்தேன். 20-க்கும் மேற்பட்ட பணிகளிலே இன்னும் ஒப்பந்தப்புள்ளிகள்கூடக் கோரப்படவில்லை. பத்துக்கும் மேற்பட்ட பணிகளிலே இன்னும் பணி வரையறையேகூடச் செய்யவில்லை. எடுத்துக்கொண்ட மீதப் பணிகளிலே 50 சதவிகிதப் பணிகள்கூட நிறைவு செய்யப்படவில்லை.

பிற்பகல் 12–10

உதாரணத்திற்கு, நீங்கள் கொடுத்திருக்கின்ற செயலாக்க விவரங்கள் குறித்த புத்தகத்தில் 16 ஆம் பக்கத்தில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.10 கோடியில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்று கூறியிருந்தீர்கள். தற்போது ரூ.4.39 கோடிக்குத்தான் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஆணையர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளதாகக் கூறியிருக்கின்றீர்கள். இந்தச் செயல்களையெல்லாம் பார்த்தால், அசுர வேகத்தில் செயல்பட வேண்டிய அறநிலையத் துறை ஆமை வேகத்தில் செயல்படுகின்றதோ என்று எண்ணுகின்ற வகையிலே அமைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ரூ.166 கோடிக்கான திட்ட மதிப்பீட்டில் 2,062 வீடுகள், மனைகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்படுவதாக அறிவித்திருந்தார்கள். அவை எந்தெந்த இடங்களில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே சொல்கின்றபோது சொல்வார்களா என்ற கேள்வியைக் கேட்கின்றேன்.



2007 மே 4] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

வாரியத்திற்குச் சொந்தமான வணிக மனைகளிலே, அனைத்து வசதிகளுடன்கூடிய வணிக வளாகம் கட்டப்படும் என்று கடந்த காலத்தில் கூறினீர்கள். அப்படி ஏதாவது வணிக வளாகம் கட்டப்பட்டிருக்கின்றதா என்ற கேள்விக் கணையை நான் இங்கு விடுக்கின்றேன்.

முற்றிலும் பழுதடைந்த நிலையிலுள்ள வீட்டு வசதி வணிக வளாகங்கள் அகற்றப்பட்டு, புதிய தொழில்நுட்பத்தோடுகூடிய புதிய வணிக வளாகங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்தீர்கள். அப்படி ஏதாவது கட்டப்பட்டிருக்கின்றதா என்ற கேள்வியையும் இங்கே கேட்கின்றேன்.

மதுரை, கோவை ஆகிய நகரங்களிலே துணை நகரம் அமைப்பதாக அறிவித்திருந்தீர்கள். அதற்கு ஏதேனும் முயற்சி எடுத்தீர்களா என்ற கேள்வியையும் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, மதுரை எல்லிஸ் நகர் அலுவலகம் மற்றும் வணிக வளாகம் 70 ஆயிரம் சதுர அடியிலே ரூ.6 கோடி மதிப்பீட்டிலே கட்டப்படும் என்று கூறியிருந்தீர்கள். அதனுடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சபையிலே தெரிவிக்க வேண்டும்.

அதுபோல, குடிசை மாற்று வாரியப் பகுதியிலே, மதுரை மத்தியத் தொகுதியினுடைய தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், அவசர, அவசரமாக சுப்பிரமணியபுரம், திடீர் நகர் குடிசைப் பகுதியிலே 696 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.10.44 கோடி செலவிலே கட்டப்படும் என்ற வகையிலே, 13–8–2006–ல் உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். எட்டு மாத காலம் ஆகியும், இதுவரையிலே பணி துவங்காததனுடைய காரணம் என்ன என்ற நிலை குறித்து அமைச்சர் அவர்களைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. அங்கே குடியிருப்பவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் இடம் தேர்வு செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் அளிக்கப்பட்டுக்

குடியமர்த்தப்பட்டவுடன், பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மதுரையிலே அதை விசாரித்த வகையில், அங்கே தேர்தல் நடைபெறுவதன் காரணமாக அங்கே குடிசையில் இருக்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் வீடுகள் தருகின்றோம் என்ற வகையிலே அங்கே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று அந்தக் கட்டடங்களில் இருப்பவர்களுக்கு மட்டும்தான் வீடுகள் வழங்கப்படும் என்ற வகையிலே இன்று நடைமுறை இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள், எங்கள் எல்லோருக்கும் வீடு வேண்டும் என்று கேட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை ஒன்றும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அல்ல. தனித் தனி வீடுகள். மாநகர் மன்றத்திலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கான வீடுகளை, அவரவர்கள் குடியிருக்கின்ற இடங்களிலேதான் கட்ட முடியும். எனவே, கூடுதலான பேர்களுக்கு வீடுகள் அளிப்பதாக எந்த உறுதிமொழியும் அளிக்கப்படவில்லை. ஆனால், அதிலே விடுபட்டுப் போயிருக்கக்கூடிய, ஒரே குடும்பத்தில் இரண்டு பேர் இருந்தால், வேறு ஒரு திட்டத்தில் அவர்களுக்கெல்லாம் வாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளை சென்னை நகரிலே நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை இடித்துவிட்டு, 7,320 வீடுகள் கட்டப்படும் என்று, அவர்களுடைய முந்தைய அறிக்கையிலே கூறியிருந்தார்கள். அதற்குண்டான கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றனவா? அல்லது வியாசர்பாடி, பி.எஸ். மூர்த்தி நகர் மற்றும் தென் சென்னையிலேயுள்ள குப்பைமேடு பகுதியிலே மிகவும் பழுதடைந்த 606 குடியிருப்புகளை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டப்படும் என்று அறிவித்தீர்கள். அப்படி ஏதாவது கட்டப்பட்டு வருகின்றதா?



கடந்த முறை அறிவித்த பி.எஸ். மூர்த்தி நகர் பற்றித் தற்போது வெளியிட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 15-ல் காணவில்லை. கடந்த முறை அறிவித்த அதே திட்டம்தான் இம்முறையும் தங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே நிறைந்து காணப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், தங்களது பதிலுரையிலே எல்லாவற்றையும் விரிவாகச் சொல்லலாம். உறுப்பினர், நீங்களும் குறுக்கீடு வராமல் பேசுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லாம் கேட்பீர்கள், கடந்த ஐந்து ஆண்டு காலம் வீட்டு வசதித் துறை என்ன செய்தது, என்ன பணி செய்தது என்ற கேள்விகள் எல்லாம் உங்கள் மனதிலே ஓடும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பதவி ஏற்கின்ற நேரத்தில், இந்த வீட்டு வசதித் துறையினுடைய கடன்கள் 918 கோடியே 82 இலட்சம் ரூபாய் என இருந்தன. கடனாக இருந்தது மட்டுமல்ல, அங்கே இருக்கின்ற ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும், அங்கே ஏதாவது bank-லே கடனை வாங்கி, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையிலே நிர்வாகங்கள் அன்றைக்கு அமைந்திருந்தன. அதன் காரணமாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய திட்டங்களைத் தொடங்க வேண்டாம், குளறுபடியாக இருக்கின்ற இந்தத் திட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்தி, விற்கப்படாது இருக்கின்ற இடங்களையெல்லாம் விற்க வேண்டும். அதற்கான ஆய்வுகளைச் செய்ய வேண்டும் என்ற வகையிலே, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். அந்த வகையிலே, ஏறக்குறைய 83 இடங்களை இதுபோன்று அடையாளம் கண்டு, ஓர் உயர்மட்ட கமிட்டி அமைத்து விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுத்த தலைவி யார் என்று சொன்னால், தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, இந்தத் துறை, கடன் பெற்றிருக்கும்போது 17 சதவிகித வட்டி கட்டும் நிலையிலே இருந்தது. உடனடியாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் கடனை எல்லாம் வேறு bank-க்கு

மாற்றி 8 சதவிகிதக் கடனாக மாற்றி, 25 கோடி ரூபாயை மிச்சம் செய்த வரலாறு படைத்த தலைவி யார் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, தான் பதவியேற்கின்றபோது புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த வீட்டு வசதி வாரியத்திலே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எந்த இடத்தை விற்பதாக இருந்தாலும் சரி, எந்த இடத்தை விற்கின்றபோதும், அதனுடைய விலை, Guideline Value அல்லது Market Value, இவற்றில் எது அதிகமோ, அந்த விலைக்குத்தான் விற்க வேண்டுமென்ற வகையிலே நடைமுறைப்படுத்தப்பட்ட வரலாற்றைப் படைத்தவர் யார் என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றாகத் தண்ணீர் குடியுங்கள். (குறுக்கீடுகள்) கடைசியில் சொல்லிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** கடந்த முறை, ஓர் இடத்தை வாங்கினால், அதற்குப் பணமே கட்டப்பட்டாலும், அந்த இடத்திலே 350 சதுர அடி கட்டினால்தான் அவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும் என்ற நிலை இருந்தது. இதையெல்லாம் ஆய்வு செய்து, 350 சதுர அடி கட்டவில்லையென்று சொன்னாலும், பணம் கட்டிவிட்டால், அவர்களுக்கான பத்திரங்களைத் திருப்பித் தர வேண்டுமென்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைகள் வழங்கி, அவர்களுக்கெல்லாம் அவர்களுடைய பத்திரங்களைத் திருப்பிக் கொடுத்தது என்பது முதலமைச்சராக இருந்த எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, இந்தத் திட்டங்கள் நிறைவுபெற்ற பிறகு, உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைப்பதற்கான நிலைகளே முன்பு இல்லாமல், 124 திட்டங்களிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டங்களை உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைத்து அந்த வரலாற்றைப் படைத்த தலைவியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னையிலே மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது வரன்முறைத் திட்டம். அந்த வரன்முறைத் திட்டத்திலே இன்றைக்குப் பல்வேறு



வகைகளிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களை, குறிப்பாகச் சொல்லப் போனால், சென்னைப் பெருநகர்ப் பகுதியிலே கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற மற்றும் அனுமதி மீறிய கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்காக 27–2–1999–ல் ஒரு வரன்முறைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்பு, 2000–ல் ஒரு வரன்முறைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பின்பு, 2001–ல் ஒரு வரன்முறைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதுபோல 2003–ல் ஒரு வரன்முறைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இந்த வரன்முறைச் சட்டங்களில் 1999–ல் நடைமுறைப்படுத்தப்பட்ட வரன்முறைச் சட்டம்தான் செல்லும் என்ற வகையிலே இன்றைக்கு நீதிமன்றம் உத்தரவுகளை வழங்கி இருக்கின்றது. அதன் காரணமாக, அதிலே அரசாங்கத்தை நம்பி, அரசினுடைய செய்தியை நம்பி, இந்தத் தீர்வைக் காண்பதற்காகப் பணம் கட்டியவர்கள் இன்னும் 27,133 பேர்கள் தங்களுடைய நிலை என்ன என்றே தெரியாமல் தவிக்கிற நிலையை இன்றைக்குப் பெற்றிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு வந்து ஐந்து மாத காலமாகிறது. இந்தப் பகுதியிலே பணம் கொடுத்து, அரசை நம்பி வீடுகள் வாங்கிக் குடியிருக்கின்றவர்கள், தங்களுடைய நிலை என்ன என்றே தெரியாமல் தவிக்கின்ற ஒரு நிலை, சென்னை மாநகரத்திலே அபாயகரமான ஒரு சூழ்நிலை இன்றைக்கு இருக்கின்றது. ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலே எங்களுடைய தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் இதுபோல் வந்திருந்தால், இதற்கான அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து, அரசு கொண்டு வந்த திட்டத்தைக் காப்பதற்கான நடைமுறைகளைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, அந்த மக்களை வரன்முறைத் திட்டத்திலிருந்து காப்பதற்காக, இன்றைக்கு நீதிமன்றத்திலே அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலே இருந்து காப்பதற்காக இந்த அரசு உடனடியாக ஓர் அவசரச் சட்டம் கொண்டு வந்தாவது—அந்த மக்கள் அரசை நம்பிப் பணம் கட்டி இருக்கின்றார்கள்; அரசை நம்பிக் குடியிருக்கின்றார்கள்—அவர்களைக் காப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தச் சட்டமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–20

எங்களுடைய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுத் தலைமைச் செயலகம் கட்ட வேண்டும் என்ற வகையிலே ஒரு நடவடிக்கை எடுத்தார்கள். சென்னைப் பெருநகரக் குழுமம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 3 தடவை குடித்துவிட்டீர்களே! (குறுக்கீடு) இப்போது என்ன சொன்னேன்? 3 தடவை குடித்துவிட்டீர்களே என்று சொன்னேன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** சென்னைப் பெருநகரக் குழுமம், பல்வேறு வகைகளிலே இன்றைக்கு இரண்டாம் முழுமைத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். அதேபோல, சென்னை நகரைச் சுற்றி இருக்கின்ற பகுதிகள் அத்தனைக்கும் உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்கின்ற பணிகளைச் செய்திருக்கின்றார்கள். அந்த வகையிலே, அரசினுடைய தலைமைச் செயலகம் கட்டுவதற்காக சென்னைப் பெருநகரக் குழுமத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது, அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன. ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறோம் என்று சொன்னால், ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டு உட்கார்ந்து இருக்கின்றோம். சட்டமன்ற உறுப்பினர் இருக்கின்றாரா, இல்லையா என்பதே சட்டமன்றத்திலே தெரியவில்லை.

அதுபோல, இன்றைக்கு அரசு அதிகாரிகள் தன்னுடைய அலுவலகத்திலே உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அரசு அலுவலர்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறதா என்று சொன்னால், இல்லை. அமைச்சர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னால், அமைச்சர்களுடைய இலாகாவினுடைய அதிகாரிகளுடைய இடம் எங்கே இருக்கிறது என்று தெரியாது. தலைமைச் செயலகத்திலே தன்னுடைய வாகனங்களை நிறுத்த வேண்டும் என்று சொன்னாலும், அதற்கும் இடம் இல்லை. அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றுவதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தலைமைச் செயலகம்—கேரளாவில், கர்நாடகாவில், ஆந்திராவில், இதுபோன்ற மாநிலங்களில் எல்லாம் சொந்த இடத்தில் தலைமைச் செயலகம் அமைந்துள்ளது. ஆனால், நம்முடைய தலைமைச் செயலகம் இன்றைக்குப் பாதுகாப்புத் துறையிலே குத்தகையிலே இருக்கின்ற தலைமைச் செயலகமாக இருக்கின்றது. இந்த நிலையை மாற்றுவதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான நிலையைக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னால், நல்ல திட்டங்களைக் கொண்டு வருகின்றபோது அதைத் தடுக்க வேண்டும் என்று நினைக்கின்றவர்கள், மத்தியில் இருக்கின்ற அவர்கள் மாசு கட்டுப்பாட்டுத் துறையின்மூலம் அதைத் தடுப்பதற்கான



ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, ரூ.50 கோடி, ஆயிரம் பேர் புழங்கினார்கள் என்று சொன்னால், மத்திய அரசினுடைய மாசு கட்டுப்பாட்டுத் துறையில்தான் அனுமதி பெற வேண்டும் என்ற வகையிலே அதைத் தடுத்தவர்கள் யார் என்று சொன்னால், இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடு) நான் சொல்கிறேன், சரியாக 15 நிமிடங்கள். ஒரு நிமிடம் interruption, 16 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். இதிலே துல்லியமாக இருக்கிறேன். தொகுதியைப் பற்றி இன்னொரு நாள் பேசிக்கொள்ளலாம். இன்னும் 11 நாட்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வீட்டு வசதித் துறை, இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குத் திருக்கோயில்களைப் பொறுத்தமட்டில், ஆகம விதிகளின்படி தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை திருக்கோயில்களிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று உள்ளது. ஆனால், இப்போது தமிழகத்திலே ஏறத்தாழ 75 சதவிகிதக் கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெறாத ஒரு நிலை இருக்கிறது. இதற்குக் காரணம், நிதி வசதிகள் போதவில்லை என்பது ஒரு புறம் இருந்தாலும், நிதி வசதிகள் அதிகம் உள்ள திருக்கோயில்களில் இருந்து அந்த நிதி வசதியைப் பெற்று, நிதி வசதி இல்லாத கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்து வருகிறீர்கள். அந்த அறங்காவலர்களை நியமனம் செய்யும்போது, அவர்கள் திருக்கோயிலுக்கு உதவியாக இருப்பார்களா என்று எண்ணிப் பார்த்து, நல்லவர்களை நீங்கள் அறங்காவலர் பதவிக்கு நியமனம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–25*

இன்றைக்கு அறங்காவலர்களினுடைய பதவிக் காலத்தை ஓராண்டாகக் குறைத்து இருக்கிறீர்கள். ஒரு குழு அமைத்து, அந்தக் கோயில்களினுடைய நிலையை உயர்த்துவதற்கு ஓராண்டு போதாது. 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகள் வரையில் அவர்களது பதவிக் காலத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த கண்டதேவி சொர்ணமுக்தீஸ்வரர் கோயில் மிகப் பழைமை வாய்ந்த கோயில். அந்தக் கோயில் இன்றைக்குப் பழுதடைந்து இருக்கிறது. அந்தக் கோயிலைத் திருப்பணி செய்து தரும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கோயிலுக்கு இருக்கக்கூடிய தேர் பழுதடைந்து இருக்கிறது. அந்தத் தேரைப் புதிய தேராக அமைத்துத் தர நமது அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல, பாண்டிய நாட்டு 14 ஸ்தலங்களில் 8–வது ஸ்தலமாக இருக்கக்கூடிய திருவாடனையிலே உள்ள ஸ்நேகவள்ளி அம்மன் ஆதிரத்தினேஸ்வரர் திருத்தேர் பழுதடைந்து இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய 2 தேர்களிலும், அவற்றினுடைய சக்கரங்கள் சரியாக இல்லாமல் இருக்கின்றன. புதிய சக்கரங்கள் பொருத்தித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இராமேஸ்வரம் கோயிலைப் பொறுத்தமட்டில், வட நாட்டு பக்தர்கள் வந்து அங்கே ஆண்டவனை சிறப்பாகத் தரிசித்துச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய திருக்கோயிலிலே பக்தர்களுக்குப் போதுமான வசதிகள் இல்லை. குறிப்பாக, சுகாதார வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அதை நீங்கள் சரி செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சில நாட்களுக்கு முன்பாகக்கூட அந்தக் கோயிலிலேயிருந்த உண்டியல் உடைக்கப்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் போதிய பாதுகாப்பை நமது அரசு செய்து தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய பல கோயில்களுக்குப் போதுமான நிதி வசதி இல்லையென்று நாம் சொல்கிறோம். ஆனால், நிதியைத் தேடுகின்ற வழிகள் நிறைய இருக்கின்றன. கோயில் இடங்களை



நாம் மீட்க வேண்டும். திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்கள் இன்றைக்குப் பல இடங்களிலே கேட்பாரற்று இருக்கின்றன. அந்த இடங்களையெல்லாம் நீங்கள் மீட்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து குத்தகைகளைச் சரியான முறையிலே வசூல் செய்ய வேண்டும். கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் போன்றவற்றின் வாடகையையும் நீங்கள் சரியாக வசூல் செய்ய வேண்டும். குத்தகை வாடகையைப் பொறுத்தமட்டில், பல ஆண்டுகளுக்கு முன்பாக நிர்ணயித்த தொகையே இப்பொழுதும் இருக்கிறது. அந்தக் குத்தகைத் தொகையை நிச்சயமாக அதிகப்படுத்தி வசூல் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், நிலுவையிலே இருக்கக்கூடிய தொகைகளைப் பற்றி நீங்கள் கொள்கைக் குறிப்பிலே சில விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறீர்கள். நிலுவையிலே இருக்கக்கூடிய அந்தத் தொகைகளை உடனடியாக வசூல் செய்வதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய கோயில்களுக்கு நிதியை நீங்கள் அதிகமாக ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நிதிப் பற்றாக்குறை ஒரு புறம் இருந்தாலும், அந்தக் கோயில்களுக்கு வரக்கூடிய வருமானமும் குறைந்திருக்கிறது. அந்த வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலம் ஏறத்தாழ 4 இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதிலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்று நீங்கள் சொல்லவில்லை. அந்த வருமானத்தைச் சரியான முறையிலே பெற்று, திருக்கோயில்களினுடைய பராமரிப்புச் செலவுகளைச் செய்வதற்கு நிறைய வழிவகைகள் இருக்கின்றன. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல திருக்கோயில்களிலே இருக்கக்கூடிய அதனுடைய அர்ச்சகர்களுக்கு கொடுக்கக்கூடிய சம்பளங்கள் எல்லாம் போதாத நிலையிலே இருக்கின்றன. அதையும் நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு E.O. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செயல் அலுவலர், Executive Officer.

**திரு. கரி. இராமசாமி:** நிர்வாக அதிகாரிகள் பல கோயில்களில் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நியமனம் செய்வதற்கு நீங்கள் உடனடியாக ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

நிதிநிலை எவ்வாறு குறைகிறது என்பதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை மண்ணடியில் ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ஒருவருக்கு நிர்வாகம் குத்தகைக்கு விட்டிருக்கிறது. அது மாதம் ஒன்றுக்கு 65 ரூபாய்க்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அவர் இன்னும் பலருக்கு அந்த இடத்தை வாடகைக்கு விட்டிருக்கிறார். அவருக்கும் அவர் வாடகைக்கு விட்டவர்களுக்கும் பிரச்சினை நடந்து நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இவர் யார், யாருக்கு குத்தகைக்கு விட்டாரோ, அவர்கள் 20 ஆயிரம் ரூபாய் ஒரு மாதத்திற்கு வாடகை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கோயில் நிர்வாகம் வெறும் 65 ரூபாய்க்கு வாடகைக்கு விட்டதை, 20 ஆயிரம் ரூபாய் வரை மேல் வாடகையாக வசூல் செய்யலாம் என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. இதுபோன்ற நிலையை நமது துறை ஆராய்ந்து, கோயில் நிர்வாகத்தைச் சரி செய்தால், கோயில் பராமரிப்புக்குப் போதுமான நிதி கிடைப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கோயில் சொத்துக்கள் கொடியவர்களிடம் சென்றிருக்கின்றன. அவற்றை மீட்பதற்கு நீங்கள் உறுதியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டு வசதித் துறை. இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், கடந்த ஓராண்டு காலத்தில் சென்னை நகரம் வெகுவாக வளர்ந்து வருகிறது. ஆனால், கடந்த 4 மாதங்களாக அதில் ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகருக்குப் பலர் வெளியூர்களிலிருந்து வேலை தேடி வருகிறார்கள். நகரில் குடியிருப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. பற்றாக்குறை உள்ளது. வீட்டு வாடகை பல மடங்காக உயர்ந்திருக்கிறது. கடந்த 4 மாதங்களாக, கிட்டத்தட்ட 5 ஆயிரம் அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் கட்டுமான





வேலைகள் முடிந்து, அடிப்படை வசதிகளான மின்சாரம் மற்றும் தண்ணீர் இல்லாமல் காலியாக உள்ளன. காரணம், 1999–ல் சில வணிக நிறுவனங்கள், தி.நகர்போன்ற முக்கியப் பகுதிகளில் பல அடுக்குகள் கொண்ட கட்டடங்களைக் கட்டின. வாகனங்களை நிறுத்தப் போதுமான இட வசதி இல்லை என்று சில பொது நல அமைப்புகள், மேற்படி கட்டடங்களை இடிக்க வேண்டுமென்று கோரி வழக்குத் தொடுத்தன. நீதிமன்றமும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கரி. இராமசாமி:** முடித்துவிடுகிறேன். கூடுதலாகக் கட்டிய மாடிகளை இடிக்குமாறு உத்தரவிட்டது. இவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு குழுவையும் நியமித்தது. அந்தக் குழு மேற்படி கட்டடங்களை இடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது. இதுபோன்று கூடுதலாக மாடிகளைக் கட்டிவிட்டு, பிறகு இடிப்பதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, நீதிமன்றம் சில ஆலோசனைகளை வழங்கி இருக்கின்றது. அதாவது, கட்டடம் கட்டி முடித்த பிறகு, அது விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்று சரிபார்த்த பிறகே மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். இது ஒரு நல்ல ஆலோசனை. ஆனால், இதை நடைமுறைப்படுத்துவதற்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை, மின்சாரம் மற்றும் குடிநீர் வாரியங்களுக்கான சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும். தற்போது சென்னை நகருக்கான இரண்டாவது Master Plan–ஐ உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். மேற்படி சட்டத் திருத்தத்தை அதில் கொண்டு வரலாம். அதுவரை ஏற்கெனவே உள்ள சட்டப்படி இணைப்புகள் வழங்கலாம். நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஏதும் இல்லை. ஆனால், அரசாங்க அதிகாரிகள் சிலர் தடை உத்தரவு இருப்பதுபோன்று நினைத்துக்கொண்டு நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சென்னை நகரம் வளர்ந்து வரக்கூடிய நகரம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. அன்பழகன். (குறுக்கீடு) இல்லை, இதிலே இன்றைக்குச் சலுகையே காட்ட முடியாது. Please, தவறாக நினைக்காதீர்கள். இல்லை, வேண்டாம். பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

பிற்பகல் 12–35

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழினத் தலைவர், வாழும் வள்ளுவர்,

அரசியல் தொல்காப்பியர், செம்மொழிச் செல்வர், பொன் விழா நாயகர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொன் விழாக் கொண்டாடும் இந்த நல்ல வேளையிலே, எனக்கும் இம்மன்றத்தில் பணியாற்ற வாய்ப்புத் தந்த தமிழர்களின் உயிர் எழுத்துக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

கடந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளிலும் சலுகைகளை வாரி வழங்கி, வரியில்லா நிதிநிலை அறிக்கை தந்த இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்போன்றவர்களுக்கு முகவரி தந்த, தமிழகத்தின் வருங்கால வழிகாட்டி, எங்கள் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை ஒரு தனயனாய், தனயன்போல் வழிகாட்டி வரும் தலைவரின் வைரக் கல், வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், பழனி நகரக் காவல் நிலையத்தை முதல் நிலைக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்தித் தந்ததற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பழனி வந்து, பழனியிலுள்ள பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய அடிக்கல் நாட்டி, அதற்கு 6.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழனி ஒன்றியம், தொப்பம்பட்டி ஒன்றியம் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலுள்ள பழனி தொகுதிக்குட்பட்ட 200 குக்கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, அதற்கு ரூபாய் 14 கோடி ஒதுக்கீடு செய்து தந்த தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பழனித் தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழனி மருத்துவமனை விரிவாக்கத்திற்காக ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்தும், பாப்பம்பட்டி சுகாதார நிலையத்திற்கு 30 படுக்கைகள்





வசதிகொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தந்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே பஞ்சாமிர்தம், விபூதி, சூடம் ஆகியவற்றிற்கு வரி விலக்குத் தந்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் முந்தைய காலத்தில் ஆய்வு செய்து, ஆய்விலே இருக்கின்ற பச்சையாறு அணைத் திட்டத்தைத் தொடங்கி வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே பழனியிலே இயங்கி வந்த சித்த மருத்துவக் கல்லூரி, கடந்த ஆட்சியிலே மாற்றம் செய்யப்பட்டு, அதைச் சென்னைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். மீண்டும் அந்த சித்த மருத்துவக் கல்லூரியைப் பழனிக்குக் கொண்டு வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பழனி நகரக் குடிநீர்ப் பிரச்சினையைச் சரி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பழனிக்கு ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தர வேண்டுமென்று சட்டத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவும், கொக்கரக்கல்வலசு இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவும் அன்போடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

பாலாறு–பொறந்தலாறு அணையிலிருந்து வரும் பிரதானக் கால்வாயைச் சரி செய்து, cement slab போட்டு, விவசாயிகள் பயனடையும்படிச் செய்து தரும்படி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட பழனி–கொடைக்கானல் rope car திட்டத்தைச் செயல் வடிவமாக்க அன்போடு வேண்டுகிறேன்.

[திரு. எம். அன்பழகன்] [2007 மே 4

1967–லே மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குவோம் என்று ஒரு திட்டத்தை அறிவித்து, வெற்றிபெற்று இரண்டு மாவட்டங்களிலே அத்திட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, அவர்களுடைய தம்பி, அறிஞர் அண்ணா அவர்களின் இதயத்தைப் பெற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் 40 ஆண்டு காலம் அதை மனதிலே வைத்திருந்து, இப்பொழுது ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குகிறார்கள் என்பதை இந்த நல்ல வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தின்மூலம், வசதியற்ற, பொருளாதாரத்தில் கீழ்த்தட்டிலுள்ள மக்கள் பயனடைந்து பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு நமது தலைவர் அவர்கள் அண்ணாவின் கொள்கையான 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று சொன்னதன் பயனாகத்தான், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, சத்துணவு சாப்பிடும் ஏழைக் குழந்தைகளுக்கு வாரம் இரு முட்டை, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம், விவசாயிகளின் கடன்கள் சுமார் 7,000 கோடி ரூபாய் இரத்து, வசதியற்றவர்களுக்கு வரப்பிரசாதமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசம், எரிவாயு அடுப்பும், இணைப்பும் இலவசம், ஏழைக் குழந்தைகளுக்குப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசம், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நல வாரியம், விவசாயத் தொழிலாளர்களுக்கு நல வாரியம், ஏழைகளின் நோய் கண்டறிய வருமுன் காப்போம் திட்டம், சிறுபான்மையினருக்கு இயக்குநரகம், இவற்றையெல்லாம் பெற்ற ஏழை மக்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களைப் பார்த்தால் கும்பிடத் தோன்றுகிறது என்று கும்பிடுகிறார்கள்.

பிற்பகல் 12–40

இந்தத் திட்டங்களையெல்லாம் தந்த முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். தந்தை எட்டு அடி பாய்ந்தால், மகன் 16 அடி பாய்வார் என்பதுபோல, தலைவரின் வழி வந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அண்ணன் அவர்கள், வெட்டியான்களையெல்லாம் உதவியாளர்கள் என்று பதவி உயர்த்தி, தரம் உயர்த்திக் கொடுத்து, அவர்களுக்குச் சம்பளத்தையும் உயர்த்திக் கொடுத்து, அந்த ஏழைகளின் சிரிப்பைக் காண்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2007 மே 4] [திரு. எம். அன்பழகன்]

தந்தை பெரியாரின் நெஞ்சிலே இருந்த முள்ளை அகற்றிட வேண்டும் என்பதற்காக, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாமென்று கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்கள். அறிவித்தது மட்டுமல்ல, அந்தத் திட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, ஆகமத்தைப் படிப்பதற்காகப் பயிற்சி நிலையங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே. சைவத்திற்கு, பழனி, மதுரை, திருச்செந்தூர், திருவண்ணாமலையிலும், வைணவத்திற்கு, திருச்சி, சென்னை ஆகிய இடங்களிலும் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த ஆட்சியிலே அறநிலையத் துறையின்கீழ் உள்ள கோயில்கள் சோழி உருட்டி, ஜோசியம் பார்த்த மலையாளத்து மந்திரவாதிகளின் கையில் இருந்தன. ஆனால், தற்பொழுது கோயில்கள் அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுயமாக அதிகாரிகளால் முறைப்படி நடத்தப்படுகின்றன. கடந்த 11 மாதங்களிலே 733 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள், குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. சிதிலமடைந்த கோயில்கள் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பண்பாட்டுக் கலை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராமக் கோயில்களில் உள்ள பூசாரிகளுக்குத் தனி நல வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கோயில்களைச் சீரமைக்க, திருக்கோயில் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 2,000 கோயில்களுக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நாள்தோறும் ஒரு கால பூஜைகூடச் செய்ய இயலாத திருக்கோயில்களின் நலன் காக்கும்பொருட்டு, இவ்வரசு ரூ.25,000 வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியின்மூலம் திருக்கோயில்களில் ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது.

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், 108 போற்றிகள் அடங்கிய நூல்களும், சிவபெருமானுக்கு 1,008 போற்றிகள் அடங்கிய நூல்களும் மறுபதிப்பு செய்யப்பட்டு, கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்தக் கோயில்களிலே முக்கியப் பிரமுகர்கள் தனிமை காட்டப்படாத அளவிற்கு பரிவட்டம் கட்டி மரியாதை செய்யும் வழக்கத்தை இரத்துச் செய்து

இருக்கிறது இந்த அரசு. பழனி கோயிலைத் திருப்பதிக்கு ஒப்பாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இக்கோயிலில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது பணியாற்றுபவர்களுக்குப பதவி உ  வு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்று, பழனி கோயில் நிர்வாகத்தின்கீழ் உள்ள கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் அதிகமாக உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பி, மாணவர்கள் பயனடைய உதவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பழனி தொழில்நுட்பக் கல்லூரிக்கு நிரந்தர முதல்வரை நியமிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கோயில் நிர்வாகத்தின்கீழ் பொறியியல் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி, ஆசிரியர் பட்டயப் படிப்புக் கல்லூரி, இசை நாட்டியக் கல்லூரிபோன்ற கல்லூரிகளைத் தொடங்கி, திருப்பதியிலே உள்ள வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தைப்போல் பழனியிலும் பழனியாண்டவர் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், பழனியில் தேவஸ்தானம் மட்டுமே அபிசேகப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் ஆறாவது ஆண்டில் நடத்திய கும்பாபிஷேகச் செலவுகளுக்குப் பணம் தர வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மீண்டும் பணம் கேட்டு ஏலம்விடும் தவறான முறை நடைபெறுகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். பஞ்சாமிர்தத்தைப் பற்றி ஒன்றும் பேசாமல் இருக்கின்றீர்களே!

**திரு. எம். அன்பழகன்:** கபாலீஸ்வரர் கோயிலிலே கலைஞர் ஆட்சியில் மாட்டப்பட்டிருந்த படங்கள் அனைத்தும் கடந்த ஆட்சியில் அப்புறப்படுத்தப்பட்டு, ஓதுக்குப்புறமாக வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் மாட்ட வேண்டும். அங்கே ஆகமப் பணி ஓதுவார்கள் வேத மந்திரம் ஓதுவதுபோல், திருமறையும் ஓதுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு. . .



பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

**திரு. எம். அன்பழகன்:** பொன் விழாக் கொண்டாடும் தலைவர் அவர்களுக்குப் பரிசாக வீட்டு வசதித் துறையின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகம் கட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, என் சார்பிலும், எனது பழனி தொகுதி சார்பிலும், எங்கள் மாவட்டத்தின் சார்பிலும் செம்மொழிச் செல்வர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன் விழா வாழ்த்துக்களும், அடுத்த மாதம் அடுத்த வயதிற்குச் செல்லும் முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துக்களும் தெரிவித்து, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், 10 நிமிடங்கள்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வாழ்க்கையில் வளம் பெற, ஒரு சாதனை நாயகரான எங்களுடைய மருத்துவர் அய்யா,

*"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்*
*நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்*
*இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்*
*பட்டாங்கில் உள்ளபடி"*

என்ற இடத்திலும் நாங்கள் இருந்தபோதும், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட அனைவரையும் வாழ வைக்க வந்த எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களை வணங்கி, அதோடு, இந்தப் பேரவையில் எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவரையும், துணைத் தலைவரையும், கொறடா அவர்களையும் வணங்கி, இந்து அறநிலையத் துறை, வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இந்து அறநிலையத் துறையில் இறைவனே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கக்கூடிய காலக்கட்டமாக இருக்கிறது. ஏன் என்று சொன்னால், இறைவனுடைய சொத்துக்கள் எல்லாம் பறி போய்க் கொண்டிருக்கின்றன. எந்த அரசு இருந்தாலும், இந்த இறைவன் இந்த அரசை எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கும்பொழுது ஈசனே,

நம்முடைய சொத்துக்களை எல்லாம் காப்பாற்ற முடியுமா அல்லது காவல் துறை காப்பாற்ற முடியுமா அல்லது பத்திரிகையாளர்கள் நம்மைக் காப்பாற்றுவார்களா என்று இறைவனே இன்றைக்குக் காத்துக்கொண்டு வாசற்படியில் நின்று, இன்றைய அறநிலையத் துறையில் என்ன அறிவிக்கப் போகிறார்கள், நம்முடைய சொத்துக்கள் எல்லாம் நம்மிடம் திரும்ப வருமா அல்லது மீண்டும் களவு போய்க் கொண்டே இருக்குமா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

அந்த நிலையில், இந்தத் தமிழகத்தில் இருக்கக்கூடிய எத்தனையோ பல ஆயிரக்கணக்கான ஆண்டவன் சொத்துக்களை விற்கவும், அதைப் பட்டா மாற்றவும் இன்று அனைத்து அதிகாரிகளும் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு முன்வந்து, இந்த அறநிலையத் துறையும் எப்படியாக இருந்தாலும், அந்தச் சொத்துக்களை மீண்டும் அந்த இறைவனிடமே ஒப்படைக்க வேண்டும். வாங்குவோராக இருந்தாலும் சரி, விற்போராக இருந்தாலும் சரி, அதற்குத் துணை போகும் அதிகாரிகளாக இருந்தாலும், அவர்களுக்கு சரியான தண்டனை கொடுக்க வேண்டும்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், முன்புகூட இந்தச் சபையில் ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு அவர்கள் சொன்னதுபோல, சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டத்தில் சென்றாயப்பெருமாள் கோயில் சொத்து 100 ஏக்கருக்கு மேல் இருக்கிறது; அது 10 கைகள் மாறி, பட்டா மாறியிருக்கிறது; அதில் இந்த சாமி பேரில் இருந்ததை மாற்றி இருக்கிறார்கள்; அதற்கு இந்தச் சபையில் உறுதி கொடுக்கப்பட்டது. இந்த வருடமே அதைப் பட்டா மாற்றி, அந்த சாமி பெயருக்கு வரும் என்று சொன்னதற்கு, உத்தரவு போட்டும், இன்னும் அதை அந்த அதிகாரிகள் செய்யவில்லை. அவர்களை நீங்கள் கண்டித்து, மீண்டும் அந்தச் சொத்து அந்த ஆண்டவனுக்கே செல்ல வேண்டும் என்று இந்து அறநிலையத் துறை சார்பாக நான் கேட்டுக்கொண்டு, அதற்கு மேலாக, இந்த இந்தியத் திருநாட்டில் அனைத்து மதத்திற்கும், அந்தந்த மதம் சார்பாக அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு— மெக்காவிற்குச் செல்வதற்குக்கூட அரசு மூலம் சலுகைகளை வழங்குகிறோம். ஆனால் அதேபோல, இந்து மதத்திற்கும் அந்தச் சலுகைகளை வழங்க வேண்டும். ஏன் இதைக் கேட்கிறேன் என்று சொன்னால், இந்து மதத்தில் சடங்கு நிறைவேற்றும்போதுகூட இங்கே, 'சொர்க்கம் சேரு, கைலாசம் சேரு' என்று கடைசி நேரத்தில் அதைச் சொல்லி நிறைவேற்றுகிறார்கள். ஆனால் அந்தப் பெரியவர்கள் எல்லாம், 'சொர்க்கம் சேரு, கைலாசம் சேரு' என்று சொல்கிறார்களே,



*அவற்றை எப்படியாவது பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கும் அந்தச் சலுகைகளை வழங்கி, கைலாசம் செல்வதற்கும். . .*

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *இதற்கு எப்படி ஒரு அரசாங்கம் உதவி பண்ண முடியும்? சொர்க்கம் சேர், வைகுந்தம் சேர் என்பதற்கு எல்லாம் அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது.*

**திரு. பெ. கண்ணன்:** *கைலாசம் செல்ல நீங்கள் உதவி செய்யலாம், துணைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *எப்படி என்று கேட்கிறேன். (சிரிப்பு)*

**திரு. பெ. கண்ணன்:** *காசிக்குச் செல்லவும் உதவி செய்யலாம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காசிக்குச் செல்ல உதவி செய்ய முடியும். இந்துப் பெரியவர்கள் அனைவருக்கும் அந்த உதவியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீண்ட நாள் வாழ வேண்டும் என்று கருதுகின்ற காரணத்தால், கைலாசத்திற்குப் போவதற்கு இப்பொழுது அரசாங்க உதவி தேவையில்லை என்று கருதுகிறார். (சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்.*

**திரு. பெ. கண்ணன்:** *காசிக்குச் செல்வதற்குப் பெரியவர்களுக்கு உதவிட வேண்டும் இந்த அரசு என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

*அதேபோல, வீட்டு வசதி வாரியத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய கடன்—ஏழைகள் அனைவரும் வீடு கட்டி இருக்கிறார்களே, நாங்களும் வீடு கட்ட வேண்டும், இதற்கு யாராவது உதவமாட்டார்களா என்று எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுதுதான், ஆடு நனையும்போது ஓநாய் சப்போர்ட்டுக்கு வந்த கணக்காக* officer*–கள் எல்லாம், நான் உங்களுக்குக் கடன் உதவி செய்கிறேன் என்று*

அனைவரும் அழைத்தார்கள். பாவம். அந்த வீட்டை எதிர்பார்த்தவர்கள், அந்த Officer சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அந்த அதிகாரி சொன்னபடி அந்தக் கடனுக்குப் போய் அடிபணிந்தார்கள். அடிபணிந்ததில் இன்றைக்கு வட்டி மேல் வட்டி, அதில் 2 இலட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறேன் என்று சொல்லியிருந்தால் ரூ. 75 ஆயிரத்தைக் கொடுத்துவிட்டு மீதிப் பணத்தை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆனால், இன்றைக்கு 5 இலட்சம் ரூபாய் உங்களுக்கு ஆகிவிட்டது என்று சொல்லுகிறார்கள். ஜப்தி செய்கிறேன் என்று சொல்லுகிறார்கள். சேலத்தில் கணக்கு எடுக்கும்போது, அதிகாரிகளை அழைத்து, அந்தக் கடன் வாங்கியவர்களையும் அழைத்து Police விசாரித்தபோது, அந்த வீட்டுக்காரர்களுக்கு முழுவதும் loan ஆகக் கொடுக்கவில்லை என்று தெள்ளத்தெளிவாகத் தெரிய வந்தது. அதை நீங்கள் அழைத்துக் கேட்டாலும் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். அந்தக் கடனைப் பெற புரோக்கராக இருந்தவர்களுக்கும், அந்த அதிகாரிகளுக்கும் சரியான தண்டனை கொடுத்து, அவர்களைக் குண்டர் சட்டத்தில் தள்ள வேண்டும். அப்பொழுதுதான் உண்மையாக. . .

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சொல்கிற மாதிரி எழுதிக் கொடுப்பாரேயானால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பெ. கண்ணன்:** அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, இதைப்போல் நம் அரசு செய்துவிட்டால், எந்த அதிகாரிகளும் சரியாகச் செயல்படுவார்கள் என்று சொல்லி, அதேபோல, அவர்களுக்கு இந்தக் கடனை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும். ஏன் இதைக் கேட்கிறேன் என்று சொன்னால், வாங்கியவர்கள் அனைவரும் பரம ஏழைகள். அந்தப் பரம ஏழைகள் வாங்கிக் கட்டிவிட்டு, இன்றைக்கு வீட்டில் குடியிருக்க முடியவில்லை. அவர்கள் வாழ வழியின்றி, அவர்களுடைய மனைவி வீட்டில் விடமாட்டேன் என்கிறார்கள். ஏன் என்று சொன்னால், இன்றைக்கு மஞ்சள் நோட்டீஸ் கொடுத்து விட்டார்கள். ஜப்தி செய்யப் போகிறார்கள். இன்னும் எதற்காக இந்த வீட்டிற்கு வருகிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஜப்தி செய்வதற்காக வீட்டைவிட்டுத் துரத்தும்போது, அந்தக் கணவர்கள் அனைவரும் இன்றைக்குச் சென்னையை நோக்கி வந்து, யாராவது எங்களைப் பற்றிப் பேசமாட்டீர்களா, எப்படியாவது இதைப் பேச வேண்டும் என்று கெஞ்சுகிறார்கள். அதை இந்த அரசு, கலைஞருடைய அரசு, இன்றைக்குப்



பொன் விழா எடுக்கக்கூடிய அரசு, இவர்களும் நிம்மதியாக இருப்பதற்கு, எப்படி விவசாயக் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்தார்களோ, எப்படி Gas அடுப்பு வாங்கியவர்களுக்கெல்லாம் தள்ளுபடி செய்தார்களோ, அதேபோல இவர்களுக்கும் தள்ளுபடி செய்தால், மீண்டும் இந்தப் புண்ணியங்கள் சேரும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, எங்களுடைய தாரமங்கலத்தில் கைலாசநாதர் கோயில் இருக்கிறது. அந்தக் கைலாசநாதர் கோயில் மிகப் பெரிய சிற்பச் சிறப்பு வாய்ந்தது என்பது அனைவருக்கும் தெரியும். தமிழ்நாட்டினுடைய சிற்பக் கலைகளில், எங்கேயும் இல்லாத ஒரு சிற்பக் கலை இருக்கின்றது என்று சொன்னால், அது தாரமங்கலம்தான். அந்தச் சிற்பிகளைக் கேட்டால், அவர்களுக்கு அச்சவாரம் கொடுக்கும்போதுகூட அவர்கள் ஒரு வார்த்தை சொல்வார்கள். 'தாரமங்கலத்தையும், தாடிக்கொம்பையும் தள்ளி எங்களுக்கு அச்சவாரங்கள் கொடுங்கள். அதைப்போல, கட்டு என்று சொன்னால், எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் தந்தாலும், நாங்கள் வேலை செய்ய முடியாது' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட கோயிலை இந்த அரசு சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறது. இதற்கும் மேலாக இன்னும் சிறப்புச் சேர்த்துக் கொடுக்க வேண்டும். அந்தக் கோயிலினுடைய கோபுரத்தில் இடி இறங்கிவிட்டது. ஏற்கெனவே நான் இது குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். இந்தக் கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

குடிநீர்ப் பிரச்சினை. கர்நாடகாவாக இருக்கட்டும், கேரளாவாக இருக்கட்டும், ஆந்திராவாக இருக்கட்டும். அவர்களோடு நமக்குத் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. அதிலும் எங்கள் சேலம் மாவட்டத்தில் மேட்டூர் எங்களுக்கு அருகில் இருக்கிறது; இருந்தும், எங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. பெரியவர்கள், 'தவறு செய்தால், கடைசி நேரத்தில் தண்ணீர், தண்ணீர் என்று அலைவீர்கள்' என்று சொல்வார்கள். ஆனால், தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் அனைவருமா தவறு செய்துவிட்டார்கள்? நாங்கள் தண்ணீர், தண்ணீர் என்று அலைந்துகொண்டிருக்கிறோம். மழைக் காலங்களில் வரக்கூடிய உபரி நீர் முழுவதையும், தடுப்பணை கட்டித் தடுத்து இந்த அரசு பயன்படுத்த வேண்டும்.

அதேபோல காவிரி உபரி நீரை எடுத்து, என்னுடைய தொகுதியின் வழியாக இருக்கக்கூடிய அந்த நிலங்களில் பாசனம் செய்தால், அணை

சபாநாயகர் தொகுதிக்கும் சேர்த்து, 5 தொகுதிகளுக்குப் பயனளிக்கின்ற வகையிலே பாசனத்திற்குக் கொண்டு வரலாம் என்று சொல்லி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எப்படிப் பேசினாலும் 10 நிமிடங்கள்தான். பாசானமா, பூசானமா என்று தெரியவில்லை? (சிரிப்பு)

**திரு. பெ. கண்ணன்:** கொண்டு வரலாம் என்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உங்களுக்குப் பேசுவதற்கு 7 நிமிடம் அம்மா!

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம், 10 நிமிடங்கள். அதற்கு நான் கட்டுப்படுவதா, நீங்கள் சொல்வதை . . .

**திரு. சி. கோவிந்தசாமி:** காலையில்தான் சொன்னீர்கள், கறாராக. அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டபடி, பேசுகிற நேரத்தை எல்லோருக்கும் கறாராக அமலாக்க வேண்டுமென்று. 10 நிமிடம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு. தன்னிச்சையாக நீங்களே எப்படி 7 நிமிடங்கள் என்று மாற்றலாம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது இதிலேயே ஒரு நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. சி. கோவிந்தசாமி:** அதுதான் சார். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்று ஒரு பழமொழி இருக்கிறது. அது மாதிரி, நேரம் போனால் மாட்டுவது பூராவும் நாங்களா? அதில் என்ன நியாயம் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதான் நியாயம்.

**திரு. சி. கோவிந்தசாமி:** 10 நிமிடங்கள் எங்களுக்கு allot செய்யப்பட்ட time.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கோ அல்லது வேறு



எந்தக் கட்சிகளுக்கோ நேரத்தைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. இன்று இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சருடைய பதில், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் இன்று தொடங்கப்பட்டதே 12-05-க்குத்தான்; இரண்டு அமைச்சர்களும் பதில் சொல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினாலும், 9 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கின்ற காரணத்தினாலும், ஒவ்வொரு கட்சிக்கும் 10 நிமிடங்களிலேயிருந்து 3 நிமிடங்கள் வரையிலே குறைத்திருக்கின்றோம். அந்த அடிப்படையிலேதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு உறுப்பினருக்கு 3 நிமிடங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்களுக்கு உதவி செய்யக்கூடியது தமிழக அரசு. சிறுபான்மை எண்ணிக்கையில் இருக்கக்கூடிய எங்களைப்போன்ற கட்சிகளுக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் உரிமையை வழங்கிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையினுடைய அனைத்து அமைச்சர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

ஏழையெளிய, நடுத்தர மக்கள் அனைவருக்கும் வீடுகள் கிடைத்திட வேண்டும் என்பதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாகக் கடன் பெற்றவர்கள், வட்டியும் கட்ட முடியாமல், வீடும் கட்ட முடியாமல் உள்ள அவல நிலையைப் பரிசீலித்து, அரசு கடனைத் தள்ளுபடி செய்ய முன்வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இறை உணர்வு, ஆன்மீகம் உள்ளிட்ட பெரும்பான்மை இந்து சமய மக்களின் உணர்வுகளை இந்த அரசு மிகச் சரியாகவே புரிந்துகொண்டு செயல்படுகிறது. மத நல்லிணக்க உணர்வோடும், கோயில்களில் தீண்டாமை நிலவாமலும், உழைப்பாளி மக்களினுடைய தாய் மொழியான தமிழே கோயிலில் அர்ச்சக மொழியாக நிலவும் வகையில்

அறநிலையத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. அதைப் பலப்படுத்தவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் தன்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது.

*பிற்பகல் 1–00*

25 ஆண்டு காலமாக வீட்டு வசதித் துறையில் உள்ள இடியாப்பச் சிக்கலை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

25 ஆண்டு காலமாக வீடு வாங்கியவர்கள் பத்திரம் பெற முடியாமல், பல இலட்சங்களைக் கட்டிவிட்டுக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரை எல்லிஸ் நகர் உட்பட, திருப்பூர், கோவை விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் வீடுகள் பெற்ற பின்னரும் பத்திரம் பெற முடியாத நிலையில், சொல்ல முடியாத வேதனையில் தவித்து வருகிறார்கள். இந்த நிலைமைக்கு 4 முக்கியக் காரணங்கள் இருப்பதாக நான் கருதுகின்றேன். நில ஆர்ஜிதம் செய்தபோது, அந்தந்த மாவட்டங்களில், அந்தந்தக் காலக்கட்டங்களில் பல குளறுபடிகள் நடந்துள்ளன. நிலத்தின் விலை உயர்வு கேட்டு நில உரிமையாளர்கள் தொடுத்த வழக்கு ஒரு புறம். Tentative என்ற ஒரு இலட்சுமணக் கோடு கிழித்து, வட்டி, கூட்டு வட்டி, அபராத வட்டி, நிலத்திற்குக் கூடுதல் விலைக்கான வட்டி, தோராய வட்டி எனப் பல வட்டிகளைப் போட்டுத் தள்ளும் Housing Board மீது வீடுகள் பெற்ற மக்களின் வழக்குகள். HUDCO போன்ற மத்திய அரசின் நிறுவனங்கள் யதார்த்த நிலைக்குப் புறம்பாக வட்டி விகிதங்களை நிர்ணயம் செய்கிறார்கள். நிர்வாகக் குளறுபடிகள், இவைகளுக்குள் சென்று பிரச்சினைகளின் மையம் எது என்று ஆய்ந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரச்சினைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு உணர்வுபூர்வமாக இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களும், இயக்குநர், செயலாளர், அனைவரும் கூட்டு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறேன்; அவர்கள் வெற்றிபெறுவதற்கு வாழ்த்துக்களை உள்ளபடியே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், ஸ்டாண்டைப் போட்டுவிட்டு சைக்கிளை ஓட்டினால், சக்கரம்தான் சுழலும், சைக்கிள் ஓடாது. அதுபோன்று, வீட்டு வசதித் துறையினுடைய பிரச்சினையே வட்டிதான். வட்டியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் முற்றிலும்



நீக்கி உத்தரவிட்டால்தான் ஸ்டாண்ட் அகலும், சைக்கிள் ஓடும். வட்டியை நீக்குவதற்குத் தமிழக அரசு முன்வர வேண்டும்.

மதுரை எல்லிஸ் நகர்ப் பிரச்சினையில் உயர் நீதிமன்றம் சரியான தீர்ப்பு வழங்கியபின், Housing Board உச்ச நீதிமன்றம் செல்லத் தயாராவது குறித்து மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை மதுரைப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் மோகன் அவர்கள் சந்தித்து, இது குறித்துப் பேசியிருக்கிறார்கள். மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண முன்வர வேண்டும்.

திண்டுக்கல் இராணி மங்கம்மாள் நகரில், குறிப்பிட்ட தனியார் இடத்தை ஆர்ஜிதம் செய்வதில் ஏற்பட்ட குளறுபடிகளும், நீதிமன்ற வழக்குகளும் ஒன்று சேர்ந்து, வீடு வாங்கியவர்கள் அனைவருக்குமான தண்டனையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடமும் பேசியிருக்கின்றோம். ரூபாய் 7 இலட்சம் என அறிவித்து, பின்னர் ரூ.11 இலட்சமாக உயர்த்தி, இப்போது ரூ.19 இலட்சமாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, இத்தகைய நிலைகளை மாற்றுவதற்குப் பரிசீலிக்க வேண்டும்.

திண்டுக்கல் ஆர்.எம். நகர்ப் பகுதிப் பிரச்சினைகளைக் கிட்டத்தட்ட முடிவிற்குக் கொண்டு வரக்கூடிய நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முன்முயற்சியை எடுத்து, அதிகாரிகளோடு ஒத்துழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் நிர்வாகம் செய்த கடந்த காலக் குளறுபடிகள், தவறுகளை வீடுகள் பெற்ற மக்கள்மீது தயவுசெய்து சுமத்த வேண்டாம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அரசு அறிவித்த சலுகை விலைக் குறைப்பு அறிவிப்பை ஏற்று, அத்தகைய விலைக் குறைப்போடு விலையை அறிவிக்க முன்வர வேண்டும். முழுத் தொகையையும் செலுத்திவிட்ட சுய நிதித் திட்டத்தில் வீடு பெற்றவர்களுக்கு 80 அடிச் சாலைகளில் இந்த வீடுகளுக்கு 30 சதவிகிதம், 35 சதவிகிதம் உயர்த்தி, அதற்கும் வட்டி போடுவதை இரத்துச் செய்ய வேண்டும். வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன்பெற்று, வட்டி கட்ட முடியாத வேலூர், திருச்சி பீடித் தொழிலாளர்கள் பட்ட வட்டி, கடன்களைத் தள்ளுபடி செய்ய முன்வர வேண்டும்.

அதேபோன்று, நகர ஊரமைப்புத் துறை 46 கட்டடக் கலை திட்ட உதவியாளர்களுக்கு உதவி இயக்குநர் பதவி உயர்வு வழங்க வேண்டும். 10 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்த அலுவலர், உதவி

வரைவாளர்களுக்கு வரைவாளர் நிலை–3 பதவி உயர்வு தர வேண்டும். உள்ளாட்சியிலிருந்து T.P.O. Grade I அதிகாரிகள் இத்துறைக்கு அமர்த்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

கோயிலைத் தழுவிய குடிமக்கள், குடிமக்களைத் தழுவிய கோயில்கள் என்ற தமிழ்ச் சான்றோர்களின் பழமொழி மிகச் சரியானதே. பன்னெடுங்காலமாகக் கோயில் நிலத்திற்குக் குத்தகை செலுத்தி, வியர்வை சிந்தி உழைத்து வரும் விவசாயிகளுக்கு அந்த நிலத்தை அவர்களுக்கே வழங்க அரசு முன்வர வேண்டும். நிலச்சுவான்தார்களுக்கு நாம் நிலம் கேட்கவில்லை. நிலமற்ற ஏழைக் கூலி விவசாயிகள் கோயில் நிலத்தை உழுது பயிர் செய்து வந்தால், அந்த நிலங்களை அவர்களிடம் ஒப்படையுங்கள் என்று கேட்கிறோம். கோயில் நிலங்களில் குடியிருந்து வருவோர் சென்னை முதல் குமரி வரை பல மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் உள்ளனர். தரை வாடகை கடுமையாக உயர்த்தப்பட்டிருப்பதால், இவர்கள் சிரமத்திற்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலும், கேரளாவிலும், ஏற்கெனவே கோயில் நிலங்களை குடியிருந்தவர்களுக்கு ஒப்படை செய்ததைப்போலத் தமிழக அரசு செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

திருப்பூரில் கோயில் நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருக்கிறார்கள் என்று கூறி, அவற்றை இடிப்பதற்கு அறநிலையத் துறை திட்டமிட்டிருக்கிறது. இத்தகைய நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு, மக்களுக்குப் பாதிப்பு இல்லாத பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று, திண்டுக்கல் அபிராமியம்மன் கோயில் இடத்திலும் கடைகள் இடிப்பிற்கு நகராட்சித் துறை உத்தரவிட்டிருக்கிறது. அறநிலையத் துறை மௌனம் காக்கிறது. இதிலும் வர்த்தகர்கள், அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படாமல், பொருத்தமான முடிவை எடுத்துச் செயல்படுத்தக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–05

மதுரை, கீழச் சித்திரை வீதி உட்படத் தமிழகம் முழுவதும் கடைகள் வைத்துள்ளவர்களுக்கு 33.3% வாடகை உயர்வை 2000 ஆம் ஆண்டில் கலைஞர் அரசு நிறுத்தும்படி உத்தரவிட்டிருந்தார்கள். ஆனால் 2001–ல் அதை அ.தி.மு.க. அரசு அமல்படுத்த உத்தரவிட்டது.





Bench–களில், சூடம், வத்தி, குங்குமம், விபூதி, மஞ்சள் கிழங்கு போன்றவற்றை விற்பனை செய்யக்கூடிய இந்தக் கடைக்காரர்கள், Wal Mart, Reliance Group–ஐச் சேர்ந்தவர்கள் அல்ல. சாதாரண ஏழையெளிய, நடுத்தர மக்கள் ஆவார்கள். மதுரை ஜெயஸ்ரீ—அம்மன் சன்னதியில் 910 ரூபாய் மாத வாடகை செலுத்திய அந்த அம்மா 17,914 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால், அது மிகப் பெரிய அளவிற்குச் சிரமத்தைத் தருகிறது. ஆகவே 33.3% வாடகை உயர்வைக் கோயில் கடைக்காரர்களுக்கு இரத்துச் செய்ய வேண்டும். நகராட்சிக் கடைகளைப்போன்று, 15 சதவிகிதம் வாடகை உயர்த்துவதற்கு அரசு உத்தரவிட வேண்டும். இது குறித்து மதுரை, கும்பகோணம் கோயில் கடைக்காரர்கள் கடந்த 18–4–2007–ல் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியிருந்தார்கள்.

அதேபோன்று, குமரி மாவட்டத்தில் 4,000–க்கும் மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன. பச்சரிசிப் பொங்கல் சாதத்தில் ஒரு பகுதியை ஊதியமாகப் பெற்றவர்கள் இன்றைக்கு ரூ. 350, ரூ. 400, ரூ. 500, ரூ. 600 என்ற நான்கு பிரிவுகளிலே ஊதியம் பெறுகிறார்கள். இன்றைக்கு ஆண்டவனால்கூட 350 ரூபாயில் குடும்பம் நடத்த முடியாது. அப்படியிருக்கிறபோது, அர்ச்சகர்கள் எப்படிக் குடும்பத்தை நடத்த முடியும்? ஆகவே, அறநிலையத் துறையில் பணிபுரியக்கூடிய கோயில் அர்ச்சகர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும். அறநிலையத் துறையின்கீழே வேலை செய்யக்கூடிய அனைத்து ஊழியர்கள், மொட்டை போடக்கூடிய, முடி திருத்தக்கூடிய தொழிலாளர்கள் வரை அனைவரையும், திருப்பதி மலையில் இருப்பதைப்போன்று அரசு ஊழியர்களாக்கிப் பணி நிரந்தரம் செய்து தர வேண்டும்.

அதேபோன்று, கோயில்களில் அர்ச்சகர்களாகப் பெண்களை நியமனம் செய்ய வேண்டும். பக்தர்களின் கோரிக்கைகளைக் கடவுள் நிறைவேற்றுகிறாரோ, இல்லையோ, நிச்சயமாகக் கலைஞர் அவர்களின் அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடு, அவர்களுடைய கோரிக்கையை முன்வைக்கிறேன்.

வடலூர் வள்ளலார் ஆலயத்தில் உருவ வழிபாடு தொடர்கிறது. நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின்னரும் தொடருவது ஏன்? சுற்றுப் பகுதி சுத்தமாக இல்லை; சுகாதாரம் இல்லை. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' வள்ளலாருக்கு, வள்ளலார் கோட்டத்தைச் சென்னையிலே கலைஞர் அரசு அமைத்துக் கொடுக்க வேண்டும்.

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில், ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரிக்கு வகுப்பறை, கலையரங்கம் உட்படக் கட்டுமான, கட்டட அமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனி அறநிலையத் துறைக்குச் சொந்தமான கல்லூரிகளில் பணியாற்றக்கூடிய தொகுப்பூதிய ஆசிரியர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அதேபோன்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அம்மா, உரையை முடித்துவிடுங்கள். இரண்டு நிமிடங்கள் ஏற்கெனவே கூடுதலாகக் கொடுத்திருக்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** அதேபோன்று, பழனிக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வந்து, 25 ஆண்டு காலமாக இருந்து வந்த தீராத பிரச்சினையைத் தீர்த்திருக்கிறார்கள். அங்கு வரக்கூடிய பல இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு நகராட்சி, உள்ளாட்சி அமைப்பே குடிநீரும், சுகாதார வசதியும் செய்து கொடுக்கச் சிரமப்படுகிறது. ஆகவே, 200 கோடி ரூபாய்க்குமேலே வருமானம் ஈட்டக்கூடிய பழனியாண்டவர் கோயிலிலிருந்து ஒரு சிறு பகுதி நிதியை உள்ளாட்சித் துறைமூலமாக வழங்கி, பழனி நகராட்சிக்குக் கொடுத்திட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் கோயில்களுக்கு நிதியினை ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தி தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வேலூர், கணியம்பாடி ஒன்றியத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** நன்றி மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஆகவே, தமிழிலே அர்ச்சனை தொடர்வது, பரிவட்டம் கட்டக் கூடாது என்ற அரசினுடைய முடிவுகளை நிறைவேற்ற இந்தத் துறை முன்வர வேண்டுமென்று தெரிவித்து, உங்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். ஏழு நிமிடங்கள்தான்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பல உறுப்பினர்கள் சிறந்த கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள்.





அனேகமாக 1996 ஆம் ஆண்டு முதல் இந்த அறநிலையத் துறையின்மீது நான் தொடர்ந்து பல்வேறு கருத்துகளைச் சொல்லி வருகிறேன். குறிப்பாக, அத்துறை 38,422 கோயில்கள், மடங்கள், தர்ம ஸ்தாபனங்களுடைய நிர்வாகங்களைச் செய்து வருகிறது. இதன்மூலமாக, நிலம் என்பதிலே, கிட்டத்தட்ட 47 இலட்சம் ஏக்கருக்கு மேலே நிலங்கள் இருக்கின்றன. கட்டடங்கள் என்ற முறையிலே, 22,600 கட்டடங்களும், வாடகை மனைகள் 33,665-ம் இருக்கின்றன. ஆனால், இவற்றினுடைய வருமானங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, அதற்காக ஓர் ஆலோசனைக் குழுவை நியமித்து, அதன்மூலம் தீர்வு காண்பதற்கான ஒரு முயற்சி எடுக்கப்பட்டது.

பிற்பகல் 1-10

குறிப்பாக, இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, கடந்த 1999 ஆம் ஆண்டு அரசாணை எண் 353 என்ற ஒன்று வெளியிடப்பட்டது. டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான ஆட்சிக் காலத்திலே, அன்றையதினம் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மறைந்த தமிழ்க்குடிமகன் அவர்களால் அந்த அரசாணை கொண்டு வரப்பட்டது. அவர் இன்றைக்கு மறைந்துவிட்டார். ஆனால், அன்றைக்குச் செய்த காரியம், இன்றைய வரையிலும் அதை அனுபவித்து வருகிறார்கள் சாதாரண ஏழையெளிய மக்கள். இதைத்தான் அன்றையதினம் சட்டசபையிலே நான் குறிப்பிட்டு, இந்த அரசாணை என்பது மிக விரோதமான அரசாணை; இந்த அரசாணையைத் திரும்பப்பெற வேண்டுமென்று நான் 2000 ஆம் ஆண்டிலே இந்த அவையிலே வலியுறுத்திப் பேசினேன். அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுந்து, இந்த நியாயமான வாடகை என்ற பெயராலே இருப்பதை, அநியாயமான வாடகை என்று நீங்கள் திருத்திக் கொள்ளவேண்டுமென்று நான் கோபமாக வலியுறுத்திச் சொன்னபொழுது, இதே முறையீடும், தாக்கீதும் என்னிடத்திலே வந்திருக்கிறது; இது அநியாயமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்; ஆகவே பல மடங்கு இந்த வாடகை உயர்த்தப்பட்டிருப்பதை, இந்த அரசாணை 353-ஐ நான் நிறுத்தி வைக்க உத்தரவிடுகிறேன் என்று இந்தச் சட்டசபையிலே அறிவித்தார்கள். அது அன்றையதினம், 2000 ஆம் ஆண்டிலே நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், 2001 ஆம் ஆண்டிலே திரும்பவும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, அந்த அரசாணையை திரும்பப் புதுப்பித்து, 2004 ஆம் ஆண்டிலே அதற்கு ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்து,

'பசலி' என்ற அடிப்படையிலே ஆண்டுக் கணக்கிலே வசூலித்து வந்த வாடகையை மாத வாடகை என்ற அடிப்படையிலேயும், சதுர அடிக் கணக்கு என்ற அடிப்படையிலேயும், கடைகளுக்கும் மனைகளுக்குமாக வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இதைப் பற்றி நான் பேசுகிறபொழுது திரும்பவும் மவுனமாகவே இருந்துகொண்டால், இந்த ஆட்சியின்மீதும் இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் கவலைகொள்ளாமல் இருந்துவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டு வரும் என்பதை நான் அழுத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நான் சொல்லுவது, இந்தச் சட்டப்படிப் பார்த்தால், திருத்துறைப்பூண்டி கோயிலிலே மனை வாடகை பாக்கி என்ற முறையிலே 1999 ஆம் ஆண்டு முடிய பாக்கி 110 ரூபாய். 1999-லிருந்து 2002 ஆம் ஆண்டிலே திரும்பவும் ரூ.210 ஆக அதை உயர்த்தி 36 மாதங்களுக்கு 7,560 ரூபாய். திரும்பவும், 2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலும் ரூ.280 ஆக உயர்த்தி, 36 மாதங்களுக்கு வாடகை ரூ.10,080. திரும்ப 2005 ஜூன் மாதம் முதல் இப்பொழுது 2007 மார்ச் மாதம் வரையிலும் 375 ரூபாயாக உயர்த்தி, ரூ.8,250 வாடகை. மொத்தமாக அவர் செலுத்த வேண்டுமென்று கோருவது 26,000 ரூபாய் மனை வாடகையை ஒரு வார காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், இல்லையென்றால், நீங்கள் வெளியேற்றப்படுவீர்கள் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. இதைப்போல ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தமிழ்நாடு பூராவும் அனுப்பப்படுகிறது. இதில் நான் திரும்பத் திரும்பச் சொல்லுவது, ஒரு குழு அமைக்கப்பட்டதே, அந்தக் குழுவிலே பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்படித்தான் அது பரிசீலனை செய்ததா? இப்படித்தான் அது முடிவெடுத்ததா? இதன்மூலமாக வருகிற இந்தப் பாதிப்புகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்குரிய முயற்சி என்ன? இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலே குங்குமமும், விபூதியும், தாலிக் கயிறும் விற்பனை செய்கிறவர்களுக்கு வாடகை என்பது 10 மடங்கு உயர்த்தப்படுகிறது. 100 ரூபாய் செலுத்தியவர்கள் 1,000 ரூபாய், 1,000 ரூபாய் செலுத்தியவர்கள் 10,000 ரூபாய் என்ற அளவிலே நிர்ணயம் செய்யப்பட்டால், அவர்களெல்லாம் என்ன செய்ய முடியும்? அவர்கள் பிழைப்பதற்குரிய வாய்ப்பு வருமா என்பதைப் பற்றி இதிலே நாம் ஒரு தீர்மானகரமான முடிவெடுக்க வேண்டும்.

கோயில் நிலங்கள், மனைகள் என்ற முறையிலே பார்க்கிறபொழுது, இது முன்னோர்களாலே இந்தக் காரியங்களைச் செய்வதற்காக, கோயில்





நிருவாகம் செய்வதற்காக எழுதப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அதற்கு மறுப்புக் கருத்து இல்லை. நான் அவர்களையே கேட்பதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் வேண்டுகோளாக வைப்பதும், அமைச்சர் பெருமக்களும் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதும் அந்த முன்னோர்கள் எழுதி வைத்த சொத்தை, இப்பொழுது இப்படிப்பட்ட பாதிப்புகள் இருக்கிறபொழுது, என்ன செய்யலாம் என்று அவர்களிடத்திலே யோசனை கேளுங்கள். இப்போது நாங்கள் சொன்னால், ஆண்டவனை நாங்கள் நிந்திப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். அந்த ஆண்டவனை அவர்கள் நிந்திக்காமல் வணங்குகிறவர்கள், இதற்கு என்ன வாய்ப்பைச் சொல்லுகிறார்கள்? இதற்கு என்ன, என்ன தீர்வு சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றி ஆராயாமல், இதை அப்படியே கிணற்றில் போட்ட கல்லைப்போலவே நாம் விட்டுவிட்டால், இதற்கு ஒரு தீர்வு காணாமல் இருந்தால், எந்த வகையிலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத இக்கட்டான நிலை இருக்கிறது. இதை நம்முடைய தமிழக அரசு விரைவாகப் பரிசீலிக்க வேண்டும். ஆன்மீகப் பெரியவர்களை அழைத்துப் பேச வேண்டும். அதன்மீது ஒரு தீர்வு காணுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையென்று சொன்னால், அந்த மனைதாரர்களாக இருந்தாலும், குத்தகை சாகுபடி செய்யக்கூடிய நிலத்திலே சாகுபடி செய்யக்கூடியவர்களாக இருந்தாலும், எந்தவிதமான முன்னேற்றமும் அவர்களால் அடைய முடியாது. ஒன்று செய்வோம். நம்முடைய அரசாங்கமே, சென்ற ஆட்சியிலும் சரி, இந்த ஆட்சியிலும் சரி, வறட்சி, வெள்ளத்திற்காக நம்முடைய குத்தகை பாக்கி காலங்களில் இப்போது வசூலிக்கப்படுகிறது. ஆனால் கிஸ்தி வசூல் இரத்துச் செய்யப்படுகிறது. அரசாங்கமே ஏற்றுக்கொண்டு வரி வாய்தாவை இரத்துச் செய்துவிட்டு, ஆனால், குத்தகை பாக்கிக்காக இன்றைக்கு இலட்சக்கணக்கான ரூபாய்க்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிற கொடுமை விவசாயிகளிடத்திலே நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது, இந்தக் கோயில் தர்ம ஸ்தாபனங்களினுடைய நிலங்களின் பெயரால். ஆகவே, இதைப் பற்றியெல்லாம் சிந்தித்து ஒரு முடிவெடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Housing Board-க்குப் போய்விடுங்கள். இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்தப் பிரச்சினையை நான் சொல்லி, இதன்மீது ஏதாவது முயற்சிகளைப் பற்றி இங்கே அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கோயில் ஊழியர்களாகப் பணியாற்றக்கூடியவர்களுக்கு சேம நல நிதித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அறிவிப்புகள் வந்திருந்தன. அதோடு, ஓய்வூதியத் திட்டம் என்ற முறையிலே 750 ரூபாய் அறிவிக்கப்பட்டது. இதுவரையிலும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை வழங்குவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையிலும், வீடுகள், மனைகள் குறித்து இங்கே பல பேர் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக ஒன்றைச் சொல்லுவது, இப்போது தஞ்சாவூரிலே வீட்டு வசதி வாரியக் குடியிருப்பிலே கிட்டத்தட்ட 1,000 பேர்களுக்குமேல் குடியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–15

மன்னார்குடி நகரத்திலே நூற்றுக்கணக்கானவர்கள் அதுபோன்று குடியிருக்கிறார்கள். ஆனால், அப்படி வாங்கியவர்களுக்கு 1978 ஆம் ஆண்டிலே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அவர்களுக்கு 1993 முதல் 1997 வரையிலே நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. திரும்ப 15 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பிரச்சினைகளைப் பற்றியே எந்தவிதமான கவலையும் கொள்ளாமல், இப்போது மறுவிலை நிர்ணயம் என்ற பெயராலே அவர்களுக்கு மறுவிலை நிர்ணயத்தை, இப்போது இருக்கிற market rate-ல் போட்டு, அதை மட்டும் கட்ட வேண்டுமென்பது மட்டுமல்ல, அதற்கு வட்டியும் போட்டு, இப்போது செலுத்த வேண்டுமென்று நிர்பந்தம் செய்யப்படுகிறது. இந்தத் தாமதத்திற்கு யார் காரணம் என்றால், வீட்டு வசதி வாரியம்தான் காரணமே தவிர, வீட்டு மனைகளைப் பெற்றவர்கள் எந்த வகையிலும் காரணமே கிடையாது. இதைச் செய்வதற்குரிய காரியங்களையெல்லாம் தவிர்த்துவிட்டு, அந்த அதிகாரிகள் வேறுவிதமான தவறான காரணங்களைச் சொல்லித் திசை திருப்பி, இப்படி இலட்சக்கணக்கான ரூபாயைக் கட்டச் சொல்லி





அவர்களை சிரமத்திற்குள்ளாக்குவதற்கான முயற்சிகளை இப்போது எடுக்கிறார்கள். இதன்மீது வழக்குகள் என்ற காரணம் காட்டப்பட்டது. காரணம் காட்டப்படுகின்ற அந்தப் பொருத்தமான விஷயங்களை இப்போது பரிசீலிக்கின்றபொழுது 1992 ஆம் ஆண்டிலே தஞ்சாவூரில் நிலுவையில் இருந்த வழக்குகள் எல்லாம் தீர்வு செய்யப்பட்டுவிட்டன. ஆனால் இடைப்பட்ட காலங்களில் அதற்கு ஒரு விலை நிர்ணயத்தைச் செய்வதற்குப் பதிலாக, 1992 ஆம் ஆண்டு முடிந்த விஷயங்களில் 2004 ஆம் ஆண்டுதான் திரும்பவும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அப்போது அன்றைக்கு இருக்கிற market rate-ஐப் போடுகிறபோது, மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதைத் தீர்வு செய்வதற்கான முயற்சி என்ற அடிப்படையிலே ஒரு தெளிவான முடிவை நம்முடைய வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுக்க வேண்டும். இல்லையென்றால், மிகப் பெரிய பாதிப்பு வரும். அடி மனை 75,000 ரூபாய் 31–12–1997–லே போடப்பட்டிருக்கிறது. அதே 1–1–1992–லே 1,43,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஓராண்டு காலத்திற்குள்ளாக இவ்வளவு விலை உயர்வு. அப்படியென்றால் அவர்களால் தாங்க முடியாது. அதைத் தடுப்பதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்குமான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதன் காரணமாகவே அவர்களுக்குப் பத்திரங்கள் வழங்கப்படுவது என்பது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது என்பது பொருத்தமானதல்ல. அவர்கள் சாதாரண ஏழையெளியவர்களாகவும், சாதாரண ஆசிரியர்கள், நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவும் கடன்பெற்று இதிலே ஈடுபாடு செய்திருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்குரிய முயற்சியை எடுப்பதற்கான காரண, காரியத்தை உடனடியாகக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட்டி மற்றும் அபராத வட்டி மிகப் பெரிய சுமையாக இருக்கிறது. இந்த வட்டி மற்றும் அபராத வட்டியை உடனடியாகத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதன்மூலமாகத்தான் வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகவும், வீடு கட்டும் சங்கங்களின்மூலமாகவும் அப்படிக் கடன்பெற்றிருக்கிற சுமைதாரர்கள், சுமையாகச் சுமந்து கொண்டிருக்கிறார்கள்; அந்தச் சுமையைக் குறைத்து, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றுவதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டு, உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

[2007 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை தனது கட்டுப்பாட்டிற்குள் உள்ள அனைத்துக் கோயில்களில் திருப்பணி செய்வதும், குடமுழுக்கு விழா நடத்துவதும், சொத்துகளைப் பாதுகாப்பதும், மீட்பதும், புதியதாகப் பதிவேடுகளை உருவாக்குவதும் அதன் கடமையாக இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Only seven minutes.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** Seven minutes மட்டும்தானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பார்த்தாலும், அங்கே பார்த்தாலும் ஏழு நிமிடங்கள்தான். பேசி, உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கம்பம் தொகுதியில் ஸ்ரீகௌமாரியம்மன் கோயில் மற்றும் கம்பராயப் பெருமாள் கோயில் ஆகியவற்றிற்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. அதனால், கோயிலுக்கு வர வேண்டிய 4 இலட்சம் ரூபாய் வசூல் நடைபெறாமல் நிலுவையில் இருக்கின்றது. உடனடியாக நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அதைப்போல, இரண்டு நாட்களுக்கு முன்பு சித்ரா பௌர்ணமித் திருவிழா மங்களதேவிக் கோட்டத்திலே நடைபெற்றது உங்களுக்கு எல்லாம் தெரியும். 50,000 மக்கள் அங்கே கூடி தரிசனம் செய்தார்கள். கேள்வி நேரத்தின்போது கேள்வி கேட்டபோது, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; தமிழ்நாட்டில் இருந்து அந்தக் கோயிலுக்குச் செல்வது மிகவும் கடினமான ஒன்று. மலை செங்குத்தாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு காலத்தில் ஊட்டி மலைகூட செங்குத்தாகத்தான் இருந்திருக்கின்றது. ஒரு காலத்தில் கொடைக்கானல் மலைகூட செங்குத்தாகத்தான் இருந்திருக்கின்றது. ஆறு கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கின்றது. ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட்டு, வருடந்தோறும் சித்ரா பௌர்ணமி தினத்தில் பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு வசதியாக அந்தச் சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், வெள்ளையக்கோன்பட்டி வீரமாகாளி கோயிலில் நிலம் குத்தகைக்கு



2007 மே 4] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

விடப்பட்டு, அந்தக் குத்தகை நிலத்தைச் சிலர் சுவீகாரம் செய்வதற்கு முயற்சிக்கின்றார்கள். அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதைப்போல, வியாசர்பாடி, அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை ரவீஸ்வரன் கோயிலில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இப்பொழுது வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, திருப்பணிக்காக இந்தத் துறையின் சார்பாகக் குறைந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. 10 கோடி ரூபாய்க்குமேலாக அந்த நிதியை ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு கோயிலுக்கும் சம்பிரதாயம் உண்டு. ஆலய வழிபாட்டு முறை உண்டு. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிதம்பரம் சிவன் கோயிலில் ஆருத்ரா விழா என்பது மார்கழி மாதம் நடைபெறும். மதுரை, மீனாட்சியம்மன் கோயில் திருவிழா சித்திரை மாதத்தில் நடைபெறும். கும்பகோணத்தில் திருவிழா மாசி மாதம் நடைபெறும். அதைப்போல, பங்குனி உத்திர விழா திருவாரூரில் ஆயில்யம் நட்சத்திரம் அன்று நடைபெறும். ஆனால், இந்த ஆண்டு ஆயில்ய நட்சத்திரத்தன்று அங்கே தேரோட்டம் நடைபெறவில்லை. ஆயில்ய நட்சத்திரத்தன்று தொடர்ந்து, அந்தத் தேர்த் திருவிழா நடைபெற வேண்டுமென்று அங்கேயுள்ள பக்தர்கள் விரும்புகின்றார்கள். அதையும் அரசு கவனத்தில்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1–20*

அதைப்போல, இந்து சமய அறநிலையத் துறையின்கீழ், 2,325 திருக்குளங்கள் இருக்கின்றன. மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் அமைந்துள்ள தெப்பக்குளம், மயிலாப்பூர், கபாலீஸ்வரர் திருக்கோயிலில் அமைந்துள்ள திருக்குளம், வடபழனி திருக்கோயிலில் அமைந்துள்ள திருக்குளம், 108 வைணவத் தலங்களில் ஒன்றான அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் அமைந்துள்ள திருக்குளம்போன்ற திருக்குளங்களில் சமீப காலமாக நீர் இருப்புக் குறைந்து வருகிறது. நீர் இருப்பு குறைந்து வருவதால், தெப்பத் திருவிழா நடைபெறாதோ என்று பக்தர்கள் அச்சப்படுகிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு, அந்தத் தெப்பக்குளங்களில் அதிகமான நீரைத் தேக்குவதற்கும், வருகின்ற பக்தர்கள், அங்கே துள்ளி விளையாடுகின்ற மீன்களுக்குப் பொரி, அவல் ஆகியவற்றைப் போடுவதன்மூலமாக—ஏழையெளியவர்கள் தங்களுடைய வறுமையின் காரணமாக—அன்னதானம் செய்ய முடியாத

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2007 மே 4

ஏழையெளியவர்கள் அவல், பொரி ஆகியவற்றை அந்த மீன்களுக்குப் போடுவதன்மூலமாக நல்லதொரு உணர்வைப் பெறுகிறார்கள். எனவே, அந்தத் திருக்குளங்களில் அதிகமாக நீரை நிரப்புவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, எல்லாத் திருக்கோயில்களிலும் சமையல்காரர்கள், எழுத்தர், துப்புரவுப் பணியாளர்கள்போன்ற பணிகளைத் தனியாருக்கு விடுவதாக அறிகின்றேன். காலியாக உள்ள அந்தப் பணியிடங்களை அரசு உடனடியாக நிரப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, எப்பொழுதுமே கோயில்களில் நாதஸ்வர இசை முழங்க வேண்டும். நாதஸ்வர இசைக் கலைஞர்களை நிரந்தரமாகப் பணியமர்த்த வேண்டும். தற்சமயம் நாதஸ்வரக் கலைஞர்கள், தவில் வித்வான்கள், மத்தளம் வாசிப்பவர்கள் ஆகியோருக்கு இசைப் பணியாளர்கள் நிதியிலிருந்து குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. அவர்களுக்கு மாதம் 2,000 ரூபாயாவது சம்பளமாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள், பழனி, இராமேஸ்வரம், திருச்செந்தூர் போன்ற திருக்கோயில்களுக்கு வருகின்றபொழுது, அவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல், குடிதண்ணீர்கூடக் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எதிரும், புதிருமாக உள்ள அரசியல் கட்சிகளைக்கூட கூட்டணியாகச் சேர்த்துவிடலாம். ஆனால், ஒரே அரசின்கீழ் இருக்கின்ற உள்ளாட்சித் துறை, மாசு கட்டுப்பாட்டுத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைபோன்ற துறைகளையெல்லாம் ஒருங்கிணைப்பது மிகவும் கடினம். துறைகள் கூட்டுப் பொறுப்போடு, பக்தர்களுக்குப் போதுமான பாதுகாப்பையும், நல்ல குடிநீரையும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் வராத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் திருக்கோயில்களுக்கு, அந்தந்த மாவட்டங்களில் சார்நிலை அதிகாரிகளின்மூலமாகப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஓவ்வொரு திருக்கோயிலுக்கும் 25,000 ரூபாய் வழங்கப்படுகின்றது. இன்றைக்கு உள்ள சூழ்நிலையில், ஜல்லி, மெட்டல், சிமெண்ட், கம்பி ஆகியவற்றின் விலையேற்றத்தைக் கருத்தில்கொண்டு,



2007 மே 4] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

ஓவ்வொரு திருக்கோயிலுக்கும் 75,000 ரூபாய்க்கு அதிகமான தொகையைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, உபரியாகக் கிடைக்கின்ற வருவாயைக்கொண்டு, பழனி போன்ற கோயில்களில் வருகின்ற அதிக வருவாயையும், அதனால் கிடைக்கின்ற வட்டியையும்கொண்டு, அந்தந்த வட்டத்தில், அந்தந்த மாவட்டத்தில் பள்ளிக்கூடங்கள் திறப்பதும், கல்லூரிகளை இயக்குவதும், கருணை இல்லங்கள் தொடங்கப்படுவதுமாக இருக்கின்றது. இதை விரிவாக்கம் செய்து, பல மாவட்டங்களுக்கும் அந்த நிதி பயன்படுகின்ற வகையிலே அமைக்கப்பட வேண்டும். கருணை இல்லங்கள் தொடங்கப்படுகின்ற நேரங்களில், அவற்றில் சேர்கின்றவர்கள் இயலாதவர்களும், ஊனமுற்றவர்களும்தான். அவர்களுக்கு உணவும், உடையும் இலவசமாக வழங்கப்பட்டாலும்கூட, அங்கேயுள்ள காப்பாளர்கள் அன்பும், கருணையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஊதியத்தில் குறிக்கோளாக இல்லாதவர்களாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சமீப காலமாக உண்டியல் திருட்டு அதிகமாக நடைபெற்று வருகின்றது. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலில்கூட, அருள்மிகு தட்சிணாமூர்த்தி சிலையின் மேல்புறமுள்ள ventilator வழியாகக் கொள்ளையர்கள் உள்ளே புகுந்து, நான்கு உண்டியல்களை உடைத்திருக்கின்றார்கள். ஆகவே, உண்டியல்கள் தரமானவையாக இருக்க வேண்டும். அவற்றைப் பாதுகாப்பான இடங்களிலே வைக்க வேண்டும். அவற்றைச் சுற்றிலும் பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்த வேண்டும். அதைப்போல, நகைகளும் திருடு போகின்றன. நகைகள் திருடு போகாமல் அவற்றைப் பாதுகாக்கின்ற வகையிலே, திருவிழாக் காலங்களில் மட்டும் அந்த நகைகளைப் பயன்படுத்திவிட்டு, மற்ற நேரங்களில் அவற்றை வங்கி locker-களில் வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல . . . *(மணியடிக்கப்பெற்றது)*

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாட்டு நிதியாக ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் தரப்படுகிறது. தொகுதிக்குச் சென்றால், அங்கே பக்தர்கள், தங்கள் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து தர வேண்டும், குடமுழுக்கு விழா நடத்திட வேண்டுமென்று தினமும் எங்களிடம் வந்து வேண்டி, விரும்பிக்

கேட்டுக்கொள்கிறார்கள். இதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுகின்றது. ஆகவே, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தத் திருக்கோயில்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன். நீங்கள் ஏழு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவன் உயர்ந்தவன், அவன் வலுவானவன், யாவர்க்கும் உயிரானவன், உயிர்களின் சாராம்சம் ஆனவன், அவனை வணங்குகிறேன். அவன்தன் அருளாசியால் நாம் பெற்றுள்ள மக்கள் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களையும், அவர் கரம் உயர்ந்திடப் பாடுபடும் இணையற்ற தலைவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன். கூடவே, சக்தியின் வெளிப்பாடாக இங்கு அமர்ந்திருக்கும் யாவரையும் வணங்கி, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பற்றி என் கருத்துகளைக் கூறுகிறேன்.

1925–ல் வாரியமாக எழுந்த இத்துறை, 1951–ல் அரசுத் துறையாக மாறி, தொடர்ந்து சீர்குலையாமல் பாங்காய் நடைபோடும் துறை இத்துறை என்று சொன்னால், அது ஏற்கத்தக்கதாகும். இதற்காக அரசினைப் பாராட்டுகிறேன். 50 ஆண்டுகள் கடந்த துறையில், மக்கள் பெருக்கத்தாலும், அவர்களின் இறையன்பின் பெருக்கத்தாலும், சிற்சில பிரச்சினைகள் ஆங்காங்கே, அவ்வப்பொழுது எழுகின்றன. இவற்றைத் தவிர்க்க, இத்துறையின் நடைமுறைகளை அறிந்து, இதன் மேம்பாட்டினை மிகைப்படுத்தவும், மெருகூட்டவும் வழிகள் காட்டிட ஒரு Advisory குழு மாண்புமிகு முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டது நலமான நடவடிக்கையாகும். இதற்காக மாண்புமிகு முதல்வருக்கு நன்றி கூறுகிறேன். இத்துறை பற்றி நான் அறிந்த நல்லவை குறித்தும், தவிர்க்கக்கூடிய குறைபாடுகள் பற்றியும் சொல்கிறேன்.

நமது அரசு, பெருமைசார் கோயில்களான திருச்செந்தூர், பழனி, சமயபுரம், திருச்சி ஆகிய கோயில்களுக்கெல்லாம் மெத்தவும் நல்ல அறங்காவலர் குழுத் தலைவர்களையும், குழு உறுப்பினர்களையும் அமைத்துள்ளது. அரசினை இதற்காக மிகவும் பாராட்டுகிறேன். அரசிற்கு எனது நன்றியையும் உரித்தாக்குகிறேன்.



இறை சக்திபெறக் கோயில்களை நாடும் மக்கள், கோயில்களில் எதிர்பார்ப்பது அமைதியான நல்ல தரிசனமும், கோயில் நிர்வாகத்தில் உள்ளோரிடம் இருக்க வேண்டிய நேயம் நிறைந்த பொறுமையுமாகும். அலுவலர்கள் பக்தர்களிடம் அன்புடன் பழகிட வேண்டும். இதற்கென அவர்களுக்கு அவ்வப்பொழுது சிறப்புப் பயிற்சிகள் தரப்பட வேண்டும்.

கூடவே, முக்கியத் திருநாட்களில் பக்தர்கள் உற்சவமூர்த்தியை அமைதியுடன் வழிபட Close Circuit T.V. கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும். உதாரணத்திற்கு, ஸ்ரீரங்கம் கோயில் மோகினி அலங்கார ஊர்வலம், பகல் பத்து, இராப் பத்து நாட்களில் உற்சவரின் ஆயிரங்கால் மண்டப தரிசனம் போன்றவற்றையும், திருச்செந்தூரில் சூர சம்ஹார நிகழ்வு, சஷ்டி விரத யாகம் போன்றவற்றிற்கும் இது தேவை. சிறுவர், சிறுமியர், பெண்கள் மற்றும் முதியோர் இறை தரிசனம் பெறவும், இவர்கள் கூட்ட நெரிசலில் துன்புறாமல் இருக்கவும் Close Circuit T.V. உதவும். மேலும், இவற்றைப் படமாகப் பிடித்து, அதன் பிரதிகளை விற்பதன்மூலம், அதனைக் காண இயலாத பக்தர்கள் பார்த்திட வழி செய்ய முடியும். அதில் சற்று வருவாயும் வரும்.

நம்மையும், நமது வீட்டையும் சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள எப்பொழுதும் கவனம் செலுத்தும் நாம், நமது கோயில்கள் மற்றும் அவற்றின் சுற்றுப்புறச் சூழலைப் பற்றிக் கவனம் செலுத்துவதே இல்லை. திரளும் பக்தர்களும் சரி, கோயிலில் உள்ள அர்ச்சகர்களும் சரி, இதில் கவனம் இல்லாமல் உள்ளனர். அரசும், அறங்காவலர்களும் உடனடியாக இதனை நிவர்த்தி செய்திட வேண்டும். சீர்மிகு பெரிய கோயில்கள் எல்லாம், நட்சத்திர தங்கும் விடுதிகள்போலத் தூய்மையும், அழகும் மிளிர வகை செய்ய வேண்டும். இக்கோயில்களில் சுத்தமும், சுகாதாரமும் மிளிர, தனிப் பணிக் குழுக்கள் அமைக்க வேண்டும்.

அதுபோல, கோயில்களில் ஈடுபாடு உள்ளவர்களை வைத்து, ஒவ்வொரு பெரிய கோயிலுக்கும் ஒரு ஊர்க் காவல் படையை பாதுகாப்புப் படையாக அமைத்தால் நலமாக இருக்கும். கோயில்களின் பாதுகாப்பும் உயரும். மேலும், உழவாரப் பணிகள் செய்ய பக்தர்களாலான குழுக்களை அமைக்க வேண்டும். கோயில் சுவர்கள் மற்றும் மண்டபங்களை வருடத்தில் குறைந்தபட்சம் நான்கு முறையாவது தண்ணீர்கொண்டு சுத்தப்படுத்த வேண்டும். இப்பணியை மேற்கொள்ளத் தீயணைப்புப் படையினரின் உதவியினைக் கோயில்களுக்கு அளித்தால் மிகவும் நலமாயிருக்கும். கோயில்களில்

அசுத்தம் செய்பவர்களின்மீது காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கான வசதிகள் போதாது, இருக்கும் வசதிகளும் சீராக இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. ஒவ்வொரு முக்கியக் கோயிலுக்கும் திட்டம் தீட்டி பக்தர்களுக்கான வசதிகள் குறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருவது பற்றிய விவரங்கள் துறையின் அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளன இந்நடவடிக்கைகளை வேகமாக நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களைப் பராமரிக்கும் பெரும் பணிகளில் பணியாளர்கள் இரு வகையாக உள்ளனர். ஒன்று, அறநிலையத் துறைப் பணியாளர்கள் மற்றும் அயல் பணியாளர்கள். இரண்டு, திருக்கோயில் பணியாளர்கள். முதலில் சொல்லப்பட்டவர்கள் அரசுப் பணியாளர்களாக, அரசு ஊதியம்போன்றவை பெறுகின்றனர். இரண்டாவது உள்ளோர், சுமார் 47 திருக்கோயில்களில் சுமார் 4,500 பேர் அலுவலக உதவியாளர், இளநிலை உதவியாளர்போன்றோர் அரசுப் பணிக்கு இணையான ஊதியங்கள் இல்லாமல் பணியாற்றுகின்றனர். இவர்களின் ஓய்வூதியம், ஒப்படைப்பு விடுப்பு யாவும் குறைவு. கோயில்களின் வருவாயிலிருந்து பணியாளர்கள் ஊதியங்கள் தரப்படுகின்றன. இதற்கென அரசுக்கு நிதிச் சுமை இல்லை. இந்நிலையில் இந்த வேறுபாடான சம்பளங்கள் சரியல்ல.

1969 ஆம் ஆண்டே கழக அரசு திருக்கோயில் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்குவதெனக் கொள்கை முடிவெடுத்தபோதிலும், 37 ஆண்டுகளாக இக்கொள்கை செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 37 ஆண்டுகளாய் உள்ள திருக்கோயில் பணியாளர்களின் கனவினை நனவாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி ராணி வெங்கடேசன்:** திருக்கோயில்களின் சொத்துக்களிலிருந்து வருவாயைப் பெருக்குவதற்கான வழிகள் பற்றி ஆராய்ந்து, அவற்றின்மூலம் வருவாயைப் பெருக்கிட ஆவன செய்திட



வேண்டும். அதே நேரம், வாடகை அதிகரிப்பு சுமையாக மாறிவிடக் கூடாது. அத்தகைய நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறைபாடு உண்டு. அக்கோயில்களின் கட்டடச் சொத்துக்கள் மற்றும் சத்திரங்கள்போன்றவற்றின் பராமரிப்பும் நல்ல முறையில் இருக்க வேண்டும். அச்சொத்துக்களில் ஆக்கிரமிப்புக்கள் இருந்தால் அவை விரட்டப்பட வேண்டும். காலியாக இருக்கும் சொத்துக்கள் அரசுப் பணிகளுக்காக, மக்கள் நலனுக்காக விற்கப்பட்டால் அந்த வருமானம் அந்தந்தக் கோயில்களுக்கான வைப்பு நிதியைக் கூட்டிட வழி செய்யும்.

கோயில்களைச் சுற்றி, கோயில் அனுபவத்தில் இருக்கும் கிராம நத்தங்களில் அரசுத் திட்டங்களுக்காக உள்ளூர்ப் பஞ்சாயத்து நிருவாகம் கட்டுமானம் எழுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

கோயில்களுக்கு வேண்டுதலின் பேரில் ஆடு, மாடு போன்ற உயிரினங்கள் பக்தர்களால் காணிக்கையாகத் தரப்படுகின்றன. அவற்றை முறையாகக் காத்திடப் பாதுகாப்பு மையங்கள் தேவை. மையங்களில் பராமரிக்கக்கூடிய உயிரினங்கள் போக அதிகமாகவுள்ளவற்றைக் கசாப்புக் கடைக்குப் போகாத வகையில், ஏழை விவசாயிகளுக்கும், ஏழை விதவைகளுக்கும் இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருச்செந்தூர் கோயிலில் ஒரு காலத்தில் உயிரினங்கள் ஏலம் விடப்பட்டு, கசாப்புக் கடைக்கு அவை கொண்டு போகப்பட்டன. பின்னர், நீதிமன்றம் அவற்றைத் தகுதியான காப்பகங்களுக்குக் கொடுக்க உத்தரவு தந்தது; ஏல முறை நின்றது. ஏலத்தில் பணம் கொடுத்து அவற்றை எடுத்தவர்களே, காப்பகங்கள் தங்களிடம் உள்ளதாகப் பொய்ச் சான்றிதழ்கள்பெற்று, உயிரினங்களை இலவசமாகப் பெற்று, கசாப்புக் கடைக்குக் கொண்டு செல்லும் நிலை எழுந்தது. இதனை நிறுத்த, அக்கோயிலின் அறங்காவல் குழுத் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதரக் கோயில்களும் இவ்வழியைப் பின்பற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.

இறையருள் வேண்டி, தமது வாக்கு, தமது உடல், தமது மனம் யாவும் தூய்மையுடன், பக்தர்கள் திருக்கோயிலுக்கு வருகிறார்கள். அவர்களின் பிரார்த்தனைகளை இறைவனுக்கு அர்ச்சனைகள் மூலமாகவும், பூஜைகள்மூலமாகவும் எடுத்துரைக்க இருப்பவர்களே அர்ச்சகர்களும், பூசாரிகளும் ஆவார்கள். இவர்கள் கயமையும், பொய்மையும் அற்றவர்களாகவும், ஒழுக்கச்சீலர்களாகவும் இருக்க

[திருமதி ராணி வெங்கடேசன்] [2007 மே 4

வேண்டும் என்பதற்காகத்தான் நமது முதல்வர் கலைஞர் அவர்கள், 'கோயில் கொடியவர்களின் கூடாரமாக மாறக் கூடாது' என்று சொன்னார்கள்.

திருக்கோயில்களில் அர்ச்சகர்கள், பூசாரிகள் போன்றோர் சுத்தமாக இருக்க வேண்டும். மது அருந்தியும், போதைப் பொருள் உபயோகித்துக்கொண்டும் ஒரு சிலர் நமது கோயில்களில் அர்ச்சனை, பூஜை எல்லாம் செய்கிறார்கள் என்பது அதிர்ச்சியான ஒரு செய்தி. சமீப காலத்தில் நான் சென்ற கோயிலில், இதனை அங்குள்ள அறங்காவல் குழுத் தலைவர் கண்டுபிடித்து, ஒரு நபரைக் கண்டித்ததாக அறிந்தேன். அரசு இப்பொருள்பால் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூடவே அமைதியும், அதனால் ஆனந்த நிலையும் நிலையாய் நிறைய வேண்டிய கருவறையுள்ளும், அதன் அருகிலும், தேவையில்லாத கூச்சல் போடும் அர்ச்சகர்களையும், இறைவன், இறைவி திருவுருவை மறைத்து பூஜை செய்பவர்களையும் தண்டிக்க வேண்டும். திருக்கோயில் அர்ச்சகர்கள் யாவருக்கும் உரிமச் சீட்டு கொடுக்கப்பட வேண்டும். இம்முறை முன்பு இருந்து, இடைக்காலத்தில் கைவிடப்பட்டுள்ளது. உரிமச் சீட்டு முறை இருந்தால்தான், தகுதியான அர்ச்சகர்கள் கோயில்களில் இருப்பார்கள். மேலும், ஒவ்வொரு கோயிலிலும் தமிழில் அர்ச்சனை செய்ய அர்ச்சகர்கள் இருக்க வேண்டும்.

பழனி திருக்கோயிலில் மூலவரின் உருவம் தேய்ந்து இருப்பதை யாவரும் அறிவோம். போகர் என்ற சித்தர் மூன்று ஆண்டவன் சிலைகளை வடித்ததாகவும், அதிலும் இப்போது மூலவராக இருக்கும் சிலை போக இன்னும் இரண்டு சிலைகள் பழனி கோயிலில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், செய்திகள் உண்டு. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இச்சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, மீண்டும் பொலிவுடன் திருமுருகன் அமைவார் என்றும் செய்தியுண்டு.

அருள்மிகு பழனியாண்டவர், கேரளாவில் திருச்சூரில் மின் வாரியத்தில் பணிபுரியும் ஒரு இளைஞர் ரஞ்சித் என்பவருக்குக் கனவில் தோன்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன். உங்களுக்குப் பேச அனுமதி 7 நிமிடங்கள்தான். (குறுக்கீடுகள்) 7 நிமிடங்கள்தான்.



2007 மே 4]

***திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் சாதாரணத் தொண்டனான என்னை இடம்பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை மகிழ்ச்சியுடன் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆங்கிலக் கவிஞன் Lord Tennyson கூறிய இரண்டு வரிகளை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"My strength is as the strength of ten, because my heart is pure" என்று Lord Tennyson கூறினார். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் . . .

**HON. SPEAKER:** Whatever it may be, it is to be only for seven minutes.

**திரு. கு. சீனிவாசன்:** "The strength of Hon. Amma is as the strength of a crore because her heart is pure". (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிக் கோடிக்கணக்கான மக்களின் ஆதரவையும், வலிமையையும் ஒருங்கேபெற்றுப் பணியாற்றி வரும் ஆண்டவனின் வாரிசு மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்து சமய அறநிலையத் துறை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பங்கெடுத்துப் பேசும் வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு பூங்கா நகர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை நேரிடையாக யாரும் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்டதில்லை. கூட்டணிக் கட்சிகளுக்கே இந்தத் தொகுதி ஒதுக்கப்பட்டு வந்தது. அப்படிப்பட்ட தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் என்னை வேட்பாளராக அறிவித்து, கழக வெற்றிக்காகப் பிரச்சாரமும் செய்தார்கள். 6,357 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த பூங்கா நகர் சட்டமன்றத் தொகுதி அனைத்து மக்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரசியல் அரங்கில் பல்வேறு தலைவர்கள் வாழ்ந்தார்கள், மறைந்தார்கள்,

வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், மனித நேயத்துடன் அரசியல் செய்தவர்கள் வெகு சிலரே. அவர்களில் ஒருவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஏழை மக்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போது, அவர்கள் பசியோடு இருக்கக் கூடாது என்பதற்காக சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பிறகு வந்த எந்த ஆட்சியாளர்களாலும் அந்தத் திட்டத்தைக் கைவிட முடியவில்லை.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்று தமிழ் இலக்கியம் கூறுவதுபோல, மாண்புமிகு அம்மா அவர்கள், ஆலயங்களில் அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 23–3–2002 அன்று 63 திருக்கோயில்களில் துவக்கப்பட்ட இத்திட்டம், பின்பு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, 360 திருக்கோயில்களில் தற்போது நடைபெற்று வருகிறது. வருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. இந்த ஆட்சியாளர்களால், மூன்றாம் நிலையில் உள்ள வருவாய் குறைந்த திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை முடக்க நினைத்து, அலட்சியப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக அறிய வருகிறேன். எனவே, இது உள்நோக்கத்துடன் செய்யப்படும் செயல். இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கூறிய இரு திட்டங்களும் ஏழைகளின் பசியைப் போக்கும் திட்டங்களாகும். எனவே, அவற்றைக் கைவிடக் கூடாது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 60 வயதைக் கடந்த கிராமப் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் அளிக்க முடிவு எடுக்கப்பட்டு, 2,632 கிராமப் பூசாரிகளுக்கு மாதம் ரூபாய் 500 வீதம் வழங்கப்பட்டது. ஆனால், சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில், அதாவது 2006–2007–ல் 4 ஆயிரம் கிராமப்புறப் பூசாரிகளுக்கு ரூபாய் 750 வீதம் ஓய்வூதியம் அளிக்கத் திட்டமிடப்பட்டு, 2,621 நபர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலும் பக்கம் 49–ல் அதே வரிகள், அதே எண்ணிக்கையே இடம்பெற்றுள்ளன.

கிராமப் பூசாரிகளுக்கு நல வாரியம் அமைக்கப்பட்டதாகக் கூறியுள்ளீர்கள். இதில் எத்தனை பூசாரிகள் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள், வாரியத்தின் செயல்பாடுகள் எந்த அளவில் உள்ளன, மேலும், வாரியத்தினால் அவர்கள் அடையப் போகும் பலன்கள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.





மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்த உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலுள்ள அனைத்து இந்து மக்களும் புராணம் மற்றும் இதிகாசங்களில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தற்போது சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்காக இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே உள்ள இராமர் பாலத்தைத் தகர்க்க முற்படுவதாகச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் எடுத்துள்ள செயற்கைக் கோள் புகைப்படத்திலும் இந்தப் பாலம் கடலுக்கு அடியில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் இதை Adams Bridge என்று சொல்வார்கள். நேற்றுக்கூட . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. தவறான தகவலைப் பதியக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் புகைப்படம் எடுத்திருக்கிறது என்று சொல்கிறார். உண்மை என்ன என்றால், அந்த இராமர் பாலம் இருக்கிறது என்று சொல்கிறீர்களே, அந்த இடத்திலே இப்பொழுது 20 மீட்டர் அடிக்கு bore போட்டு எடுத்து, அந்த மண்ணையெல்லாம் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்ட Project Office–லே வைத்திருக்கிறோம். அதை எதற்காக bore போட்டு எடுத்தோம் என்றால், man-made structure—மனிதனால் கட்டப்பட்டவை ஏதாவது இருக்கின்றனவா என்று ஆய்வதற்காகத்தான் 20 மீட்டர் bore போட்டு எடுத்தோம். ஆனால், இதற்கு முன்பு — நாங்கள் போட்டதாவது 20 மீட்டர். இதற்கு முன்பு 203 மீட்டர் அளவிற்கு bore போட்டு எடுத்து வைத்தார்கள். அதிலேயும் அப்படிப்பட்டவை இல்லை என்று தெரியும். அது யார் என்றால், Minerals and Mines துறையினுடைய அமைச்சராக இருந்த, இந்துத்வாவில் அதிக நம்பிக்கை உள்ள மாண்புமிகு உமா பாரதி அவர்கள் அமைச்சராக இருந்தபோது 203 அடி bore போட்டு எடுத்திருக்கிறார்கள். அதிலேயும் அப்படிப்பட்ட இராமர் பாலம் இருந்ததாகத் தெரியவில்லை. அதனால்தான் அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், உமா பாரதி அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

[2007 மே 4

பிற்பகல் 1–40

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ இந்த இராமர் பாலம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, நேற்றுக்கூட நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதம் நடந்து, அமளி ஏற்பட்டு, அவை ஒத்திவைக்கப்பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. எனவே, இந்தப் பிரச்சினை குறித்து அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம் தொகுதியில் சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அருணாச்சல நாயக்கன் தெரு மற்றும் சிங்கண்ணச் செட்டித் தெரு சந்திக்கும் இடத்தில் 30 ஆண்டு காலம் ஏழை மக்கள் அந்தப் பிரதான சாலையிலே குடிசையில் வசித்து வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2004 ஆம் ஆண்டு அந்த மக்களுக்கு, அருகில் உள்ள ஜோதி அம்மாள் நகரில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டி இலவச மின்சார இணைப்புடன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், 1996, 2001 மற்றும் தற்போது 2006 ஆகிய மூன்று முறை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். அதேபோல, எழும்பூர் இரயில் நிலையத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் 1–41.

**திரு. கு. சீனிவாசன்:** எழும்பூர் இரயில் நிலையத்திற்கு ஒரேயொரு நுழைவு வாயில்தான் இருந்தது. ஈ.வி.கே. சம்பத் சாலை வழியாகத் தற்போது புதிய நுழைவு வாயிலும் ஏற்படுத்தப்பட்டது. அங்கும் கிட்டத்தட்ட 130 குடிசைகளில் மக்கள் சுகாதாரம் இல்லாமல், எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் வசித்து வந்தார்கள். அந்த மக்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2003 ஆம் ஆண்டு அம்பத்தூர் காமராஜ் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் வீடுகள் ஒதுக்கப்பட்டன. இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில், எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி என்று பாரபட்சம் பார்க்காமல், மக்களை மட்டுமே பார்த்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்)



2007 மே 4]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** 83 ஆண்டு வாழ்க்கையில், 50 ஆண்டு காலம் சட்டமன்றப் பணியாற்றி, (குறுக்கீடு) ஆறு கோடி மக்களின் நல்லாதரவுடன் ஐந்தாவது முறையாகவும் முதலமைச்சர் பொறுப்பேற்று . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) One minute.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 10–க்கும் மேற்பட்ட மானியக் கோரிக்கைகளில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இரண்டு நபர்கள் பேசுவதற்கான வாய்ப்பு தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. சட்டமன்றத்தில் எங்கள் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து, கட்சியினுடைய கொறடாவாக இருக்கிற என்னிடமும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களிடத்திலும், அவை முன்னவர் அவர்களிடத்திலும், நம்முடைய அண்ணன் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போய், வாய்ப்பு வாங்கித் தரவில்லை என்று எங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே என்னைக் குற்றம் சாட்டுகிற காரணத்தால், இன்றைக்கும் பேசுவதற்குத் தயாராக இருந்த திரு. பெரியசாமி அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிற காரணத்தினால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பெரியசாமி அவர்கள் பேசுவதற்கு 5 நிமிடங்கள் வாய்ப்பு அளித்து, அமைச்சர் அவர்களைப் பிறகு பதிலுரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து 15–க்கும் மேற்பட்ட மானியக் கோரிக்கைகளில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) வேல்முருகன், சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்கு நேரம் இல்லை, திங்கட்கிழமை பார்க்கலாம்.

**திரு. தி. வேல்முருகன்:** இதே மாதிரிதான் தொடர்ந்து 15 மானியக் கோரிக்கைகளில் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திங்கட்கிழமை பார்க்கலாம், உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

[2007 மே 4

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதிலுரை அளிக்க வேண்டும். எனவே, நேரத்தின் அருமை கருதி, இங்கே பேசிய மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அண்ணன் கரி. இராமசாமி போன்றவர்கள் இராவிட. இரண்டு பிரச்சினைகளை எழுப்பினார்கள். அவற்றிற்கு மட்டும் சுருக்கமாக என்னுடைய பதிலுரையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலே விதிமுறைகளை மீறியும், அனுமதிபெறாமலும் கட்டப்பட்ட கட்டடங்களை இடிப்பது குறித்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது சம்பந்தமாக, விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்மீது உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 1999–ல் கொண்டு வரப்பட்ட வரன்முறைத் திட்டத்தைத் தவிர, 2000, 2001, 2002 ஆகிய வருடங்களில் கொண்டு வரப்பட்ட வரன்முறைத் திட்டங்களை அமல்படுத்த அனுமதி மறுத்தது. அதோடு மட்டுமல்லாமல், கடந்த பல ஆண்டுகளில் கட்டப்பட்ட விதிகளை மீறிய சில கட்டடங்களை, விதிகளுக்கு உட்பட்டுக் கட்டப்பட்டனவா என்பதைப் பார்க்க ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்துப் பல கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதன்படி, வரன்முறைத் திட்டத்தின்கீழ் வரும் குடியிருப்புக் கட்டடங்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்தப் பேரவையின் மேலான கவனத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, இரண்டாவது முழுமைத் திட்டம் பற்றித் திரு. கரி. இராமசாமி அவர்கள் இங்கே பிரச்சினையை எழுப்பினார்கள். சென்னை மாநகர் இன்று இந்தியாவில் மிக விரைவாக வளர்ந்து வரும் மாபெரும் நகரங்களில் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. அது பல்வேறு கோணங்களில் வளர்ந்து வரும்பட்சத்தில், பல்வேறு பிரச்சினைகளும், சிக்கல்களும் ஏற்படுவது இயல்பு. சென்னை மாநகரின் வளர்ச்சியில் எதிர்நோக்கி இருக்கும் பல பிரச்சினைகளைத் தீர்க்கும்பொருட்டு, சென்னையில் கட்டட வளர்ச்சியை ஒழுங்குபடுத்தி விரிவுபடுத்தும்பொருட்டு, இரண்டாவது முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதில், அனைத்துத் தரப்பிலும் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு, தற்போது எதிர்நோக்கி இருக்கும் பல பிரச்சினைகள் களையப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 மே 4]

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) திரு. சுதர்சனம், நேரம் ஆயிற்று. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை வரைமுறைப்படுத்தும் திட்டம் பற்றிச் சொன்னார்கள். 1999, 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு, அரசை நம்பி, மக்கள் பணத்தைக் கட்டியிருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், புதிய ஓர் அவசரச் சட்டத்தையோ அல்லது இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒரு புதிய சட்டத்தையோ கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அரசின் கவனத்தில் இருக்கிறது. ஆழ்ந்த பரிசீலனையில் இருக்கிறது. நல்லதொரு முடிவை அரசு விரைவில் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** 83 ஆண்டு வாழ்க்கையில், 50 ஆண்டுகள் சட்டமன்றப் பணியாற்றி, 6 கோடி மக்களின் நல்லாதரவுடன் ஐந்தாவது முறையாகவும் முதலமைச்சர் பொறுப்பேற்று, சட்டமன்றப் பணிகளில் மட்டுமல்ல, அன்று 44–வது வயதிலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர்; இன்று 84–வது வயதிலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கின்ற வரலாறு படைத்து, உலக சரித்திர சாதனைப் புத்தகத்தில், கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறப் போகும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி)

இமயத்தின் எல்லை கண்ட எம்மொழி தமிழுக்குச் செம்மொழி சிம்மாசனம் தந்த முத்தமிழறிஞரே! அறநிலையத் துறையிலே சீர்வளர் திருவாரூர் தேரை ஓட்டி, சமயச் சான்றோர்களின் நெஞ்சம் மகிழச்

செய்த அஞ்சுகத் தாயின் அருந்தவப் புதல்வரே! 'ஆண்டவன்முன் அனைவரும் சமம்' என்று ஏடுகளில், எழுத்துக்களில் மட்டுமே இருந்தது. ஆனால், ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் உறங்கிக்கொண்டு மட்டுமே இருந்தனர். இத்தனை நூற்றாண்டுகளாய் ஆலயங்களின் கதவுகள் திறக்கப்படவே இல்லை. இந்தச் சமனற்ற நிலையை மாற்றி, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க ஆணை பிறப்பித்த அறநிலையச் செம்மலே! திராவிட இயக்கத்தின் தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்த ஜாதி என்ற முள்ளை அகற்றிய 6 கோடி மக்களின் தலைவரே! வானுயர் கோபுரங்கள் கொண்ட கோயில்களில் வாழும் கடவுளுக்கு அனைவரும் பூசை செய்ய உரிமை பெற்றுத் தந்ததோடு மட்டுமல்லாமல், கடந்த காலங்களில் தேங்கிக் கிடந்த திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் திருக்குடமுழுக்கு விழாக்களை விரைந்து முடிக்க வழிகாட்டிய முத்தமிழ் முதல்வரே! கிராமக் கோயில் பூசாரிகளின் வாழ்வை வளப்படுத்த வாரியம் அமைத்துத் தந்த வாழும் வள்ளுவரே! 21 ஆம் நூற்றாண்டின் இலக்கிய வானில் ஒரு விடிவெள்ளியாக, தென்னாட்டு பிளாட்டோவாக, சமூக விஞ்ஞானியாக, நடமாடும் சூரியனாக இன்று நம்மை வழிநடத்தும் வாழும் பெரியாரே! உங்களை வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதியின் காவலராய் நாடாளும் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக, நிதியின் காவலராய் இருந்து, இந்த அவையின் முன்னவராய், மூத்தவராய் இருந்து வழிநடத்தும் எங்கள் இனமானப் பேராசான் அவர்களையும் வணங்கி, எங்களின் நம்பிக்கை முனையாய், என்னை வார்த்தெடுத்த சிற்பியாய், திராவிட இனத்தின் தன்னம்பிக்கை மூளையாய், இளைய தலைமுறையின் முன்னோடியாய், இளைஞர்களுக்கு வழிகாட்டி நம்பிக்கை ஒளி காட்டும் தளபதி அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கழகப் பொருளாளர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும் வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

வருங்காலத் தலைமுறையினர் சமூக நீதியின் வாயிலாகப் பெறக்கூடிய அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு அல்லும், பகலும் தீவிர முயற்சி மேற்கொண்டு, கடந்த ஓராண்டில் அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காக எடுத்துள்ள நடவடிக்கைகளையே தனது வெற்றிப் பாதையின் அடிச்சுவடுகளாகப் பதித்து, தமிழ் கூறும் நல்லுலகின் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நடைபோட்டு வந்துள்ளார்.





2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் நிலப் பட்டா, தகுதியுடையோருக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இணைப்புடன்கூடிய இலவச எரிவாயு அடுப்பு, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள், வேளாண் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், நலிவுற்ற வேளாண் பெருமக்களின் கடன் வட்டியுடன் தள்ளுபடி, ஒருங்கிணைந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், இப்படி அடுக்கடுக்கான திட்டங்களை முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டங்கள் எல்லாம் சாத்தியமா, இவை நடக்குமா என்று வியந்தவர்கள் சிலர். இவை நடக்காது, நடக்கவும் கூடாது என்று மனப்பால் குடித்தவர்கள் சிலர். ஆனால், சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பதைத் தாரக மந்திரமாக ஏற்றுச் செயல்படும் நமது வரலாற்று நாயகர் முதல்வர் கலைஞர் அவர்கள், இவை அனைத்தையும் மிகச் சாதுரியமாகச் செயல் வடிவில் நிகழ்த்திக் காட்டி, பெரிய பொருளாதார நிபுணர்களையே வியக்க வைத்துள்ளார்கள்.

*பிற்பகல் 1–50*

இப்படி, முடியாது என்பதையெல்லாம் முடித்துக் காட்டிய தலைவர் கலைஞர் அவர்களின் சாதனை மைல் கற்கள் ஏராளம். இந்து சமய அறநிலையத் துறையில் இனி ஓடவே ஓடாது என்று கைவிடப்பட்டு நின்றுபோன திருவாரூர் ஆழித் திருத்தேரை 1970 ஆம் ஆண்டில் மீண்டும் உலா வரச் செய்து சாதனை படைத்ததுபோல, 21 ஆண்டுகளாகப் பழுதடைந்து ஓடாதிருந்த கும்பகோணம் அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயில் திருத்தேரைச் சீரமைத்து, கடந்த 1–5–2007 அன்று தேரோட்டம் நடத்தி மேலும் ஒரு சாதனை படைத்தவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

திருக்கோயில்களைக் கட்டுவது ஒரு பெரும் அறப் பணி என்றால், இருக்கும் கோயில்களை முறையாகப் பராமரித்து, அங்கு, பூசை, திருவிழா முதலியன தங்குதடையின்றி நடைபெறுவதற்கு ஆவன செய்வது ஒரு மாபெரும் அறப் பணியாகும். இந்த நிதியாண்டில் 500 திருக்கோயில்களில் திருப்பணி செய்யப்பட்டு முடிக்கப்படுமென்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. மக்கள் நலனுக்காக, சொன்னதைச் செய்வதையும், சொல்லாததையும் செய்வதையும் தன் தலையாய பணியாகக்கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி தமிழகத்தில் நடைபெறுவதால், இத்துறை அந்த 500 திருக்கோயில்களுடைய எண்ணிக்கையையும் தாண்டி, இதுவரை

இந்தக் கழக ஆட்சி பொறுப்பேற்ற ஓராண்டில் மட்டும் 906 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு விழாக்களை நடத்தியிருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மேலும் சுமார் 500 திருக்கோயில்களில் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தலைவர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில், சொல்லாமலேயே செய்யப்பட்டுள்ள மற்றொரு நலத் திட்டத்தைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

திருக்கோயில்கள் திருப்பணிக்காக அரசு ஆண்டுதோறும் ரூபாய் 75 இலட்சத்தை மட்டுமே ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் முதன்முறையாக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழகத்தின் வரலாற்றுக் கருவூலமாகவும் விளங்கி, தமிழர்களுடைய பண்பாட்டைச் சித்தரிக்கும் திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருவதால், பழைமையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க 48 திருக்கோயில்களை முதல் கட்டமாகத் தெரிவு செய்து, அங்கு திருப்பணி செய்வதற்கு 9.87 கோடி ரூபாய் அரசு நிதியை இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளார்கள். நிதி வசதி இல்லாமல் பராமரிப்பின்றிச் சிதிலம் அடைந்திருக்கும் இத்திருக்கோயில்கள் பழைமை மாறாமல் பழுதுபார்க்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் திகழ்ந்திட இத்திட்டம் வழிகோலும் என்பதால், தமிழக மக்கள் அனைவரும் பாராட்டி, வரவேற்றுள்ளனர்.

அதேபோல, கல்வி பயிற்றுவிக்கும் கல்விக் கூடங்களாகவும், இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளை வளர்க்கும் கலைக் கூடங்களாகவும், நூலகங்களாகவும், நீதிமன்றங்களாகவும், மருத்துவச் சாலைகளாகவும் பன்னெடுங்காலமாகத் திகழ்ந்து வந்த பல திருக்கோயில்கள் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளன. இத்தகைய 30 பழம்பெரும் கோயில்கள் நீண்ட காலமாகக் குடமுழுக்குச் செய்யப்படாமல் உள்ளன. இவை அனைத்திலும், நிதி வசதிபெற்ற திருக்கோயில்களின் உபரி நிதியைக் கொண்டு மூன்றாண்டு காலத்திற்குள் திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

திருக்கோயில்களுக்கும், மடங்களுக்கும் சேர்த்து மொத்தம் 4,78,875 ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன. 1963 ஆம் ஆண்டில் கொண்டு



வரப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டங்கள் செயல்படுத்தப்பட்டபோது திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குத் தவறுதலாகத் தனி நபர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது. நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போதும் திருக்கோயில் நிலங்கள் பல தனி நபர்கள் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சுமார் 23,916 ஏக்கர் நிலங்கள் இவ்வகைப்பட்டவை என அறியப்பட்டன. இவற்றை மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இத்துறை அறிவித்தது. இதற்கு முதல் கட்டமாக, வாதுரைகள் தயாரித்து, அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர் இதன்மீது முறைப்படி விசாரணை நடத்தி, ஆணை பிறப்பிக்க வேண்டும். இந்த ஆணையின் அடிப்படையில் திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்படும். வாதுரைகளைத் தயாரித்து, மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்தாலும், அவற்றின்மீதான விசாரணைப் பணியை மாவட்ட வருவாய் அலுவலர்கள் தங்களின் பல்வேறு முக்கியப் பணிகளிடையே கவனிக்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

இதனால், திருக்கோயில் நில மீட்பு நடவடிக்கைகள் நீண்ட காலமாக முடங்கிக் கிடந்தன. இது பற்றி அறிந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இவ்வழக்குகளை விரைவில் விசாரித்து முடிப்பதற்கென்றே மூன்று சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களை நியமித்திட ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நலனுக்காகச் சொல்லாததையும் செய்து வரும் தலைவர் கலைஞர் அவர்களின் சாதனை மகுடத்தில் இதுவும் ஒரு மணியாகும்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சில இடங்களில் ஆக்கிரமித்து, கூட்டாக வீடு கட்டி திருக்கோயில்களுக்கு எந்தவிதத் தொ யையும் செலுத்தாமல் நீண்ட காலமாக அனுபவித்து வரும் ஏ யெளிய நடுத்தரப் பிரிவினரின் அனுபவத்தை முறைப்படுத்தி, வர்கள் மின்னிணைப்பு, குடிநீர் வசதி போன்றவை பெறுவதற் உதவ வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கை இந்த மாமன்றத்தி சென்ற ஆண்டு எழுப்பப்பட்டபோது, இது பற்றிப் பரிசீலிக்கப்படு என்று நான் தெரிவித்தேன்.

*பிற்பகல் 1–55*

*ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்* என்ற கொள்கைப்படி நல்லாட்சி நடத்தும் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு இதில் நல்லதொரு முடிவை எடுத்துள்ளது. திருக்கோயிலின் நேரடிப் பயன்பாட்டிற்குத் தேவையற்ற நிலங்களில் நீண்ட காலமாகக் கூட்டாக வீடு கட்டி அனுபவித்து வருபவர்களை, அந்தந்தத் திருக்கோயிலின் வாடகைதாரர்களாக ஆக்கி, விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்படும் நியாய வாடகையை அவர்களிடம் வசூலித்து மின்னிணைப்பு, குடிநீர் வசதிபோன்ற அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கு அனுமதி வழங்கும்படி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதனால் சுமார் 21 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுவார்கள். இந்து சமய அறநிலையத் துறை, திருக்கோயில் திருப்பணி, திருவிழா முதலியவற்றில் கவனம் செலுத்துவதோடு, ஆன்மீகத்தின்மூலமாக ஆக்கபூர்வமான சமுதாய நலப் பணிகளிலும், பல்வேறு வளர்ச்சிப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்கிறது. அவற்றில் ஒன்று, அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கொடுப்பதாகும். இத்திட்டத்திற்குத் தனியார் நிலங்களை எளிதில் பெற இயலாத நிலையில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயிலுக்குச் சொந்தமான எந்தவித வருமானமும் இன்றித் தரிசாக இருக்கும் நிலங்களைச் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி அளித்து வருகிறது.

குறிப்பாக, தொழில் வளர்ச்சியா, குடிநீர் வசதித் திட்டமா, கல்வி நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டுமா, சாலைகள் மேம்பாடா, இருப்புப் பாதையை விரிவுபடுத்த வேண்டுமா, பேருந்து நிலையங்களை விரிவுபடுத்த வேண்டுமா, தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்க வேண்டுமா, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்படுத்த வேண்டுமா, கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்திற்கு இடம் வேண்டுமா, துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமா, இப்படி இந்து சமய அறநிலையத் துறை, மேலே கண்ட அனைத்துத் தேவைகளுக்கும் சேவை மனப்பான்மையுடன், மக்கள் பணியே மகேசன் பணி என்பதை சிரமேற்கொண்டு, திருக்கோயில் நிலங்களைச் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி வழங்கி வருகிறது. இதனால் நாடும் வளர்கிறது. நில விற்பனைத் தொகையால் திருக்கோயில்களும் வளம்



பெறுகின்றன. இவ்வகையில், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, மேலே குறிப்பிட்ட நலப் பணிகளுக்காக இதுவரை 121.38 ஏக்கர் திருக்கோயில் நிலங்களை விற்பனை மற்றும் நில எடுப்பின்மூலம் வழங்கிட அரசு அனுமதி அளித்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, சில முக்கியத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கு வழிகோலும் வகையில், அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றி, அரசாணை பிறப்பிக்கப்படுவதை எதிர்நோக்கி, தேவைப்படும் இனங்களில் நிலத்தின் முன்மொழிவு செய்ய அனுமதியும் வழங்கப்படுகிறது.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய மற்றுமோர் அரும்பெரும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். தமிழ்நாடு ஜமீன் ஒழிப்புச் சட்டம், தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம் ஆகிய நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைப்போல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான பெரும்பான்மையான நிலங்கள் உழுபவர்களுக்கே உடைமையாக்கப்பட்டன. இதனால் திருக்கோயில்களுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையில் மோகினித் தொகை என்றும், தஸ்திக் தொகை என்றும் திருக்கோயில்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக 3,000 திருக்கோயில்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் ரூபாய் 25 இலட்சம் என்ற அளவிலேயே இத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனை இன்றைய விலைவாசிக்கேற்ப உயர்த்த வேண்டுமென்று ஏறத்தாழ 40 ஆண்டு காலமாக இந்தக் கோரிக்கை நிலுவையில் இருந்து வந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக்கொண்டு, திருக்கோயில்களுக்கு வழங்கப்பட வேண்டிய இத்தொகையை 10 மடங்காக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். ஆக, ஆண்டொன்றுக்கு ரூபாய் 25 இலட்சம் என்று இதுவரை வழங்கப்பட்ட நிதி, இனி ஆண்டொன்றுக்கு ரூபாய் 2.5 கோடியாக உயர்த்தப்படும். சுமார் 3,000 திருக்கோயில்கள் நிலைத்த வருவாயின்றி நீண்ட நெடுங்காலமாக இன்னலுற்றிருந்த நிலை மாறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது சிறப்பு மிக்க முடிவினால் அத்திருக்கோயில்களில் கால பூஜைகள் முறையாக நடைபெறவும், பராமரிப்புப் பணிகள் ஒழுங்காக நடைபெறவும் வழி ஏற்படும்.

பல்வேறு இடங்களில் திருக்கோயில் நிருவாகத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையேயான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்து வந்தன. உள்ளாட்சித் துறையை நாடு போற்றும் நல்லாட்சித் துறையாக மாற்றிய நாயகர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் அறநிலையத் துறைக்கும், நாட்டின் ஆணிவேராகிய உள்ளாட்சித் துறைக்கும் உள்ள தொடர்பினைச் சுட்டிக்காட்டி, இரண்டுக்குமிடையே பாலம் அமைத்துள்ளார்கள்.

சென்ற ஆண்டு பூவிருந்தவல்லி நகராட்சிக்காகத் திருக்கோயில் நிலத்தைப் பெற்று திருக்கோயிலுக்குக் கணிசமான தொகையை விலையாக அளித்து, பிரச்சினைகளை எவ்வாறு விரைவில் தீர்க்கலாம் என்பதற்கு வழிகாட்டினார். இந்த ஆண்டு அவரது தலைமையில், தொடர்புடைய இரு துறைகளின் அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களின் கூட்டம் நடத்தி, பழனி நகராட்சிக்கும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கும் இடையே நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்து வந்த பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்து வைத்தார்கள். பழனி திருக்கோயில் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய சொத்து வரி, குடிநீர்ப் பராமரிப்புக் கட்டணம் முதலியவற்றிலிருந்த பிரச்சினைகளுக்கும் முடிவு காணப்பட்டுள்ளது. இதேபோல, நாகப்பட்டினம், குளித்தலை ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

*பிற்பகல் 2–00*

திருக்கோயில்களில் அர்ச்சகர்களை நியமனம் செய்வதைப் பொறுத்தமட்டில், அரசமைப்புச் சட்டத்திலுள்ள தனி மனித உரிமைகளின்படி, சாதி வேறுபாடின்றி, உரிய தகுதியும், பயிற்சியும்பெற்ற இந்துக்கள் அனைவரும், அவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால், சைவத் திருக்கோயில்களிலும், வைணவ சமயத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தால், வைணவத் திருக்கோயில்களிலும் அர்ச்சகர்களாக நியமிக்கப்படலாம் என்பதே இந்த அரசின் கொள்கை. உரிய தகுதியும், பயிற்சியும்பெற்ற அர்ச்சகர்கள் போதிய அளவில் இல்லாததாலும், இந்து சமய அறநிலையத் துறை சார்பாக நடத்தப்படும் ஒன்றிரண்டு அர்ச்சகர் பள்ளி நிலையங்களும் செயலிழந்துள்ளதாலும், அரசே முதற்கட்டமாக, ஆறு இடங்களில் அர்ச்சகர் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்க முடிவு செய்துள்ளது. அதன்படி, திருவண்ணாமலை, மதுரை, பழனி, திருச்செந்தூர் ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிறுவனங்களும், சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி





நிறுவனங்களும் தொடங்கப்பட்டுள்ளன. மாணவர் சேர்க்கையும், ஆசிரியர் தேர்வும் முடிந்துள்ள நிலையில், இந்தப் பயிற்சி நிறுவனங்களில் முறையாகப் பயிற்சி வகுப்புகள் விரைவில் தொடங்கப்படும்.

*1996* ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபோது, இந்து சமய அறநிலையச் சட்டப்படி, மாநில அளவில் அரசுக்கும், ஆணையருக்கும் ஆலோசனை கூறி, வழி நடத்திட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால், முந்தைய அரசு சட்ட ரீதியான இந்த நடைமுறைகளைப் புறக்கணித்தது. இவ்வரசு பொறுப்பேற்றதும், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆன்றோர்கள், சான்றோர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவினை மீண்டும் அமைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்து மதச் சடங்குகளில் முக்கியமான ஒன்றான திருமணம் திருக்கோயில் வளாகத்தில் நடத்தப்படுவது வழக்கமான ஒன்றாகும். மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் ஏழையெளிய மக்கள் செய்து வந்த இத்தகைய திருமணங்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் தடை செய்யப்பட்டிருந்தன. ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று இத்தடையை நீக்கி, திருக்கோயில் வளாகத்தில் தொடர்ந்து திருமணங்கள் நடத்தலாம் என இவ்வரசு பொறுப்பேற்றதும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிதி வசதியும், இட வசதியும் உள்ள திருக்கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டவும், அவற்றை ஏழையெளியோர் மற்றும் நடுத்தரப் பிரிவினர் பயன்படுத்தும் வகையில், குறைந்த, நியாயமான வாடகைக்கு அளிக்கவும் தலைவர் கலைஞரின் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலையை மாற்றி, தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் தமிழர் தம் இறை வழிபாட்டினை, தம் தாய் மொழியாகிய தமிழிலே செய்திடவும், திருக்கோயில் வழிபாட்டிற்கு தமிழுக்குரிய சிறப்பினை நிலைநிறுத்தவும், பொது மக்களின் நீண்ட நாள் விருப்பத்தினை நிறைவேற்றவும், தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்றுதான் அறிவிப்புப் பலகைகள் திருக்கோயில்களில் வைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு ஆணை பிறப்பித்தார்கள். தமிழில் அர்ச்சனை செய்வதை ஊக்குவிக்க

வேண்டுமென 1992 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு"

என்ற திருமூலரின் வாக்குக்கேற்ப இனி திருக்கோயில்களில் பக்தர் ஒருவர் அர்ச்சனை செய்யுங்கள் என்று சொன்னால், அது தமிழில் அர்ச்சனையாகவே இருக்கும் என்ற நிலையை ஏற்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வரசு பொறுப்பேற்றதும், விநாயகர், முருகவேல், சிவன், திருமால் போன்ற 14 போற்றி நூல்களை மறுபதிப்புச் செய்து, திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சர்களுக்கும், திருக்கோயில்களுக்கும் இலவசமாக அவை வழங்கப்பட்டு, தமிழ் அர்ச்சனைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்கள் வழிபாட்டு மையங்களாக மட்டுமல்லாமல், சமுதாயப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றன. திருக்கோயில்கள் சார்பாக 36 பள்ளிகள் தமிழ்நாடு முழுவதும், அதேபோல, ஆறு கல்லூரிகளும், ஒன்பது சித்த மருத்துவமனைகளும், இரண்டு ஆங்கில மருத்துவமனைகளும், இரண்டு முதியோர் இல்லங்களும், காது கேளாதோர் பள்ளி ஒன்றும் சாதி சமய வேறுபாடின்றி நடத்தப்பட்டு வருகின்றன. இதேபோல, ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, உறைவிடம், கல்வி வழங்கும்பொருட்டு 31 திருக்கோயில்களின் சார்பில் 34 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றின்மூலம் 668 சிறுவர்களும், 330 சிறுமியர்களும் பயன்பெறுகின்றனர். இக்கருணை இல்லங்கள் அனைத்திற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கருணையால், சென்ற ஆண்டு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஞானசம்பந்தர், தாயுமானவர், மாணிக்கவாசகர், ஔவையார், சேக்கிழார் போன்ற அருளாளர்களுக்கு ஆண்டுதோறும் விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

பிற்பகல் 2–05

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், சேக்கிழார் பிறந்த குன்றத்தூரில், சேக்கிழார் மண்டபம் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இக்கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில், குன்றத்தூரில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சேக்கிழார் மண்டபம்





அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். சேக்கிழார் விழாவை ஆண்டுதோறும் நடத்துவதற்கு இம்மண்டபம் பயன்படுவதோடு, இதர நாட்களில் சொற்பொழிவு நடத்தவும், படிப்பகமாகவும் இது பயன்படும். திருக்கோயில்களின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள திருக்கோயில் பாதுகாப்புப் படையில் (Temple Protection Force) 1,000 காவலர்களும், 2,687 ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களும் பணிபுரிகின்றனர். இது தவிர, நிதி வசதி மிக்க திருக்கோயில்களில், கோயில் சார்பாகவே காவல் பணியாளர்கள் உள்ளனர். கள்வர் எச்சரிக்கை மணி போன்ற எச்சரிக்கைச் சாதனங்களும் பல திருக்கோயில்களில் பொருத்தப்பட்டுள்ளன. கள்வர் எச்சரிக்கை மணி திருக்கோயில் கதவுகளில் மட்டுமின்றி உண்டியல்களிலும் பொருத்தப்படத்தக்கதாகும். எனவே முக்கியத் திருக்கோயில்களில், கோயிலுக்கு வெளியே உண்டியல் வைத்துள்ள சிறிய மற்றும் நடுத்தரத் திருக்கோயில்களிலும் உண்டியல்களுக்கும் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் அதிக அளவில் வருகை தரும் திருக்கோயில்களில், அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரவும், இருக்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கும் இந்த அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்கெனவே பழனி, திருச்செந்தூர், சமயபுரம் போன்ற திருக்கோயில்களில் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மேலும் பல திருக்கோயில்களில் இத்தகு வசதிகள் மேம்படுத்தப்படும்.

நான் இதுவரை குறிப்பிட்ட திட்டங்கள் மட்டுமின்றி, திருக்கோயில் பணியாளர்களுக்கும் பல நல்ல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி உள்ளது. அரசு ஊழியர்களைப்போலவே திருக்கோயில் பணியாளர்களுக்கும் 50 விழுக்காடு அகவிலைப் படியை அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்து ஆணையிட்டது இவ்வரசு. அதேபோல, அரசு ஊழியர்களுக்கு இணையாக, அவ்வப்போது அறிவிக்கப்படும் அகவிலைப் படியை திருக்கோயில் பணியாளர்களுக்கும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய ரூ.20,000 கட்ட வேண்டும் என்று விதிக்கப்பட்டு இருந்த நிபந்தனையைக் கருணையோடு நீக்கியது தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு. பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய 59 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 41.7 இலட்சம் குடும்ப நல உதவியாக வழங்கி,

நீண்ட காலக் குறையைத் தீர்த்தது இவ்வரசு. அதேபோல், பணியில் இருக்கும்போது இறந்த 11 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம் வழங்கியுள்ளது இவ்வரசு.

கிராமப்புறத்தில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, கிராமப்புறப் பூசாரிகள் நல வாரியம் என்ற ஒரு தனி வாரியத்தை நிறுவி, கிராமக் கோயில் பூசாரிகளின் நீண்ட நாள் கோரிக்கையை இவ்வரசு நிறைவேற்றியது.

இவற்றையெல்லாம் பொது மக்களும், சான்றோர்களும், பெருமக்களும், ஆன்மீக நெறியாளர்களும், திருக்கோயில் பணியாளர்களும் வரவேற்று மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களைப் போற்றுகிறார்கள். இத்தகைய சிறப்புப்பெற்ற, இந்தியத் திருநாட்டிற்கே பெருமை சேர்த்து வரும் எங்கள் தலைவர், முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்களை வாழ்த்துவதற்கு எனக்கு வயதும், தமிழ்ப் புலமையும் இல்லை. எனவே, எங்கள் மனித நேய தெய்வமாம் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்களை வணங்கி,

*அன்பின் வடிவாய் விளங்கும் தலைவா போற்றி!*
*ஆற்றலின் உருவமாய் விளங்கும் தலைவா போற்றி!*
*இனிய தென்றலாய் விளங்கும் தலைவா போற்றி!*
*ஈடற்ற உழைப்பாய் விளங்கும் தலைவா போற்றி!*
*உன்னதமாய் விளங்கும் தலைவா போற்றி!*
*ஊர் போற்றும் தலைவா போற்றி!*
*எழிலார்ந்த தலைவா போற்றி!*
*ஏடு போற்றும் நாடு பெற்ற தலைவா போற்றி!*
*ஓல்காப் புகழ்பெற்ற தொல்காப்பியமே போற்றி!*
*ஓங்கு புகழ்பெற்ற திராவிடக் காவியமே போற்றி! போற்றி!*

என்று போற்றி, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தங்கள் தொகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் தொடர்பாகப் பல்வேறு கோரிக்கைகளை, தாங்கள் பேசும்போதும், அதேபோல வெட்டுத் தீர்மானங்களாகவும், இங்கே வைத்துள்ளார்கள்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் நான் எனது கவனத்தில் கொண்டுள்ளேன். ஏறத்தாழ 217 வெட்டுத் 





தீர்மானங்கள் இங்கே வந்து இருக்கின்றன. அவற்றிலே கொள்கையை விளக்கும் வகையிலே 15 வெட்டுத் தீர்மானங்களும், அடிப்படை வசதிகளுக்காக 13 வெட்டுத் தீர்மானங்களும், ஆக மொத்தம் 217 வெட்டுத் தீர்மானங்களும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் ஒப்புதலோடு, இங்கே 55 அறிவிப்புகள் துறையின் சார்பிலே அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டு உள்ளது. காலத்தின் அருமை கருதி, அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கும் 55 அறிவிப்புகளையும்@ இந்த அவையிலே நான் படித்து அறிவித்ததாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பிலே பதிவு செய்திட வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் பதிலுரையில் அளித்துள்ள விளக்கங்களும், பதில்களும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தி தரும் என்ற நம்பிக்கையுடன், பதிலுரையில் ஏதேனும் கோரிக்கைகள் விடுபட்டு இருப்பின், அதனையும் இவ்வரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்பிற்குரிய தலைவரும், தமிழ் இனத்தின் தலைவரும், எங்களுடைய குடும்பத்தினுடைய தலைவருமான முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பொன் விழா இன்னும் சில தினங்களில் நடைபெற இருக்கிறது. இந்த மாமன்றத்தில் வருகின்ற 12 ஆம் தேதி நாடாளுமன்ற சபாநாயகர் அவர்கள் வருகை தந்து, இந்த மாமன்றத்தில் பேசி, அவர்களுக்காக வாழ்த்துக்களைத் தெரிவிக்க இருக்கின்றார்கள். இங்கே இருக்கக்கூடிய நம்முடைய தோழமைக் கட்சி தலைவர்களும், மற்ற கட்சித் தலைவர்கள் எல்லாம் இந்த மாமன்றத்தில் வாழ்த்துரைகள் வழங்க இருக்கின்றார்கள். 11 ஆம் தேதி ஓ பாரதப் பிரதமர் அவர்களும், நம்முடைய அன்னையார் மாண்

@ 521 முதல் 537 வரையிலான பக்கங்களில் இணைப்பு அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. சுப. தங்கவேலன்] [2007 மே 4

சோனியா காந்தி அவர்களும், இந்தியத் திருநாட்டினுடைய முன்னாள் தலைவர்கள் எல்லாம் அவர்களுக்காக வருகை தந்து, இந்த 50 ஆண்டு காலச் சட்டமன்றப் பேரவையினுடைய வரலாற்றில் அவர்கள் ஆற்றிய பணிகளையெல்லாம் எடுத்துச் சொல்லவிருக்கின்றார்கள். உங்களைப்போன்றவர்களுக்கெல்லாம் இருக்கக்கூடிய எண்ணமெல்லாம், எங்களையும் அறியாமல் எங்களுடைய இதயத்திலே ஓர் உறுத்தல், ஒரு நெருடல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. காரணம், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆற்றலை, அற்புதமான நிர்வாகத் திறமையை எப்படியெல்லாம் பாராட்டி இந்த அவையிலே பேசியிருப்பார்கள், மக்கள் மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகிறபோது, ஏற்கெனவே கடந்த காலங்களில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களைப்பற்றிப் பல்வேறு நேரங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல செய்திகளைச் சொல்லியிருந்தாலும், 2 செய்திகளை மட்டும் இந்தப் பொன் விழா ஆண்டில் இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேன்.

கேரள மாநிலத்திற்கு அந்த மாநிலத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்கள் அழைப்பினை ஏற்று, பொதுக் கூட்டத்திற்குச் சென்றார்கள். அவரோடு அண்ணன் மன்னை அவர்களும் சென்றிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கேரள மாநிலத்தில் காலூன்றி விடக் கூடாது என்று கருதியவர்கள் சமூக விரோதிகள் துணையுடன் அந்தக் கூட்டத்தைக் கலைத்துவிடுவதற்குத் திட்டமிட்டுக் கலவரத்தை விளைவித்தார்கள். அந்தக் கலவரத்தை எதிர்த்து, இங்கே நம்முடைய தலைவர் அவர்கள் தமிழகம் வந்து சேர்ந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பதைபதைத்துப் போய் இது பற்றி அவர்களோடு தொலைபேசியில் பேசிவிட்டு இங்கே வந்தவுடன், அண்ணன் மன்னை அவர்களை அழைத்துச் சில செய்திகளைச் சொன்னார்கள். அதை நான் சொல்ல விரும்பினாலும்கூட, ஒரு சிறு எழுத்துக்கூட அண்ணாவினுடைய வார்த்தையிலிருந்து வந்த எழுத்துக்கள் குறைந்துவிடக் கூடாது என்பதற்காக, அந்த அடைப்புக் குறியிட்ட செய்தியை நான் படிக்க விரும்புகிறேன். அண்ணன் மன்னை அவர்களிடத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்கிறார்கள்; "அவன் உயிர் அவனுக்கு மட்டும் சொந்தம் அல்ல. தமிழகத்தில் இருக்கிற பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற உயிர். துணிவு வேறு. அசட்டுத் தைரியம் வேறு. எத்தனையோ பேர் கழகத்திற்கு வரலாம், போகலாம். ஆனால் ஒரு கலைஞரைப் (தலைவருடைய பெயர்) பெற முடியாது, நினைவிருக்கட்டும்" என்று அண்ணன் மன்னை அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள்.



2007 மே 4] [திரு. சுப. தங்கவேலன்]

பிற்பகல் 2–15

இன்னொரு சந்தர்ப்பத்தில் நம்முடைய அருமை அண்ணன் அவர்களுடைய சொந்த ஊரான மன்னார்குடியிலே பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே பேச வேண்டும். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் வேறு கூட்டத்தை முடித்துவிட்டு வருவதற்குக் காலதாமதம் ஆகிறது. அண்ணா அவர்கள் முன்னாலே வந்து மன்னார்குடியிலே பேசிவிட்டு, அடுத்த கூட்டம் பட்டுக்கோட்டையிலே போய்ப் பேச வேண்டும். அந்த மன்னார்குடிப் பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்; "எனக்கு அடுத்து. பணியைத் தொடரப் போவது கலைஞர்தான், தமிழகத்தின் புதிய வரலாற்றினைப் படைக்கும் பொறுப்பினை தி.மு.கழகம் மேற்கொண்டுள்ளது. அதன் முன் பகுதியினை நான் உங்கள் முன் சித்தரித்துக் காட்டியிருக்கிறேன். புதிய வரலாற்றின் அடுத்த பகுதியை நான் விட்ட இடத்திலிருந்து தம்பி கலைஞர் (தலைவருடைய பெயர்) சித்தரித்துக் காட்டுவார்". (மேசையைத் தட்டும் ஒலி) இது மன்னார்குடியில் பேரறிஞர் அண்ணா அவர்கள், தலைவர் கலைஞரைப் பற்றிச் சொல்லிய வார்த்தைகள். இந்தச் செய்திகளைப் பதிய வைத்து 'அண்ணா, நீ எங்கள் தலைவரைப் பாராட்ட இல்லையே' என்று எங்கள் உள்ளத்தில் ஏற்பட்ட அந்தத் தாக்கத்தை, அந்த மனக்குறையைப் போக்கிக்கொள்கிறோம்.

நம்முடைய அன்பிற்குரிய இந்த இயக்கத்தில் கொட்டியும் ஆம்பலும்போல, பல்வேறு நண்பர்கள் இருக்கிறார்கள். நம்முடைய பேராசிரியர் அவர்கள், இந்த இயக்கத்திலே தலைவர் அவர்களை நோக்கி எவ்வளவு துன்பங்கள், துயரங்கள் வந்தாலும், உற்ற சகோதரனாக இருந்து, தோளோடு தோள் நின்று, துணை நின்று இந்த இயக்கத்தையும், தமிழையும், தமிழ்ச் சமுதாயத்தையும் காக்கத் துணை நிற்கும் அன்பிற்குரிய பேராசிரியர், நம்முடைய பொதுச் செயலாளர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய பொருளாளர் அருமை அண்ணன் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தில் கொடியேற்று விழா, பொதுக் கூட்டங்கள், காதணி விழாக்கள், திருமண விழாக்கள் என்று பல்வேறு விழாக்களில் மாவட்டம் முழுவதும், ஒரு

சிறிய குக்கிராமம்கூட விடுபடாமல் சுற்றிச் சுற்றி வந்து அவர்கள் பயணித்த காரணத்தால், அங்கே எங்கள் மாவட்டத்தில் இருக்கக்கூடிய குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நேரடியாக உணர்ந்தவராய், இப்போது மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, தலைவர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிக் கட்டிலிலே ஏறியவுடன், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அவருடைய நெஞ்சத்திலே முள்ளாகத் தைத்தது இராமநாதபுரம் மாவட்டக் குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்த்தாக வேண்டுமென்று கருதினார்கள். இராமநாதபுரம் வந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலே கூட்டத்தைக் கூட்டினார்கள். மக்கள் பிரதிநிதிகளை, அதிகாரிகளை, பொது மக்களைச் சந்தித்தார்கள். ஊராட்சி அமைப்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைச் சந்தித்தார்கள். கருத்தறிந்து வந்தார்கள். தலைவரிடத்திலே பேசி, 616 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்துக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, நம்முடைய அன்பிற்குரிய தலைவர் அவர்கள் நேரடியாக வந்து, அந்தத் திட்டத்தைத் திறந்து வைத்ததன்மூலம், எங்கள் இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய நெஞ்சங்களிலே தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிற எங்களுடைய அன்பிற்குரிய தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மானியக் கோரிக்கையில் பல்வேறு விவரங்களை விரிவாகத் தயாரித்து பதிலுரை சொல்வதைக் காட்டிலும்—இந்த அமைப்பு 5 ஆண்டு காலம் செயலிழந்து கிடந்தது, வீட்டு வசதி வாரியம் எப்படி நடந்தது? நான் யாருடைய மனதையும் புண்படுத்திப் பேசக்கூடியவன் அல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். "எவ்வளவு இடத்தை விற்றிருக்கிறோம், எவ்வளவு இடத்தை ஊராட்சிகளுக்குக் கொடுத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். இது எதைப்போல் இருக்கிறது என்று சொன்னால், பழைய ஜமீன்தார்கள் வெளியேயும் போக முடியாது, நேரடியாக வாடிக்கையாளரைப் பார்த்து விற்கவும் முடியாது. யாராவது ஒரு புரோக்கர்மூலம், அந்த இடத்தை விற்று வா, இந்த இடத்தை விற்று வா என்று சொல்லி, ஆண்டு முழுவதும் இருந்த சொத்துக்களை விற்று, கரைத்துக் கரைத்து, பிறகு கஷ்ட ஜீவனம் என்ற நிலைமைக்கு வருவதுபோல, 5 ஆண்டு காலம் இந்தத் துறையில் விற்கின்ற பணியை மட்டும் செய்து, 5 ஆண்டு காலம் இந்தத் துறை ஓட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் குறையாக





எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். எனவே, 5 ஆண்டு காலம் செயலிழந்திருந்த இந்தத் துறையை—நான் சுருக்கமாகப் பேசுகிறேன். இந்தத் துறையை நாங்கள் எடுத்துச் சிறப்பாகத் தூக்கி நிறுத்த வேண்டுமென்று கடந்த மானியக் கோரிக்கையிலே நான் பேசுகிறபோது சொன்னேன்; யானை படுத்தாலும் குதிரை மட்டம். எனவே, பந்தயக் குதிரையைப்போல இந்தத் துறை தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்படி, அறிவுரையின்படி ஓடும் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், இன்றைக்கு இந்தத் துறையை எப்படி இயக்குவது என்று அதிகாரிகளோடு கலந்து பேசுகிறபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை ஒரு கூட்டத்திலே பேசிய பேச்சு எனக்கு நினைவுக்கு வந்தது. அண்ணா அவர்கள் சொன்னார்கள், 'உடம்பிலே இருக்கக்கூடிய அழுக்கைப் போக்குவதற்காக சோப்பைப் போட்டுக் குளிக்கிறோம். ஆனால், சோப்பை நன்றாகத் தேய்த்துக் குளிக்காவிட்டால், அதுவே உடம்பில் அழுக்காகப் படிந்துவிடும்' என்று அண்ணா அவர்கள் பேசினார்கள். எனவே, இந்தத் துறையின்மீது படிந்த அழுக்கைப் போக்குகின்ற முயற்சியில் ஈடுபடுகிறபோது, நம்மீதும் அந்த அழுக்குகள் படிந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கை உணர்வோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அச்ச உணர்வோடு இந்தத் துறையை நாங்கள் இயக்குகிறோம்.

பிற்பகல் 2–20

அதனுடைய விளைவாக, இந்தத் துறையிலே எவ்வளவு பெரிய வளர்ச்சிகளைக் குறுகிய காலத்திலே அடைந்திருக்கிறோம் என்று சொன்னால், 339 கோடி ரூபாய்க் கடனை 10 மாத காலத்தில் அடைத்து, தமிழ்நாட்டிலே கடன் இல்லாத ஒரு வாரியம் என்ற இடத்திற்கு இன்றைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தக் கடன் எங்களுக்குத் தவணை கடந்த நிலுவை அல்ல. தவணை கடப்பதற்கு முன்னாலேயே இந்தக் கடனை அடைத்ததன்மூலமாக, ஒவ்வோராண்டும் வட்டி செலுத்தாமல் மிச்சமிருப்பது, 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் இந்த வாரியத்திற்கு மிஞ்சுகிறது.

மற்ற என்னென்ன சாதனைகளைச் செய்தோம் என்பதை, நான் இன்றைக்குக் காலத்தின் அருமை கருதிச் சொல்லவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் வேலூர் சட்டப் பேரவைத் தொகுதியினுடைய உறுப்பினர் அருமை அண்ணன் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே

ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்து, கடந்த பத்து மாத காலத்திலே என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் என்ன செய்தோம் என்று சில தினங்களுக்கு முன்னாலே அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்கிறபோது நான் சாதனைப் பட்டியலை எடுத்துப் படித்தேன். அவை அனைத்தும் இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, என்ன சாதனைகளைச் செய்தோம் என்பதை அந்தக் குறிப்பிலேயிருந்து எடுத்து இணைத்துக்கொள்ள வேண்டும்; பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிசை மாற்று வாரியத்திற்கு வருகிறேன். குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி இங்கே பேசுகிறபோது, நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள், இன்னாள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். நொச்சிக்குப்பத்திலிருந்து சீனிவாசபுரம் வரையுள்ள 2,862 வீடுகளை இடித்துவிட்டு, அந்த இடத்திலே 7,320 வீடுகளைக் கட்டுவதாகச் சொன்னீர்களே, என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். குடிசை மாற்று வாரியத்திலிருந்து ஒரு புத்தகம் வந்திருக்கிறது. அண்மையிலே அயர்லாந்து நாட்டினுடைய கட்டட நிபுணர் வந்தார். அவர்களிடத்திலே ஒரு மாதிரி டிசைனைக் கேட்டிருக்கிறோம். உள்ளே பார்த்தால், அங்கே எப்படி வீடு கட்டப் போகிறோம் என்ற அற்புதமான படம் இருக்கிறது. அது ஒரு டிசைன். நொச்சிக்குப்பத்திலும், சீனிவாசபுரத்திலும் வீடுகள் கட்டி முடிந்தால் எப்படியிருக்கும் என்று நம்முடைய தமிழ்நாட்டுப் பொறியாளர்களாலே உருவாக்கப்பட்ட மாதிரி வீடுகளாகும். "எங்களுடைய அம்மா எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய சட்டமன்றத் தொகுதிகளுக்கெல்லாம் வேலைகளைச் செய்து கொடுத்தார்கள், குடிசைகளை மாற்றி அப்புறப்படுத்திக் கொடுத்தார்கள். இப்பொழுது அவ்வாறு இல்லை. எனவே, நாங்களெல்லாம் பாதிக்கப்படுகிறோம்" என்று சொன்னார்கள். இல்லை, தயவுசெய்து திருத்திக்கொள்ள வேண்டும். இப்பொழுது 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அடிப்படை நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் தமிழகமெங்கும் பல்வேறு தொகுதிகளிலே வேலை நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் அங்கே 30 இலட்சம் ரூபாய்க்கு மராமத்துப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பி.எஸ். மூர்த்தி நகரைப் பற்றியும் சொன்னார்கள். அதிலே மொத்தம் 320 வீடுகள் ஏற்கெனவே கட்டப்பட்டன. மாண்புமிகு



முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தேர்தல் அறிக்கைக்கு இணங்க, சென்னை நொச்சிக்குப்பத்திலே 2,862 வீடுகளை இடித்துவிட்டு 7,320 வீடுகள்; அதேபோல, சீனிவாசபுரம், ஆடுத் தொட்டி போன்ற இடங்களிலே எல்லாம் சேர்த்து 7,926 வீடுகள், தலைவர் கலைஞர் அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் கண்டபடி, 30 ஆண்டுகளுக்கு முந்தைய வீடுகளை இடிப்பதற்காக அந்தத் திட்டத்திலேயும் அங்கே ஏறத்தாழ 8,000 வீடுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

மூர்த்தி நகரைப் பொறுத்தவரையில் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் சொன்ன 320 வீடுகளில் 100 வீடுகள் இடிக்கப்பட்டுவிட்டன. இன்னும் 220 வீடுகளை இடிப்பதற்கு, அந்த மக்கள் காலி செய்ய மறுக்கிறார்கள். மூர்த்தி நகர் குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களுக்கு மாற்றிடங்களில் குடியிருப்புகள் கட்ட திட்டமிட்டபடி மதிப்பீடு தயார் செய்து, நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி எல்லாம் பெற்று, டெண்டர் விடுவதற்குத் தயார் நிலையில் இருக்கிறோம். அதற்கு நீங்கள் முழுமையாக ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

அதைப்போல குடிசை மாற்று வாரியத்தினுடைய சாதனைகளையெல்லாம் கையில் வைத்திருக்கிறோம். அவற்றையெல்லாம் படித்தால் இங்கே நேரம் ஆகிவிடும். எனவே, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரு அறிவிப்பைக் கொடுத்தோம், 2013-க்குள் சென்னை மாநகரத்தில் 1,04,900 வீடுகளும், மதுரை மாநகரத்திலே 60,257 வீடுகளும், அதைப்போல, கோயம்புத்தூரிலே 20,200 வீடுகளும் கட்டப்படும் என்று சொன்னோம். அதிலே, முதற்கட்டமாக, இந்த ஆண்டில் எத்தனை ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்பதும் இங்கே பட்டியலில், உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. அவற்றையெல்லாம் இங்கே விரிவாகச் சொல்வதற்கு நேரம் இல்லை. இதனுடைய நோக்கம்— ஆறு மாநகராட்சிகளில், முதல் கட்டமாக பண்டித ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தில் சென்னை, மதுரை, கோவை ஆகிய மூன்று மாநகராட்சிகளில் எடுத்துச் செய்யப் போகிறோம் என்று சொல்கிறபோது, பத்திரிகையாளர், "அப்படியானால் இனிமேல் சென்னையில் குடிசைகளே இருக்காதா" என்று கேட்டார்கள். அதுதான் தலைவர் கலைஞர் ஆட்சியினுடைய குறிக்கோள், இலட்சியம், 1960 ஆம் ஆண்டு இதே சென்னை மாநகரத்தில், இதே மே மாதம் 14 ஆம் தேதி, சென்னை

[திரு. சுப. தங்கவேலன்] [2007 மே 4

மாநகரத்திலே ஒரு மாநாடு நடை பெறுகிறது. சென்னையிலே இருக்கக்கூடிய குடிசைவாசிகளுடைய மாநாடு. அந்த மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள். என்ன பேசினார்கள்? "இந்த மாநகரத்திலே இருக்கக்கூடிய குடிசைகளை, இதைச் சுற்றியுள்ள கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய குடிசைகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்னால், அப்புறப்படுத்தப்பட வேண்டும்; தரமான வீடுகளாக மாற்ற வேண்டும் என்றால், தனி மனிதனாலே முடியாது. ஒரு தொண்டு நிறுவனத்தினாலே முடியாது. ஓர் அரசாங்கம் அதற்கான திட்டத்தைப் போட்டு, ஒரு மிகப் பெரிய வாரியத்தை உருவாக்கி, அதன்மூலம் செயல்படுத்தினால்தான் குடிசைகளை மாற்ற முடியும்" என்று அந்தக் குடிசைவாசிகள் கூட்டிய 1960 மே மாதம் 14 ஆம் தேதி கூட்டிய அந்த மாநாட்டிலே பேசினார்கள்.

இதே மாமன்றத்தில் 1962 ஆம் ஆண்டு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த அருமை அண்ணன் இராம. அரங்கண்ணல் அவர்கள் "குடிசைகளை மாற்றுவதற்கு ஒரு வாரியம் அமைக்க இந்த அரசு முன்வருமா" என்று கேட்டார். 'இல்லை' என்ற பதில் வந்தது. அதற்குப் பிறகு, நமது அன்பிற்குரிய தலைவர் அண்ணா அவர்களுடைய பேச்சையும், நம்முடைய அன்புச் சகோதரர் அருமை அண்ணன் அரங்கண்ணல் அவர்கள் பேச்சையும் நெஞ்சிலே வைத்திருந்து, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற தத்துவத்திற்கிணங்க, அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், முதன்முதலாகக் குடிசை மாற்று வாரியத்தை இந்தியாவிலே உருவாக்கிய வரலாற்று நாயகன் நம்முடைய தலைவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் பகுதியை உருவாக்கி, அவர்களே திறந்து வைத்தார்கள். அதன் பிறகு, 1973-ல் கோட்டூர்புரத்திலே கட்டிய வீட்டை நம்முடைய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய துணைவியாருடன், குடும்பத்தோடு அழைத்து வந்து, அந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்கச் சொன்னார்கள். அந்தப் புகைப்படங்கள் எல்லாம் இங்கே அச்சிட்டு உங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போல, வேறு பல நகராட்சிப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில், ஏராளமான முறையில், 12-வது நிதிக் குழுத் திட்டத்திலும், வேறு சில நிதிகளையும் பெற்றுப் பல இடங்களிலே வீடுகளையும், அடிப்படைக் கட்டமைப்புகளையும், இந்தத் துறை கட்டவிருக்கிறது என்பதையும் சுருக்கமாகச் சொல்லி, கொண்டு வந்த குறிப்புகள், நான் பேசுவதற்காக உருவாக்கிக் கொண்டு வந்த இந்தக் கத்தைபோன்ற கட்டுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, நீங்கள் எல்லாம் பசியோடு இருப்பீர்கள்; சோதனைக்குள்ளாக்கிவிடக் கூடாது என்பதற்காக, அந்தக் கட்டிலிருந்து இதை அப்புறப்படுத்திவிட்டு, வரிசை எண் 1 முதல் 24 வரை உள்ள அறிவிப்புகள்@ அச்சடிக்கப்பட்டு, உங்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை அனைத்தையும் நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



2007 மே 4] [திரு. சுப. தங்கவேலன்]

*பிற்பகல் 2-30*

மாண்புமிகு உறுப்பினர்களால் 190 வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டிருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களைக் குப்பைத் தொட்டியிலே போடாமல், புத்தகமாகப் போட்டு, அவற்றையெல்லாம் படித்துப் பார்த்திருக்கிறோம்.

வெட்டுத் தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்களின் அந்த நம்பிக்கை உணர்வு பட்டுப் போய் விடாமல், வீணடித்துவிடாமல், அவற்றையெல்லாம் படித்துப் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று உரிய நேரத்தில் அவை நிறைவேற்றப்படும்.

(1) வெட்டுத் தீர்மானங்கள்: வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியத்தின்கீழ் வீடு மற்றும் குடியிருப்பு கட்டித் தரக் கோருதல் -- 69 தீர்மானங்கள். (2) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கொள்கை பற்றி விவாதிக்க 15 தீர்மானங்கள். (3) கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்மூலம் தரப்பட்ட கடன், வட்டி மற்றும் வீட்டு வசதி வாரிய வீடுகளுக்குக் கட்டப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டித் தள்ளுபடி கோருதல்—15 தீர்மானங்கள். (4) வீட்டு வசதி வாரியத்தில் விற்கப்படாமல் உள்ள வீடு மற்றும் மனை விற்பனை செய்வது குறித்து 14 தீர்மானங்கள். (5) வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் வீட்டு வசதி வாரியம்மூலம் வீடு கட்ட கடன் வழங்குவது குறித்து 13 தீர்மானங்கள். (6) வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதுபார்த்தல் குறித்து 12 தீர்மானங்கள். (7) பல்வகைச் சாலைகள், சோடியம் விளக்குகள் அமைத்தல், சிறுவர் பூங்கா அமைத்தல், கிராமங்களை நகர்ப்புற அளவிற்குத் தரம் உயர்த்துதல்,

---

@ 538 முதல் 543 வரையிலான பக்கங்களில் இணைப்பு-V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மற்றும் உள்ள தீர்மானங்கள் 52. ஆக, 190 வெட்டுத் தீர்மானங்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நீங்கள் அனைவரும் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய வீட்டு வசதித் துறைமூலமாக வட்டிப் பிரச்சினைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்த வட்டி சம்பந்தமாக ஒரு புத்தகம் அச்சடித்து, வட்டி எப்படிக் கணக்கிடப்பட்டிருக்கிறது என்பதையும் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அதேபோல, நிலம் ஆர்ஜிதம் செய்கிறபோது, வட்டி எப்படி வருகிறது, இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காகப் போடவில்லை என்ற விளக்கத்தை நேற்றைக்கு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது, இது Central Act, மத்திய அரசாங்கத்தினுடைய சட்டம், விதி 34, அதிலே பிரிவு 23–ல் 2, விதி 22–ல் 1–ன்படி நாங்கள் வட்டி செலுத்துகிறோம். திரும்பக் கேட்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதைத்தான் கருத்துகளை வழங்கிய உறுப்பினர்களையெல்லாம் தனிப்பட்ட முறையில் அழைத்து, அவர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவையெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மீண்டும் ஒரு முறை பணிவோடு கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம் தனியே போய்க் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26– வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.





(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.307,77,15,000/–, மூலதனக் கணக்கில் ரூ.519,87,88,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.108,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 47 – இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.38,50,46,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,07,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2007 மே 4

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 7–5–2007 (திங்கட்கிழமை) அன்று காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

81. குழந்தைகளுக்கான இணை உணவை மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 65 சதவிகிதம் அல்லது மேற்படி சங்கங்கள் வழங்கக்கூடிய அளவு இவற்றில், எது குறைவோ, அந்த அளவிற்கு நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கும், பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கக் கருதப்படும் பள்ளிச் சீருடைகளைத் தைத்தல் தொடர்பான பணியை, பணி ஒப்படைக்கப்படும் நாளில் உள்ளபடி, சமூக நல இயக்குநரிடம் பதிவு செய்துகொண்டுள்ள மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கவும் வகை செய்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 16–2–2007 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

198. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)



2007 மே 4]

199. மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

200. இந்து சமய அறநிலையத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

201. 2006–2007 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை அறிவிப்புகள்மீதான செயலாக்க விவரங்கள். (தமிழ்)

202. மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2006–2007)

203. மதிப்பீட்டுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2006–2007)

204. மதிப்பீட்டுக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2006–2007)

205. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2006–2007)

206. மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது அறிக்கை. (2006–2007)

207. மதிப்பீட்டுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2006–2007)

208. மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை. (2006–2007)

209. மதிப்பீட்டுக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2006–2007)

210. மதிப்பீட்டுக் குழுவின் பதினான்காவதுஅறிக்கை. (2006–2007)

211. மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2006–2007)

212. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை. (2006–2007)

213. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தொன்பதாவது அறிக்கை. (2006–2007)

214. பொதுக் கணக்குக் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2006–2007)

215. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தொன்றாவது அறிக்கை. (2006–2007)

216. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை. *(2006–2007)*

217. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை. *(2006–2007)*

218. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. *(2006–2007)*

219. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. *(2006–2007)*

220. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை. *(2006–2007)*

221. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை. *(2006–2007)*



## இணைப்பு I

*(305 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# மானியக் கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை அறிவிப்புகள் - 2007-2008

### அறிவிப்பு-1

**சிறந்த கல்வியாளர் விருதுகள்:** தமிழகத்தில் இருக்கின்ற கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பணிபுரிகின்ற பேராசிரியர்கள், அறிவியல்/ சமூக அறிவியல்/தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஆற்றி வருகின்ற கல்விப் பணியினை சிறப்பிக்கும் வகையில், வருடந்தோறும் இத்துறைகளைச் சேர்ந்த ஆறு பேராசிரியர்களுக்கு சிறந்த கல்வியாளர் விருது வழங்க இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது. விருது பெறும் பேராசிரியர் ஒவ்வொருவருக்கும், பாராட்டுப் பத்திரம் (Citation) மற்றும் ரூ.25,000/- பணமுடிப்பும் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இவ்விருதானது கல்லூரி ஆசிரியர்கள் எழுதியுள்ள நூல்கள், உலக அளவில் மற்றும் இந்திய அளவில் கல்வியாளர்கள் மத்தியில் மேற்கோள் காட்டப்படும் புகழ்பெற்ற வெளியீடுகளில் வரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்விருது வழங்கப்படும்.

### அறிவிப்பு-2

**சிறந்த கல்லூரிக்கான விருதுகள்:** கல்விப் பணியில் பங்கேற்றுள்ள கல்லூரிகள் மேன்மேலும் சிறப்புடன் செயல்பட வழிவகை செய்திட வேண்டும் என்ற அடிப்படையில் கல்லூரிகளிலே மிகச் சிறந்த கல்லூரிகளுக்கு விருதுகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இவற்றில் ஒரு விருது கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கும், ஒரு விருது தொழில் நுட்பக் கல்லூரிக்கும், ஒரு விருது பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கும் வழங்கப்படும். இதன்மூலம் கல்லூரிகளிடையே போட்டி மனப்பான்மையும் அதன்மூலம் கல்வியின் திறனும் மேம்பட்டு, கல்லூரிகளின் பணி சிறந்தோங்கும். கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள், பணியாற்றுகிற பேராசிரியர்களின் தகுதி, தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவின் (NAAC மற்றும் NBA) தரச் சான்றிதழ், பயிற்றுவித்தலில் புதிய முறைகள் (Innovation), மாணவர்கள் தேர்ச்சி விகிதம் மற்றும் விளையாட்டுப் பயிற்சி, சமுதாயப் பணிபோன்ற செயல்பாடுகள் (Extra-Curricular Activities) ஆகியவற்றின் அடிப்படையில்

[2007 மே 4

சிறந்த கல்லூரி தேர்வு செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்படும் கல்லூரிகளுக்கு பாராட்டுப் பத்திரத்துடன் ரூபாய் ஒரு இலட்சம் பணமுடிப்பும் வழங்கப்படும்.

## அறிவிப்பு-3

**ஆசிரியர்களுக்குப் பயிற்சி:** பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பணியில் சேர வேண்டுமானால் அவர்களுக்கு B.Ed., என்ற கல்வித் தகுதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. B.Ed., என்பதனை படிப்பு என்று சொல்வதைவிடப் பயிற்சி என்று சொல்வதே சரியானது ஆகும். பள்ளிக்கூட மாணவர்களுக்கு எவ்வகையில் போதிப்பது என்பதில் பயிற்சி எடுத்தபின் ஆசிரியர்கள் பள்ளிகளில் பணியில் சேர்கிறார்கள். ஆனால், கல்லூரிகளில் பேராசிரியர்கள் கல்லூரி மேற்படிப்பு மற்றும் NET/SLET முடித்து அல்லது M.Phil., Ph.D., தகுதியுடன் பேராசிரியர்களாகப் பணியில் சேருகின்றனர். அவர்களுக்கு கற்பிக்கும் முறைகளில் பயிற்சி அளிப்பதன்மூலம் தரமான கல்வியை தமிழக மாணவர்களுக்கு அளிக்க முடியும் என இந்த அரசு நம்புகிறது. அதனடிப்படையில், புதிதாக 2,082 அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். அவர்களைத் தேர்வு செய்த பின்பு அவர்களுக்கு ஒரு மாதம் ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சியின்மூலமாக கல்லூரிகளில் கற்பிக்கும் முறைகளில் நல்ல மாறுதலை ஏற்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது.

## அறிவிப்பு-4

**மாநில தர நிர்ணயக் குழு:** தரமான கல்வி, விரும்புகின்ற அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியான கொள்கை கொண்டுள்ளது. அதன் தொடர்பாக சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் தேசிய தகுதி மற்றும் தரக் கட்டுப்பாட்டுக் குழு (NAAC) அமைப்பின் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கும் கட்டாயம் ஆக்கப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC) எப்படி முடிவெடுத்தாலும், தமிழகத்தில் இருக்கிற கல்லூரிகள் 2008-09 ஆம் ஆண்டுக்குள் தேசிய தகுதி மற்றும் தரக் கட்டுப்பாட்டுக் குழுவின் (NAAC) சான்றிதழ் கட்டாயம் பெற்றாக வேண்டும் என்று அரசு ஆணை வெளியிடப்படும். அதேபோல, கல்லூரிகளின் தரத்தினை 5 ஆண்டுக்கு ஒரு முறை தேசிய தகுதி



2007 மே 4]

மற்றும் தரக் கட்டுப்பாட்டுக் குழு (NAAC) நிர்ணயம் செய்கின்றது.
ஆனால் 5 ஆண்டு வரை அதே தரம் தொடர்ந்து இருக்குமா என்பது
கேள்விக்குறியே. அதனைக் கருத்தில்கொண்டு, தமிழகத்தில் மாநில
அளவில் மாநில தர நிர்ணயக் குழு அமைக்கப்பட்டு, இரண்டு
ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்வது என்றும் முடிவு
செய்யப்பட்டுள்ளது. கல்லூரிகள் தங்கள் தரத்தினைத் தக்க
வைத்துக்கொண்டிருக்கின்றனவா என்பதை ஆராயும் வகையில் இந்தக்
குழு செயல்படும். இக்குழு முன்னாள் துணை வேந்தர் ஒருவரின்
தலைமையின்கீழ் செயல்படும்.

## அறிவிப்பு-5

**தெரிவுசெய் திறன் முறை:** தெரிவுசெய் திறன் முறை (Choice
Based Credit System) என்பது உலகளாவிய அளவிலே தற்போது
பின்பற்றப்படுகிற கல்வி முறையாக இருக்கிறது. தமிழகத்தில் பல்கலைக்
கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளில் மேற்படிப்பு வகுப்புகளிலும்
இக்கல்வி முறை தற்போது நடைமுறைப் படுத்தப்படுகிறது. மற்ற
கல்லூரிகளில் இந்த முறை பின்பற்றப்படாத நிலை இருந்து வருகிறது.
பருவமுறைத் தேர்வுகள் (Semesters) நடத்தப்படுகிற கல்லூரிகளில்
எல்லாம் இந்தக் கல்வி முறை நடைமுறைப்படுத்தப்படுமேயானால்,
மாணவர்கள் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து வேறொரு
பல்கலைக்கழகத்திற்கோ, ஒரு கல்லூரியிலிருந்து மற்றொரு கல்லூரிக்கோ,
நம் நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கோ சென்று படிப்பது என்பது
எளிதாக்கப்படும். தற்போது தன்னாட்சி கல்லூரிகளில்
நடைமுறைப்படுத்தப்படும் தெரிவுசெய் திறன் முறைத் திட்டம்
முழுமையானதாக இல்லை. தெரிவு செய்வதற்கான விருப்பப் பாடங்கள்
மிகக் குறைந்த அளவிலே உள்ளன. தெரிவுசெய் திறன்முறை கல்வி
முறையை மேலை நாட்டுக் கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் இருப்பது
போல, முழுமையான முறையாக தமிழகத்தில் கடைப்பிடிக்க
நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்படும்
கல்லூரிகளில் இம்முறை பரிட்சார்த்த முறையில் அறிமுகப்படுத்தப்படும்.
இத்திட்டத்தை தமிழகத்தில் விரிவுபடுத்துவதில் உள்ள சாதக,
பாதகங்களை அறிந்து அரசுக்கு தக்க பரிந்துரைகள் செய்ய ஒரு வல்லுநர்
குழு அமைக்கப்படும். குழுவினுடைய பரிந்துரையின் பேரில்
2008-2009 ஆம் கல்வி ஆண்டிலிருந்து இந்தக் கல்வி முறையை அனைத்து
கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 மே 4

## அறிவிப்பு-6

**நிர்வாக இயலுக்கு பல்கலைக்கழகம்:** நிர்வாக இயலுக்கு என்று இந்தியாவில் எந்த இடத்திலும் பல்கலைக்கழகம் இல்லை. ஆனால், உலகின் பல்வேறு நாடுகளில் நிர்வாக இயலுக்கு என்று தனியே பல்கலைக்கழகங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் நிர்வாக இயலுக்கு என்று தனியே பல்கலைக்கழகம் அமைக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் உள்ள தொழில் கூட்டமைப்புகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையில் புதிய பல்கலைக்கழகம் தொழில் கூட்டமைப்பின் சார்பில் அமைக்கப்பட இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

## அறிவிப்பு-7

**புதிதாக ஆசிரியர்கள் நியமித்தல்:** தமிழகத்தில் அரசுக் கல்லூரிகளில் 2,000-க்கும் அதிகமான பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கல்வியின் தரம் உயர்ந்திட பாடுபடும் இந்த அரசு, அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களை நியமிப்பது மிக முக்கியமான ஒன்று என்பதை உணர்ந்திருக்கிறது. அதனடிப்படையில் கடந்த ஆண்டு கல்லூரிகளில் 1,020 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு ஆணையிட்டது. சிலர் நீதி மன்றங்களில் தடை உத்தரவு பெற்றதனால், கல்லூரி ஆசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. நீதிமன்றத்தின் தடை உத்தரவு தற்போது விலக்கப்பட்டிருப்பதால், 1,020 ஆசிரியர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாக 1,062 கல்லூரி ஆசிரியர்கள் வரும் ஆண்டில் நியமிக்கப்பட உள்ளனர். ஆக மொத்தம் 2,082 கல்லூரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிட தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கடந்த ஆண்டு 600 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு கூடுதலாக 2,000 பணியிடங்களுக்கு அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்படும்.

## அறிவிப்பு-8

**கல்லூரிகள் நிலை உயர்த்துதல்:** தமிழகத்திலுள்ள 60 அரசுக் கலைக் கல்லூரிகளில் 14 கல்லூரிகள் முதல் நிலைக் கல்லூரிகள் ஆகும். வரும் கல்வியாண்டிலிருந்து 7 இரண்டாம் நிலைக் கல்லூரிகள் முதல் நிலைக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தப்படும்.



2007 மே 4]

## அறிவிப்பு-9

**அரசுக் கல்லூரிகளில் புதிதாக வகுப்பறைகள்:** உயர் கல்வியின் வளர்ச்சியில் உள்கட்டமைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஒரு கல்லூரியின் வகுப்பறைகளின் அமைப்பு, அதில் உள்ள வசதிகள் ஆகியவற்றைப் பார்க்கும்போதே, அக்கல்லூரியில் கல்வி பயில வேண்டும் என்ற உணர்வு மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். பல அரசுக் கல்லூரிகளில் வகுப்பறைகள் பற்றாக்குறை, ஆய்வுக் கூடங்கள், கணினிகள், அடிப்படை சுகாதார வசதிகள்போன்ற இன்றியமையா வசதிகள் இல்லாத நிலை இருந்து வருகின்றது. இதனை கருத்திற் கொண்டு கடந்த ஆண்டு 80 வகுப்பறைகள் மற்றும் இதர வசதிகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு 542 வகுப்பறைகள் ரூ. 27.10 கோடியில் கட்டி முடிக்கப்படும். இதன்மூலம் அரசுக் கல்லூரிகளில் வகுப்பறை வசதிகளை ஏற்படுத்திட வழி செய்யப்பட்டுள்ளது.

**கீழ்க்காணும் 55 கல்லூரிகளில் புதிய வகுப்பறைகள் கட்டித் தரப்படும்**

| வ. எண் (1) | கல்லூரியின் பெயர் (2) | கட்டப்படவுள்ள வகுப்பறைகள் (3) |
|---|---|---|
| 1. | மாநிலக் கல்லூரி, சென்னை-5 | 10 |
| 2. | பாரதி மகளிர் கல்லூரி, வட சென்னை, சென்னை-108 | 25 |
| 3. | காயிதே மில்லத். அரசுக் கலைக் கல்லூரி, சென்னை-2 | 15 |
| 4. | டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை-39 | 5 |
| 5. | அரசுக் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை | 8 |
| 6. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசுக் கலைக் கல்லூரி, திருத்தணி | 10 |
| 7. | அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை | 10 |
| 8. | லோகநாத நாராயணசுவாமி அரசுக் கலைக் கல்லூரி, பொன்னேரி | 8 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9. | அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம் | 5 |
| 10. | அரசுக் கலைக் கல்லூரி, அரியலூர் | 5 |
| 11. | அரசுக் கலைக் கல்லூரி, சிதம்பரம் | 8 |
| 12. | திரு. கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரி, விருத்தாச்சலம் | 15 |
| 13. | அரசுக் கலைக் கல்லூரி, தான்தோன்றிமலை, கரூர் | 9 |
| 14. | தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை | 10 |
| 15. | மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை | 10 |
| 16. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை | 10 |
| 17. | மன்னர் சரபோஜி அரசுக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 10 |
| 18. | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 31 |
| 19. | அரசு கல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு | 5 |
| 20. | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 10 |
| 21. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 15 |
| 22. | பெரியார் ஈ.வெ.ரா. கலைக் கல்லூரி, திருச்சி | 18 |
| 23. | அரசுக் கலைக் கல்லூரி, திருச்சி | 5 |
| 24. | அறிஞர் அண்ண அரசு கலைக் கல்லூரி, முசிறி | 10 |
| 25. | திரு. வி.க. அரசுக் கலைக் கல்லூரி, திருவாரூர் | 5 |
| 26. | அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரம் | 19 |
| 27. | அரசுக் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் | 5 |
| 28. | அரசுக் கலைக் கல்லூரி, உதகமண்டலம் | 5 |
| 29. | அரசுக் கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை | 10 |
| 30. | சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரி, திருப்பூர் | 10 |
| 31. | எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர் | 15 |
| 32. | அரசு கல்வியியல் கல்லூரி, சேலம் | 18 |
| 33. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம் | 10 |





| (1) | (2) | (3) |
|---|---|---|
| 34. | அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, நாமக்கல் | 10 |
| 35. | நாமக்கல் கவிஞர் அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல் | 14 |
| 36. | திருவள்ளுவர் அரசுக் கலைக் கல்லூரி, ராசிபுரம் | 10 |
| 37. | அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, வடசென்னிமலை, ஆத்தூர் | 10 |
| 38. | அரசுக் கலைக் கல்லூரி, தருமபுரி | 13 |
| 39. | அரசுக் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 19 |
| 40. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 10 |
| 41. | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பர்கூர் | 8 |
| 42. | அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி, கோயம்புத்தூர் | 5 |
| 43. | அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம் | 4 |
| 44. | வி.எஸ்.எஸ். அரசுக் கலைக் கல்லூரி, பூலாங்குறிச்சி | 1 |
| 45. | மன்னர் துரைசிங்கம் அரசுக் கலைக் கல்லூரி, சிவகங்கை | 4 |
| 46. | அழகப்பா அரசுக் கலைக் கல்லூரி, காரைக்குடி | 7 |
| 47. | மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி, மதுரை | 20 |
| 48. | அரசுக் கலைக் கல்லூரி, மேலூர் | 8 |
| 49. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, ராமநாதபுரம் | 4 |
| 50. | சேதுபதி அரசுக் கலைக் கல்லூரி, ராமநாதபுரம் | 10 |
| 51. | அரசுக் கலைக்கல்லூரி, பரமகுடி | 5 |
| 52. | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி | 4 |
| 53. | இராணி மேரி கல்லூரி, சென்னை-5 | 4 |
| 54. | முத்துரங்கம் அரசுக் கலைக் கல்லூரி, வேலூர் | 4 |
| 55. | எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல் | 4 |
| | மொத்தம் .. | 542 |

[2007 மே 4

## அறிவிப்பு-10

**புதிய ஆய்வகங்கள்:** கல்லூரிகளில் அறிவியல் தொடர்பான துறைகளில் ஆய்வகங்கள் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன. அரசுக் கல்லூரிகளில் இருக்கின்ற ஆய்வகங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டன. புதிதாகப் பல்வேறு பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்ட நிலையில், ஆய்வகங்கள் அதற்கேற்ற வகையில் விரிவுபடுத்தப்படாமலிருக்கின்றன. மேலும், இருக்கின்ற ஆய்வகங்கள் பல சிதிலமடைந்து, பழுதடைந்த நிலையில் உள்ளன. இத்தகைய ஆய்வுக் கூடங்கள் மாணவர்களின் தரமான அறிவாற்றலை வளர்த்திட வழி செய்யாது. ஆய்வகங்கள் இருந்தால்தான் மாணவர்கள் தங்களுடைய செய்முறைத் திறனைக் கூர்தீட்டிக்கொள்ள முடியும். இத்தகைய சூழ்நிலையில் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் சிதிலமடைந்து இருக்கின்ற ஆய்வகங்கள் புதுப்பிக்கப்படும். மேலும், 42 அரசுக் கல்லூரிகளில் ரூ.6.6 கோடியில் புதிதாக ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும்.

**கீழ்க்காணும் கல்லூரிகளில் புதிதாக ஆய்வகங்கள் கட்டித் தரப்படும்:**

| *வ. எண்* *(1)* | *கல்லூரியின் பெயர்* *(2)* | *கூடுதலாகக் கட்டப்பட வேண்டிய ஆய்வகங்களின் எண்ணிக்கை* *(3)* |
|---|---|---|
| 1. | பாரதி மகளிர் கல்லூரி, வட சென்னை, சென்னை-108 | 2 |
| 2. | இராணி மேரி கல்லூரி, சென்னை-4 | 2 |
| 3. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசுக் கலைக் கல்லூரி, திருத்தணி | 1 |
| 4. | அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, செய்யாறு | 1 |
| 5. | லோகநாத நாராயணசாமி அரசு கலைக் கல்லூரி, பொன்னேரி | 1 |



2007 மே 4]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 6. | இராஜேஸ்வரி வேதாசலம் அரசுக் கலைக் கல்லூரி, செங்கல்பட்டு | 1 |
| 7. | திரு. கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரி, விருத்தாசலம் | 1 |
| 8. | அரசுக் கலைக் கல்லூரி, கரூர் | 1 |
| 9. | தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை | 1 |
| 10. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை | 1 |
| 11. | மன்னர் சரபோஜி அரசுக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 2 |
| 12. | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 2 |
| 13. | அரசு கல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு | 1 |
| 14. | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 2 |
| 15. | பெரியார் ஈ.வெ.ரா. கலைக் கல்லூரி, திருச்சி-23 | 2 |
| 16. | அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, முசிறி | 1 |
| 17. | திரு. வி.க. அரசுக் கலைக் கல்லூரி, திருவாரூர் | 1 |
| 18. | அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரம் | 2 |
| 19. | அரசுக் கலைக் கல்லூரி, சேலம்-7 | 2 |
| 20. | அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, நாமக்கல் | 1 |
| 21. | நாமக்கல் கவிஞர் அரசு மகளிர் கல்லூரி, நாமக்கல் | 1 |
| 22. | அரசுக் கலைக் கல்லூரி, தருமபுரி | 2 |
| 23. | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி | 1 |

53-147—7b

[2007 மே 4

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 24. | அரசுக் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, பர்கூர் | 1 |
| 25. | ராஜா துரைசிங்கம், அரசுக் கலைக் கல்லூரி, சிவகங்கை | 1 |
| 26. | அரசுக் கலைக் கல்லூரி, பரமக்குடி | 2 |
| 27. | மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி, மதுரை | 1 |
| 28. | மாநிலக் கல்லூரி, சென்னை | 1 |
| 29. | அரசுக் கலைக் கல்லூரி, கோவை | 1 |
| 30. | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி | 1 |
| 31. | அரசுக் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை | 1 |
| 32. | காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக் கல்லூரி, சென்னை-2 | 1 |
| | மொத்தம் .. | 42 |

## அறிவிப்பு-11

**மொழித் திறன் ஆய்வகங்கள்:** மொழித் திறன் வெளிப்பாடு என்பது வேலைவாய்ப்பிற்கு மிகவும் தேவையாக இருக்கிற ஒரு அம்சமாகும். ஒரு மாணவன் தான் பயிலுகின்ற பாடத்தில் மிகச் சிறந்து விளங்கினாலும், வேலைக்குச் செல்கின்றபொழுதுதான் படித்ததை வெளிப்படுத்துகிற ஆற்றல் இருந்தால்தான் வேலைவாய்ப்பினைப் பெற இயலும். ஆனால், கிராமப்புறங்களில் படித்து வருகிற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை எதிர்கொள்வதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ள தகுந்த வாய்ப்பில்லாமல் இருப்பதனால் கிராமப்புறங்களில் படிக்கும் மாணவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதில் ஒரு சில இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, 60 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மொழித் திறன் ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதேபோன்று, 22 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மொழித்



2007 மே 4]

திறன் ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதன்மூலம் அரசுக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களின் மொழித் திறன் அதிகரிக்கும். அதனால் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது.

## அறிவிப்பு-12

**கணினி ஆய்வகங்கள் அமைத்தல்:** உயர் கல்வியில் தகவல் தொழில் நுட்பம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்பம் ஒரு தனி பாடப் பிரிவாக தற்போது கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆனால் கணினி பயிற்சியை அனைவரும் பெற வேண்டிய அவசியம் உள்ளது. மாணவர்கள் எந்தப் பாடப் பிரிவில் படித்தாலும் அவர்கள் கணினிப் பயிற்சி பெறுவார்களேயானால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு எளிதாகக் கிடைக்கிறது. மேலும், எந்தத் துறையில் பணியாற்ற விரும்பினாலும் அத்துறையில் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு தற்போது கணினி அறிவு மிகவும் அவசியமாகும். அதன் அடிப்படையில் ஒவ்வொரு கல்லூரியிலும் கணினி ஆய்வகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாகும். 2006-2007 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் அரசுக் கலைக் கல்லூரிகளில் மத்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உதவியுடன் கணினி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டன. 50 மாணவர்கள் கணினிப் பயிற்சியை மேற்கொள்ளும் வகையில் 50 கணினிகள் மற்றும் இணைய தளத் தொடர்பு, தேவையான தளவாடங்கள் (furniture) போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் எஞ்சியுள்ள அரசுக் கல்லூரிகளில் ரூ.5 கோடியில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் கணினி ஆய்வகங்கள் உருவாக்கப்படும்.

## அறிவிப்பு-13

**மகளிர் கல்லூரிக் கட்டடங்களைப் புதுப்பித்தல்:** சென்னை மாநகரில் இருக்கிற பாரதி மகளிர் கலைக் கல்லூரி, இராணி மேரி கலைக் கல்லூரி, காயிதே மில்லத் கலைக் கல்லூரி ஆகியவை பழமை வாய்ந்த கல்லூரிகள். இந்தக் கல்லூரிகளிலே பல கட்டடங்கள் சிதிலமடைந்த நிலையில் இருக்கின்றன. இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.50 இலட்சம் செலவில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ரூ.1.5 கோடி செலவில் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.

[2007 மே 4

## அறிவிப்பு-14

**மின்னணு நூலகங்கள் அமைத்தல்:** இந்த ஆண்டு ரூபாய் 25 இலட்சம் செலவில் மின்னணு நூலகங்கள் கீழ்க்கண்ட ஐந்து அரசுக் கலைக் கல்லூரிகளில் செய்து தரப்படும்:

1. அரசு ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை-35
2. முத்துரங்கம் அரசுக் கலைக் கல்லூரி, வேலூர்
3. மன்னர் சரபோஜி அரசுக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்
4. சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரி, திருப்பூர்
5. அரசுக் கலைக் கல்லூரி, மேலூர்

## அறிவிப்பு-15

**அரசுக் கல்லூரிகளில் ஒளி, ஒலி வசதியுடன்கூடிய வகுப்பறைகள்:** கல்வி கற்பிக்கும் மற்றும் பயிலுதல் முறைகள் இன்றைக்கு நிறைய மாற்றங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. ஒளி, ஒலி வசதியுடன் இன்றைக்கு கற்பிக்கும் முறை வெகுவேகமாக முன்னேறி வருகிறது. ஒளி, ஒலி வசதியுடன் கல்வி கற்பிக்கும் முறைகள் அரசுக் கல்லூரிகளில் செய்து கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு கீழ்க்கண்ட பத்து அரசுக் கலைக் கல்லூரிகளில் ஒளி, ஒலி வசதிமூலம் கல்வி கற்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்:

1. டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை-39
2. அரசினர் திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம்
3. மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, தஞ்சாவூர்
4. அரசினர் கலைக் கல்லூரி, தருமபுரி
5. அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, விழுப்புரம்
6. அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்
7. திரு. வி.க. அரசினர் கலைக் கல்லூரி, திருவாரூர்
8. பெரியார் கலைக் கல்லூரி, கடலூர்



2007 மே 4]

9. எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்
10. மன்னர் துரைசிங்கம் அரசினர் கலைக் கல்லூரி, சிவகங்கை

## அறிவிப்பு-16

**மாணவியர் விடுதிகள் அமைத்தல்:** சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவியர் விடுதி ரூ. 1.5 கோடி செலவில் கட்டித் தரப்படும்.

நாகர்கோவில் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ. 1 கோடி செலவில் மாணவியர் விடுதி கட்டித் தரப்படும்.

மதுரை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ. 40 இலட்சம் செலவில் மாணவியர் இல்லம் அமைத்துத் தரப்படும்.

இதனால் வெளியூர்களிலிருந்து வந்து கல்வி பயிலும் பெண்கள் மிகுந்த பயனடைவார்கள்.

## அறிவிப்பு-17

**அன்னை தெரசா பல்கலைக்கழகத்திற்கு கருத்தரங்கக் கூடம்:** கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் ரூ. 45 இலட்சம் செலவில் ஒரு கருத்தரங்கக் கூடம் கட்டித் தரப்படும்.

## அறிவிப்பு-18

**கல்லூரி இல்லாத சட்டமன்றத் தொகுதிகளில் புதிய கல்லூரிகள் தொடங்குதல்:** தற்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற 234 சட்டமன்றத் தொகுதிகளில் 33 சட்டமன்றத் தொகுதிகளில் கலைக் கல்லூரிகளோ, பொறியியற் கல்லூரிகளோ, பல்தொழில்நுட்பக் கல்லூரிகளோ இல்லை என்ற நிலையிருக்கிறது. இதில் சென்னை மாவட்டத்தில் மட்டும் 3 தொகுதிகள் அடங்கும். சென்னையைத் தவிர பிற மாவட்டங்களில் கிட்டத்தட்ட 30 சட்டமன்றத் தொகுதிகளில் கல்லூரிகளே இல்லை என்ற நிலை உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, வருங்காலத்தில் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் கலைக் கல்லூரியோ அல்லது பல்தொழில்நுட்பக் கல்லூரியோ அரசு அல்லது தனியார்மூலமாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள் 28-4-2007 அன்று சட்ட மன்றத்தில் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பொன் விழா ஆண்டில், மாண்புமிகு

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை முதன்முதலாகத் தேர்ந்தெடுத்து சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைத்த குளித்தலை தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். அதனை ஏற்று, வரும் கல்வியாண்டில் திருச்சி மாவட்டம், குளித்தலையில் அரசுக் கலைக் கல்லூரி நிறுவப்படும். அதேபோல, தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் தென்காசி தொகுதியில் சுரண்டையில் பொது மக்கள் 26 ஏக்கர் நிலம் கொடுப்பதாகவும், கல்லூரிக்குத் தேவையான கட்டடங்கள் கட்டித் தருவதாகவும் கூறி, அரசுக் கலைக் கல்லூரி ஒன்று சுரண்டையில் நிறுவ வேண்டும் எனக் கோரியுள்ளார். அதனை ஏற்று, அரசுக் கலைக் கல்லூரி ஒன்று சுரண்டையில் நிறுவப்படும்.

## அறிவிப்பு-19

***இராணி மேரி கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்டுதல்:*** சென்னையில் உள்ள இராணி மேரி கல்லூரி மிகப் பழமை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்று. இக்கல்லூரி மகளிர் கல்வி மேம்பாட்டிற்கு சிறந்த பங்களிப்பை நல்கி வரும் ஒரு கல்லூரி ஆகும். அக்கல்லூரியில் நிலவி வரும் இடப் பற்றாக்குறையை நீக்கும் வகையில், வரும் ஆண்டில் இராணி மேரி கல்லூரியில் ரூ.2.5 கோடி செலவில் கட்டடம் அமைத்துத் தரப்படும்.

## அறிவிப்பு-20

***அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் சுழற்சி முறை:*** 10 அரசுக் கல்லூரிகளில் 2006-2007 ஆம் ஆண்டில் சுழற்சி முறையில் வகுப்புகளைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. அந்த 10 கல்லூரிகளில் முழுமையாக மாணவர்கள் சேர்க்கப்பட்டு சிறப்பாக வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 2007-2008 கல்வி ஆண்டிலிருந்து அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் சுழற்சி முறையைக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் அரசுக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை இரு மடங்காக உயரும் வாய்ப்பு ஏற்படும். மேலும், ஏழை எளிய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் உயர் கல்வியில் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பும் இதன்மூலம் மேம்படும்.

## அறிவிப்பு-21

***சமுதாயக் கல்லூரிகள் தோற்றுவித்தல்:*** வறுமை மற்றும் பல்வேறு காரணங்களால் பல்கலைக்கழகங்களில் மேற்படிப்பைத் தொடர முடியாதவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஒரு வாய்ப்பளிக்கும்



வகையில் சமுதாயக் கல்லூரிகளை ஊக்குவிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. வளர்ந்த மேலை நாடுகளில் உயர் படிப்பைத் தொடர முடியாதவர்களுக்கு வழிகாட்டுவதற்கும், அவர்களின் வாழ்க்கையில் கல்விமூலம் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கும் சமுதாயக் கல்லூரிகள் உறுதுணையாக இருந்து வருவதை பல்வேறு அமைப்புகள்மூலம் இந்த அரசு தெரிந்துகொண்டிருக்கிறது. மேலும், வறுமையினால் மேற்படிப்பைத் தொடர முடியாதவர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தருவதற்காக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறையினர்மூலம் சமுதாயக் கல்லூரிகளை உருவாக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், சமுதாயக் கல்லூரிகளில் படித்த மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஏதுவாக சமுதாயக் கல்லூரிகள்—பல்கலைக் கழகங்களின் ஒருங்கிணைப்புக்கு அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் ஏழ்மை நிலையிலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயனடைவர்.

## அறிவிப்பு-22

***கல்விப் பயணம் தொடர:*** தற்போதைய நிலையில் தொலைதூரக் கல்வி பெறுகின்றவர்கள் மரபுசார் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பினைத் தொடர்வதற்கு சில பல்கலைக்கழகங்கள் ஏற்பளிக்கின்றன. சில பல்கலைக்கழகங்கள் அனுமதிப்பதில்லை. தொலைநிலைக் கல்விமூலம் பட்டப் படிப்பில் முதலாண்டு முடித்தவர், இரண்டாம் ஆண்டு தங்களுடைய படிப்பினை மரபுசார் கல்லூரிகளில் தொடர்வதற்கு தகுதி உள்ள மாணவர்கள் விரும்பினால், அதற்கு வழிவகை செய்ய இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். அதேபோல, கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கிற மாணவர்கள் வறுமை மற்றும் பிற காரணங்களால் தங்களுடைய படிப்பினைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டால் தங்களுடைய படிப்பினைத் தொலைநிலைக் கல்வி முறையில் தொடருவதற்கும் வழிவகை செய்யப்படும். இதன்மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்விப் பயணத்தை தடங்கலின்றி தொடர்வதற்கு வாய்ப்பு உண்டாகும்.

## அறிவிப்பு-23

***அரசு கல்வியியல் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு தொடங்குதல்:*** மொத்தமுள்ள ஏழு அரசு கல்வியியல் கல்லூரிகளில் இரண்டில் மட்டும் கல்வியியல் பட்ட மேற்படிப்பு (M.Ed.,) நடத்தப்படுகிறது. வரும் கல்வியாண்டில் மீதம் உள்ள ஐந்து அரசு

[2007 மே 4

கல்வியியல் கல்லூரிகளிலும் M.Ed., பட்ட மேற்படிப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

## அறிவிப்பு–24

**பட்ட மேற்படிப்பிற்கும் ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி உதவித் தொகைத் திட்டம்:** 1989 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் தலைமையிலான அரசு, ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி உதவித் தொகைத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தியது. பெண்கள் மிக அதிக அளவில் உயர் கல்வியைப் படிக்க வேண்டும் என்ற நோக்கில், கல்வி பயில வரும் பெண்கள் எந்த இனத்தவராக இருந்தாலும் அவர்கள் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு உதவிடும் பொருட்டு ஈ.வெ.ரா. நாகம்மை திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு பயிலும் மாணவிகள் தங்களது கல்விக் கட்டணத் தொகையைச் செலுத்துவதற்கு ஏதுவாக உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2006-07 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ.65 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இதன்மூலம் 8,936 மாணவிகள் பயன் அடைந்துள்ளனர். வரும் கல்வி ஆண்டிலிருந்து (2007-08), பட்டப் படிப்பிற்கு கல்விக் கட்டணம் விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், இத்திட்டம் பட்ட மேற்படிப்பு மாணவிகளுக்கு விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் பட்ட மேற்படிப்பு பயிலும் ஏழை எளிய மாணவிகள் மிகுந்த பயனடைவார்கள்.

## அறிவிப்பு–25

**கல்லூரிகளில் கலந்தாய்வு முறையில் மாணவர் சேர்க்கை:** தற்போது அரசுக் கல்லூரிகளில் பட்டப் படிப்புச் சேர்க்கையின்போது ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் தனித்தனியாக விண்ணப்பம் செய்து கல்லூரியில் சேரும் நிலையில் மாணவர்கள் இருக்கிறார்கள். இனி வருங்காலத்தில் ஒரு கல்லூரியில் அனைத்து பாடப் பிரிவுகளுக்கும் ஒரே விண்ணப்பத்தின்மூலம் தங்கள் விருப்பத்தின்பேரிலும் தங்களுடைய மதிப்பெண்களின் வரிசைக்கேற்ப (rank) தங்களுக்கு விருப்பமான பாடப் பிரிவில் சேர்வதற்கு ஒற்றைச் சாளரக் கலந்தாய்வு (counselling) முறை அறிமுகப்படுத்தப்படும். இதனால் மாணவர்கள் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதால் ஏற்படும் செலவினம் வெகுவாகக் குறைக்கப்படும். மேலும், காலதாமதம் இல்லாமல் கல்லூரி சேர்க்கையும் நடைபெறும்.



2007 மே 4]

## அறிவிப்பு–26

**கல்வியியல் கல்லூரிகளில் கலந்தாய்வு முறையில் மாணவர்கள் சேர்க்கை:** தற்போது B.Ed., மாணவர் சேர்க்கை தனியார் சுய நிதி கல்வியியல் கல்லூரிகளில் 100 விழுக்காடு முழுமையாக நிர்வாகத்தினால் செய்து வரப்படுகிறது. ஏழை மாணவர்கள் சுய நிதி கல்வியியல் கல்லூரிகளில் சேர்வது என்பது இயலாத ஒன்றாக உள்ளது. மாணவர்களுடைய நலனில் அக்கறைகொண்டிருக்கிற இந்த அரசு, கல்வியியல் கல்லூரிகளில் நடைபெறுகிற மாணவர் சேர்க்கையை ஒழுங்குபடுத்த முடிவு செய்திருக்கிறது. அதன்படி, இக்கல்லூரிகளில் இருக்கிற இடங்களில் 50 சதவிகிதத்தை அரசு ஒற்றைச் சாளரக் கலந்தாய்வுமூலம் நிரப்பிட முடிவு செய்திருக்கிறது. அதேபோல கல்வியியல் கல்லூரிகளில் அதிக அளவிற்கு கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் ஒரு குழு அமைத்து, அக்குழுவின்மூலம் கல்விக் கட்டண அளவு வரையறுக்கப்படும். இம்முறையினால், சமுதாயத்தின் அடித்தட்டிலே உள்ள இளைஞர்கள் மிகுந்த பயனடைவார்கள்.

## அறிவிப்பு–27

**பட்டப் படிப்புப் படிக்கும் காலத்திலேயே தொழிற்படிப்பும் படித்தல்:** கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய வேலைவாய்ப்பினைப் பெருக்கிக் கொள்வதற்கு வகை செய்யும் வகையில் வேலைவாய்ப்பை அளிப்பதற்கான பட்டயப் படிப்பு அல்லது சான்றிதழ் படிப்பு படிப்பதற்கு அனுமதிக்கலாம் என்ற கருத்து துணை வேந்தர்கள் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் 3 வருட முடிவில் பொதுவான ஒரு பட்டமும், தொழிற்படிப்பில் ஒரு பட்டயம் (Diploma) அல்லது சான்றிதழ் (I.T.I.) பெறுவதன்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு மிக அதிக அளவிலே அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். எடுத்துக்காட்டாக, இளங்கலை பொருளாதாரம் படிக்கும் மாணவர் பங்குச் சந்தை வியாபாரப் படிப்பில் ஒரு சான்றிதழ் பெற்றால், படித்து முடித்து வெளியே வருகின்ற மாணவருக்கு பங்குச் சந்தை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு உடனடியாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அதேபோல, ஒவ்வொரு மாணவரும் தான் தேர்வு செய்து படிக்கும் பட்டப் படிப்போடு வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய ஒரு படிப்பினைப் படித்தால் மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலம் இருக்கும் என்ற அடிப்படையில்,

[2007 மே 4

தமிழகத்தில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தவிருக்கிறோம். இதன்மூலம், கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் கல்லூரி விடுமுறை நாட்களில் அல்லது வேலை நாட்களில் நேரம் கிடைக்கின்றபோது, தான் தேர்ந்தெடுத்துள்ள தொழிற்படிப்போடு தொடர்புள்ள தொழிற்சாலையில் அல்லது தொழிற்பயிற்சி நிலையங்கள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கலாம். பட்டயப் படிப்புக்கான தேர்வினை பல்கலைக்கழகம் நடத்தும்.

## அறிவிப்பு–28

***மாணவர் பணியமர்த்தல் மையம்:*** *உயர் கல்வியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று, கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவது. அரசுக் கல்லூரிகள் அல்லாத பிற கல்லூரிகளில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்கு பணியமர்த்தல் மையம் (Placement Centre) ஒன்று உருவாக்கப்பட்டு, அதன்மூலமாக பல்வேறு தொழில் நிறுவனங்களை அணுகி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருகிறார்கள். ஆனால் அரசுக் கல்லூரிகளில் அதேபோன்ற பணியமர்த்தல் மையம் இல்லாத நிலைமையுள்ளது. அதனைக் கருத்தில்கொண்டு, பணியமர்த்தல் மையம் அனைத்து பொறியியல், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் தொழில் நிறுவனங்களை அணுகி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.*

## அறிவிப்பு–29

***அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு இலவசப் பயணப் பேருந்து அட்டை வழங்குதல்:*** *அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படித்து வரும் மாணவர்களுக்கு தற்போது 50 விழுக்காடு சலுகையில் பேருந்துப் பயண அட்டை வழங்கப்படுகிறது. அரசுக் கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர் பலர் ஏழைக் குடும்பங்களில் இருந்து மிகுந்த இன்னல்களுக்கிடையே உயர் கல்வி பயில வருபவர்கள் ஆவர். பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சார்ந்த இம்மாணவர்களுக்கு இலவசப் பயணப் பேருந்து அட்டை வழங்க இவ்வரசு முடிவு செய்திருக்கிறது. வரும் கல்வியாண்டிலிருந்து இம்மாணவர்களுக்கு இலவசப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைவார்கள்.*



2007 மே 4]

## அறிவிப்பு–30

***பல்தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) மாணவர்களுக்கு இலவச பயணப் பேருந்து அட்டை வழங்குதல்:*** *பள்ளிக்கூடங்களில் +2 படிக்கின்ற மாணவர்களுக்கு தற்போது இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்படுகிறது. ஆனால் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு 50% அளவிலே சலுகைப் பயணப் பேருந்து அட்டை (Concessional Bus Pass) வழங்கப்படுகிறது. பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் 10 ஆம் வகுப்பு படித்துவிட்டு கல்லூரியில் சேருபவர்கள். அவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பங்களில் இருந்து வருபவர்கள். பெரும்பாலும் தங்களுடைய வறுமை காரணமாகத்தான் 10 ஆம் வகுப்பு முடித்தவுடன் +2 படிப்பைத் தொடராமல் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்க வருகிறார்கள். அவர்களுக்கு இலவசப் பயணப் பேருந்து அட்டை வழங்க வேண்டுமென்பது நீண்ட காலக் கோரிக்கை. வரும் கல்வி ஆண்டு முதல் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்படும். இதன்மூலம் 15,309 மாணவர்கள் பயனடைவார்கள்.*

## அறிவிப்பு–31

***இலவசப் பாடப் புத்தகங்கள்:*** *தற்போது பல மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அரசுப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதில்லை. வரும் கல்வி ஆண்டில், முதலாம் ஆண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்கான பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 5,080 மாணவர்கள் பயனடைவார்கள்.*

## அறிவிப்பு–32

***ஆசிரியர்களுக்கு தேக்க நிலை ஊதிய உயர்வு:*** *மத்திய அரசுப் பணியாளர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி ஊதிய விகிதங்கள் அமல்படுத்தியபோது அதிகபட்ச அடிப்படைச் சம்பளத்தை எட்டியவர்களுக்கு அதிகபட்சமாக மூன்று தேக்க நிலை ஊதிய உயர்வுகள் வழங்கும் சலுகையை அளித்தது. அவ்வாறு தேக்க*

ஊதிய உயர்வுபெறும் பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகபட்சம் ரூ.22,400-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்திருந்தது. இந்தச் சலுகையை பல்கலைக்கழக மானியக் குழு ஊதியம் பெறும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று ஆசிரியர் சங்கங்கள் நீண்ட காலமாகக் கேட்டு வந்தனர். பல்கலைக்கழக மானியக் குழுவின் ஊதிய விகிதத்தில் சம்பளம்பெறும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு அதிகபட்சமாக மூன்று தேக்க நிலை ஊதிய உயர்வு வழங்கும் திட்டத்தினை நீட்டிக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்கும். அவ்வாறு தேக்க நிலை ஊதிய உயர்வுபெறும் ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகபட்சம் ரூ.22,400/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்காக தோராயமாக அரசுக்கு வருடத்திற்கு ரூ. 3.96 கோடி செலவினம் ஏற்படும்.

## அறிவிப்பு–33

**மதிப்பூதியம் உயர்த்துதல்:** தற்போது பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு கேள்வித்தாள் தயாரித்தல், தேர்வு மேற்பார்வை மற்றும் விடைத்தாள் திருத்துவதற்கு வழங்கப்படுகிற ஊதியம் குறைவாக இருக்கிறது என்கிற குறைபாடு பேராசிரியர்களிடையே இருந்து வருகிறது. மேலும், பல பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்கள் விடைத்தாள்களைத் திருத்துவதற்கு வராமல் இருந்துவிடுகிற சூழ்நிலையும் இருக்கிறது. இதனால் மாணவர்கள் தேர்வு எழுதியபின், தேர்வு முடிவுகள் வருவதற்கு நீண்ட காலதாமதமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தற்போது வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தை உயர்த்த தமிழ்நாடு உயர் கல்வி மன்றம் பரிந்துரைத்துள்ளது. இதனை அனைத்து பல்கலைக்கழகங்களும் செயல்படுத்திட அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

---



## இணைப்பு-II

(357 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

# மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### 1. முன்னுரை

*1.1* நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே மனிதன் தன்னுடைய உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவை குறித்த தேவைகளை நிறைவு செய்வதற்கான நடைமுறைகளைக் கையாண்டு வருகிறான் என்பதை நாம் நன்கறிவோம். மேலும் இத்தகைய முயற்சிகளின் வாயிலாக வசதியும் வளமும் கூடிய இன்பமும் எழுச்சியும் நிறைந்த வாழ்க்கையை உறுதி செய்து கொள்ளத் தேவையான முறைகளை மக்கள் கடைப்பிடித்து வருவதும் நாம் அறிந்ததே ஆகும். மனிதன் தன்னிடத்திலும் தன் குடும்பத்திலும் மங்காத மாட்சிமையையும் மட்டற்ற மகிழ்வையும் பெருக்கிக்கொள்ள முற்பட்ட நாளிலிருந்து குன்றா உடல் நலமும் குறைபடாத மனவெழுச்சியும் நிலைத்து நிற்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொள்வதில் தளராது முயன்று வருவதைக் கடமையாகக் கொண்டுள்ளான். அமைதியுடன் கூடிய வாழ்க்கையை நாடும் மனிதன் தன்னுடைய குறிக்கோளை எய்தும் பொருட்டு உரிய வழிவகைகளை வகுத்துக்கொள்ள வேண்டுமெனத் திட்டமிட்டு செயல்படத் தொடங்கியபோது உணவு, உடை ஆகியவற்றுடன் நல்லதொரு உறைவிடமும் தேவை என்பது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. எனவே தக்கதொரு வாழ்விடம் இருந்தால்தான் புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் தீயவர்களால் ஏற்படக்கூடிய திருட்டு, வன்முறைத் தாக்குதல் மற்றும் சுகாதாரக் கேடுகளிலிருந்தும் ஏனைய அச்சுறுத்தும் இடையூறுகளிலிருந்தும் முழுமையான பாதுகாப்பைப் பெற்று வாழ முடியும் என்ற எண்ணம் மக்கள் உள்ளத்தில் நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது.

*1.2* வாழ்க்கையில் வாழ்விடத்திற்கு உள்ள முக்கியமான பங்கினை மக்கள் உணர்ந்தபோது வீடுகள் கட்டுவதில் வழக்கத்தில் இருந்த முறைகளை மேம்படுத்தி வீடுகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உள்ளுணர்வு மக்கள் மனதில் எழுந்தது. ஏனெனில் வாழ்விடம் என்பது

சாதாரண பாதுகாப்பைத் தருவது மட்டுமன்றி ஒரு தரமான மற்றும் அழகுணர்ச்சியுடன் வடிவமைக்கப்பட்ட வீட்டிற்கு உடைமையாளன் எனப்படும் மன நிறைவுடன் மகிழ்ச்சியைத் தரவல்லது வீடே என்று மக்கள் தெளிவாக உணர்ந்தனர்.

*1.3* தனிப்பட்டவர்கள் தமது குடும்பங்களுக்காக வீடுகள் கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்வதுடன் தமது உற்றார் உறவினர்களுக்கும் வாழத் தகுந்த வாழ்விடங்களை கட்ட உதவி நல்கியபோதே தக்க கழிவுநீரகற்று வசதி, வீதி அமைப்பு, பொது இடங்கள் இருத்தல், மக்களின் நடமாட்டம், தெளிவான வாகன போக்குவரத்து மற்றும் விரைவான பொருட்களின் போக்குவரத்து போன்றவற்றை உறுதி செய்வதற்காக ஓரிடத்தில் வாழும் மக்கள் திட்டமிட்ட மற்றும் ஒழுங்கான முறையில் தங்கள் கட்டுமான பணிகளை நெறிப்படுத்தினர்.

*1.4* காலப்போக்கில் வாழ்விடங்களை அமைத்துச் சில பொதுவான வசதிகளை ஏற்படுத்திக் கொண்டதால் அத்தகைய சூழ்நிலை மனித குடியிருப்புகள் அமைய வழி வகுத்தது. இது வளர்ச்சி பெற்று வீடுகளின் தொகுப்புகளாக மாறி நம் தமிழில் 'நத்தம்' என அறியப்படும் குடியிருப்பு பகுதிகள் ஆனது. மக்கள் தொகை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உயர்ந்ததும் தேவையான மழைநீர் வடிகால் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளும், சாலைகளின் தொகுப்பும் உடைய சிறு நகரங்கள் தோன்றின.

*1.5* மேலும் இச்சிறு நகரங்கள் சமூக மற்றும் பொருளாதார செயல்பாடுகளின் மையங்களாக மாறி கூடுதல் முக்கியத்துவம் பெற்று அருகில் உள்ள பகுதிகளில் வாழ்ந்த மக்களையும் இந்நகர்களை நோக்கி இடம் பெயர வைத்தன. நகர் மையங்களின் தோற்றத்தின் விளைவாக நகர்மயமாதல் என்னும் செயல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றானது. 19-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக மக்கள் தொகையில் 5 விழுக்காடு மக்களே 1,00,000 (ஒரு இலட்சம்) மக்கள் தொகைக்கு மேல் உள்ள நகரங்களில் வாழ்ந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. இன்று 200 ஆண்டுகளுக்குப்பின் ஏறத்தாழ 2.5 பில்லியன் மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் தோராயமாக 45 விழுக்காடு மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். உயர்ந்தபட்ச நகர்மயமாதல் வளரும் நாடுகளில் ஏற்பட்டுள்ளது. இங்கு நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் மக்கள் தொகை மும்மடங்காக உயர்ந்துள்ளது.

*1.6* 20 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியும் தொழில்மயமாதலும் நகர்ப் பகுதிகளில் பேரளவில் வேலைவாய்ப்பை



உருவாக்கின. இது விரைவான நகர்மயமாதலையும் நகர்ப்புறங்களில் பொருளாதார செயல்பாடுகளின் குவிதலையும் ஏற்படுத்தியது. இதுவே இக்காலத்தில் குடிநீர் வழங்கல், மின் வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளிப்பதில் புதிய அறைகூவல்களை (Challenges) உருவாக்கியது. தக்க தீர்வுகளை எதிர்நோக்கும் கடினமான இடர்கள் தோன்றியதோடு இட நெருக்கடி, சூழல் மாசு, போதிய நகர்ப்புற நிலம் மற்றும் வீட்டு வசதி இன்மை, குடிசைப் பகுதி மக்கள் தொகை என்ற வடிவில் சில குறைபாடுகளும் தோன்றின என்பதுதான் உண்மையான நிலையாகும்.

*1.7* 1951-லிருந்து 2001-க்குள் இந்தியாவின் நகர்ப்புற மக்கள் தொகை 57.8 மில்லியனிலிருந்து 286.1 மில்லியனாக உயர்ந்தது. தமிழ்நாடே இந்தியாவில் அதிக அளவில் நகர்மயமான மாநிலமாகும். தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை 43.86 விழுக்காடு (மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையான 62.4 மில்லியனில்) தேசிய சராசரி 23.82 விழுக்காடேயாகும். 2026 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 63 விழுக்காடு மக்கள் நகர்ப் பகுதிகளில் வாழ்வார்கள் என்று கருதப்படுகிறது.

*1.8* நம் மாநிலம், சமூகத்தின் எல்லாப் பிரிவு மக்களின் வீட்டு வசதித் தேவைகளைக் கருத்தில்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதால் வீட்டு வசதிப் பெரும் பிரிவு (Housing Sector) நன்கு வளர்ச்சி பெற்றதாக உள்ளது. அரசு நிறுவனங்கள் மூலமும் அரசுசாரா முகமைகள்மூலமாகவும் வீட்டு வசதியைப் பெருக்க அரசு நீண்ட கால மற்றும் குறுகிய கால கொள்கைகளை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட கால மற்றும் குறுகிய கால கொள்கைகளை ஏற்படுத்தியுள்ளது. நம் மாநிலத்தில் வீட்டு வசதி குறித்த பெரும் பிரிவின்கீழ் செயல்பாடுகளை மேம்படுத்துவது என்பது திட்டமிட்ட வளர்ச்சியின் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. ஆகவே அரசு மாநிலத்தில் உள்ள அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வீட்டு வசதியைப் பெருக்கும் பொருட்டு பல்முனை (multi-pronged) அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது. அதன் செயல் திட்டத்தின் ஒரு கூறாக நகர மேம்பாட்டு அறக்கட்டளையை 1947-ல் தோற்றுவித்து அதன் வழித்தோன்றலாக வந்துள்ள வீட்டு வசதி வாரியத்தை 1961-ல் நிறுவியது. குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களும் வீடற்ற ஏழை மக்களும் பயன் அடையும் பொருட்டு விரைவு திட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்துவதற்காக 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒரு சிறப்பு அமைப்பாக உருவாக்கப்பட்டது. அரசின் கொள்கை நோக்கும், திட்ட செயலாக்கமும் அனைத்து பிரிவு மக்களுக்கும் நன்மை அளிப்பதாக

உள்ளது என்பதை குறிப்பிடலாம். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் போன்றவை மூலம் குறிப்பாக வறிய மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. நிலம் கிடைப்பதில் உள்ள சிக்கல் மற்றும் கட்டுமான செலவின் உயர்வு போன்ற சூழ்நிலையிலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் செயல்பாட்டை மேம்படுத்தவும், விரிவு படுத்தவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

*1.9* அதிவேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் மிகையாக அதிகரித்து வரும் நிலத்தின் விலை ஆகியவற்றின் விளைவாக நகர் மையங்களில் ஏற்படும் மக்கள் தொகை அடர்த்தி, குடிநீர் மற்றும் பொது வசதி பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்கு சரியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும். இதனைக் கருத்தில்கொண்டு சீரிய நிலப் பயன்பாடு மற்றும் முறையான மனைப் பிரிவுகள் மூலம் வளர்ச்சி குறித்த நடவடிக்கைகளை முறைப்படுத்தி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் மூலம் நகர் ஊரமைப்பு இயக்ககம் செயல்படுத்தி வருகின்றது. முழுமைத் திட்டம் மற்றும் இது தொடர்பான பணிகளை தயாரித்து செயல்படுத்தும் உள்ளூர் திட்டக் குழுமம் உருவாவதற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் வழிவகை செய்கின்றது. வளர்ச்சிப் பணிகளை வரைமுறைக்குள் திட்டமிடுதல், முறையாக குடியிருப்பு மற்றும் தொழில் பகுதிகள் அமைவதற்கு நல்ல சூழ்நிலைகளை உருவாக்கித் தருகிறது. நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், வளர்ச்சிக் கட்டணம் விதிப்பதற்கு வழி வகுக்குகிறது. இந்தக் கட்டணத்தைக் கண்காணித்து வசூலிக்கும் பணி நகர் ஊரமைப்பு இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்படும் நிதி முன்னுரிமை அடிப்படையில் நகரமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குச் சென்று சேர்கின்றது. இந்த இயக்ககம் ஒரு இயக்குநரைத் தலைமையாகவும் மற்றும் முறையான அமைப்பின்படி செயல்படுவதன் மூலம் நம் மாநிலத்தின் நகரமைப்புத் தொடர்பான திட்டமிடும் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துகிறது.

**1.10** உலகமயமாதலின் பின்னணியில் சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளின் பொருளாதார மற்றும் வணிக முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு சென்னை நகரை நிரந்தர அடிப்படை வசதிகள்கொண்ட உலகத் தரம் வாய்ந்த பெருநகரமாக மேம்படுத்துவதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரத்தின் அதிகரித்து வரும் அடிப்படை வசதித் தேவைகளை நிறைவேற்றவும் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த வளர்ச்சியினை உறுதி செய்யும் வண்ணம் தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்தும் முழு பொறுப்புகளும் பெருநகரத் திட்டங்களை செயல்படுத்தி வரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் சுமார் 4.2 மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்தியாவின் நான்காவது பெருநகரமாகும். தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 9 (C)-ன்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் கீழ்க் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்கிறது:



(i) சென்னைப் பெருநகர் பகுதியின் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(ii) முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தி திட்டம் அல்லது புது நகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவைகளை தயார் செய்தல்.

(iii) உபயோகத்தில் உள்ள நில வரைபடம் மற்றும் இதர வரைபடங்கள் தயாரித்தல்.

(iv) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டம் எண் 22-ன்படி உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்படியான அமைப்பாகும். சென்னை மாநகராட்சி, 17 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்கள், 214 கிராமங்கள் கொண்ட 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் செயல்படுத்தி வருகின்றது. நெரிசல் மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம், வீட்டு வசதி, குடிநீர் வழங்கல், எரிசக்தி, கழிவுநீர் அகற்றல், திடக் கழிவு மேலாண்மை மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய திட்டங்களை செயல்படுத்தும் பல்வேறு நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நிறுவனமாக சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம் திகழ்கிறது. மாநிலத்தின் வளர்ந்து வரும் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப தேவையான உட்கட்டமைப்பு தேவைகளை வழங்குவதற்கான முக்கியப் பணிகளை சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம் செய்து வருகின்றது.

[2007 மே 4

## 2007-2008 திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

### சுருக்கம்

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| வ. எண் | துறைத் தலைமை அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 3,64,14 | - | 102,00,00 | 105,64,14 |
| 2. | நகர ஊரமைப்பு இயக்ககம் | 12,60,30 | - | - | 12,60,30 |
| 3. | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 5,77,10 | - | 6,50,00 | 12,27,10 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 205,85,01 | 265,58,88 | - | 471,43,89 |
| 5. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 15,25,17 | - | - | 15,25,17 |
| 6. | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 64,65,43 | 254,29,00 | - | 318,94,43 |
| | மொத்தம் | **307,77,15** | **519,87,88** | **108,50,00** | **936,15,03** |

### 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்

| வ. எண். | திட்டப் பணிகளின் விவரம் | 2007-2008 ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை** | |
| 1. | துணைப் பாகங்களுடன்கூடிய 10 கணினிகள் வாங்குதல் | 3.50 |
| 2. | மூன்று லேசர் பிரின்டர்கள் வாங்குதல் | 0.30 |



2007 மே 4]

| | | |
|---|---|---|
| 3. | துணைப் பாகங்களுடன்கூடிய கணினிகளுக்கு இரண்டு புதிய ஸ்கேனர்கள் வாங்குதல் | 1.00 |
| 4. | இலக்க முறை நகல் பிரின்டர் ஒன்று வாங்குதல் | 4.50 |
| | **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்** | |
| 5. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தை கணினி மயமாக்கல் | 50.00 |
| 6. | தாடண்டர் நகர், லாயிட்ஸ் சாலை மற்றும் பீட்டர்ஸ் சாலையில் உள்ள தமிழ்நாடு அரசு வாடகைக் குடியிருப்புத் திட்டங்களின்கீழ் வரும் அடுக்ககங்களை மேம்படுத்துதல் | 39.00 |
| 7. | அண்ணா நகர் மேற்கில் உள்ள தமிழ்நாடு அரசு வாடகைக் குடியிருப்புத் திட்டங்களின் கீழ் வரும் 150 அடுக்ககங்களில் சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள் | 35.00 |
| 8. | மதுரையில் உள்ள 1971 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடிசை மாற்று குடியிருப்புகளை மேம்படுத்தல் | 100.00 |
| 9. | சென்னை மாநகரம் நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு அரசு வாடகைக் குடியிருப்புத் திட்டங்களின் கீழ் வரும் அடுக்ககங்களில் சிறப்பு பழுது பார்ப்புப் பணி மேற்கொள்ளுதல் | 126.40 |
| | **தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்** | |
| 10. | மாவட்ட நகரங்களில் உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பு பகுதிகளுக்கு கழிவுநீர் திட்டப் பணிகளை அமைத்தல் | 62.70 |
| 11. | தமிழ்நாட்டில் உள்ள நகர்ப் பகுதி குடிசைப் பகுதிகளை சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம் | 10.00 |

| | | |
|---|---|---|
| | **நகர் ஊரமைப்புத் துறை** | |
| 12. | கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் ஒன்றிலும் 8 மண்டல அலுவலகங்களிலும் மின் ஆளுமை வசதி ஏற்படுத்துதல் | 10.00 |
| 13. | மண்டல அலுவலகங்களான கோயம்புத்தூர், மதுரை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் தலைமை இடத்திற்கு 4 வாகனங்கள் வாங்குதல் (பழுதடைந்த வாகனங்களுக்கு பதிலாக) | 17.00 |
| 14. | 8 மண்டல அலுவலகங்களை 29 மாவட்ட அளவிலான மண்டல அலுவலகங்களாக மாற்றி அமைத்தல். 2007-08-ல் 3 மண்டல அலுவலகங்கள் உருவாக்குதல் | 5.00 |
| 15. | புவியியல் தகவல் முறை, தொலை உணர்வு / வான் வழி புகைப்படங்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பெரம்பலூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிக்கு ஒட்டுமொத்த திட்டம் தயாரித்தல். | 10.00 |
| 16. | தலைமை அலுவலகம் மற்றும் 8 மண்டல அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல் | 5.00 |
| | **வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்** | |
| 17. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு (வீட்டு வசதி) அம்பாசடர் கார் ஒன்று வாங்குதல். (பழைய வாகனத்திற்கு பதிலாக புதியது வாங்குதல்) | 1.00 |
| 18. | சென்னை மற்றும் திருச்சி அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் மஉறிந்திரா ஜீப் வாங்குதல் (பழைய வாகனத்திற்கு பதிலாக புதியது வாங்குதல்) | 10.00 |
| 19. | பதினோரு மண்டல துணை பதிவாளர்களின் (வீட்டு வசதி) அலுவலகங்களுக்கு பதினோரு நகலெடுக்கும் எந்திரங்கள் வாங்குதல் | 6.60 |
| | **மொத்தம்** | **500.00** |



## 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

*2.1* சென்னை மாநகர மக்களின் குடியிருப்புக்கான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு 1947 ஆம் ஆண்டில் நகர மேம்பாட்டு நம்பகம் (City improvement Trust) தோற்றுவிக்கப்பட்டு, அதன்பின், மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் அனைவரின் வீட்டு வசதி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டங்கள் தீட்டிட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ல் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை ரூ. 2,751 கோடி மதிப்பீட்டில் 3,95,275 தனி வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் மேம்பாடு செய்யப்பட்ட மனைகளை உருவாக்கியுள்ளது. நாளுக்கு நாள் குடியிருப்புத் தேவை அதிகரித்து வருவதால் வீட்டு வசதி வாரியம் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

### 2.2. சுய நிதித் திட்டங்கள் (Self Finance Schemes)

அரசின் மானியம், உறட்கோவின் நிதி உதவி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கடன் மூலம் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்த வாரியம் சுய நிதி உதவித் திட்டத்தின்கீழ் சென்னை தெற்காசிய விளையாட்டு கிராமத்தில் ரூ.39 கோடி மதிப்பில் பெரிய அலுவலக வளாகமும், வில்லிவாக்கத்தில் ரூ.28 கோடி மதிப்பில் ஒரு வணிக வளாகமும் கட்ட உத்தேசித்துள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில் பல்வேறு தரப்பு மக்களின் வீட்டு வசதி தேவையினை எதிர்நோக்கும் வகையில் ரூ.972 கோடி மதிப்பீட்டில் 3,774 குடியிருப்புகள் (வீடுகள் மற்றும் அடுக்கு மாடி குடியிருப்புகள்) கட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

### 2.3 புறநகர்த் திட்டங்கள் (Neighbourhood Schemes)

2007-2008 ஆம் ஆண்டில் 14 புறநகர்த் திட்டங்களில் சென்னை, சோழிங்கநல்லூர், காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, தேனி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளில் 1,356 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.198 கோடி மதிப்பில் மனைகள் மேம்பாடு செய்யப்படும். இதனால் 4,718 குடும்பங்கள் பயன்பெறும்.

[2007 மே 4

## 2.4 கூட்டு முயற்சித் திட்டங்கள் (Joint Venture Schemes)

[பொது மற்றும் தனியார் துறை இணைந்த கூட்டு முயற்சித் திட்டங்கள் (Public Private Partnership Project)]

2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி உலகத்தரத்திற்கு இணையாக சிறந்த கட்டடக் கலை வல்லுனர்களால் வடிவமைக்கப்பட்ட வீடுகளைக் கட்டுவதற்கு விருப்பமுள்ள நிறுவனங்களைத் தேர்வு செய்து கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் திட்டங்கள் செயல்படுத்த உள்ளது.

## 2.5 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டம்

விழுப்புரத்தில் ரூ.220 இலட்சம் மதிப்பீட்டில் 30 அரசு அலுவலர் குடியிருப்புகளும் மதுரையில் உயர் நீதிமன்ற அலுவலர்களுக்காக ரூ. 1,480 இலட்சம் மதிப்பில் 242 அடுக்கு மாடி குடியிருப்புகளும் கட்டும் திட்டம் 2007-2008 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

## 2.6 வாரியப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி

கடந்த காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச மருத்துவ வசதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றது. இதனால் 2,550 வாரிய ஊழியர்கள் பயன்பெறுவார்கள். இவ்வகையில் வாரியத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவு நிதி ஆண்டிற்கு ரூ.15.30 இலட்சம் ஆகும்.

## 2.7 பகுதி–II திட்டங்கள் (Part-II Scheme)

சென்னையில் தாடண்டர் நகர், லாயிட்ஸ் குடியிருப்பு, டெய்லர்ஸ் சாலை குடியிருப்பு, அண்ணா நகர் பகுதிகள் மற்றும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களில் உள்ள அரசு வாடகை குடியிருப்புகளில் சிறப்புப் பழுது பார்க்கும் பணிகள் ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 2.8 புதிய நில எடுப்புக் கொள்கை

* புதிய திட்டம் உருவாக்குவதற்கு வாரியத்திற்குத் தேவையான நிலங்கள் பெற நில உரிமையாளர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.
* செயல்படுத்தப்படும் திட்டத்தில் நில உரிமையாளர்களும் பங்குதாரர்களாக சேர்க்கப்படுவார்கள்.



2007 மே 4]

* இழப்பீட்டுத் தொகை முழுமையாக வழங்குவதற்கு பதில் அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையின் ஒரு பகுதியாக மேம்பாடு செய்த மனைகள் / வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.9 பொது மக்கள் முறையீடுகள் தீர்க்கும் பணியில் முனைப்பான செயல்பாடு

### அ. சேவை மையங்கள் (Service Centers)

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அன்று மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களால் பொது மக்களின் முறையீடுகளை முறையாகவும் விரைவாகவும் தீர்க்கப்பட பெசன்ட் நகர் கோட்டத்தில் முதல் சேவை மையம் 3-6-2006 அன்று தொடங்கப்பட்டது. வீட்டு வசதி வாரியத்தின் அனைத்து கோட்டங்களிலும் இச்சேவை மையங்கள் தொடங்கப்பட்டு தகவல் தொடர்பு அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பொது மக்கள் தங்கள் மனுக்களை சேவை மையத்தில் கொடுத்து எந்த தேதியில் பதில் பெறலாம் என்ற விபரம் அடங்கிய ஒப்புதல் சீட்டு பெற்றுக்கொள்ளலாம். இந்த சேவை மையங்களின் செயல்பாடுகளை தேசிய தகவல் தொடர்பு மையத்தால் (NIC) உருவாக்கிய மென்பொருளை (Software) பயன்படுத்தி கண்காணிக்கப் பட்டு வருகின்றது. இதுவரை 4,551 மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

### ஆ. கணினிமயமாக்குதல்

கணினி மூலம் அனைத்து வாரிய நடவடிக்கைகளையும் கணினி மயமாக்கி மின்னணு ஆளுகை (e-Governance) நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. வாரியத்தின் அனைத்து சேவைகளுக்கான தேவையான ஒருங்கிணைந்த மென்பொருள் (Integrated Software) தயார் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ.244 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட ரூ.50 இலட்சம் செலவிடப்படும்.

## 3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

**3.1** முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் ***"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்"*** என்ற உயரிய நோக்கத்துடன் குடிசைப் பகுதிகளை மாற்றி குடியிருப்புகள் அமைக்கவும்,

[2007 மே 4

குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும், 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் முதலில் சென்னை நகரில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு, பின்னர் படிப்படியாக 1984 ஆம் ஆண்டு முதல் இதர மாநகரங்கள், நகரங்கள், நகர்ப்புறங்களில் விரிவுபடுத்தப்பட்டன.

### 3.2 குடிசைப் பகுதி குறித்த கொள்கைகள்

(அ) நகரப் பகுதிகளில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

(ஆ) கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை, அப்பகுதி மக்கள் வாழ்வதற்கேற்றவாறு மேம்படுத்துதல்.

(இ) அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில், மறு குடியமர்வு திட்டம் பின்பற்றப்படுகிறது.

### 3.3 பழுதடைந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளை மீண்டும் அமைத்தல்

சென்னையில் வியாசர்பாடி மற்றும் குப்பைமேடு திட்டப் பகுதிகளில் உள்ள பழுதடைந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளை மைய அரசின் பன்னிரண்டாவது நிதிக் குழுவின் சிறப்பு மானிய நிதியுதவியினைக் கொண்டு மீண்டும் கட்டும் திட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. இத்திட்டப் பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

### 3.4 அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டம் – 2004 ஆம் ஆண்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ் மற்றும் மீனவ குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதி அளித்தல்

சென்னை நகரில் ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு உலக வங்கி நிதி உதவியுடன் அடுக்கு மாடி குடியிருப்புகள் அமைக்கும் திட்டப் பணிகளின் தற்பேதைய நிலை பின்வருமாறு:



2007 மே 4]

| வ. எண் | திட்டத்தின் பெயர் | குடியிருப் புகள் | திட்டச் செலவினம் (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | அகில இந்திய வானொலி நிலையத்திந் நிலம் | 1824 | 31.20 | பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. |
| 2. | அகில இந்திய வானொலி நிலையத்தின் நிலம் | 3616 | 72.32 | இத்திட்டப் பணிகளுக்கு உலக வங்கியின் கொள்கை யளவிலான ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது |
| 3. | நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை மெரினா மறுவளர்ச்சித் திட்டம் | 7320 | 195.50 | |
| 4. | ஒக்கியம் துரைப்பாக்கம் | 5166 | 103.32 | |
| | மொத்தம் | 17926 | 402.34 | |

**3.5** பன்னிரண்டாவது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள திட்டப் பகுதிகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன. இக்குடியிருப்புகள் ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | குடியிருப்புகள் எண்ணிக்கை | செலவினம் (ரூ. கோடி) |
|---|---|---|---|
| 1. | இந்துஸ்தான் லீவர் லிமிடெட் நிலம் / தண்டையார்பேட்டை | 960 | 14.40 |
| 2. | திலகர் நகர் பகுதி 1 | 216 | 3.24 |
| 3. | திலகர் நகர் பகுதி 2 | 216 | 3.24 |
| | மொத்தம் | 1,392 | 20.88 |

### 3.6 ராஜீவ் காந்தி சுனாமி மறு குடியமர்வு திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட நகர்ப்புற குடிசைவாழ் குடும்பங்களுக்காக 2920 வீடுகள் கட்டப்படும். இதன் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் நகரில் ரூ.2.70 கோடி செலவில் 105 வீடுகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. மேலும், 264 வீடுகள் ரூ.5.54 கோடி செலவில் பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவனத்தின் நிதியுதவியுடன் 2007-2008 ஆம் ஆண்டில் கட்டப்பட உள்ளன.

### 3.7 ஆழிப் பேரலைகளால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஆழிப் பேரலைகளால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நகரப் பகுதிகளில் 13,054 குடும்பங்கள் வாழ்வதாகக் கடலோர மாவட்ட வருவாய்த் துறையினரால் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதிகளுக்கான அடிப்படை கட்டமைப்புகள் மாவட்ட நிர்வாகத்தால் அமைக்கப்படும். ராஜீவ் காந்தி சுனாமி மறு குடியமர்வு திட்டத்தின்கீழ் 6,131 வீடுகள் கட்டப்படும். இத்திட்டப் பணிகளுக்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.46.10 கோடி செலவிடப்படும். மீதமுள்ள 6,923 குடும்பங்களுக்கு அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.173.08 கோடி செலவில் கட்டப்பட்டு அவசர சுனாமி திட்டத்தின்கீழ் மறு குடியமர்வு செய்யப்படுவர்.

### 3.8 பன்னிரண்டாவது நிதிக் குழு சிறப்பு மானியம்

(அ) மைய அரசின் பன்னிரண்டாவது நிதிக் குழு தமிழகத்தில் சென்னை மற்றும் இதர நகரங்களில் குடிசைப் பகுதி மேம்பாட்டிற்காக 2005-2010 ஆண்டுகளுக்கு ரூ.250 கோடி சிறப்புத் தேவை மானியமாக வழங்கியுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு சென்னை மற்றும் இதர நகரங்களில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் அமைக்கவும் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை நகரில் 3,118 அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையிலுள்ளன. சென்னை, மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, சாயல்குடி, கீரனூர், தஞ்சாவூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களில் 3,000 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைக்கவும், 2007-2008 ஆம் ஆண்டில் இதற்கென்றும் மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சிகள் மேற்கொள்ளவும் ரூ.50 கோடி செலவிடப்படும்.



### 3.9 நகர புனரமைப்புத் திட்டம்

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பராமரிப்பு செலவினங்களுக்குப் போதிய நிதி ஆதாரத்தினைப் பெருக்க, சென்னை மற்றும் தமிழகத்தின் இதர பெருநகரங்களில் வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் வணிக வளாகங்கள் மற்றும் மத்திய வருவாய் பிரிவினருக்கான அடுக்ககங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் அடுக்கு மாடிக் குடியிருப்புகளைப் பராமரிக்க பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) நகர சீரமைப்பு (குடியமைப்பு) திட்டத்தின்கீழ் குறைந்த வருவாய் மற்றும் மத்திய வருவாய் பிரிவினருக்கான வீடுகளை 2007-08ஆம் ஆண்டில் கீழே கூறப்பட்டுள்ள திட்டப் பகுதிகளில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது:

| வ. எண் | நகரத்தின் பெயர் | திட்டத்தின் பெயர் | வீடுகள் எண்ணிக்கை | திட்டச் செலவினம் (ரூ. கோடிகளில்) |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | சுதந்திரா நகர் | 8 | 1.63 |
| 2. | சென்னை | சிங்காரவேலர் நகர் பகுதி-2 | 32 | 2.70 |
| 3. | திருநெல்வேலி | சுத்தமல்லி | 142 | 2.91 |
| | | **மொத்தம்** | **182** | **7.24** |

(இ) சென்னை, தேனாம்பேட்டை மற்றும் நந்தனம் பகுதிகளில் ரூ.32.60 கோடி செலவில் இரண்டு வணிக வளாகங்கள் கட்டவும், இத்திட்டப் பணிகளுக்காக 2007-08 ஆம் ஆண்டில் ரூ.12 கோடி செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.10 ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம்

குடிசைப் பகுதிகளைச் சீர்படுத்தும் நோக்கத்தினை அடையும் பொருட்டு, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களை 2013 ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்த கீழே கூறப்பட்டுள்ள திட்டப் பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

(அ) நகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளான நதிக்கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் பொதுப் பணிகளுக்கு தேவைப்படும் பகுதிகள் போன்ற இடங்களில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய மாற்றிடங்களில் குடியமர்த்த விரைவுபடுத்தப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபகரமற்ற குடிசைப் பகுதிகளை அகற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் 15,342 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.394.68 கோடி செலவில் கட்ட மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

## 3.11 ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இதர நகரங்களில் வாழும் குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு வீட்டு வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கு மைய அரசு, மாநில அரசு மற்றும் பயன்பெறும் குடும்பங்களால் போதிய நிதி ஆதாரம் செய்யப்படும்.

## 3.12 சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

சென்னை நகரில், நதிக்கரைகளில் வாழும் குடிசைப் பகுதி மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சென்னை பெரும்பாக்கம் பகுதியில் 2,200 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.44 கோடி செலவில் கட்டப்படும். இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரம் அவசர சுனாமி மறுசீரமைப்பு திட்டம் மற்றும் பன்னிரண்டாவது நிதிக் குழு மானியங்களிலிருந்தும் பெறப்படும்.

## 3.13 நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்குச் செயல்படுத்தப்படாமல் இருந்த சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 2006-07 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்பட்டு தற்போது ரூ.10 கோடி செலவில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டப் பணிகளை 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ரூ.10 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.



## 3.14 மூலதன செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு

நகர குடிசைப் பகுதிவாழ் மக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த வீட்டு வசதி, குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் மறு குடியமர்வு திட்டப் பணிகளை செயல்படுத்த 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.629.50 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.15 பகுதி–2 திட்டங்கள்

(அ) கோவை மற்றும் திருச்சி ஆகிய மாநகரங்களில் கட்டப்பட்டுள்ள 1,030 அடுக்கு மாடிக் குடியிருப்புகளைப் பாதாள சாக்கடை அமைப்புகளுடன் இணைக்க 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.62.70 இலட்சம் செலவிடப்படும்.

(ஆ) சென்னை நகருக்கு வெளியே உள்ள நகரப் பகுதிகளில் வாழும் 1,000 குடிசைப் பகுதிவாழ் இளைஞர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளிக்கப்படும்.

## 3.16 மதுரை நகரில் அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்புப் பணிகள்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மதுரை நகரில் குடிசைப் பகுதி மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ள 2234 அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்புப் பணிகள் ரூ.195.23 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 3.17 சிறப்பு உள்ளடக்க திட்டம் – 2007–2008, நகரப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் மக்களுக்கான திட்டப் பணிகள்

2007-2008 ஆம் ஆண்டில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வீட்டு வசதிப் பணிகளின் மூலம் குடிசைப் பகுதிகளில் வாழும் 60 சதவிகித ஆதி திராவிடர் இன மக்கள் பயன்பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 3.18 சென்னையில் ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வியல் ஆதாரங்களை ஏற்படுத்துதல்

ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வாழ்வியல் ஆதாரப் பணிகளை 2006-07 முதல் 2008-09 வரை ரூ.4.32 கோடி செலவில் மேற்கொள்ள

திட்டமிடப்பட்டுள்ளது இத்திட்டப் பணிகளுக்காக கீழே கூறப்பட்டுள்ள வாழ்வியல் ஆதாரப் பணிகள் 2007-08ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்:

(அ) 200 சுய உதவிக் குழுக்களுக்கு சுழற்சி நிதியாக ஒவ்வொரு குழுவிற்கும் தலா ரூ.30,000/- அளித்தல்.

(ஆ) ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு தினசரி உபயோகப் பொருட்கள் செய்ய பயிற்சி அளித்தல்.

(இ) ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளில் கீழே கூறப்பட்டுள்ள பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(i) உற்பத்தி நோக்குடன் சிறிய பொருளாதார நடவடிக்கைகள்;

(ii) வாழ்வாதாரப் பணிகள் மேலே கூறப்பட்டுள்ள இத்திட்டப் பணிகளுக்காக 2007-2008ஆம் ஆண்டில் ரூ.200.55 இலட்சம் செலவிடப்படும்.

### 3.19 எதிர்காலத் திட்டங்கள்

(அ) தென் சென்னையில் 9000 அடுக்கு மாடி குடியிருப்புகளும் வட சென்னையில் 9,936 கொண்ட இரண்டு மாதிரி குடியிருப்பு திட்டப் பகுதிகளையும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் போதிய கட்டமைப்புகளுடன், சமுதாய மற்றும் சமூக வசதிகளுடனும் சென்னை நகரில் ஆட்சேபகரமான குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் பொருட்டு செயல்படுத்தப்படும்.

(ஆ) அடுக்கு மாடி குடியிருப்புகள் 270 சதுர அடி கட்டட பரப்பு கொண்டதாகவும் குழாய் மூலம் தண்ணீர் வசதி போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டதாகக் கட்டப்படும்.

(இ) ஆட்சேபகரமான பகுதிகளான நதிக்கரைகள், சாலை ஓரங்கள் போன்ற பகுதிகளில் உள்ள குடிசைவாழ் குடும்பங்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்கு மாடி குடியிருப்புகளில் மறு குடியமர்வு செய்யப்படுவர்.

(ஈ) குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்காக சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களில் 10 முதல் 12 அடுக்குகள் கொண்ட அடுக்கு மாடி குடியிருப்புகள் மின் தூக்கி வசதிகளுடன் கட்டப்படும்.



(உ) தமிழகத்தின் அனைத்து நகராட்சிகளிலும் வாழும் துப்புரவு தொழிலாளர்களுக்கு அடுக்கு மாடி வீடுகள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சேலம், மதுரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களில் முதல் கட்டமாக 2007-08ம் ஆண்டில் அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்படும்.

(ஊ) ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசால் பட்டா வழங்கப்பட்ட ஆதி திராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களுக்கு தனி வீடுகள் கட்டித் தரப்படும்.

(எ) ஆட்சேபகரமற்ற அரசுக்கு தேவைப்படாத அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்குமேல் வாழும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) நகரப் பகுதிகளில் வாழும் அனைத்து குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்படும்.

(ஐ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வலைதளம் விரைவில் துவங்கப்படும்.

## கூட்டுறவு வீட்டு வசதி

### 4. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்

**4.1** "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்கிற அரசின் வீட்டு வசதிக் கொள்கையை செயலாக்குவதில் தமிழ்நாட்டில் உள்ள வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய 1,023 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவற்றில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய 199 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் 824 நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் அடங்கும். மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமும் செயல்பட்டு வருகின்றது.

### 4.2 மேலாண்மை

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் பாரபட்சமற்ற மேலாண்மையினை உறுதி செய்யும் பொருட்டு அனைத்துக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் 25-5-2001 முதல் தனி அலுவலர்கள்

[2007 மே 4

நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களாட்சி கோட்பாடுகளின்படி விரைவில் இச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

**4.3 வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்கள்**

(அ) ஊரக பகுதியிலுள்ள பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்காக ஊரக வீட்டு வசதி திட்டம் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கான ஊரக வளர்ச்சி திட்டம்

(ஆ) நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்

(இ) வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல்

**4.4 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் சாதனைகள்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் அது தொடங்கப்பட்டது முதல் இதுவரை தொடக்க நிலை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 11,56,511 வீடுகள் கட்டுவதற்காக ரூ.4605.67 கோடி அளவிற்கு கீழ்கண்டவாறு கடனுதவி அளித்துள்ளது:

| வ. எண் | திட்டம் | 31-3-2007 வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | வழங்கப் பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ஊரகப் பகுதியில் வீட்டு வசதி திட்டம், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினர்கள் | 8,01,867 | 1086.53 |
| 2. | நகர்ப்புற வீட்டு வசதி திட்டம் | 3,54,644 | 3519.14 |
| | மொத்தம் | 11,56,511 | 4605.67 |



2007 மே 4]

**4.5 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | உத்தேசிக்கப் பட்ட கடன் தொகை | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | நகர்ப்புற வீட்டு வசதி திட்டம் | 12000 | 200.00 | .. | 200.00 |

**5. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்**

**5.1** அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீட்டு வசதி இனங்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது.

1. வீட்டுமனை வாங்கி அதில் வீடு கட்டுதல்
2. புதிதாக வீடு கட்டுதல்
3. தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்பு / வீடு வாங்குதல்
4. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பு / வீடு வாங்குதல்.
5. தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்.
6. தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்.

**5.2** இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கு அதிக அளவு ரூ.6 இலட்சமும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு அதிக அளவு 7.50 இலட்சமும் வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, தற்போதுள்ள வீட்டை விரிவாக்க மற்றும் மேம்படுத்த முன்பணத்தொகை ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

**5.3** 2007-2008 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 மே 4

## 6. வாடகைக் கட்டுப்பாடு

**6.1** தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960 - திருத்தப்பட்ட சட்டம் 23/1973 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது:

அ. இடவசதி கட்டுப்பாடு ... வீடுகள் வாடகைக்கு விடுவதை சீர் செய்வது, முறைப்படுத்துவது.

ஆ. வாடகைக் கட்டுப்பாடு ... வாடகையைக் கட்டுப்படுத்துவது

இ. வெளியேற்றுகை கட்டுப்பாடு ... முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது.

**6.2** இடவசதி கட்டுப்பாடு அதிகாரி, (சென்னையை பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியர்) இடவசதி கட்டுப்பாட்டுக்கு பொறுப்பாளர் ஆவார். வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளை நிர்வகிப்பதற்கு இடவசதி கட்டுப்பாடு அதிகாரி மேற்படி சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆவார். மேலும், மேற்படி தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960 ஒருங்கியல் சட்டம் என்பதால் எந்தவித திருத்தங்களுக்கும் மத்திய அரசாலும் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். தற்போது சென்னையில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துவது, பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும். தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960-ன் பிரிவுகள் 3, 3ஏ, 12, 13 (ம) 22 ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான இடவசதி கட்டுப்பாடு அதிகாரி கவனிக்க வேண்டிய பிரிவுகளாகும்.

**6.3** இச்சட்டப் பிரிவு 3-ன்படி கட்டடங்கள் அரசு கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அரசு ஊழியர்களின் குடியிருப்பு தேவைகளுக்கும், அரசு அலுவலகங்களுக்கு குடியிருப்பு இல்லாத தேவைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதும், வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவதும் அரசு அவ்வப்போது வழங்கும் நெறிமுறை கட்டளைப்படி நடைபெறுகின்ற சட்ட பூர்வமான நடவடிக்கை ஆகும். பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால் கடந்த இருபது வருடங்களாக சென்னை மாநகரில் எந்தக் கட்டடங்களும் அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படவில்லை.



2007 மே 4]

தற்போதைய நில மதிப்பு உயர்வு, பழைய மற்றும் அடிப்படை வசதிகளற்ற கட்டடங்களுக்கும் வாடகை மதிப்பீட்டை உயர்த்தி காட்டுகிறது. ஆதலால் நிதிநிலை அடிப்படையில் எந்த ஒரு கட்டடத்தையும் அரசு கட்டுப்பாட்டில் கொண்டுவருவது நன்மை பயக்கக்கூடியதல்ல. ஏனென்றால் யாரும் அந்தக் கட்டடத்திற்கு குடிவர விரும்பாத நிலையில் அரசு அதற்கான வாடகையைச் செலுத்த வேண்டியுள்ளது. சட்டப் பூர்வமான வாடகைதாரர் என்ற முறையில் அரசு கட்டுப்பாட்டிலுள்ள கட்டடத்தைப் பராமரிக்கும் பொறுப்பு அரசையே சார்ந்ததாகும்.

**6.4** முதன்முதலில் 1949-ல் இந்தச் சட்டம் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய உரிமையை வழங்க அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அரசு ஊழியர்களின் இடவசதிக்கான தேவைகளை கவனிக்க வீட்டு வசதி வாரியம் மற்றும் வீடு கட்ட முன்பணம் வழங்குதல் போன்ற வசதிகள் உள்ளன. தற்போது 'மாற்றலுக்குரியவர்' என்ற பிரிவில், ஒரே ஒரு அலுவலர் இந்த அலுவலகத்தில் வீடு ஒதுக்கீடு கோரி பதிவு செய்துள்ளார். தற்போது அரசு கட்டுப்பாட்டில் 28 கட்டடங்கள் உள்ளன. இந்த வீடுகள் விடுவிக்கப்பட்டு உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கப்படும் வரை அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர் ஆகும். அரசு கட்டுப்பாட்டிலுள்ள வீடுகள் சம்பந்தமாக 12 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன. தனிப்பட்ட குடியிருப்பாளர் செலுத்தும் வாடகையை ஒரு கட்டடத்தின் மீதான உரிமை குறித்து அல்லது வாடகை பெறும் தகுதி குறித்து உரிமையாளர் இடையே பிரச்சினை இருக்கும் பட்சத்தில் அந்த வீட்டிற்கான வாடகையை, இடவசதி கட்டுப்பாடு அதிகாரியான சென்னை மாவட்ட ஆட்சியரை வசூலிக்கும் அதிகாரியாக நீதிமன்ற அறிவுரைப்படி அரசு நியமித்துள்ளது.

## 7. நகர் – ஊரமைப்புத் துறை

**7.1** 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 62.41 மில்லியன் ஆகும். அதில் 27.48 மில்லியன் மக்கள் நகர்ப்புறங்களில் வசித்து வருகின்றனர். நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை 27.82 விழுக்காடாக உள்ள நிலையில் மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 43.86 விழுக்காடாக கணக்கிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த புவிப்பரப்பு 1,30,011 சதுர கிலோ மீட்டராகும். 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நகர்ப்புற குடியிருப்புகளின் மொத்தப் பரப்பு 12,527 ச.கி.மீ. இது மாநிலத்தின் மொத்தப் பரப்பில்

10.58 விழுக்காட்டைப் பெற்றுக் கொண்டுள்ளது. 2001-ல் மாநிலத்தின் சராசரி மக்கள் தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 180 நபர்களாக இருந்தது. ஆனால் நகர்ப்புறங்களில் இது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 2,194 நபர்கள் என அமைந்துள்ளது.

**7.2** வளரும் நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவதில் நகர்மயமாதல் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது. ஆனால் நகர்ப்புற மக்கள் தொகையின் திடீர் உயர்வு நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதி மற்றும் சேவைகளில் பாதிப்பை ஏற்படுத்தி நகர்ப்புற வாழ்க்கையின் தரம் சீர்கெட வழிவகுக்கிறது. இது நகர்ப் பகுதியின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கான சூழல் ஆகியவற்றின்மீது திட்டவட்டமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நகர்ப்புற மக்கள் தொகையின் அளவு, குவிதல் மற்றும் பரவல் ஆகியன நகர மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வதில் மற்றும் பராமரிப்பதில் பெரும் அறைகூவலை விடுக்கிறது. இந்த அறைகூவல்கள் பலதரப்பட்டவை மற்றும் சிக்கலானவை. வசிப்பவர்கள் அனைவருக்கும் தரமான, தேவையான தரத்துடன் அமைந்த ஆரோக்கியமான, பாதுகாப்பான, வசதியான, தரமான வாழ்க்கையை தொடர்ந்து கிடைக்கச் செய்ய மற்றும் அதற்கு வழிவகுக்க நகர்ப்புற அமைப்பு முறையின் செயல்திறனை மேம்படுத்த ஒருமுகப்பட்ட முயற்சி தேவைப்படுகிறது.

## கொள்கை குறிக்கோள்கள்

**7.3** நகர்மயமாதல் வலுவான பொருளாதார, அரசியல் மற்றும் இடப்பரவல் நிகழ்வாகும். செயல்வடிவில் திட்டமிடுதலுக்கான அவசியம், உள்கட்டமைப்பு தேவைகள், சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்டவை மற்றும் மேலாண்மை மற்றும் நிர்வகித்தல் குறித்தவை ஆகியவற்றை திறம்பட கையாள நகர்மயமாதலின் பரவல் மற்றும் அதன் வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. பலமுறை பெருநகரங்களில் மட்டுமே பெரிய அளவிலான முதலீடுகள் செய்யப்படுவதன் விளைவாக அவற்றிற்கு இடம்பெயர்வோர் வருகை மிகவும் அதிகரிக்கிறது. எனவே, பெருநகரங்களை நோக்கி இடம் பெயர்வதை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த இரண்டாம் நிலை மாநகரங்கள் மற்றும் நகரங்களில் கவனம் செலுத்துவதும் மற்றும் போதுமான அளவிற்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, பேரூராட்சி தரத்திலிருந்து நகராட்சிகளாக சமீபத்தில் தரம்



உயர்த்தப்பட்டுள்ள நகரங்களுக்கு திட்டங்கள் தயாரிக்க வேண்டியது அவசரத் தேவையாக கருதப்படுகிறது.

**7.4.** தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ன் படி முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற திட்டங்களைத் தயாரிப்பதிலும் மற்றும் செயல்படுத்துவதிலும் உள்ளாட்சிகளுக்கு/திட்டக் குழுமங்களுக்கு உதவுதல் இத்துறையின் முக்கியப் பணியாக உள்ளது. அச்சட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட திட்டங்களில் அடங்கியுள்ள உத்தேசங்களை உள்ளாட்சிகள் செயல்படுத்துவதற்கு ஏதுவாக பல்வேறு சிறப்புத் திட்டங்களின்கீழ் நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி/திட்டக் குழுமங்களுக்கு வெவ்வேறு விகிதங்களில் இத்துறை மானியம் வழங்குகிறது. மனைப் பிரிவுகள் மற்றும் கட்டடத் திட்டங்களுக்குச் செயல் குழுமங்களாக விளங்கும் உள்ளாட்சிகளால் இறுதி ஒப்புதல் வழங்க உள்ளாட்சி/உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு குடியிருப்பு/வணிகம்/தொழிற்சாலை/நிறுவனங்கள் அல்லது மற்ற பிற நோக்கங்களுக்கான நில மேம்பாடு மற்றும் கட்டடப் பணிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரை வழங்குவதும் இத்துறையின் முக்கிய செயல்பாடாக உள்ளது.

## சட்டப்படியான திட்டங்கள் தயாரித்தல், முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம்

**7.5** முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் என்பது நகரங்களுக்காகத் தயாரிக்கப்படும் திட்டப் பகுதியில் ஒழுங்கான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான ஒழுங்குபடுத்தும் வழிகாட்டி நெறிமுறைகளுடன்கூடிய திட்டமாகும். பெரும்நோக்கில், ஒழுங்குபடுத்துதல் மற்றும் திறன்வாய்ந்த சாலை அமைப்பு, புறவழிச் சாலைகள், வட்டச் சாலைகளுக்கான ஏனையவை இதன் நோக்கமாக அமைந்துள்ளது. நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மறுசீரமைப்பிற்கான பெரிய அளவிலான ஒருமித்த திட்டத்தை வரையறுத்தல், ஒருமுகப்படுத்துதல் மற்றும் வழங்குதல் போன்ற ஒரு தொடர் நடைமுறையை இது உள்ளடக்கியதாகும். நலமான வாழ்வுக்கான உள்ளூர் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும், மேலும் உடனடி மற்றும் வருங்காலத் தேவை ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக மற்றும் பொருதார சம்பந்தமானவற்றையும் உள்ளடக்கியதாக இது வடிவமைக்கப்படுகிறது. இத்துறை இதுகாறும் 117 நகரங்களுக்கு முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரித்துள்ளது. இத்திட்டங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுஆய்வு செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில்

[2007 மே 4

6 நகரங்களுக்கு முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டம்

**7.6** இவை நுண்ணிய அளவிலான மற்றும் முழுமைத் திட்டத்தை (பெரிய அளவிலானது) ஒத்து அமையும் வகையில் நகர்ப்புற பகுதிகளுக்கெனத் தயாரிக்கப்படும் செயல் திட்டங்களாகும். முழுமைத் திட்ட வரம்பிற்குள் சமச்சீரான வளர்ச்சிக்கு வசதி செய்வதற்கு குறிப்பிட்ட நிலப்பயன், பூங்கா மற்றும் விளையாடுமிடங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள், சிறிய இணைப்புச் சாலைகள், முறையான போக்குவரத்து சுழற்சிக்கான சாலைகள், பொதுப்பயன்பாடு, வணிகம் மற்றும் தொழிற் பகுதிகள் மற்றும் பிறவற்றின் சீரான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் விரிவான வகையில் நிலப்பங்கீடு செய்யப்படுகிறது. இத்துறை ஒவ்வொரு ஆண்டும் தரம் 1 (1,00,000 மக்கள் தொகைக்கு மேல்) மற்றும் தரம் 2 (மக்கள் தொகை 50,000-லிருந்து 99,999 வரை) நகரங்களுக்கு மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் பணியை ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்கிறது. விரைவாக வளர்ச்சியடையும் பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டில் 100 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொன்மைச்சிறப்புமிகு நகர மேம்பாட்டுத் திட்டம்

**7.7** நமது பண்டைய சீர்மிகு கலாச்சாரம், பண்பாடு மற்றும் கட்டடக்கலை திறமைக்குச் சான்றாக தொன்மைச் சிறப்புமிகு நகரங்கள் திகழ்கின்றன. இப்பகுதிகளை பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. திட்டமிடப்படாத நகர்ப்புற பரவலின் காரணமாக தொன்மைச் சிறப்புமிகு பகுதிகளை சுற்றுச்சூழல் சீர்கேட்டிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனும், வருங்கால சந்ததியினரின் நலனுக்காகவும் தொன்மைச் சிறப்புமிகு நகரங்களைப் பேணவும் மற்றும் மேம்படுத்தவும், திட்டங்கள் தயாரிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, இக்குறிக்கோளை நிறைவேற்ற தொன்மைச் சிறப்புமிகு நகரங்களாக அறிவிக்கப்பட்ட 39 நகரங்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் அரசாணை எண்.5, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி)(2) துறை, நாள்: 19-01-2007-ன்படி 10 கிராம பஞ்சாயத்துகளை தொன்மைச் சிறப்புமிகு இடங்களாக அறிவிப்பு செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் தவிர, நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து



2007 மே 4]

அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் ஒவ்வொரு தொன்மைச் சிறப்புமிகு நகரத்திற்கு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டில் 10 தொன்மைச் சிறப்புமிகு நகரங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

## போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்

**7.8** நகரங்களின் வளர்ச்சி மற்றும் நகரச் சாலைகளின் நெரிசல் அதிகரித்திருப்பது சுற்றுச்சூழல் விரைவாக சீரழிய வழி வகுக்கிறது. இச்சூழலை கருத்தில் கொண்டு, 5 மாநகராட்சிகளுக்கு (சென்னையைத் தவிர) ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண் ஆய்வு மேற்கொண்டும், 58 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு அவற்றின் இயல்புகள் மற்றும் போக்குவரத்து நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து நெரிசலைக் களையும் வகையில் நீண்ட காலத் தேவைகளை வழங்க போக்குவரத்துக்கு மேலாண் திட்டங்களையும் இத்துறை தயாரித்துள்ளது. போக்குவரத்து திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கி திட்டங்கள் செயல்படுத்தப்பட ஒவ்வொரு மாநகராட்சிக்கும் (சென்னை நீங்கலாக) ரூ.50 இலட்சமும், ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.25 இலட்சமும், 75 சதவிகிதம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும், 25 சதவிகிதம் உள்ளாட்சியின் பங்காகவும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டு 10 நகரங்களில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

## பூங்கா மேம்பாடு

**7.9** பொது மக்கள் சுத்தமான காற்றை சுவாசிக்கவும், அசதியான பரபரப்பான அலுவல்களுக்கிடையில் சிறிது நேரம் இளைப்பாறவும் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பொது மக்களின் நலனுக்காக பூங்காக்களை மேம்படுத்தி, பராமரிக்க வேண்டும். தற்போதுள்ள பூங்காக்களை மேம்படுத்த திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அதாவது அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் ஒவ்வொரு பூங்காவிற்கும் மானியமாக நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்தும், மீதமுள்ள 50 விழுக்காடு செலவினத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியும் ஏற்கும். 2007-2008 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் மொத்தச் செலவினம் ரூ. 62.50 இலட்சத்தில் 50 பூங்காக்கள் மேம்படுத்தப்படவுள்ளன.

## எட்டு மண்டல அலுவலகங்களை 29 மாவட்ட அளவிலான அலுவலகங்களாக மறு அமைப்பு செய்தல்

**7.10** தற்சமயம் தலைமை அலுவலகம், இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு சென்னையில் செயல்பட்டு வருகிறது. மேலும், அவரின்கீழ் மண்டல துணை இயக்குநரை அலுவலகத் தலைவராகக் கொண்டு செங்கல்பட்டு, வேலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சிவகங்கையில் எட்டு மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டல அலுவலகமும் 2 முதல் 7 மாவட்டங்கள் வரை உள்ளடக்கியதாக உள்ளது. புவியியல் அமைப்பின்படியும், பொருளாதார மற்றும் சமூக காரணங்களின் அடிப்படையிலும் தற்போதுள்ள எட்டு மண்டலங்கள் பிரிக்கப்பட்டன. நகர்மயமாதல் மற்றும் விரைவான வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் 29 மாவட்டங்களுக்கான மண்டலங்கள் தனித்தனியே உருவாகியுள்ளதால் மாவட்ட அளவிலான மண்டல அலுவலகங்களை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும், திறம்பட திட்டமிடுவதற்கும், செயல்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் திட்ட எல்லையும் மாவட்ட நிர்வாக எல்லையும் ஒன்றாக அமைவது அவசியமென கருதப்படுகிறது.

**7.11** நகர் ஊரமைப்பு இயக்குநரின் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. 5 ஏக்கர் வரை மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்க மண்டல துணை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருப்பினும், ஒவ்வொரு மண்டல அலுவலகமும், இரண்டு முதல் ஏழு மாவட்டங்கள் வரை உள்ளடக்கியதாக இருப்பதால் ஒப்புதல்களுக்காக நெடுந் தொலைவிலிருந்து மண்டல அலுவலகங்களுக்கு வருவதற்கு பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மாவட்ட அளவிலான மண்டல அலுவலகங்களை உருவாக்குவது மட்டுமே ஒரே தீர்வாகும் மற்றும் அதிகாரப் பரவலாக்கலின் பலன் உண்மையிலேயே பொதுமக்களைச் சென்றடையும். உத்தேச மாவட்ட அளவிலான மண்டல அலுவலகங்கள் மாவட்ட திட்டமிடல் குழுவின் (District Planning Committee) செயலகமாகவும் பணியாற்ற இயலும். மேலும், 73-வது மற்றும் 74-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி மாவட்ட திட்டமிடல் குழுவிற்கு சமூக - பொருளாதார திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ஏதுவாகும்.





## பகுதி–2 திட்டங்கள் (2007–2008)

**7.12** புதிய பணியாளர் நியமனம் மற்றும் பதவி உயர்வு ஏதுமின்றி கட்டட வாடகை, மின்சாரம் போன்ற செலவினங்கள் தவிர கூடுதல் நிதிச் சுமையின்றி தற்போதைய 8 மண்டல அலுவலகங்களை மாவட்ட அளவிலான 29 மண்டல அலுவலகங்களாக மறுஅமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007-2008-ல் இதன் முன்னோடியாக 3 புதிய மண்டல அலுவலகங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த 3 புதிய மண்டல அலுவலங்களை உருவாக்க, 2007-2008-ல் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.13** இத்துறையின் பணிகளில் மின்னணு ஆளுகை முறையைப் புகுத்தும் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டட/மனைப் பிரிவு விண்ணப்பங்களை கணினி மூலமாக பரிசீலித்தல் மற்றும் தகவல்களை விண்ணப்பதாரர்களுக்கு இணைய வலைதளம்மூலமாக வழங்குதல் போன்றவை மின்னணு ஆளுகைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தை மண்டல அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு தலைமை அலவலகத்துடன் ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தும் வகையில் மண்டல அலுவலகங்களை கணினி வாயிலாக தலைமை அலுவலகத்துடன் இணைக்கும் வகையில் இத்திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை தவிர 2007-2008-ல் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.14** ஏற்கெனவே மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மண்டல அலுவலகங்களுக்கான இரண்டு வாகனங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்கள் பழுதடைந்த வாகனங்களுக்குப் பதிலாக வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ஏற்கெனவே முற்றிலுமாகப் பழுதடைந்துள்ள நான்கு வாகனங்களை மாற்றுவதற்காக மொத்தத் தொகை ரூ.17 இலட்சம் 2007-2008-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.15** திட்டமிடுதலில் தொலையுணர்வு, புவியமைப்புத் தகவல் முறை போன்ற நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தும் நோக்கிலும், அனைத்து இரண்டாம் நிலை நகரங்களுக்கும் இரண்டிலிருந்து மூன்று ஆண்டு குறுகிய காலத்திற்குள் முழுமைத் திட்டங்கள் தயாரிக்கவும், புதிதாக கூட்டு உள்ளூர்த் திட்டக் குழுமமாக உருவாக்கப்பட்டுள்ள பெரம்பலூருக்கான முழுமைத் திட்டத்தை ஒரு முன்மாதிரித் திட்டமாகத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய ஹைதராபாத்

[2007 மே 4

தேசிய தொலையுணர்வு மையம், அகமதாபாத் வான்வெளி செயலாக்க மையம் போன்ற மைய அரசு நிறுவன உதவியுடன் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முன் மாதிரித் திட்டத்திற்காக ரூ.10 இலட்சம் 2007-2008-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.16** தற்சமயம் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் உள்ள இருக்கைகள் மிகவும் பழுதடைந்த நிலையிலும், உபயோகப்படுத்த இயலாத நிலையிலும் உள்ளதால் நாற்காலி, மேசை, கோப்பு வைக்கும் நிலைப்பேழை, இரும்பு அலமாரிகள் போன்றவை 2007-2008-ல் ரூ.5 இலட்சம் செலவில் வாங்கப்படவுள்ளது.

## 8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**8.1** சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்படியான அமைப்பாகும். இக்குழுமம், முதலில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறையின் 13-11-1972 ஆம் நாளிட்ட அரசாணை எண் 2380-ன்படி ஒரு தற்காலிக அமைப்பாக உருவாக்கப்பட்டது. பின்னர் இக்குழுமம் 7-3-1975 அன்று ஒரு சட்டப்படியான குழுமமாக மாறியது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார எல்லை 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதிலும் பரவியுள்ளது. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் சென்னை மாநகராட்சி, 16 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 214 கிராமங்கள் உள்ளடங்கிய 10 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. சென்னை மாநகரப் பகுதி வாழ்மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துகிறது.

## 8.2 சென்னைப் பெருநகர் பகுதிக்கான முழுமைத் திட்டம்

சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான முழுமைத் திட்டம், அப்பகுதிக்கான நிலப்பயன் விவரங்களைக் கொண்டது. முதலாவது முழுமைத் திட்டத்தின் முதன்மை குறிக்கோளாக நிலப்பயனை நெறிப்படுத்துவதும், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளினால் வளர்ச்சியை நெறிப்படுத்துவதுடன், நகரத்தை நெரிசலற்றதாக்குவதும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதும் கருத்தில் கொள்ளப்பட்டன. சென்னைப் பெருநகரப்பகுதிக்கான முதல் முழுமைத் திட்டத்திற்கு 4-12-1976 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது. பின்னர், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வரைவு இரண்டாவது முழுமைத் திட்டம் தயாரிப்பது குறித்து அறிவிப்பு வெளியிட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அரசின் இணக்கம் கோரியது. அவ்வரைவு இரண்டாவது முழுமைத் திட்டத்தில் மாற்றம் செய்வதற்காக 5-10-2001 அன்று அரசால் திருப்பப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றொரு வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தை சமர்ப்பித்தது. அதுவும் கூடுதல் முன்னேற்றங்களை உள்ளடக்குவதற்காக 5-12-2006 அன்று மீள அனுப்பப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் புதிதாக சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தை தயாரித்து அரசின் இசைவிற்கு 21-3-2007 அன்று அனுப்பியது. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் மக்கள் பரவல், பொருளாதாரம், மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை ஆய்ந்த பின்னர், வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் வள ஆதாரங்களை மிகுதிப்படுத்துவதற்கான செயல் திட்டங்களையும், போக்குவரத்து, வீட்டு வசதித் தேவை, உள்கட்டமைப்பு வசதிகள், திடக்கழிவு மேலாண்மை, வடிகால் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்றவற்றில் ஏற்கெனவே காணப்பெறும் நடைமுறைச் சிக்கல்களை பிரித்தறிந்தும் அவற்றை சரிசெய்ய குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் செயல்படுத்தவும் தக்கவாறு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு மிக விரைந்து செயலாற்றி, 30-3-2007 ஆம் நாளிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அரசாணை நிலை எண் 124-ல் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 24(2)-ன்கீழ் சென்னைப் பெருநகர் பகுதிக்கான வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் தயாரிப்பது குறித்து மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 26-ன்கீழ் அறிவிப்பு வெளியிட இசைவு அளித்தது. மறுப்புகளும் கருத்துகளும் கேட்டு பொது அறிவிப்பு கொடுத்து சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சரி செய்யப்பட்ட சென்னைப் பெருநகர் பகுதிக்கான வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் எப்பொழுது பெறப்படுகிறதோ, அப்போது 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், பிரிவு 28-ன்கீழ் அதற்கு ஒப்புதல் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். ஒரு குறிப்பிடத் தகுந்த முன்னேற்றமாக இந்த முழுமைத் திட்டத்தின் முழுமையான பகுதியையும், சுருக்கப்பட்ட பகுதியையும் குறுந்தகட்டிலும், இணைய தளத்திலும் பொது மக்கள் பார்த்திட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்பாடு செய்துள்ளது.



2007 மே 4]

## 8.3 திருவான்மியூருக்கு தெற்கே இருந்த கட்டுமானத் தடை நீக்கம்

சென்னைப் பெருநகர் பகுதியில் திருவான்மியூருக்கு தெற்கே, நிலத்தடி நீர்தாங்கியை காப்பதனை முதன்மைக் கருத்தாகக் கொண்டு கட்டுமானப் பணிகள் 23-2-1980 அன்று தடை செய்யப்பெற்றது. ஆனால் தற்போது நிலவும் மாறிய சூழலை கருத்தில் கொண்டு அரசு அத்தடையினை சில நிபந்தனைகளுடன் நீக்கியுள்ளது.

## 8.4 தகவல் தொழில்நுட்ப நெடுவழி மேம்பாடு

தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு மேலும் ஊக்கம் வழங்கும் விதமாக தற்போதுள்ள தகவல் தொழில் நுட்ப நெடுவழியை பழைய மகாபலிபுரம் சாலையின் இருமருங்கிலும் மாமல்லபுரம் வரை ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு விரிவுபடுத்திட அரசால் முன்மொழிவு கேட்கப்பட்டுள்ளது. இது நிறைவடையும்போது தகவல் தொழில்நுட்ப / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் பிரிவு விரைவான வளர்ச்சிக்கு ஏதுவான போதிய இடவசதியும் உள்கட்டமைப்பு வசதியும் பெறும்.

## 8.5 சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான ஒரு முதலீட்டுத் திட்டமாகும். இத்திட்டம் தொடர்புடைய துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் கலந்தாய்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்கும் தேவையான உள்கட்டமைப்பு தேவைகளைக் கண்டறிந்து அவற்றிற்கு இணைந்த திட்டங்களை வகுத்தலே இத்திட்டத்தின் தலையாய குறிக்கோள்கள் ஆகும். அவை பின்வருமாறு:

(i) இத்திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான நிதியை கண்டறிதல்.

(ii) அந்நிதிக்கான ஆதாரத்தைக் கண்டறிதல்.

(iii) திட்டங்களின் தன்மையைப் பொறுத்து ஆண்டுத் திட்டப் இடைக்காலத் திட்டம் மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் என முதன்மைப்படுத்தல்.

உடனடியாக முதலீடு தேவைப்படும் திட்டங்கள் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்படும். உட்கட்டமைப்பு தேவைகளுக்கான திட்ட இடைக்காலத் திட்டத்தின்கீழும் அதிக முதலீட்டுடன் அதிக கா



இடைவெளியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் நீண்ட காலத் திட்டத்திலும் உள்ளடங்கும்.

சென்னை மாநகரம், 16 நகராட்சி பகுதிகள், 20 பேரூராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்களில் அமையும் 214 கிராமங்கள் கொண்ட சென்னை பெருநகரத்தின் உள்கட்டமைப்பு தேவைகள் குறித்து விவரங்களை தொடர்புடைய முகமைகளிடமிருந்து சேகரித்து இந்த முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆண்டுத் திட்டம், இடைக்காலத் திட்டம் (3 ஆண்டுகள்) மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் (10 ஆண்டுகள்) என பிரிக்கப்பட்டு செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டது. சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்திற்கென முன்மொழியப்பெற்ற மொத்த நிதி ரூ.18,000 கோடிகளாகும். இத்திட்டம் சென்ற 4 ஆண்டுகளாக 2003-2004-ல் இருந்து செயல்படுத்தப்படுகிறது.

சென்ற மூன்று, ஓராண்டு திட்டங்களில் 2003-2004-2005-2006-ல் ரூ.3074.78 கோடி மதிப்பிற்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2006-2007-ற்கான மாற்றப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.2,129.14 கோடி எனக் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 2007-2008-ல் ரூ.2054.39 கோடி மதிப்பீட்டில் உள் கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. ஜவஹர்லால் தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.44,780 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல், திடக்கழிவு மேலாண்மை, பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம், போக்குவரத்து வசதி, துணை நகர மேம்பாடு மற்றும் ஏழை மக்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதிகள் உள்ளடக்கிய உள் கட்டமைப்புத் திட்டங்கள் 7 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்பட உள்ளன.

## 8.6 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III

சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வளர்ந்து வரும் போக்குவரத்து பிரச்சினைகளை போக்கும் வகையில் தமிழக அரசால் எடுக்கப்பட்டு வரும் பிற நடவடிக்கைகளுக்கு இணையாக, தமிழக அரசும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், உலக வங்கியின் உதவியுடன் ரூ.675 கோடி திட்ட மதிப்பீட்டில் 2005 முதல் 2010 வரை ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை தொடங்கியுள்ளது. நகர்ப்புற சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை நீக்குவது, இடைக்கால செயல்பாடாகும். இதனால் தொடர் வழி அமைப்பு, குறிப்பாக சென்னைப் பெருநகர்ப் பகுதியை உள்ளடக்கிய நகர்ப்புற முதன்மை வழித்தடங்களில் உள்ள இணைப்புகளை விரிவாக்குவது, வலுப்படுத்துவது, சாலை-இருப்புப் பாதை

இடையே மேல் வழிப்பாதைகள் / சுரங்க வழிப்பாதைகள் கட்டுதல், பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை கட்டுதல் மூலம் சாலைப் பாதுகாப்பு மற்றும் காற்றின் தரத்தை மேம்படுத்துதல், போக்குவரத்து கட்டுப்பாடு கருவிகள் அமைத்தல், விதிகளை நடைமுறைப்படுத்தல் ஆகியவை திட்டமிடப்பட்டது. பெரும்பாலான திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்புப் பணி, பல நிலைகளில் உள்ளன.

தமிழ்நாடு அரசின் பங்கு 27 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகவும், உலக வங்கியின் பங்கு 123 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகவும் இருக்கும். அரியலூர்-விலன்குடிப்பாக்கம் மற்றும் மாதர்வேடு சாலைகளை முறையே ரூ.704.30 இலட்சம் மற்றும் ரூ.288.60 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி உள்ளது. மேலும், ரூ.1,385 இலட்ச மதிப்பிற்கு, போக்குவரத்து கட்டுப்பாட்டு கருவிகளுக்கும், கட்டுமானத்திற்கும் அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 8.7 பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்

போக்குவரத்துத் துறைக்கான வளர்ச்சி செயல்திட்டத்தின் முதன்மைக் கருத்து மாநகரை நெரிசலற்றதாக்குவதாகும். பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை உள்ளடக்கிய நகர்ப்புற இரயில் தொடர்பமைப்பை வலுவூட்டுவதாலும், விரிவுபடுத்துவதாலுமே இக்கொள்கையை செயல்படுத்த இயலும்.

#### (அ) பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-I

பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-I சென்னை கடற்கரை முதல் திருமயிலை நிலையம் வரையிலான 8.55 கி.மீ. தூரத்திற்கு 1995-1997-ல் இந்திய அரசின் ஒரு திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான நிலம் தமிழக அரசால் இலவசமாக வழங்கப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டபோது அதன் மதிப்பு ரூ.269 கோடியாகும்.

#### (ஆ) பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை—II

**திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு**





அரசால் முறையே 33:67 என்னும் விகிதத்தில் நிதி வழங்கப் பெற்று இணைந்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்ட இறுதி மதிப்பீடு ரூ.733.39 கோடி என மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998 மார்ச் மாதம் தொடங்கப் பெற்று 26-1-2004 அன்று திருவான்மியூர் வரை பகுதியாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.473.16 கோடி விடுவித்துள்ளது.

#### (இ) பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை—II விரிவாக்கம் வேளச்சேரியிலிருந்து புனித தோமையார் மலை வரை

பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II விரிவாக்கம் வேளச்சேரியிலிருந்து புனித தோமையார் மலை வரையிலான 5 கி.மீ. தூரத்திற்கு ரூ.416 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசு முறையே 66.67:33.33 என்னும் விகிதத்தில் செலவினை பங்கிட்டுக் கொள்ளலாம் என்பதனை உறுதி செய்து இவ்வரசு இரயில்வே வாரியத்திற்கு தெரிவித்துள்ளது.

### 9. நிறைவுரை

மேலே சொல்லப்பட்ட பிரிவுகளில் விரிவாக விவரிக்கப்பட்டவாறு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளும் நிறுவனங்களும் முனைப்புடன் செயலாற்றுவதை உறுதி செய்ய ஏதுவாக விடாமுயற்சி மற்றும் வெற்றி நோக்குடனுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாகக் கூறவேண்டுமெனில் கடந்த சில ஆண்டுகளாக தொய்வு முகமாக இயங்கிக் கொண்டிருந்த வீட்டு வசதி வாரியம் இப்போது பொது மக்களுக்கு சிறந்த சேவை செய்வதற்காக முழுமையாக புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே. குறிப்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் இந்த அரசின் பல்முனை அணுகுமுறைமூலம், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் வீட்டு வசதி தொடர்பான தேவைகளை நிறைவு செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை இந்தத் துறை அடைந்துள்ளது என்பதை இவ்விடத்தில் தெரிவிப்பது சாலப்பொருத்தமாகும். இந்த சீர்மிகு பேரவை உறுப்பினர்கள் நல்கி வரும் ஒத்துழைப்பு, மக்களின் அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு

செதிகளை முன்னேற்றும் இந்தத் துறையின் முயற்சிக்கு பெரிதும் வலுசேர்க்கிறது. ஆகவே நல்ல நகரங்களை உருவாக்கும் பணியிலும் 'குடிசைகளில்லாத தமிழகம்' என்ற இலக்கை அடைவதற்கான பணியிலும் தொலைநோக்குப் பார்வையுடன் இத்துறை சிறப்பாகச் செயலாற்றும் என்பதை உறுதிபடக் கூறலாம்.



## இணைப்பு III

*(358 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

**முன்னுரை**

*"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும் வாயெல்லாம் செயல்."*

*- திருக்குறள்*

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்கவும்,

"கோயிலைத் தழுவிய குடிமக்கள், குடிமக்களைத் தழுவிய கோயில்கள்" என்ற தமிழ்ச் சான்றோர்களின் பொன்மொழிக்கு இணங்கவும், இந்து சமய அறநிலையத் துறையின் வாயிலாக மக்கள் தொண்டும், மகேசன் தொண்டும் ஆற்ற இந்த அரசு நாளும் அயராது அரும்பாடுபட்டு வருகின்றது.

அரிய முயற்சி மேற்கொண்டு அமைக்கப்பட்ட பண்டைத் தமிழகத்தின் சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை, இசைக்கலை முதலான அருங்கலைகளின் கருவூலமாகத் திகழும் திருக்கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் பாதுகாத்துப் பேணுவதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாய்ச் செயல்படுகிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்க, "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்பதை வலியுறுத்த தெய்வச் சேக்கிழாரால் செய்யப்பட்ட அருந்தமிழ்க் காவியம் "திருத்தொண்டர்புராணம்" எனப்படும் பெரியபுராணமாகும். இது வலியுறுத்தும் நெறியையொட்டி இந்த அரசு கண்ட ஒப்பற்ற திட்டம் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகும் அரும்பெரும் திட்டம் ஆகும்.

## சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் நியமனம்

13-5-2006 அன்று டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் பொறுப்பேற்ற இந்த அரசு "ஆண்டவன் முன்பு அனைவரும் சமம்" என்ற கொள்கையை வலியுறுத்தி, இறைவனுக்குப் பூசைகள் செய்வதில் சாதி வேறுபாடு இருக்கக் கூடாது என்ற சமூகச் சீர்திருத்தக் கோட்பாட்டை உடனடியாக நடைமுறைப்படுத்த உறுதிபூண்டது. தேவையான தகுதியும் உரிய பயிற்சியும் பெற்ற எந்த ஒரு இந்துவும், சாதி வேறுபாடின்றி, இந்துத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என இந்த அரசு ஆணை பிறப்பித்தது. இதன்மூலம், தந்தை பெரியாரின் இதயத்தில் இருந்த 'முள்' அகற்றப்பட்டது. இந்த ஆணையைச் செயல்படுத்துவதற்காக ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. ஏ.கே.ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் உயர்நிலைக் குழு ஏற்படுத்தப்பட்டு, தகுந்த ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, மேற்கண்ட குழு அதன் பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. அரசு உயர்நிலைக் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து அனைத்துப் பரிந்துரைகளையும் ஏற்று அவைகளை நடைமுறைப்படுத்திட ஆணையிட்டுள்ளது.

## ஆலோசனைக் குழு

அரசுக்கும், ஆணையருக்கும் சமய நிறுவனங்கள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்துள்ளபடி கீழ்க்காணும் மாநில அளவிலான 'ஆலோசனைக் குழுவை' இந்த அரசு அமைத்துள்ளது:-

### அலுவல்சார் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் | .. | தலைவர் |
| மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | .. | துணைத் தலைவர் |
| அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை | .. | உறுப்பினர் |
| **ஆணையர்**, இந்து சமய அறநிலையத் துறை | .. | உறுப்பினர்/ செயலாளர் |



### அலுவல்சாரா உறுப்பினர்கள்

1. தவத்திரு குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி.
2. தவத்திரு திருப்பனந்தாள் மடாதிபதி சீர்வளர்சீர் முத்துக்குமார சுவாமித் தம்பிரான், திருப்பனந்தாள்.
3. தவத்திரு திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருவாவடுதுறை.
4. தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்.
5. தவத்திரு சாந்தலிங்க ராமசுவாமி அடிகளார், பேரூர்.
6. திருமதி சௌந்தரா கைலாசம், சென்னை.
7. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.
8. திரு. கருமுத்து கண்ணன், மதுரை.
9. திரு. எஸ்.வி. பாலசுப்ரமணியம், பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலை நிறுவனம்.

### சிறப்பு அழைப்பாளர்

தவத்திரு தருமபுர ஆதீனகர்த்தர் அவர்களின் சார்பாளர்

## சமய நிறுவனங்களின் எண்ணிக்கை

இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில், பின்வரும் விவரப்படி 38,422 இந்து மற்றும் சமணத் திருக்கோயில்களும், சமய மற்றும் அறநிலையங்களும் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,382 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | மடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | சிறப்பு அறக்கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் | 38,422 |

[2007 மே 4

மேற்காணும் சமய நிறுவனங்கள், அவற்றின் வருமான அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு உள்ளன:-

| வ. எண் | | சமய நிறுவனங்களின் வகைப்பாடு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | | ஆண்டு வருமானம் ரூ.10,000/-க்குக்கீழ் உள்ள பிரிவு 49-ன்கீழ் உள்ள பட்டியலில் சேராத நிறுவனங்கள் | 34,415 |
| 2. | | பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் | |
| | (i) | ஆண்டு வருமானம் ரூ.10,000/-க்குக் குறையாத, ஆனால் ரூ.2 இலட்சத்திற்குக் குறைந்த மற்றும் சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் வருபவை | 3,403 |
| | (ii) | ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்குக் குறையாத, ஆனால் ரூ.10 இலட்சத்திற்குக் குறைந்த மற்றும் சட்டப் பிரிவு 46(ii)-ன்கீழ் வருபவை | 444 |
| | (iii) | ஆண்டு வருமானம் ரூ.10 இலட்சத்திற்குக் குறையாத மற்றும் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் வருபவை | 160 |
| | | மொத்தம் | **38,422** |

இந்து மற்றும் சமணத் திருக்கோயில்கள் அனைத்தும், இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் 1959-ன்படி நியமனம் செய்யப்பட்டும் அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்களால் நிருவாகம் செய்யப்பட்டும் வருகின்றன.

## நிருவாக அமைப்பு

ஆணையாளர், அலுவலர்கள், சார்நிலை அலுவலர்கள், செயல் அலுவலர்கள், அயல்பணியில் அமர்த்தப்பட்டோர், அலுவலக உதவியாளர்கள், இரவுக் காவலர் மற்றும் துப்புரவாளர்கள் எனப் பல்வேறு நிலைகளில் இத்துறைக்கென அனுமதிக்கப்பட்ட 2,363 பணியிடங்களில் தற்போது 1504 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.



2007 மே 4]

## தலைமையிடத்தின் நிருவாக அமைப்பு

இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத் தலைவர், ஆணையர் ஆவார். இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஓர் அலுவலர் ஆணையராகச் செயல்படுகிறார்.

தலைமை இடத்தில் ஆணையருக்கு உதவும் பொருட்டு, ஒரு கூடுதல் ஆணையர், ஒரு தலைமையிடத்து இணை ஆணையர், ஒரு இணை ஆணையர் (திருப்பணி), உதவி ஆணையர் நிலையிலான இரண்டு நேர்முக உதவியாளர்கள், நீதிமன்றப் பணிகளைக் கவனித்திட உதவி ஆணையர் நிலையில் சட்டச் சேர்ம அலுவலர், திருக்கோயில்களில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி இனங்களை மதிப்பீடு செய்திட உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) ஆகியோர் பணிபுரிகின்றனர்.

திருக்கோயில்களின் திருப்பணி வேலைகளைக் கண்காணித்திடவும், மதிப்பீடுகளைக் கூர்ந்தாய்வு செய்திடவும் ஒரு கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர் நிலையில் ஒரு கோட்டப் பொறியாளர், ஒரு உதவிப் பொறியாளர் மற்றும் வரைவாளர்களைக் கொண்ட பொறியியல் பிரிவு ஒன்றும் தலைமையிடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவின் அலுவலர்கள் பொதுப் பணித் துறை அல்லது நெடுஞ்சாலைத் துறையிலிருந்து அயற்பணிமூலம் பணியாற்றுகின்றனர்.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆய்வு செய்து கண்டறிவதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு தனி அலுவலர்களைக் கொண்ட நிலங்கள் பிரிவும் தலைமையிடத்தில் செயல்படுகிறது. இந்தப் பிரிவு, திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு ஆதாரப் பதிவேடுகள் தயாரித்தல் மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான குத்தகை / விற்பனைக் கருத்துருக்களை முடிவு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சேர்ந்த ஓர் முதுநிலைக் கணக்கு அலுவலரும், ஓர் உதவிக் கணக்கு அலுவலரும் கணக்குப் பிரிவினை நிருவகித்து வருகின்றனர். சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கைச் செய்திட, நிதித் துறையிலிருந்து பெறப்பட்ட அலுவலரைத் தலைமைத் தணிக்கை அலுவலராகக் கொண்டு ஒரு தணிக்கைப் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

[2007 மே 4

## மண்டலம் மற்றும் கோட்ட அளவிலான நிருவாக அமைப்பு

மாநில அளவில் இத்துறை இணை ஆணையர் தலைமையில் 11 மண்டலங்களைக் கொண்டதாகவும், உதவி ஆணையர் தலைமையில் 27 கோட்டங்களைக் கொண்டதாகவும் வகுக்கப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | | அதிகார வரம்பு |
|---|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை. | 1. | உதவி ஆணையர், சென்னை. | சென்னை மாவட்டம் |
| | | 2. | உதவி ஆணையர், திருவள்ளூர். | திருவள்ளூர் மாவட்டம் |
| 2. | இணை ஆணையர், வேலூர். | 3. | உதவி ஆணையர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | | 4. | உதவி ஆணையர், வேலூர். | வேலூர் மாவட்டம் |
| 3. | இணை ஆணையர், சேலம். | 5. | உதவி ஆணையர், தருமபுரி. | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| | | 6. | உதவி ஆணையர், சேலம் | சேலம் மாவட்டம் |
| | | 7. | உதவி ஆணையர், நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர். | 8. | உதவி ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| | | 9. | உதவி ஆணையர், ஈரோடு. | ஈரோடு மாவட்டம் |



2007 மே 4]

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | | அதிகார வரம்பு |
|---|---|---|---|---|
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர். | 10. | உதவி ஆணையர், தஞ்சாவூர். | தஞ்சாவூர் மாவட்டம் |
| | | 11. | உதவி ஆணையர், நாகப்பட்டினம். | நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், நாகப்பட்டினம், திருக்குவளை மற்றும் வேதாரண்யம் வட்டங்கள் |
| | | 12. | உதவி ஆணையர், திருவாரூர். | திருவாரூர் மாவட்டம் |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை. | 13. | உதவி ஆணையர், கும்பகோணம். | தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், திருவிடை மருதூர் வட்டங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்கள் |
| | | | உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டு மன்னார்குடி வட்டங்கள் |

| வ. எண் | மண்டலம் | | கோட்டம் | அதிகார வரம்பு |
|---|---|---|---|---|
| 7. | இணை ஆணையர், விழுப்புரம். | 14. | உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம், திட்டக்குடி வட்டங்கள் |
| | | 15. | உதவி ஆணையர், விழுப்புரம். | விழுப்புரம் மாவட்டம் |
| | | 16. | உதவி ஆணையர், திருவண்ணாமலை | திருவண்ணா மலை மாவட்டம் |
| 8. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 17. | உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப் பள்ளி மாவட்டம் |
| | | 18. | உதவி ஆணையர், அரியலூர். | பெரம்பலூர் மாவட்டம் |
| | | 19. | உதவி ஆணையர், புதுக்கோட்டை. | புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் குளித்தலை மற்றும் மணப்பாறை வட்டங்கள் |
| | | 20. | உதவி ஆணையர், கரூர். | கரூர் மாவட்டம் |



| வ. எண் | மண்டலம் | | கோட்டம் | அதிகார வரம்பு |
|---|---|---|---|---|
| 9. | இணை ஆணையர், மதுரை. | 21. | உதவி ஆணையர், மதுரை. | மதுரை மற்றும் தேனி மாவட்டங்கள் |
| | | 22. | உதவி ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | இணை ஆணையர், சிவகங்கை. | 23. | உதவி ஆணையர், விருதுநகர். | விருதுநகர் மாவட்டம் |
| | | 24. | உதவி ஆணையர், பரமக்குடி. | சிவகங்கை மற்றும் இராமநாத புரம் மாவட்டங்கள் |
| 11. | இணை ஆணையர், | 25. | உதவி ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி மாவட்டம். |
| | | 26. | உதவி ஆணையர், தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம். |
| | | 27. | உதவி ஆணையர், நாகர்கோயில். | கன்னியாகுமரி மாவட்டம் |

இவற்றுடன், வட்டங்கள் அளவில் இணை ஆணையருக்கும் உதவி ஆணையருக்கும் களப்பணியில் உதவிட ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். திருவாரூரில் உதவி ஆணையரின் கட்டுப்பாட்டில் 'உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்' ஒன்று உள்ளது. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக ஒரு துணை ஆணையரும், உதவி ஆணையர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் பணிபுரிகின்றனர். சமய நிறுவனங்களில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் பிற விலையுயர்ந்த இனங்களை மதிப்பீடு செய்திடத் துணை ஆணையர் நிலையில் நகைகள் சரிபார்க்கும் அலுவலர்கள் ஆறுபேர் பணிபுரிகிறார்கள். சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்பான ஆதாரப் பதிவேடுகளைத் தயாரிப்பதற்கு வருவாய்த்

துறையிலிருந்து சில வட்டாட்சியர்கள் பெறப்பட்டுப் பணிபுரிகின்றனர். மாவட்ட அளவில் திருக்கோயில் கணக்குகளைத் தணிக்கைச் செய்திட, மண்டலத் தணிக்கை அலுவலர் மற்றும் உதவித் தணிக்கை அலுவலர்களைக் கொண்ட தணிக்கைக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. திருப்பணி வேலைகளைக் கண்காணிக்கவும், மதிப்பீடுகள் தயாரிக்கவும் ஒவ்வோர் இணை ஆணையர் அலுவலகத்திலும் ஓர் உதவிக் கோட்ட பொறியாளரும், ஒவ்வோர் உதவி ஆணையர் அலுவலகத்திலும் ஓர் உதவிப் பொறியாளரும் உள்ளனர்.

## செயல் அலுவலர்கள்

திருக்கோயில்களை நிருவகிக்கும் பொருட்டு, அவற்றின் முக்கியத்துவம், வருமானம், சொத்துக்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில், பல்வேறு நிலைகளில் செயல் அலுவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்பளிக்கப்பட்ட செயல் அலுவலர்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | நிலை | பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர் / செயல் அலுவலர் | 6 |
| 2. | துணை ஆணையர் / செயல் அலுவலர் | 14 |
| 3. | உதவி ஆணையர் / செயல் அலுவலர் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை - I | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை - II | 112 |
| 6. | செயல் அலுவலர் நிலை - III | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை - IV | 154 |
| | மொத்தம் | 629 |

## மடங்கள்

இத்துறைக் கட்டுப்பாட்டில் தற்போது 56 மடங்களும், மடத்துடன் இணைந்த குறிப்பிட்ட கட்டளைகள் 19-ம் உள்ளன. இந்த மடங்களின் நிருவாகத்தைச் சிறப்பாக மேலாண்மை செய்திட, ஆணையருக்கு உதவியாக ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர், இரு தணிக்கை



ஆய்வாளர்கள் மற்றும் இரு உதவியாளர்களைக் கொண்ட ஒரு தனித் தணிக்கைப் பிரிவு தலைமையிடத்தில் செயற்பட்டு வருகிறது.

## அறங்காவலர்கள் நியமனம்

ஒவ்வொரு திருக்கோயிலையும் நிருவாகம் செய்வதற்காகப் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்திட இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டம் 1959-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஓர் அறங்காவலர் உட்பட மூன்று பேருக்குக் குறையாமலும் ஐந்து பேருக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

## மாவட்டக் குழுக்கள் நீக்கம்

சமய நிறுவனங்களில் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஏதுவாக உரிய பெயர்ப் பட்டியலைத் தயாரிப்பதற்காக, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் குழு அமைப்பதற்கு, தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டம், 1959-ல் (தமிழ்நாடு சட்டம் 22 / 1959) வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்த 2006 ஆம் ஆண்டில் ஒரு சட்டத் திருத்தத்தின்மூலம் இந்த மாவட்டக் குழுக்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அதன் அதிகாரங்கள் அனைத்தும் அந்தந்த நிலைக்குத் தக்கவாறு அரசு, ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களுக்கு அளிக்கப்பட்டன. மேலும், நியமனம் செய்யப்படும் அறங்காவலர்களுக்காக மேற்கண்ட சட்டப் பிரிவு 26-ல் வரையறுக்கப்பட்ட, உச்ச வயது வரம்பினை நீக்கம் செய்து, ஒவ்வொரு சமய நிறுவனத்திற்கும் அமைக்கப்படும் அறங்காவலர் குழுவில் ஒரு பெண் உறுப்பினர் நியமனம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், மூத்த வயதினர், பெண்கள் ஆகியோருக்கும் மற்றும் ஈடுபாடும், தியாக உணர்வும், திறமையும் உள்ளவர்களுக்கும் அறங்காவலராகச் செயற்பட வாய்ப்பளித்திடவும், சமய நிறுவனங்களின் நிருவாகத்துக்கு வலுவூட்டி, புத்துயிர் அளிக்கவும், பரம்பரை அல்லாத அறங்காவலர்களின் பதவிக் காலத்தை மூன்றாண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைத்திட அரசு முடிவு செய்தது. அதற்கேற்ப, தமிழ்நாடு சட்டம் 15/2006-ன் வழியாக மூலச்சட்டத்துக்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227666
சென்னை-600 008

[2007 மே 4

அரசு, ஆணையர், இணை ஆணையர், உதவி ஆணையர் ஆகியோர் சட்ட வழிவகைகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அதன் நிலைக்கேற்றவாறு பரம்பரைசாரா அறங்காவலர் மூவரை நியமிக்க வேண்டும். மேலும் இரண்டு பரம்பரை சாரா அறங்காவலர்களை அரசே நியமிக்கும். அதன்படி, சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் 80 திருக்கோயில்களுக்குப் பரம்பரைசாரா அறங்காவலர்களை அரசு நியமித்துள்ளது.

## சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டடங்கள் மற்றும் மனைகள்

கீழ்க்காணும் விவரப்படி, இத்துறை சார்ந்த சமய நிறுவனங்களுக்கு 4,78,875.07 ஏக்கர் பரப்புடைய நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்களும், 22,599 கட்டடங்களும் 33,627 மனைகளும் சொந்தமாக உள்ளன.

| நிலத்தின் தன்மை | திருக்கோயில் நிலங்கள் ஏ - செ | மடத்து நிலங்கள் ஏ - செ | மொத்த நிலங்கள் ஏ - செ |
|---|---|---|---|
| நன்செய் | 1,83,759.99 | 21,282.05 | 2,05,042.04 |
| புன்செய் | 2,18,543.55 | 34,543.15 | 2,53,086.70 |
| மானாவாரி | 20,746.33 | .. | 20,746.33 |
| **மொத்தம்** | **4,23,049.87** | **55,825.20** | **4,78,875.07** |

மொத்தத்தில் 1,23,729 குத்தகைதாரர்கள் திருக்கோயில் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான நிலங்களைச்சாகுபடி செய்கிறார்கள். திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களை 22,600 வாடகைதாரர்களும், மனைகளை 33,665 வாடகைதாரர்களும் அனுபவித்து வருகிறார்கள்.

## வருவாய் நீதிமன்றங்கள்

வேளாண் குத்தகைதாரர்கள் 1959 ஆம் ஆண்டு பாதுகாப்புச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களுக்கும், திருக்கோயில் நிருவாகத்திற்கும் உள்ள பிரச்சினைகளைத் தீர்வு செய்திட வருவாய் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்குச் சேரவேண்டிய குத்தகை நிலுவைகளை வசூலித்தல், நியாய வாடகை



2007 மே 4]

நிர்ணயம் செய்தல், குத்தகை செலுத்தாதவர்களை வெளியேற்றுதல் போன்ற இனங்களைக் கவனித்திட தனித் துணை ஆட்சியரால் நடத்தப்படும் வருவாய் நீதிமன்றங்கள் பின்வரும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

| முழுநேர நீதிமன்றங்கள் | | முகாம் நீதிமன்றங்கள் | |
|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | 1. | மன்னார்குடி |
| 2. | திருச்சிராப்பள்ளி | 2. | கும்பகோணம் |
| 3. | மயிலாடுதுறை | 3. | சேலம் |
| 4. | திருவாரூர் | 4. | தென்காசி |
| 5. | கடலூர் | | |
| 6. | மதுரை | | |

இந்நீதிமன்றங்களில் ரூ.28.66 கோடி குத்தகை நிலுவைக்காக கடந்த 31-1-2007 வரை 23,446 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றில் 10,860 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.8.38கோடி தொகை திருக்கோயில்களுக்குச் செலுத்தப்பட வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, அவற்றை வசூலித்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ரூ.20.28 கோடி நிலுவைத் தொகையை வசூலிக்க 12,586 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## திருக்கோயில்கள் திருப்பணி

*"திருக்கோயில் பொருந்த ஒரு செங்கல்*
*இடுவார் உலகாள்வார்"*

என்னும் முதுமொழிக்கேற்பத் திருக்கோயில்களின் பராமரிப்பில் இந்த அரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

பொதுவாக, திருப்பணி வேலைகளை மேற்கொள்வதற்குத் திருக்கோயில்கள் பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:-

(i) ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் பாடப்பெற்ற புகழ் வாய்ந்த திருக்கோயில்கள்.

(ii) சுற்றுலா மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பழம்பெரும் திருக்கோயில்கள்.

[2007 மே 4

(iii) சாத்திரங்களின்படி குடமுழுக்கு நடைபெற வேண்டியுள்ள அல்லது திருப்பணி மற்றும் பழுதுபார்க்கும் பணி செய்யப்பட வேண்டியுள்ள மற்ற திருக்கோயில்கள்.

(iv) ஆதி திராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதியில் அமைந்த கிராமத் திருக்கோயில்கள்.

பொதுமக்கள் நன்கொடை. வசூல், அந்தந்தத் திருக்கோயிலின் உபரி நிதி, நிதி வசதி உடைய திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் செய்தல், அரசு மானியம் பெறுதல், பொதுநல நிதி, ஆலய மேம்பாட்டு நிதி, கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி ஆகிய ஆதாரங்களிலிருந்து திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

**(அ) நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றம் செய்தல்**

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 36-ன்படி, நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து தேவைப்படும் கோயில்களின் திருப்பணி வேலைகளுக்கு நிதிமாற்றம் மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் இதுவரை 16 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.56.35 இலட்சம் நிதிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) அரசு மானியம்**

திருக்கோயில்களின் திருப்பணி வேலைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு மானியமாக 45 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 1998-1999 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ரூ.75 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டில் 22 திருக்கோயில்கள் 75 இலட்ச ரூபாய் தொகையை அரசு மானியமாகப் பெற்றுள்ளன.

**(இ) ஆணையர் பொது நல நிதி**

சமய நிறுவனங்களிடமிருந்துப் பெறப்படும் உதவித் தொகை, தனி நபர்கள் வழங்கும் தன்னார்வ நன்கொடைகள் ஆகியவற்றைக் கொண்டு சட்டப் பிரிவு 97-ன்படி ஒரு பொது நல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து நிதி வசதியற்ற திருக்கோயில்களின் பழுதுபார்ப்பு மற்றும்



2007 மே 4]

திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி செய்யப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.244.16 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு 86 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

**(ஈ) ஆலய மேம்பாட்டு நிதி**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் திரட்டப்பட்டு வைப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையின் 20 சதவிகிதத் தொகை, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப்பெற்றும் சரித்திரப் புகழ், தொல்பொருள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்தும் உள்ள கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் செய்திடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் இதுவரை இரண்டு திருக்கோயில்களுக்கு ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

**(உ) கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி தொகையைப் பெற்று ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டியிலிருந்து ஆண்டுதோறும் இத்துறை ஆளுகையின்கீழ் உள்ள 100 கிராமப்புற சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ.25,000/- வீதம் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது.

**(ஊ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி**

"திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" கொடை வள்ளல்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த நன்கொடைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். சரித்திர மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த புராதனத் திருக்கோயில்களின் திருப்பணிக்கும், ஒரு கால பூசைத் திட்டத்திற்கும் இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

**(எ) ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் திருப்பணி**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியில் இருந்து நிதி மாற்றம் செய்வதன் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில்

[2007 மே 4

அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி விடுவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2006-2007ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள 2,000 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அவற்றைப் புனரமைப்பதற்காக ரூ.5 கோடி நிதியுதவி அனுமதிக்கப் பட்டுள்ளது.

**(ஏ) வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணி**

நம் மாநிலத்தில் பழம்பெருமையும் சிறப்புச் சிறப்பும் வாய்ந்த பல புராதனத் திருக்கோயில்கள் நெடுங்காலமாக உரிய பராமரிப்பின்றிப் பாழடைந்த நிலையில் உள்ளன. பன்னிரண்டாம் நிதி ஆணையத்தின் நல்கையிலிருந்து பெறப்பட்டுள்ள ரூ.9.87 கோடி வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மை வாய்ந்த 48 திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாமல் திருப்பணி செய்து புதுப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். திருக்கோயில் திருப்பணி வரலாற்றில் இது ஒரு மைல் கல்லாகும்.

## திருக்கோயில் குளங்களைப் பழுதுபார்த்தல்

இத்துறையின் ஆளுகையின்கீழ் உள்ள 1,552 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2,235 திருக்குளங்கள் உள்ளன. இவற்றை மழை நீர் சேகரிப்பு அமைப்புகளாகப் பராமரிக்கவும் இவற்றில் திருக்கோயில் தெப்ப உற்சவம் நடத்தவும் ஏதுவாக, இக்குளங்களைத் தூர்வாரி, பழுதுபார்த்து, நல்ல நிலையில் வைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை 1,665 திருக்கோயில்களின் குளங்கள் தூர்வாரப்பட்டும் பழுதுபார்க்கப்பட்டும் நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள திருக்கோயில் திருக்குளங்களை எதிர்வரும் ஆண்டுகளில் தன்னார்வமிக்கத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உதவி மூலம் புதுப்பிக்கப்பட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## திருக்கோயில்களின் மரத் தேர்களைப் பழுது பார்த்தல்

தேர்த் திருவிழா நடைபெறாமல் தடைபட்டுள்ள திருக்கோயில்களின் தேர்களைப் பழுதுபார்த்து, மீண்டும் தேரோட்டம் நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, ஏறக்குறைய 309 திருக்கோயில் தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன், முதற்கட்டமாக 16 திருக்கோயில்களின் தேர்கள் அந்தந்தத் திருக்கோயில்களின் நிதியிலிருந்து மொத்தம் ரூ.83.85



2007 மே 4]

இலட்சம் மதிப்பீட்டு செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து நிதி ஆதாரம் ஏற்படுத்தி, 225 திருக்கோயில் தேர்களை ரூ.10.84 கோடி மதிப்பீட்டில், பழுதுபார்க்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, முன்னுரிமை அடிப்படையில் 225 திருக்கோயில் தேர்களையும் புதுப்பித்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## திருக்கோயில்களில் தங்க ரதங்கள்

இந்துத் திருக்கோயில்களில், உற்சவரைத் தங்கத் தேரில் அமரச் செய்து, பக்தர்கள் அந்தத்தேரை இழுத்து வருவது ஒரு வகையான பிரார்த்தனையாக நடைமுறையில் உள்ளது. கீழ்க்காணும் 26 திருக்கோயில்களில் தங்கரத உலா தற்போது நடைபெற்று வருகிறது:—

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.
2. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
5. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை.
6. அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை.
7. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில்.
8. அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில்.
9. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.
10. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
11. அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர்.
12. அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், பார்க்டவுன், சென்னை.
13. அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி.
14. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு.
15. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.
16. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி.
17. அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி.

[2007 மே 4

18. அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி.

19. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிவன்மலை.

20. அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குனேரி.

21. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.

22. அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

23. அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்.

24. அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில், திருவான்மியூர்.

25. அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு.

26. அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர்.

பின்வரும் திருக்கோயில்களில் புதிதாகத் தங்க ரதம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது:—

1. அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.
2. அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர்.
3. அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், நாமக்கல்.
4. அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சி.
5. அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில், திருச்செங்கோடு.
6. அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில், தேக்கம்பட்டி.
7. அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை.
8. அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர்

## ஒரு கால பூசைத் திட்டம்

தினமும் ஒரு வேளை பூசை கூடச் செய்ய இயலாத அளவுக்கு, நிதி வசதி குன்றிய திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். திருக்கோயிலில் கால பூசைகள் ஒழுங்காகச் செய்யப்படுவதில் கிராமப் பொது மக்களும் பங்கேற்பதை உறுதி செய்யும்பொருட்டு, இத்திட்டத்திற்குப் பொதுமக்கள்



2007 மே 4]

நன்கொடையாக ரூ.2,500/- அளித்தால், துறை பங்களிப்பு நிதியாக மேலும் ரூ.22,500/- சேர்த்து ஒரு குறிப்பிட்ட திருக்கோயிலுக்கு நிதி ஏற்படுத்தப்படுகிறது. மொத்தத் தொகை ரூ.25,000/-மும் அந்தத் திருக்கோயில் பெயரில் நிரந்தர முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து தினமும் ஒரு கால பூசை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஆதாரம், நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 10,853 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இவற்றில் 2006-07 ஆம் ஆண்டில் 406 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

## உலோகத் திருமேனிகள் மற்றும் பிற விலை உயர்ந்த பொருட்களின் பாதுகாப்பு

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் பிற விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாத்திட, கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல், "டெல்-டேல்" கடிகாரங்கள் அமைத்தல், உட்பூட்டு முறை, இரும்புக் கதவுகள் பொருத்துதல், இரவுக் காவலர் நியமனம் செய்தல் மற்றும் திருக்கோயில் பாதுகாப்புப்படைக் காவலர்களை ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட, ஆறு இடங்களில் உலோகத் திருமேனிப் பாதுகாப்பு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இங்குள்ள உலோகத் திருமேனிகளுக்கு இம்மையங்களில் தினசரிப் பூசைகள் செய்யப்படுகின்றன. அந்தந்தத் திருக்கோயில்களின் விழாக் காலங்களில் குறிப்பிட்ட உலோகத் திருமேனியை எடுத்துச் சென்று, விழா முடிவுற்றதும் பாதுகாப்பிற்காக மீண்டும் இந்தப் பாதுகாப்பு மையங்களில் ஒப்படைக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

## பின்வரும் இடங்களில் உலோகத் திருமேனிப் பாதுகாப்பு மையங்கள் இயங்கி வருகின்றன :

1. அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவாரூ
2. அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.

[2007 மே 4

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

4. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

6. அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்தி நகர், வேலூர்.

விரைவில் கும்பகோணம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய நகரங்களில் உலோகத் திருமேனி மையங்கள் தொடங்கப்படவுள்ளன. கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி நகரங்களில் புதிய மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## திருக்கோயில் பாதுகாப்புப் படை

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், நகைகள், உண்டியல்கள் மற்றும் பிற விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாத்திட, 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' என்ற தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இப்பாதுகாப்புப் படையில் இரண்டாம் நிலைக் காவலர்கள் 1,000 பேரும், ஓய்வுபெற்ற இராணுவத்தினர் 3,000 பேரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது 2,687 ஓய்வுபெற்ற இராணுவத்தினரும், 1,000 காவலரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு, 2,674 திருக்கோயில்களில் பாதுகாப்புப் பணிபுரிந்து வருகின்றனர். நிருவாக நோக்கம் கருதி இவர்கள் அந்தந்த உள்ளூர்க் காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

## அர்ச்சகர் பயிற்சி மையங்கள்

இந்துத் திருக்கோயில்களில், சாதி வேறுபாடின்றி 14 முதல் 24 வயது வரையுள்ள அனைத்து இந்துக்களும் அர்ச்சகராக நியமிக்கப்பட, தேவையான பயிற்சி அளிப்பதற்கு அர்ச்சகர் பயிற்சி மையங்களைத் தொடங்க அரசு ஆணைகளை வெளியிட்டுள்ளது. முதல் கட்டமாக பின்வரும் ஆறு இடங்களில் சைவம் மற்றும் வைணவ அர்ச்சகர் பயிற்சி மையங்களைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

**(அ) வைணவ அர்ச்சகர் பயிற்சி மையங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | சென்னை | அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி. |
| 2. | திருவரங்கம் | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம். |



2007 மே 4]

**(ஆ) சைவ அர்ச்சகர் பயிற்சி மையங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை. |
| 2. | மதுரை | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| 3. | பழநி | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி. |
| 4. | திருச்செந்தூர் | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |

### புத்தாக்கப் பயிற்சி

திருக்கோயில் பணியாளர்களான அர்ச்சகர்கள், ஓதுவார்கள், உள்துறைப் பணியாளர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் திருக்கோயில் நிருவாகத்தில் இன்னும் மேம்பட்ட தொண்டாற்றுவதற்காக, அவர்களுக்குக் குறுகிய கால புத்தாக்கப் பயிற்சி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. திருக்கோயிலின் முதுநிலை அர்ச்சகர்களுக்கு இத்தகைய பயிற்சி தனிச் சிறப்பாக அளிக்கப்பட வேண்டும் என அர்ச்சகர் பயிற்சிக்கான உயர்நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது. இந்தப் புத்தாக்கப் பயிற்சி இந்த ஆண்டில் விரைவில் தொடங்கப்படவுள்ள ஆறு அர்ச்சகர் பயிற்சி மையங்களில் மேற்கொள்ளப்படும்.

பிற பணியாளர்களான ஓதுவார்கள், உள்துறைப் பணியாளர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு வழக்கமான குறுகிய கால புத்தாக்கப் பயிற்சித் திட்டம் மீண்டும் பின்வரும் தலைப்புகளில் நடத்தப்படும்:—

1. சைவ ஆகமங்கள்
2. சைவத் திருக்கோயில் திருவிழாக்கள்
3. வைணவத் திருக்கோயில் திருவிழாக்கள்
4. சைவம் மற்றும் வைணவ வரலாறு
5. சைவ சித்தாந்தம்
6. பன்னிரு திருமுறைகள்
7. நாலாயிர திவ்யப்பிரபந்தத்தின் அமைப்பும் அழகும்
8. சாக்தம்

[2007 மே 4

9. கௌமாரம்

10. தல வரலாற்றுச் சிறப்புக்கள்

## கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்

கிராமக் கோயில் பூசாரிகளின் நலனுக்காக இந்த அரசு ஓர் தனி வாரியத்தை நிறுவி உள்ளது. இதில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு அலுவல்சார் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நல வாரியத்தின்மூலம், கிராமக் கோயில் பூசாரிகளுக்கான பயன்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

## தமிழில் அர்ச்சனை

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"**

என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க, திருக்கோயில் வழிபாட்டில் தமிழுக்கு உரிய சிறப்பிடத்தை நிலை நிறுத்துவதற்கு இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாங்கள் சென்ற திருக்கோயில்களில் எல்லாம், இறைவனைத் தமிழிலேயே பாடிப் பரவி வணங்கியுள்ளனர். எனவே, தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் தமிழர்கள் தம் இறைவழிபாட்டினை, தம் தாய் மொழியாகிய தமிழிலேயே நடத்துதல் இயல்பான ஒன்றாகும். எனவே, பொதுமக்களின் விருப்பத்தினைக் கருத்தில் கொண்டு, தமிழில் அர்ச்சனை செய்வதை மேம்படுத்திட தமிழில் அர்ச்சனை நூல்கள் பொது மக்களின் தேவைக்கிணங்க 1997-ல் தயாரித்து வெளியிடப்பட்டன. திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதை ஊக்குவிக்கவும் நடைமுறைப்படுத்தவும் பின்வரும் தமிழ் அர்ச்சனை நூல்கள் மறுபதிப்பு செய்து அண்மையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகவேள் போற்றி
3. அருள்மிகு திருமால் போற்றி
4. அருள்மிகு உமையம்மை போற்றி

(1–4: 108 போற்றிகள்)



2007 மே 4]

5. அருள்மிகு நடராஜர் போற்றி
6. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
7. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
8. அருள்மிகு தாயார் போற்றி
9. அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி
10. அருள்மிகு காளியம்மன் போற்றி
11. அருள்மிகு மாரியம்மன் போற்றி
12. அருள்மிகு அனுமன் போற்றி
13. அருள்மிகு நவகோள்கள் போற்றி

(5–13: 108 போற்றிகள்)

14. அருள்மிகு சிவன் போற்றி — 1008 போற்றிகள்

இந்தப் போற்றி நூல்கள் பொது மக்களுக்கு மலிவு விலையிலும் திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு இலவசமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழில் ஆகமம்

திருக்கோயில்கள் தொடர்பான ஆகமங்களை, வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்ப்பு செய்து வெளியிட முடிவு செய்யப்பட்டது. கடந்த 1999 ஆம் ஆண்டில் முதலில் "உத்தர காமிகா ஆகமம்" தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து "ஆலய நிர்மாண பிம்பலட்சணா" என்ற சிற்ப சாத்திர நூலும், "குமார தந்திரம்" என்ற நூலும் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. திருக்கோயில்கள் தொடர்பான வேறு சில வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழ் ஞானிகள் மற்றும் அருளாளர்களைச் சிறப்பிக்கும் விழாக்கள்

### சேக்கிழார் விழா

சென்னைக்கு அருகில் உள்ள சேக்கிழார் பிறந்த ஊரான, குன்றத்தூரில் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் தெய்வச் சேக்கிழார் விழா அரசு விழாவாக இந்து சமய அறநிலையத் துறையால் கொண்டாடப்படுகிறது. சேக்கிழார் விழாவை மேலும் ஒரு நாள் சென்னையில் மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் கொண்டாடுவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ரூபாய் 15 இலட்சத்தில் நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அதில் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் சேக்கிழார் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

## திருஞானசம்பந்தரைச் சிறப்பிக்கும் வகையில் இசை விழா

சைவசமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தருக்குச் சிறப்புச் செய்யும் வகையில், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருஞானசம்பந்தர் இசை விழா ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் சிறப்பாக நடத்தப்படுகிறது. இதற்கான செலவினம் ஆணையர் பொது நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

## ஒளவை விழா

தமிழ்ப் பெரும் மூதாட்டி ஒளவையாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், நாகை மாவட்டம், வேதாரணியம் வட்டம், துளசியாப்பட்டினத்தில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் ஒளவை விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவிற்கான செலவினம் ஒவ்வொரு ஆண்டும் இந்து சமய அறநிலையத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றது.

## தாயுமானவர் விழா

தத்துவம் நிறைந்த பக்தி வழிபாட்டை முன்னிலைப்படுத்திய தாயுமானவ சுவாமிகள் திருச்சியிலுள்ள தாயுமானவர் கோயிலில் இருக்கும் தட்சிணாமூர்த்தியை வழிபட்டுத் திரும்பும்போது திருமூலரின் மரபில் வந்த தவத்திரு மௌனகுரு சுவாமிகளால் ஈர்க்கப்பட்டவர். தாயுமானவ அடிகளைப் பெருமைப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமானவ சுவாமி திருக்கோயிலில் தாயுமானவர் விழா தை மாதத்தில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

## தல வரலாறு மற்றும் தல புராணம்

திருக்கோயிலில் வழிபடுவதன் சிறப்பு, அதன் வரலாற்றுச் செய்திகள், புராணச் செய்திகள், கலை மற்றும் கல்வெட்டுகள் விவரம் ஆகியவற்றைப் பொது மக்கள் அறிந்திடும்வண்ணம், அனைத்துத் திருக்கோயில்களிலும் தல வரலாறும், தல புராணமும்



வெளியிடப்பட்டுள்ளன. வரலாற்றுச் சிறப்பு அல்லது புராணம் இல்லாத கோயில்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் சிறப்புகள் குறித்த கையேடுகளும் சிற்றிதழ்களும் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அன்னதானத் திட்டம்

திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் இலவசமாக அன்னதானம் வழங்கும் திட்டம் 360 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அன்னதானத் திட்டத்திற்கென தனியே ஆணையர் அலுவலகத்தில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டு, நன்கொடையாக ரூ.3.27 கோடி பெறப்பட்டுள்ளது. மேலும் நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியில் இருந்து ஒரு சிறப்பு நிரந்தர முதலீடாக ரூ.21.83 கோடி நிதி இத்திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து, இத்திட்டத்தைச் செயற்படுத்திட நிதிப் பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்கு இதுவரை ரூ.4.61 கோடி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

## ஆன்மிகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்பு

அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களை உள்ளடக்கிய மொத்தம் 485 திருக்கோயில்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் சிறுவர்களுக்கு ஆன்மிக நெறி, நீதி மற்றும் ஒழுக்கத்தைக் கற்பிக்கும் ஆன்மிக வகுப்புகள் சான்றோர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

## கருணை இல்லங்கள்

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கும் பொருட்டு, திருக்கோயில் சார்பில் கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. 31 திருக்கோயில்களில் நடத்தப்படும் 34 கருணை இல்லங்களில் மொத்தம் 998 சிறார்கள் (668 சிறுவர்கள் மற்றும் 330 சிறுமிகள்) பயன் அடைகின்றனர். 1998-99 ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு குழந்தையின் உணவு மற்றும் நிருவாகச் செலவுகளுக்காக, மாதந்தோறும் அரசு ரூ.467/- (உணவு ரூ.200 + நிருவாகச் செலவினம் ரூ.267) வீதம் கருணை இல்லங்களுக்கு மானியம் அளித்து வருகிறது. இந்த ஆண்டில், ஒவ்வொரு கருணை இல்லத்திற்கும் 20 அங்குல வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை இந்த அரசு வழங்கியுள்ளது.

[2007 மே 4

## சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும், நிதி வசதியுடைய திருக்கோயில்களில் சமுதாயத்தின் எல்லா நிலை மக்களும் வேறுபாடின்றிக் கலந்துகொள்ளும் சிறப்பு வழிபாடும், பொது விருந்தும் நடத்தப்பட்டு வருகிறது.

## பக்தர்களுக்கான வசதிகள்

திருக்கோயில்கள் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு, சிறப்பாக நிருவகிக்கப்படுவதுடன், அங்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதிலும் இந்த அரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. திருக்கோயில்களில் தற்போதுள்ள விடுதிகள், பொருள் வைப்பறைகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவற்றை மேம்படுத்திடவும், பக்தர்களுக்குக் கூடுதலாகத் தங்குமிடங்களும், குடிநீர் வசதியும் ஏற்படுத்தித் தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது திருக்கோயில்களில் உள்ள கழிப்பிட வசதிகளைச் செப்பனிட்டு மேம்படுத்திடவும், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் பயன்பாட்டிற்கு நவீன கழிப்பிட வசதிகளைக் கூடுதலாக ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கெனத் தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோயில்களில் பக்தர்கள் விரைவாகவும், எளிதிலும் தரிசனம் செய்யும் வகையில் வரிசை வசதி அமைப்புகள், சாய்தளங்கள் போன்றவற்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பரிவட்ட மரியாதை

ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற உயரிய கொள்கையை எடுத்துக்காட்ட, திருக்கோயில்களில் உயர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த "பரிவட்ட மரியாதை"யை நிறுத்துமாறு திருக்கோயில் நிருவாகிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## ஸ்தபதிகள்

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் அனைத்தும் ஆகமங்களிலும், சிற்ப சாத்திரங்களிலும் உள்ளபடி நடைபெறுவதை உறுதி செய்திட வேண்டும் என்பதற்காகத் தம் முன்னோர்மூலம்



2007 மே 4]

வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்த வல்லுநர்களையும் சிற்ப சாத்திரக் கலையில் உரிய பட்டமோ அல்லது பட்டயமோ பெற்றுள்ளவர்களையும் முறைப்படி ஸ்தபதியாக அங்கீகரித்து, அதன் பின்னரே, அவர்கள் திருப்பணிகள் செய்திட அமர்த்தப்படுகின்றனர்.

ஆகம சாத்திரங்களில் கூறப்பட்டவாறு, திருக்கோயிலின் திருப்பணி வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளனவா என்பதை உறுதி செய்யும்பொருட்டு சிற்ப சாத்திரத்தில் பட்டயம் மற்றும் இளங்கலைப் பட்டம் பெற்ற ஐந்து ஸ்தபதிகள் ஐந்து மண்டலங்களில் நியமனம் செய்யப்பட்டு அவர்களது ஆலோசனைப்படி திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஸ்தபதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கப்பட்டு, அவர்கள் அளிக்கும் ஆலோசனைகளின்படி, திருக்கோயில்களில் திருப்பணிகள் அந்தந்தக் கோயிலின் அமைப்புக்கேற்றவாறு செய்யப்பட்டு வருகின்றன.

## திருக்கோயில்களில் நாதஸ்வர இசைக் கலைஞர்களை நியமித்தல்

பழமை மற்றும் சரித்திரப் புகழ்பெற்ற திருக்கோயில்களில் விழாக் காலங்களிலும் பூசைக் காலங்களிலும் நாதஸ்வரம் இசைப்பது என்பது புனிதமான ஒரு வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், பல திருக்கோயில்களில் நிதிப் பற்றாக்குறையால் இந்த இசையை ஏற்பாடு செய்ய இயலவில்லை. எனவே, நாதஸ்வரம், தவில் மற்றும் தாளவாத்தியக் கலைஞர்களை முக்கியத் திருக்கோயில்களில், முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- தொகுப்பூதியத்தில் பணியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தை நிறைவேற்ற வைப்புநிதி உருவாக்கப்பட்டு அதில் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறும் வட்டித் தொகையிலிருந்து இக்கலைஞர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

## திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள சமய, அற நிறுவனங்களில் பல்வேறு தரத்திலும், நிலைகளிலும் உள்ள பணியாளர்கள் தங்கள் ஊதியத்தைப் பணமாகவும், பொருளாகவும் பெறுகின்றனர். கீழ்க்காணும் திட்டங்கள் பணியாளர்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகின்றன:—

1. குடும்ப நல நிதி
2. சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடை

[2007 மே 4

3. திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி
4. அர்ச்சகர், ஓதுவார், இசைக்கலைஞர், வேதபாராயணர் போன்றோருக்கு ஓய்வூதியம்
5. பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்
6. திருமணம், பண்டிகைகள் மற்றும் வாகனம் வாங்குவதற்கு முன்பணம்
7. சலவைப் படி
8. மருத்துவப் படி
9. வீட்டு வாடகைப் படி
10. நகர ஈட்டுப்படி
11. விடுப்பு ஒப்படைப்பு மற்றும் பிற விடுப்புச் சலுகைகள்
12. தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம்
13. கருணை அடிப்படையில் பணி நியமனம்
14. மிகைச் சம்பளம் மற்றும் குடமுழுக்கு ஊக்கப் பணம்
15. அகவிலைப் படி

**குடும்ப நல நிதி**

பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்திற்கு உதவுவதற்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, இறந்த பணியாளரின் மரபுரிமையர் ரூ.75,000/- உதவித் தொகையாகப் பெறுவர். ரூ.5 கோடியில் வைப்பு நிதி உருவாக்கப்பட்டு, அதிலிருந்து பெறும் வட்டியிலிருந்து இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

**சிறப்பு சேம நல நிதி**

ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேல் வருமானம் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்களுக்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் பணியாளர் ஓய்வுபெறும்போது அவரது பணிக்காலத்தில் செலுத்திய சந்தாத் தொகையுடன் அதற்கான வட்டி மற்றும் கூடுதலாக ரூ.1,000/- பணிக்கொடையாகச் சேர்த்து பெறுவர். நிதி வசதி உள்ள திருக்கோயில்களின் சேமிப்பு நிதியிலிருந்து இத்திட்டத்திற்காக ரூ.8.00 இலட்சம் திரட்டி ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2007 மே 4]

**திருக்கோயில் பணியாளர்களின் நல நிதி**

ரூ.40,000/-க்குக் குறைவான ஆண்டு வருவாய் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்களில் ரூ.400/-க்கும் குறைவான மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைகளை அளிப்பதற்காக இந்த நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து பெறப்பட்ட ரூபாய் 5 கோடியைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட "திருக்கோயில் பணியாளர்களின் நல நிதி" என்ற வைப்பு நிதியிலிருந்து இந்தச் சம்பள நிலுவையைப் பணியாளர்கள் பெற்று வருகின்றனர்.

**கருணை அடிப்படையில் பணி நியமனம்**

பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் மரபுரிமையாளர்களுக்குப் பணி வாய்ப்பு வழங்கிட அத்திருக்கோயில்களில் தகுதியான காலியிடங்கள் ஏற்படுகிறபோது, இறந்தவரின் மரபுரிமையருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது பரிசீலிக்கப்படுகின்றது.

**ஓய்வூதியத் திட்டங்கள்**

**(i) அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள், அரையர்கள்போன்றோர்களுக்கு ஓய்வூதியம்**

20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயது நிறைவடைந்த அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், இசைக் கலைஞர், அரையர் முதலியோர் இத்திட்டத்தின்படி ரூ.750/- மாத ஓய்வூதியம் பெறுகின்றனர். இதுவரை இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 1,000 பேர்களுள் 767 பேர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**(ii) கிராமப் பூசாரிகள் ஓய்வூதியம்**

இத்துறையின் ஆளுகையின்கீழ் வராத கிராமச் சிறு கோயில்களில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து, 60 வயது நிறைவடைந்துள்ள கிராமக் கோயில் பூசாரிகளுக்கு அரசு மாத ஓய்வூதியம் ரூ.750/- வீதம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 4,000 பேர்களுள் இதுவரை 2,621 கிராமப் பூசாரிகள் பயன்பெற்றுள்ளனர்.

### (iii) திருக்கோயில்களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

முந்தைய நாட்களில், ரூ.10,000/-க்குமேல் ஆண்டு வருவாய் உள்ள திருக்கோயில்களில், பணியாளர்களிடம் மாதந்தோறும் அவர்கள் சம்பளத்தில் 12% பிடித்தம் செய்துகொண்டு, அதற்குச் சமமான தொகையை அந்தத் திருக்கோயில்கள் வழங்கும்படியான பணியாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் நடைமுறையில் இருந்து வந்தது. இதற்கெனத் தனியாகக் கணக்கு தொடங்கப்பட்டு, இவ்வாறு ஒன்று சேரும் தொகையும் அதற்கான வட்டியுடன் சேர்த்துப் பணியாளர் ஓய்வுபெறும்போது வழங்கப்படுகிறது. அரசு, இத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், அதற்குப் பதிலாக ஏற்கெனவே தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் இருந்த பணியாளர்களுக்கும் நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கும் சேர்த்து மத்திய அரசின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தை (இ.பி.எப்) நடைமுறைப்படுத்திட ஆணையிட்டது. இதன்படி, பணி மூப்பில் ஓய்வுபெறும்போது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் (இ.பி.எப்.) மூலம் முறையாக மாத ஓய்வூதியம் பெறுவதற்காகத் தகுதியான திருக்கோயில் பணியாளர்களை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் (இ.பி.எப்.) சேர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறைந்த வருவாய் காரணமாக, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இ.பி.எப்.) சந்தாத் தொகை செலுத்த இயலாத திருக்கோயில் பணியாளர்களும், இ.பி.எப். திட்டத்தில் சேர்ந்தாலும் சேர்ந்த தேதி முதல் 10 ஆண்டுகளுக்குள் பணி மூப்பில் ஓய்வுபெறுவதால் ஓய்வூதியம் பெற இயலாத பணியாளர்களும், மாதம் ரூ.750/- ஓய்வூதியம் பெறும் வகையில், 1-1-2006 முதல் ஓய்வுபெறும் பணியாளர்களுக்கெனத் தனியாக "துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தை" தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 'திருக்கோயில்' திங்களிதழ்

"திருக்கோயில்" என்னும் திங்களிதழ் இந்து சமய அறநிலையத் துறையின் வெளியீடாக, 1958 ஆம் ஆண்டில் இருந்து வெளியிடப்பட்டு வருகிறது. இந்து சமயம் மற்றும் தத்துவங்கள், திருக்கோயில் வரலாறு, திருவிழாக்கள் பற்றிய சிறந்த தமிழ் வல்லுநர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகள் இந்த இதழில் வெளியிடப்படுகின்றன.



### இ-பூஜா இணையதளம்

இத்துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் அடங்கிய www.tntemple.org என்னும் ஓர் இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்றொரு இணையதளமான "இ-பூஜா" என்பதன்மூலம் உலகின் எப்பாகத்திலிருந்தும், எந்த நேரமும் எவரும் அவர் விருப்பப்படியான நாள் மற்றும் நேரத்தில், தான் விரும்பும் முக்கியத் திருக்கோயிலில் குறிப்பிட்ட பூசைகள் செய்திட முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளும் வசதி உள்ளது. இந்த இணையதளமானது பல்வேறு திருக்கோயில்களின் இணையதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதால் அந்தந்தத் திருக்கோயிலின் வரலாறு, புராணம், வளர்ச்சி, செயல்பாடுகள் மற்றும் தெய்வத் திருவுருவங்களது கண்கவர் படங்கள் மற்றும் திருவிழாக்கள்போன்றவற்றைச் சிறப்பான ஒளி, ஒலி வசதியுடன் எப்போதும் பெற இயலும்.

### முடிவுரை

இந்த அரசு, திருக்கோயில்களில் ஆற்றல்மிக்க நிருவாகத்தையும், செம்மையான பராமரிப்பையும், பக்தர்கள் விருப்பத்திற்கிணக்கமான வழிபாட்டையும் உறுதி செய்திட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அக்கறையுடன் மேற்கொண்டு வருகிறது. பயனுள்ள, ஆற்றல்மிக்க நிருவாகத்தை அளிக்க இந்து சமய அறநிலையத் துறை தன்னைத் தொடர்ந்து அர்ப்பணித்துக்கொள்கிறது.

## இணைப்பு-1

## 2007-2008 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

**நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்**

| | | 2006-2007 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2006-2007 திருத்த மதிப்பீடு | 2007-2008 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 60,00 | 50,00 | 50,00 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் 102 சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 29,15,67 | 30,19,06 | 34,65,65 |

[2007 மே 4

| | | | | |
|---|---|---|---|---|
| | 103 கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் முதலியவற்றின் பராமரிப்பு | 1,73,00 | 1,83,05 | 1,92,22 |

## இணைப்பு-2

## பகுதி II திட்டப் பணிகள் 2007-2008

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2007-2008-ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | தொடராச் செலவினம் | மொத்தம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | ஆணையர் அலுவலகத்தில் முகப்புப் பக்கத்தில் இரண்டாம் தளம் கட்டுதல் | — | 50.00 | 50.00 | — | 20.00 | — | 20.00 |
| 2 | தூத்துக்குடி இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல் | — | 25.00 | 25.00 | — | 25.00 | — | 25.00 |
| 3 | கும்பகோணம் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்குச் சுற்றுச் சுவர் உள்ளிட்ட குடியிருப்பு வளாகம் பழுதுபார்த்தல் | — | 0.60 | 0.60 | — | 0.60 | — | 0.60 |
| 4 | ஆணையர் அலுவலகத்திற்கு சர்வர் மற்றும் தடையற்ற மின்சாரம் வழங்கு சாதனம் வாங்குதல் | — | 4.00 | 4.00 | 4.00 | — | — | 4.00 |
| 5 | இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திற்கு அறைகலன்கள், நிலைப் பேழைகள் வாங்குதல் | — | 0.70 | 0.70 | 0.70 | — | — | 0.70 |
| 6 | ஆணையர் அலுவலகத்தில் மின் தூக்கி வசதிக்கு வகை செய்தல் | — | 11.65 | 11.65 | — | 11.65 | — | 11.65 |
| 7 | கிராமப்புறத் திருக்கோயில் பூசாரிகள் நல வாரியம் அமைக்க உதவி மானியம் | 10.00 | — | 10.00 | 10.00 | — | — | 10.00 |
| 8 | அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தின்கீழ் அர்ச்சகர் பயிற்சிக்கான 5 அர்ச்சகர் பயிற்சி மையங்கள் ஏற்படுத்துதல் | 50.00 | — | 50.00 | 50.00 | — | — | 50.00 |
| 9 | சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், கூடுதல் ஆணையர் (தலைமையிடம்) மற்றும் 10 மண்டல இணை ஆணையர்களுக்குரிய பழுதுற்ற வாகனங்களுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வழங்குதல் | — | 65.00 | 65.00 | 65.00 | — | — | 65.00 |



2007 மே 4]

[2007 மே 4

## இணைப்பு IV

*(421 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

# மானியக் கோரிக்கை எண் 47—இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

## அறிவிப்புகள்—2007–2008

1. தமிழ்நாடு ஜமீன் ஒழிப்புச் சட்டம், தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் ஆகிய நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளின்போது திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நிலங்களில் பெரும்பான்மையானவை உழுபவர்களுக்கே உடைமையாக்கப்பட்டன. இதனால் திருக்கோயில்களுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையில் மோகினி தொகை என்றும், பேரிஜ் குறைப்பு என்றும், தஸ்திக் தொகை என்றும் திருக்கோயில்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. இத்தொகைகள் இன்றைய விலைவாசிக்கேற்ப உயர்த்தப்பட வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கை ஏற்கப்பட்டு, திருக்கோயில்களுக்கு வழங்கப்பட வேண்டிய இத்தொகைகள் பத்து மடங்காக உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ.2.50 கோடி செலவு ஏற்படும். இந்த உயர்வினால் 3,000/-க்கும் மேற்பட்ட திருக்கோயில்களின் நிதி ஆதாரம் மேம்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்கு உதவிகரமாக அமையும்.

2. நீண்ட காலமாக திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி மனைகளையும், கட்டடப் பகுதிகளையும் குடியிருப்புக்காக கூட்டாக ஆக்கிரமித்து, இன்றுவரை பயன்படுத்தி வரும் நபர்களுக்கு அரசாணை எண் 353, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை நாள் 4-6-1999-ல் கண்டுள்ளபடி குத்தகை நிர்ணயிக்கவும், ஏற்கெனவே திருக்கோயில்களால் முறைப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பெயர்மாற்றம் கோரியுள்ள இனங்களில் அரசாணையின்படி 10 மாதக் குத்தகையை நன்கொடையாக வசூலிப்பதற்கு இணையாக, இவர்களிடமிருந்தும் 10 மாதக் குத்தகைத் தொகையை நன்கொடையாக வசூலித்து, இந்தக் குடியிருப்புகள் வரன்முறை செய்யப்படும். இவ்வாறு வரன்முறைப்படுத்தும் இனங்களில் அரசாணையின்படி குத்தகைத் தொகை நிலுவையை 1-7-1998 முதல் கணக்கிட்டு மொத்த நிலுவையையும் 12 மாதத் தவணைகளில் செலுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முதல் தவணை நிலுவையையும், நடப்பு மாதக் குத்தகையையும் செலுத்தும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மின்வசதி மற்றும் ஏனைய உள்ளாட்சி மற்றும் அரசுத் துறை அனுமதிபெற தடையில்லாச் சான்று வழங்கப்படும். இதன்மூலம் சுமார் 21,000 குடும்பங்கள் பயனடைவதோடு, திருக்கோயில்களுக்கும் கணிசமான வருவாய் தொடர்ந்து கிடைக்கும்.



2007 மே 4]

3. நில வரித் திட்ட நடவடிக்கையின்போதும், நில உடைமை மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்தின்போதும் பல திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் தவறுதலாக தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இது பற்றி அனைத்துத் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் செய்யும் சட்டரீதியான மேல்முறையீட்டு மனுக்களைக் காலதாமதமின்றி விசாரித்து ஆணை பிறப்பிப்பதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடங்கள் மூன்று புதிதாக உருவாக்கப்படும்.

4. நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் புகழ்ந்து பாடப்பெற்ற பல திருக்கோயில்கள் நெடுங்காலமாகப் பராமரிக்கப்படாமல் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளன. இத்தகைய 30 திருக்கோயில்களில் ரூ. 3.29 கோடி மதிப்பீட்டில் உபரி நிதி உள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து சட்டப் பிரிவு 36-ன்கீழ் உபரி நிதி மாற்றம் பெற்று, அடுத்த மூன்று ஆண்டுகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5. இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஓதுவார்களுக்குப் பயிற்சி நிலையம் ஏதும் தற்போது இல்லை. ஆ நவதற்கு பயிற்சி நிலையம் ஏதும் தற்போது இல்லை. திருக்கோயில்களில் பணிபுரிய முறையாகப் பயின்ற ஓதுவார்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே, ஓதுவார்கள் பயிற்சிக்கென தனியாக ஓதுவார் பயிற்சி நிலையம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சார்பில் ஏற்படுத்தப்படும். இதில் பயிலும் மாணவர்களுக்கு அர்ச்சகர் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படுவதுபோல, இலவசமாக உணவு, உடை மற்றும் இருப்பிடத்துடன் பயிற்சிக் காலத்தின்போது உதவித் தொகையும் வழங்கப்படும்.

6. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து தரும் நோக்கத்துடன் கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படும்:-

(1) ரூ. 3 கோடி மதிப்பீட்டில் பக்தர்களுக்கான நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் கூடம்.

[2007 மே 4

(2) திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா பேருந்துகள் நிறுத்துமிடம், பக்தர்களுக்கான தங்குமிடம், வடிகால் மற்றும் சாலை வசதி முதலியன.

(3) ரூ.1 கோடி மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் கட்டுதல், சமையலறையைப் புதுப்பித்தல்.

(4) ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் மலைக்கோயில் வெளிப்பிரகாரத்தில் கான்கிரீட் தளத்தைச் சீர் செய்தல், தங்க ரத மண்டபத்தின் முன்புறமுள்ள தளத்தின் மட்டத்தை உயர்த்துதல்.

(5) ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் மலைக்கோயிலில் குப்பைகளை நவீன முறையில் அகற்றுவதற்கான வடிவமைப்புப் பணி.

7. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கு புதிதாக நவீன வசதிகளுடன்கூடிய முடி காணிக்கை செலுத்தும் கூடமும், சுடுநீர் வசதியுடன்கூடிய குளியலறைகளும், கழிப்பறைகளும் மற்றும் உடை மாற்றும் அறைகளும் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

இத்தகைய வசதிகள் கீழ்க்காணும் திருக்கோயில்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்:

(1) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

(3) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி.

8. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தங்கும் விடுதி மற்றும் குடில்களை ரூ.1 கோடி மதிப்பீட்டில் பழுதுபார்த்து நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

9. திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தணிகை இல்லக் குடில்களும், கார்த்திகேயன் இல்லக் குடில்களும் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்து நவீனப்படுத்தப்படும்.

10. திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் இராஜகோபுரம் கட்டப்பட வேண்டுமென்பது பொது மக்களின் நீண்ட நாள் அவாவாக இருந்து வருகிறது. மலைக்கோயிலுக்குச் செல்வதற்கான



2007 மே 4]

365 படிக்கட்டுகளுக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம், ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஒன்பது நிலை கிழக்கு இராஜகோபுரம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

11. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன்கூடிய ஒரு பெரிய திருமண மண்டபமும், நடுத்தரப் பிரிவினரின் நன்மைக்காக ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சமூக நலக் கூடமும், ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு வணிக வளாகமும் கட்டப்படும்.

12. ஏழை எளிய மக்களும், நடுத்தரப் பிரிவினரும் பயன் பெறும் வகையில் சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சமூகக் கூடம் அமைக்கப்படும்.

13. சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நவீன வசதிகளுடன்கூடிய புதிய தெய்வானை திருமண மண்டபம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். தற்போது உள்ள வள்ளி திருமண மண்டபம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்படும்.

14. சென்னை, ராயப்பேட்டை, அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக சென்னை, ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் ரூ.1:25 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

15. திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 64 கால் மண்டபம் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் திருக்குளத் திருப்பணி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நன்கொடையாளர் பணியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

16. திருவள்ளூர் மாவட்டம், புட்லூர், அருள்மிகு பூங்காவனத்தம்மன் என்னும் அருள்மிகு அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் கூடம், கழிவறை மற்றும் குளியலறை போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்படும்.

[2007 மே 4

17. காஞ்சிபுரம் மாவட்டம், சேக்கிழார் பிறந்த குன்றத்தூரில் சேக்கிழார் மண்டபம் அமைத்திட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இக்கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் குன்றத்தூரில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சேக்கிழார் மண்டபம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடத்துவதற்கு இம்மண்டபம் பயன்படுவதோடு, இதர நாட்களில் சொற்பொழிவு நடத்தவும், படிப்பகமாகவும் இது பயன்படும்.

18. காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் செய்யப்படும்.

19. காஞ்சிபுரம் மாவட்டம், வல்லக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டபம் கட்டப்படும்.

20. வேலூர் மாவட்டம், வெட்டுவானம், அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயிலில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மகா மண்டபம் கட்டப்படும்.

21. திருவண்ணாமலை கிரிவலப் பாதையிலுள்ள சோடியம் மின் விளக்குகளைப் பராமரிக்கவும், மின் கட்டணத்தை ஒழுங்காகச் செலுத்தவும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால், நிதி வசதியின்மை காரணமாக, இயலவில்லை என்றும், இந்தப் பொறுப்பினை திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கப்பட்டதையடுத்து, திருவண்ணாமலை கிரிவலப் பாதையிலுள்ள சோடியம் மின் விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பையும், இந்த மின் விளக்குகள் எரிவதற்கான மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தும் பொறுப்பையும் இனி திருக்கோயில் நிருவாகமே ஏற்றுக் கொள்ளும்.

22. திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் சார்பாக பவுர்ணமிதோறும் வருகை தரும் இலட்சக்கணக்கான பக்தர்களின் வசதிக்காக கிரிவலப் பாதையில் நான்கு இடங்களில் மொத்தம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் இளைப்பாறும் கூடங்கள் அமைக்கப்படும்.

23. திருவண்ணாமலையில் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் சார்பாக பக்தர்கள் வசதிக்காக அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒரு திருமண மண்டபம் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.



2007 மே 4]

24. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் மூன்றாம் சுற்றுப் பிரகாரம் அமைத்தல், மதிற்சுவர் அமைத்தல் போன்ற கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்படும்.

25. அரியலூர் மாவட்டம், கள்ளங்குறிச்சி, அருள்மிகு கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டப்படும்.

26.திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், அன்பில், அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டப்படும்.

27. திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மின் அமைப்பு புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

28. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், பெரம்பூர், அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டபம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

29. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கொன்னையூர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்படும்.

30. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், அருள்மிகு திருமூலநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தேர்த் திருப்பணியும், அம்பாசமுத்திரம், அருள்மிகு காசிநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தேர்த் திருப்பணியும், கடையம், அருள்மிகு வில்வநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தேர்த் திருப்பணியும் செய்யப்படும்.

31. தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.42.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய தங்கும் விடுதி அமைக்கப்படும். மேலும் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் இத்திருக்கோயிலுக்கென புதிதாக ஒரு மரத்தேர் செய்யப்படும்.

[2007 மே 4

32. தஞ்சாவூர் மாவட்டம், ஒப்பிலியப்பன் கோயில், அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயிலில் பக்தர்களின் பயன்பாட்டுக்காக இரண்டு மண்டபங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

33. கோவை மாவட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்திரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் செய்யப்படும்.

34. நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், எட்டுக்குடி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு நிதி மாற்றம்மூலம் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக வெள்ளித் தேர் செய்யப்படும்.

35. திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் தேவாசிரிய மண்டபக் கூரையில் உள்ள ஓவியங்களைப் பாதுகாத்திட ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

36. சேலம், அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் அலுவலக கட்டிடம், பணியாளர் குடியிருப்பு மற்றும் இரண்டு வணிக வளாகங்கள் ஆகியன கட்டப்படும்.

37. ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் பக்தர்கள் உணவருந்தும் மண்டபம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். மேலும், இத்திருக்கோயில் வளாகத்தில் பக்தர்கள் தங்கும் விடுதி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

38. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் பிரகாரம் விரிவுபடுத்துதல், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், அலுவலகம் மற்றும் கடைகள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

39. கோவை மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் துரிதப்படுத்தப்படும். இத்திருக்கோயிலுக்குச் செல்லும் படிக்கட்டுகள் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

40. கோவை, உக்கடம், அருள்மிகு இலட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுப் பிரகார மண்டபம் கட்டப்படும்.



2007 மே 4]

41. விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் பிரகார மண்டபமும், 5 நிலை இராஜகோபுரமும் அமைக்கப்படும்.

42. சிவகங்கை மாவட்டம், மடப்புரம், அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.70.50 இலட்சம் மதிப்பீட்டில் 5 நிலை மற்றும் 3 நிலை இராஜகோபுரங்களும், பிரகார மண்டபங்களும் அமைக்கப்படும்.

43. சிவகங்கை மாவட்டம், அரியாக்குறிச்சி, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில் இடத்தில், ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டப்படும்.

44. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அருள்மிகு கொப்புடை நாயகியம்மன் திருக்கோயிலில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில், வாரச் சந்தை சுற்றுச் சுவர் மற்றும் பக்தர்களுக்கு கழிப்பறை வசதி ஆகியன கட்டப்படும்.

45. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், அருள்மிகு குற்றாலநாதசுவாமி திருக்கோயிலுக்கு வருகை புரியும் பக்தர்கள் நலனுக்காக ரூ.43 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தங்கும் மண்டபமும், விடுதியும் கட்டப்படும்.

46. கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் குழுமத்தைச் சேர்ந்த 17 திருக்கோயில்களில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

47. சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நன்கொடையாளர்மூலம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் இராஜகோபுரத் திருப்பணி செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

48. சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள இடத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு திருமண மண்டபமும், அலுவலக வளாகமும் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

49. பக்தர்களின் வசதிக்காக, நன்கொடையாளர்கள்மூலம்

1. சென்னை, திருநீர்மலை, அருள்மிகு ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

[2007 மே 4

2. சென்னை, கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

3. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

4. காஞ்சிபுரம் மாவட்டம், திருவிடந்தை, அருள்மிகு நித்திய கல்யாணப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும்

திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும்.

50. வேலூர் மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலிலும், அருள்மிகு யோக ஆஞ்சநேயர் திருக்கோயிலிலும் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இத்திருக்கோயில் திருப்பணிக்கு உதவிட முன்வந்துள்ள நன்கொடையாளர்கள் மூலமாக திருக்கோயில் விமானத்திற்கு தங்கத் தகடு பதித்தல்போன்ற பணிகளைச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

51. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயிலில் நன்கொடையாளர்மூலம் சுமார் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் தங்கரத திருப்பணி செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

52. நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம், நைனாமலை, அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயிலுக்கு 3,330 நெடிய படிக்கட்டுகள் மூலம் செல்வதற்கு பக்தர்கள் மிகவும் சிரமப்படுவதால், இத்திருக்கோயிலுக்குச் செல்ல ஒரு மலைப் பாதை அமைக்க வேண்டும் என்பது பக்தர்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் ஓரளவு நிதியை ஒதுக்கீடு செய்து, பெரும் பங்கை நன்கொடையாளர்கள் ஏற்று செயல்படுத்தும் வகையில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டிலான மலைப் பாதை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்திட முயற்சி மேற்கொள்ளப்படும்.

53. மதுரை மாவட்டம், திருமோகூர், அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயிலில் நன்கொடையாளர்மூலம் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.



2007 மே 4]

54. திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், அருள்மிகு கைலாசநாதர்சுவாமி திருக்கோயிலில் நன்கொடையாளர்கள்மூலம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் இராஜகோபுரம் மற்றும் இதர திருப்பணிகள் செய்திட முயற்சி மேற்கொள்ளப்படும்.

55. கீழ்க்காணும் திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்:—

(1) திருவள்ளூர் மாவட்டம், தொட்டிக்கலை, அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்.

(2) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருவதிகை, அருள்மிகு பெரியநாயகி உடனுறை வீரட்டேஸ்வரர் திருக்கோயில்.

(3) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.

(4) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், சிங்கவரம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.

(5) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், அரளிக்கோட்டை, அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயில்.

(6) கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கிருஷ்ணன் கோயில், அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயில்.

(7) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வேளிமலை, அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில்.

(8) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், அருள்மிகு காசிநாதசுவாமி திருக்கோயில்.

(9) திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி, அருள்மிகு நரசிங்கநாதர் திருக்கோயில்.

(10) நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்.

(11) வேலூர் மாவட்டம், திருப்பாற்கடல், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.

[2007 மே 4

(12) வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், திருவலம், அருள்மிகு வில்வநாதீஸ்வரர் திருக்கோயில்.

(13) காஞ்சிபுரம் மாவட்டம், கோவூர், அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

(14) விழுப்புரம் மாவட்டம், பரிக்கல், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்.

(15) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, அருள்மிகு குலசேகரநாதசுவாமி திருக்கோயில்.

(16) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு, அருள்மிகு திருவிக்கிரமர் திருக்கோயில்.

(17) வேலூர், பேரிப்பேட்டை, அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்.

(18) ஈரோடு மாவட்டம், முத்தூர், அருள்மிகு அத்தனூரம்மன் குப்பண்ணசாமி திருக்கோயில்.

(19) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், அகரம், அருள்மிகு அஞ்சேல் என்ற பெருமாள் திருக்கோயில்.

**நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடப்பெற்ற தமிழகத்தில் உள்ள சீரமைக்கப்பட வேண்டிய பழமை வாய்ந்த திருக்கோயில்களின் பட்டியல்—**



2007 மே 4]

| வரிசை எண் | திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அருள்மிகு திரிபுராந்தகசுவாமி திருக்கோயில், கூவம், திருவள்ளூர் மாவட்டம். | 10.00 |
| 2. | அருள்மிகு ஒணகாந்தேஸ்வரர் திருக்கோயில், பஞ்சுபேட்டை, காஞ்சிபுரம். | 6.00 |
| 3. | அருள்மிகு அழகிய சிங்க பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம். | 7.00 |
| 4. | அருள்மிகு ஜலநாதீஸ்வரர் திருக்கோயில், தக்கோலம், அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம். | 20.00 |
| 5. | அருள்மிகு சொர்ணகடேஸ்வரர் திருக்கோயில், நெய்வணை, உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம். | 5.00 |
| 6. | அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில், திருவட்டத்துறை, திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம். | 10.00 |
| 7. | அருள்மிகு ஓதவனேஸ்வரர் திருக்கோயில், திருச்சோற்றுத்துறை, தஞ்சாவூர் மாவட்டம். | 12.00 |
| 8. | அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பூந்துருத்தி, தஞ்சாவூர் மாவட்டம். | 10.00 |
| 9. | அருள்மிகு சாட்சிநாதசுவாமி திருக்கோயில், திருப்புறம்பியம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 15.00 |
| 10. | அருள்மிகு அப்பாலரெங்கநாதசாமி திருக்கோயில், கோயிலடி, திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 20.00 |
| 11. | அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோயில், ஆண்டாங்கோயில், வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம். | 5.00 |
| 12. | அருள்மிகு கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், கோட்டூர், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 13. | அருள்மிகு பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயில், திருக்களர், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம். | 8.00 |

| வரிசை எண் | திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 14. | அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், ஆலூர், வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 15. | அருள்மிகு கல்யாணசுந்தரேஸ்வரர் திருக்கோயில், நல்லூர், வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 16. | அருள்மிகு திருபயத்தநாதசுவாமி திருக்கோயில், திருபயத்தங்குடி, திருவாரூர் மாவட்டம். | 5.00 |
| 17. | அருள்மிகு நர்த்தனபுரீஸ்வரர் திருக்கோயில், தலையாலங்காடு, குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 18. | அருள்மிகு கைச்சின்னேஸ்வரர் திருக்கோயில், கச்சனம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 19. | அருள்மிகு பாதாளீஸ்வரர் திருக்கோயில், ஹரித்துவாரமங்கலம், வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 20. | அருள்மிகு ரெத்தினபுரீஸ்வரர் திருக்கோயில், திருநாட்டியத்தான்குடி, நீடாமங்கலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். | 10.00 |
| 21. | அருள்மிகு குழகர் திருக்கோயில், கோடியக்காடு, வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 10.00 |
| 22. | அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில், இலுப்பப்பட்டு, மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 15.00 |
| 23. | அருள்மிகு உத்வேதீஸ்வரர் திருக்கோயில், குத்தாலம், மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 20.00 |
| 24. | அருள்மிகு ஆமருவியப்பன் திருக்கோயில், தேரழுந்தூர், மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 20.00 |



| வரிசை எண் | திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 25. | அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், அன்னியூர், (பொன்னூர்) மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 10.00 |
| 26. | அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயில், மகேந்திரப்பள்ளி, சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 5.00 |
| 27. | அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், திருமயானம், தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 6.00 |
| 28. | அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர், மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | 15.00 |
| 29. | அருள்மிகு உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில், உய்யக்கொண்டான் திருமலை, திருச்சி மாவட்டம். | 10.00 |
| 30. | அருள்மிகு திருத்தளிநாதசுவாமி திருக்கோயில், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம். | 15.00 |
| | மொத்தம் | 329.00 |

[2007 மே 4

## இணைப்பு V

*(429 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## அறிவிப்புகள்–2007–2008

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

### 1. புறநகர்த் திட்டங்கள்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அனைத்து மக்களின் வீட்டு வசதித் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு ரூ.198 கோடி மதிப்பீட்டில் 1,356 ஏக்கர் பரப்பளவில் 14 புறநகர்த் திட்டங்களில் 4,718 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் சென்னை, காஞ்சிபுரம், ஓசூர், திருச்சி, மதுரை, தேனி, தென்காசி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உருவாக்கப்படும்.

### 2. தனி வீடுகள்

ரூ.49 கோடி மதிப்பீட்டில் 554 தனி வீடுகள் ஈரோடு, கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் சுய நிதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும்.

### 3. அடுக்கு மாடிக் குடியிருப்புகள்

ரூ.80 கோடி மதிப்பீட்டில் 536 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் சென்னையில் சுய நிதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும்.

### 4. தக்கைக் கல் தொழிற்சாலை

இந்தியாவிலேயே முதல் முறையாக தக்கைக் கல் தயாரிப்புத் தொழிற்சாலை மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சிறப்பாக செயல்பட்டு வந்த இந்த நிறுவனம், சில காரணங்களால் 1992 ஆம் ஆண்டு முதல் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டு செயல்படாது பராமரிப்பு ஏதுமின்றி அனைத்து உபகரணங்களும் துருப்பிடித்து பயன் இல்லாதவையாக ஆகியுள்ளன.



2007 மே 4]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருளான எரிசாம்பல் (Fly Ash) தான் தக்கைக்கல் தயாரிப்பிற்கான மூலப்பொருள் ஆகும். எனவே, அருகிலேயே உள்ள எண்ணூர் அனல் மின் நிலையத்திலிருந்து எரிசாம்பலை நேரடியாக எளிதில் கொண்டுவர முடியும்.

தற்சமயம், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், கிடைக்கின்ற எரிசாம்பலை தேவையான அளவிற்கு வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்ய முன்வந்து இருப்பதாலும், வீட்டு வசதி வாரியத்திலும் பிற அரசுத் துறைகளிலும் கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெற்று வருவதாலும் அதன் தேவையை உணர்ந்து அறிவியல் முறையில், உறுதியுடன் கூடிய ஆனால் எடை குறைந்த தக்கைக் கல் தயாரிக்க இத்துறை முன்வந்துள்ளது.

மேலும், சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தவாறு இந்தத் தொழிற்சாலை, கூட்டு முயற்சி அடிப்படையில் (Joint Venture) துவக்கப்படும்.

### 5. புதிய நில எடுப்புக் கொள்கை

நில உரிமையாளர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலங்கள் வாங்கப்படும்.

நில உரிமையாளர்கள் தொடர்புடைய வீட்டு வசதித் திட்டத்தில் பங்குதாரர்களாகச் சேர்க்கப்படுவார்கள். இதற்கென தனியாக விதிமுறைகள் வகுக்கப்படும். இதனால், தேவையற்ற கால தாமதங்களும், வீண்சர்ச்சைகளும் தவிர்க்கப்பட்டுவிடும்.

நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும்போது அவர்கள் விரும்பினால், மேம்பாடு செய்யப்பட்ட மனைகள்/வீடுகள்/அடுக்கு மாடிக் குடியிருப்புகள் வழங்கப்படும். இதற்கான தொகை, அவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையில் சரிசெய்து கொள்ளப்படும்.

### 6. வாடகைக் குடியிருப்புத் திட்டம்

சென்னை பட்டினப்பாக்கத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டு பழுதடைந்துள்ள 992 அடுக்கு மாடிக் குடியிருப்புகளை அகற்றிவிட்டு, ரூ.95 கோடி மதிப்பீட்டில் 20 ஏக்கர் பரப்பளவில் 1040 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் (Joint Venture) கட்டப்பட்டு, ஏற்கெனவே வசித்து வந்தவர்களுக்கே ஒதுக்கீடு செய்யப்படும்.

## 7. மின்னணு ஆளுமை

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் ரூ.244 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு ஆளுமை 3 ஆண்டுகளில் செயல் படுத்தப்படும்.

வீட்டு வசதி வாரியத்தின் அனைத்து அலுவலகங்களிலும் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் 17 தொடுதிரை தகவல் கணினிகள் (Touch Screen Kiosks) ரூ. 27 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்கள் பற்றிய விவரங்களை எளிதில் பொது மக்கள் அறிந்துகொள்ள தானே பதிலளிக்கும் தொலைபேசி (Interactive Voice Response System) வசதி ஏற்படுத்தப்படும்.

ஒதுக்கீடுதாரர்களின் கணக்கு விவரம், செலுத்த வேண்டிய மீதித் தொகைபோன்றவற்றை வாரியத்தின் இணையதளத்தின் மூலம் அறிந்து கொள்ள வசதி செய்யப்படும்.

## 8. விற்பனைப் பத்திரம்

பல ஆண்டுகள் வழங்கப்படாமல் இருந்த 40,000 விற்பனைப் பத்திரங்கள் நடப்பாண்டில் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்படும்.

அரசு நிலங்களில் நிறைவேற்றப்பட்ட அனைத்து வாரியத் திட்டங்களுக்கும் இறுதி விலை நிர்ணயம் செய்து விற்பனைப் பத்திரங்கள் உடனடியாக வழங்கப்படும்.

## 9. வாரிய நிலங்களில் திட்டமிடல்

வாரியத்தின் கைவசமுள்ள நிலங்களில் ஆங்காங்கே உள்ள தேவைகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் வீடுகள் கட்டப்படும்.

## 10. சமரசத் திட்டம்

திண்டுக்கல் மாவட்டம், இராணி மங்கம்மாள் காலனியில் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கினையடுத்து வாரிய அதிகாரிகள் கொண்ட குழு அவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதேபோல நில எடுப்பு இனங்களில் உள்ள நீதி மன்ற வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வர நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி சமரசத் திட்டத்தின்மூலம் முடிவு எடுக்கப்படும்.



## 11. வாரிய ஊழியர்களுக்கான சலுகைகள்

கடந்த காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீட்டு வசதிக் கடன் மீண்டும் வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

பணி உதவியாளர்களின் பதவிகளை பதவி உயர்வுக்குத் தகுதி வாய்ந்த நிலைப் பதவியாக (Feeder Post) மாற்றி பதவி உயர்வு வழங்கப்படும்.

சிறப்பாகப் பணியாற்றும் வாரிய அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளில் 2 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்படும்.

## தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

**12.** சென்னை, நந்தனம் பகுதியில் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான 14 மனைகள் பரப்பு கொண்ட நிலத்தில் வாரியத்திற்கு நிரந்த வருவாய் ஈட்டித்தரும் வகையில் வணிக வளாகம் ஒன்று தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**13.** நகர குடிசைப் பகுதி வாழ் மக்களுக்காக பல்வேறு திட்டங்கள் மூலம் 2007-2008 ஆம் ஆண்டில் 42,231 குடியிருப்புகள் ரூ.634.76 கோடி செலவில் அமைக்க கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

**14.** இதற்கு முன்னர் ஒரு குடியிருப்புக்கான கட்டுமானப் பரப்பு 236 சதுர அடி ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நடப்பு நிதியாண்டிலிருந்து குடியிருப்பின் கட்டுமானப் பரப்பு குறைந்தபட்சம் 270 சதுர அடி அளவில் அமைக்கப்படும்.

**15.** சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (Madras Urban Development Project) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களில் (Tamil Nadu Urban Development Project) குடிசைப் பகுதி அமைந்த பிற துறையினருக்குச் சொந்தமான இடங்களில் அந்தந்த துறையினரிடமிருந்து முன் நுழைவு அனுமதி பெற்று அடிப்படை கட்டமைப்பு வசதி செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகளாக அங்கு வசித்து வந்த குடிசைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிலங்கள் சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம்

[2007 மே 4

மாற்றம் செய்யப்படாததால் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனைத்து நிலங்களையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டு குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தம் பெற்ற குடிசைவாழ் மக்களுக்கு விற்பனைப் பத்திரம் (Sale Deed) வழங்கப்படும்.

இந்நிதியாண்டில் 5000 குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

**16.** ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.200.55 இலட்சங்கள் செலவழிக்கப்படும்.

**17.** வாரியத்தில் காலியாக உள்ள அனைத்துப் பணி இடங்களும் நடப்பாண்டில் நிரப்பப்படும்.

**18.** பல்வேறு திட்டங்களின்கீழ் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் குடிசைவாழ் மக்களுக்காக குறைந்த பட்சம் 30,000 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

## கூட்டுறவு வீட்டு வசதித் துறை

**19.** நடப்பாண்டில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமும், பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் சேர்ந்து நிதி ஆதாரங்களைத் திரட்டி 12,000 வீடுகள் கட்டுமளவிற்கு ரூபாய் 200 கோடி நிதி உதவி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## நகர் ஊரமைப்புத் துறை

### 20. மின்னணு ஆளுகை முறை

மின்னணு ஆளுகை முறை நகர் ஊரமைப்பு இயக்ககம், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் மண்டல அலுவலகங்களில் ரூ.30 இலட்சம் செலவில் செப்டம்பர் 2007 முதல் செயல்படுத்தப்படும். அதன்மூலம் பொது மக்கள் தங்களது மனுக்களின்மீதான நடவடிக்கையை இணையதளம்மூலம் அறிந்து கொள்ளலாம்.



2007 மே 4]

### 21. முழுமைத் திட்டம் கணினிமூலம் தயாரித்தல்

தொலை உணர்வு, புவியியல் தகவல் முறைபோன்ற நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணியில் ஒரு முன்னோடித் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும்.

## சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

### 22. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம்

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரகச் சட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்திற்கான வரைவு 30-3-2007 ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண் 124-ல் இசைவு அளித்துள்ளது. இத்திட்டம் குறித்து பொது மக்களின் மேலான கருத்துகளை மூன்று மாதங்களில் பெற 11-4-2007 அன்று அரசிதழில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பொது மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு இந்த முழுமைத் திட்டம் இறுதி வடிவம் கொடுக்கப்படும்.

### 23. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான நிதி உதவி

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அடிப்படை வசதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி மானியம் அளித்து வருகிறது. கடந்த ஆண்டில் 47 திட்டங்களுக்கு ரூபாய் 2.15 கோடி மானியமாக வழங்கியுள்ளது. இந்த நிதியாண்டில் ரூபாய் 7 கோடி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியம் அளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 24. பல அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள்

சென்னை நகரில் முக்கியமாக வணிகப் பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும்பொருட்டு பல மாடி வாகனங்களை நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட மூன்று இடங்களில் உடனே இவ்வசதியை அமைக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூடிய விரைவில் செயல்படுத்தப்படும்.

227666